
# இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை



இணைப்பு
விநாயகர் வழிபாட்டு வரலாறு

க. சிவயோகமதி

இளவாலை
2010

வலிகாமம் தெற்கு பிரதேச சபை
**பொதுசன நூல்நிலையம்**
சுன்னாகம் / உடுவில் / ஏழாலை

**முக்கிய அறிவித்தல்**

நீங்கள் எடுத்துச்செல்லும் புத்தகத்தில் கீறுதல், வெட்டுதல், கிழித்தல், அழித்தல், அழுக்குப் படியவிடல் மற்றும் ஊறுபாடுகளைச் செய்யவேண்டாமென மிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்கின்றோம். புத்தகங்களை நீங்கள் எடுக்கும்போது இப்படியான குறைபாடுகளைக் கண்டால் நூலகப் பொறுப்பாளருக்கு உடன் தெரிவிக்கவும். அல்லாவிடில் நீங்கள் எடுத்துச் சென்ற புத்தகம் நல்ல நிலையில் இருந்ததெனக் கருதப்படுவதுடன் ஊறுபாடுகளுக்கு நூலகப் பொறுப்பாளரினால் விதிக்கப்படும் தண்டத்தை நீங்கள் ஏற்கவேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்படும்.

D692

# இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை

இணைப்பு
விநாயகர் வழிபாட்டு வரலாறு

பொது நூலகம் வலி. தெற்கு
வரவு பதிவு எண் D.692
வகுப்பு எண் 200

பொது நூலகம் வலி தெற்கு பிரதேச சபை உப நூலகம் உடுவில.

சிவயோகமதி கந்தவனம்,
இளவாலை

வலி. தெற்கு, பிரதேச சபை
நூலகத்துக்கு

08.05.2011

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூல் | : ஆனைவிழுந்தான் மாட்சிமை |
| முதலாம் பதிப்பு | : நவம்பர் 2010 |
| ஆசிரியர் | : செல்வி. சிவயோகமதி கந்தவனம் |
| உரிமை | : திரு. இளங்கோ ஆறுமுகம்<br>101, இப்பூனி வீதி,<br>லோவர் ஹற், வெலிங்டன்,<br>நியூசிலாந்து. |
| அச்சுப்பதிப்பு | : யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட்<br>48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13.<br>தொ.பே : 011 2330195 |
| விலை | : ரூபா 700/= |

| | |
|---|---|
| Book | : Aanaivilunthan Maadchimai |
| First Edition | : November 2010 |
| Author | : Miss. Sivayogamathi Kanthavanam |
| Copyright | : Mr. Ilanko Arumugam<br>101, Epuni Street,<br>Lower Hutt, Wellington,<br>New-Zealand |
| Printed by | : Unie Arts (Pvt) Ltd,<br>48B, Bloemendhal Road, Colombo - 13.<br>Tel : 011 2330195 |
| Price | : Rs. 700/= |

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
23-ஆவது குரு மகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்
திருவாவடுதுறை - 609 803, நாகை மாவட்டம்.
தொலைபேசி எண்: 04364 - 232021



# அருள் வாழ்த்துரை

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சின் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க

நற்குஞ் சரக்கன்று நண்ணிற் கலைஞானங்
கற்குஞ் சரக்கன்று காண்

- திருவருட்பயன்

உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனுந் தறிநிறுவியுறுதியாகத், தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி யிடைப்படுத்தித் தறுகட் பாசக், கள்ளவினைப் பசுயோதக் கவளமிடக் களித்துண்டு கருணை யென்னும் வெள்ளமதம் பொழி சித்தியருளும் யாழ்ப்பாணம் இளவாலையில் எழுந்தருளியிருக்கும் ஆனைவிழுந்தான் ஸ்ரீ விக்கினவிநாயகர் கோவில் வரலாற்றை ஆவணப்படுத்த விரும்பி தாங்கள் சிறப்பாக வரலாற்றை எழுதியிருப்பது பாராட்டத்தக்கது.

வரலாறு (History) தக்க ஆதாரங்களோடு வெளியிடப்பெறுவது, வரலாறு எதிர்காலச் சமுதாயம் நன்கு அறிந்து கொள்ள உதவும் காலக் கண்ணாடி, இதனை உணர்ந்த திரு. சிவயோகமதி கந்தவனம் அவர்கள் யாழ்ப்பாணம் இளவாலையில் எழுந்தருளியிருக்கும் ஆனைவிழுந்தான ஸ்ரீ விக்கின விநாயகர் திருக்கோயில் வரலாற்றை யாவரும் அறிந்து மகிழும் பொருட்டு எழுதி வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது. இந்நூல் ஆனை விழுந்தான் ஆண்டுத் திருவிழாவின் போது வெளியிடயிருப்பது பெருமைக்குரியது.

நூல் சிறப்பாக வெளிவரவும், நூலை எழுதிய நூலாசிரியர் சிவயோகமதி கந்தவனம் நலம்யாவும் பெற்று சிறக்கவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடிமலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

உ
சிவமயம்
Love Is God

**ஸ்ரீ நகுலாம்பிகா சமேத ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்**
**Sri Nagulambika Sametha Sri Naguleswara Swamy Temple**

**Rajarajasri K. Naguleswara Kurukkal**
Governing Authority & Chief Priest

*Naguleswaram, Keerimalai,*
*Kankesanthurai, Sri Lanka.*
*021-3212440, 021-7900470*



"நகுலேஸ்வரானுக்கிரக வித்தியாதரர்"
ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்

*நகுலேஸ்வரம், கீரிமலை*
*காங்கேசன்துறை, ஸ்ரீலங்கா*
*021-3212440, 021-7900470*

## *நகுலேஸ்வர ஆதீன கர்த்தாவும் பிரதம குருவுமான ராஜ ராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களின்*

# ஆசியுரை

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை பேணும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

- திருமந்திரம்

கடவுள் பக்தியும் கல்விறிவும் ஒழுக்கமும் பண்பாடும் உள்ள மக்கள் தம் குல தெய்வத்திற்கு கோயில் எடுத்து விழாச் செய்து இறைவனின் அருள் பெற்று இனிது வாழ்வர்.

இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகனின் அடியார்கள் அவ்விதம் வழிபாடு செய்து அவன் அருளால் இன்புற்று வாழ்கிறார்கள்.

கோவிலின் பழமையையும் பெருமையையும் கோவில் அமைக்கப்பெற்ற வரலாற்றையும் அறிந்து பக்தியுடன் வாழ்வதற்கு ஆலய வரலாறுகள் பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்படுதலும் திருப்பணியாகும்.

'யாழ் இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை' எனும் இந்நூல் சோடக்கன் இளவாலை சிவயோகமதி கந்தவனம் அவர்களால் எழுதப்பட்டு வெளியிடப்படுவது சிறந்ததோர் திருப்பணியாகவே கருதத்தக்கது.

இந்நூலில் இவ்வாலய வரலாறு மிக நல்ல முறையில் தரப்பட்டுள்ளது. அத்துடன் இன்றுவரையான வளர்ச்சிப்படி முறைகளும் விரிவாக தரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் விநாயக வழிபாட்டு வரலாறும் வழிபடும் முறைகளும் தரப்பட்டுள்ளமை மேலும் சிறப்பாகும். இந்த நூல் படித்து பயன்பெறுவதற்கு மட்டுமல்ல மனதளவில் வைத்து வழிபடுவதற்கும் பொருத்தமானதாகும்.

இந்த நூலாக்க திருப்பணியை செய்த நூலாசிரியரும் படித்துப் பயன்பெறும் அன்பர்களும் விநாயகப் பெருமானின் அருளால் இன்புற்று வாழ வேண்டும் என பெருமானை தொழுது ஆசி கூறுகின்றேன்.

ஹிந்து ஆகமிக ஹா ஸංஸ்கෘதிக கடயுது தெபார்தமேந்துவ
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
Department of Hindu Religious and Cultural Affairs

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Director / பணிப்பாளர் | 2552643 | Fax: / தொலைநகல் | 2552825 | E-Mail / மின் அஞ்சல் | hindudir@yahoo.com |
| General / பொது | 2552641 | | | Website / இணையதளம் | www.hindudept.gov.lk |
| My No. / எனது இல. | | Your No. / உமது இல. | | Date / திகதி | |

பொது நூலகம்
வலி தெற்கு பிரதேச சபை
உடுவில்.

# அணிந்துரை

இந்துப் பண்பாட்டின் நிலைக்களனாக விளங்குபவை கோவில்கள். எமது பண்பாட்டின் வளர்ச்சிக்கு அவை பெரிதும் உதவி வந்துள்ளன. சிவபூமி என திருமூலரால் வியந்து போற்றப்படும் இலங்கையில் வரலாற்று காலத்துக்கு முன்பிருந்தே கோவில் வழிபாட்டு மரபு இருந்து வந்ததை அண்மைக்கால ஆய்வுகள் நிரூபித்துள்ளன. எமது மதப் பெருமையையும் சிறப்பினையும் உலகிற்கே பறை சாற்றி நிற்கும் கோவில்கள் இந்நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையினால் பாதிப்படைந்துள்ளன. எனவே அவற்றின் உண்மையான வரலாற்றை வெளிக்கொணர்ந்து அழியாது பேணிக் பாதுகாப்பதற்கு இத்தகைய முயற்சிகள் பெரிதும் துணை புரிவதாகும்.

இந்தவகையில் செல்வி சி. கந்தவனம் அவர்கள் யாழ். இளவாலை ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலய வரலாற்றையும் அதன் மாட்சியையும் எழுதி வெளியிட முற்பட்டுள்ளமை மிகப் பெரிய கைங்கரியம் என்றே கூற வேண்டும். இந்த இவ்வரிய முயற்சியால் இலங்கைப் பிரதேச பண்பாட்டு வளர்ச்சி பற்றியும் சமய பாரம்பரியம் பற்றியும் அறிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நூலாசிரியர் தமிழை முதன்மைப் பாடமாக எடுத்து கலைமாணிப் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தார். இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரியராக கடமையாற்றிய இவர் தமிழையும் சைவசமயத்தையும் தனது இருகண்களாக பேணியவர். அதனால் தான் புலம் பெயர்ந்து தற்போது நியூசிலாந்தில் வசிக்கின்ற போதும் தான் பிறந்த மண்ணையும் பாரம்பரிய சிறப்பியல்பையும், அங்கு கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆனைவிழுந்தான் விநாயகரின் மாட்சியையும், தான் கேட்டும் அறிந்தும் படித்த விபரங்களை எல்லாம் பின்னைய தலைமுறையினரும் அறிய

வேண்டும் என்னும் நோக்கில் நூலுருக் கொடுத்திருக்கிறார். அவரது இவ்வரிய முயற்சி அனைவராலும் வரவேற்கத்தக்கது.

இந்நூலில் ஆசிரியர் ஆனைவிழுந்தான் விநாயகரின் ஆலய சுற்றாடல், ஆனைவிழுந்தான் எனப் பெயர் ஏற்பட காரணமாக இருந்த செவிவழி மரபுக் கதைகள், சோழ இளவரசி மாருத புரவீக வல்லியும் கோவிலும் என்பன பற்றி விளக்கியுள்ளார். இக்கோவில் புராதனமானது என்பதை வரலாற்று ஆய்வாளர் திரு. பொ. இரகுபதி அவர்களால் கண்டெடுக்கப்பட்ட இட்டிகை என வழங்கப்படும் செங்கட்டிகள், ஆவுடை இல்லாத லிங்கம், கைவிரலால் பள்ளமிடப்பட்ட மட்பாண்டத் துண்டுகள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு கூறுகின்றார். மேலும் 19ம் நூற்றாண்டில் இருந்து ஆலய வளர்ச்சி, பூசகர்கள், அர்ச்சகர்கள், உபயகாரர்கள், காணிகள் உபகாரம் செய்தோர் ஆகியோரின் விபரங்கள் இடம்பெற்றுள்ளன. இவர் இந்நூலில் தந்திருக்கும் அடிப்படைத் தகவல்கள் இக்கோயில் பற்றி விரிவாக ஆராய்பவர்களுக்கு தக்க மூலாதாரமாக அமையும் என்பது திண்ணம்.

இந்நூலின் இணைப்பில், புராணங்களில் விநாயகர் தோற்றம் பற்றி கூறப்பட்ட விபரங்களும் பிரணவ சொரூபியாக நின்று உயிர்களின் இன்னல்களையும் தடைகளையும் களைந்து, அவைகளை ஈடேற்றும் பெருமையும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் விநாயக விரதங்கள், அவரை வழிபாடு செய்யும் முறை, அதன் அடிப்படைத் தத்துவங்கள் ஆகிய விபரங்களையும் இந்நூலின் இணைப்பில் சேர்த்துள்ளார். இவரது இப்பயன் உள்ள ஆக்க பூர்வமான முயற்சிகள் சிறப்படைய எல்லாம் வல்ல விநாயக பெருமானின் திருவருள் துணை நிற்பதாக!

**சாந்தி நாவுக்கரசன்**
பணிப்பாளர்
இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248 1/1, காலி வீதி
கொழும்பு - 04

யாழ். பல்கலைக் கழகம்

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்** B.A.; M. Fil; M.A.
முதுநிலை விரிவுரையாளர்
இந்து நாகரிகத் துறை

15.07. 2009

# மதிப்புரை

யாழ்ப்பாணம் இளவாலை ஆனைவிழுந்தான் மாட்சிமை எனும் இந்நூல் இத்தொல்பதியில் எழுந்தருளி அருள் பாலித்துக்கொண்டிருக்கும் பிரணவப் பொருளாகிய பிள்ளையாரின் தெய்வீக வரலாற்றினை விளக்கிக் கூறுகிறது. மாருதப்புரவீகவல்லி எனற சோழ இளவரசியின் குதிரை முகம் நீங்கிய இடம் மாவிட்டபுரம் என்பதும் அவள் கட்டிய ஏழு கோயில்களில் ஒன்றிது என்பதும் ஐதீகம். இந்து மதத்தில் காணப்படும் தெய்வங்களின் தெய்வீக வரலாறுகள், புராண இதிஹாசங்கள் மூலமாகவும் ஐதீகங்கள் மூலகாகவும் பெறப்படுபவை. ஐதிகம் என்பது 'இதி+இக' என்ற இரண்டு சொற்கள் இணைந்தது. அதாவது 'இது இப்படி' இருந்ததென்பதை எடுத்துக் கூறுவது. ஆரம்ப காலங்களில் செய்திகள் செவிவழியாக ஒரு பரம்பரையிடம் இருந்து அடுத்த பரம்பரை பெற்று வந்துள்ளமையை அறியமுடிகின்றது. இந்த ஐதிகங்கள் பின் வரலாற்று ஆதாரங்களாகச் சிறப்புப் பெறுவதும் குறிப்பிடத் தக்கது. அந்த வகையில் செல்வி சிவயோகமதி கந்தவனம் தனது பிறப்பிடமாகிய இளவாலையில் உள்ள ஆனைவிழுந்தான் ஆலயத்தின் ஐதிகம், அவ்வாலய மூர்த்தியின் அருள் ஆற்றல் முதலானவற்றைத் தேடிப் பெற்றுத் தொகுத்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. பிள்ளையாரின் மாட்சிமையை அடியவர்களிடம் எடுத்துக் கூறி அவர்களுக்கு மேலான பக்தியை வளர்க்கும் வகையில், இறைபற்றினால் ஈர்க்கப்பெற்ற அவர், மிகுந்த சிரமப்பட்டு இந்நூலை உருவாக்கி உள்ளார். ஆனைவிழுந்தான் பக்தையாகிய அவர் தன் பாட்டியிடமும் குடும்பத்தாரிடமும் பெற்ற செய்திகளையும் தன் வாழ்விற் பெற்ற

அநுபவங்களையும் தொகுத்து, கல்வி அறிவைப் பயன்படுத்தி இறை மகத்துவம் கூறும் ஒரு நூலாக ஆக்கியுள்ளார்.

ஆனைவிழுந்தானில் பழமை வாய்ந்த ஆலயம் ஒன்று இருந்தமைக்கு தொல்பொருள் ஆராய்வாளர் கலாநிதி பொ. இரகுபதியின் சான்றுகளையும் எடுத்துக் கூறி நிறுவியுள்ளார். மேலும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து முறையான ஆலய வரலாற்றையும் ஆசிரியர் குறிப்பிட்டுக் கூறி இருக்கின்றார்.

இவ்வாலயத்துக்கு உரித்தான சொத்துக்கள், அவற்றை உபகரித்தோர் பற்றிய விடயங்கள் இடம் பெற்றிருப்பது சிறப்புக்குரியதாகும். ஆலயத்தின் தொன்மையையும் நிகழ்வுகளையும் உடைமைகளையும் ஆவணப்படுத்தும் வரலாற்றுப் பதிவாகவும் அமைந்துளது.

அத்துடன் சிற்சில இடங்களில் விநாயகரின் வரலாற்றுத் தொடர்புடைய நிழற் படங்களும் இணைக்கப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலில் பின்னிணைப்பாக விநாயகர் வரலாறு, ஈழநாட்டின் சிறப்புக்குரிய விநாயக திருத்தலங்கள், விநாயகரின் அருளாற்றலும் பெருமையும், விநாயக விரதங்கள், விநாயகரை வழிபாடு செய்யும் முறைமை என்பன இணைக்கப் பெற்றுள்ளமையும் சிறப்பம்சமாகும்.

விநாயகரை முறையாக வழிபட விரும்புபவரை ஆற்றுப்படுத்தும் வகையில் பின்னிணைப்பு அமைந்துள்ளது. வழிவழியாக விநாயகரை வழிபடு தெய்வமாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்த இந்நூலாசிரியர் தன் சொந்த அனுபவத்தையும் பல நூல்களில் இருந்து பெற்ற அறிவையும் இணைத்து நூலாக்கி இருப்பது பெரிதும் பாராட்டற்குரியது. விநாயகர் அருளால் நூலாசிரியர் எல்லா நலங்களையும் பெற்று வாழ ஐங்கரனை வேண்டுகின்றோம்.

**திருமதி. நாச்சியார் செல்வநாயகம்**

மட்டுவில் திரு. ஆ. நடராசா அவர்களின்

# சிறப்பு அணிந்துரை

1989 ஆம் ஆண்டு மார்கழி மாதத்தில் ஒரு நாள் ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்துக்குப் போயிருந்தேன். ஆலய வாசலில் நிற்கும் அரசமரத்தையும் அதைச் சுற்றியிருக்கும் மண்மேட்டையும் நான் பல முறை பார்த்திருக்கிறேன். ஆனாலும் அன்று அவை அவ்வாலயத்தின் பழமையை எனக்குச் சொல்லாமற் சொல்வது போன்றதொரு உணர்ச்சி ஏற்பட்டது. அவ்வுணர்ச்சியே தூண்டுகோலாயமைய ஆனைவிழுந்தான் ஆலயவரலாறு என்னுஞ் சிறிய நூலை எழுதினேன். எதிர் காலத்தில் இவ்வாலய வரலாற்றை ஆய்வு செய்வோருக்குத் தேவையான சில வரலாற்றுத் தகவல்கள் இந்நூலில் தரப்பட்டிருக்கின்றன.

இருபது ஆண்டுகளின் பின் சிவயோகமதி கந்தவனம் ஆனைவிழுந்தான் மாட்சிமை என்னும் இந்நூலை எழுதி வெளியிடுகிறார். இந்நூலோடு அவரால் எழுதப்பட்ட விநாயக வழிபாட்டு வரலாறும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதும் பேறு எனக்குக் கிடைத்திருக்கிறது.

எனக்கும் இவ்வாலயத்துக்கும் உள்ள தொடர்பும் சிவயோகமதி கந்தவனத்துக்கும் உள்ள தொடர்பும் வேறுபட்டவை.

சிவயோகமதியின் தாய்வழிப் பாட்டனார் கந்தப்பிள்ளை உபாத்தியாயர் இவ்வாலயத்துக்குப் பூசை செய்தவர். பலருக்குச் சமயம் படிப்பித்தவர். அவருடைய மனைவியாரிடம் கந்தப்பிள்ளை உபாத்தியாயாரின் சீரிய வாழ்க்கை முறை, கடவுள் பற்று முதலியவற்றை எல்லாம் இனிக்க இனிக்கக் கேட்டு மகிழ்ந்தவர் சிவயோகமதி. இளமைப் பருவத்திலிருந்தே இவ்விநாயகரை வணங்கும் வழக்கமும் விநாயகப் பெருமான் மீது அளவற்ற அன்பும் கொண்டவர். அதனால் அவர் எழுதிய இவ்வரலாற்று நூலிற் பத்தி உணர்வு விஞ்சி நிற்பதைக் காண முடிகிறது.

இந்நூலில் விநாயகப் பெருமானை ஆனை விழுந்து வணங்கிய வரலாறு பற்றிய கதைகளும் மாருதப்பிரவீக வல்லி ஏழு விநாயகர்

ஆலயங்களைக் கட்டினாள் என்ற செய்தியும் இடம் பெறுகின்றன. மாருதப்பிரவீகவல்லியின் காலத்துக்கு முற்பட்டது இவ்வாலயம் என்பதை நூலாசிரியர் வலியுறுத்துகிறார்.

இடிபாடுகளுக்கிடையிலிருந்து கண்டெடுக்கப்பட்ட, தட்டையான சிவலிங்கம் போன்ற அமைப்புடைய திருவுருவம் ஒன்றையே விநாயகப் பெருமானெனக் கொண்டு வழிபட்டு வந்தார்கள் என்பதையும் இது போன்ற திருவுருவங்கள் வேறிடங்களிலும் இருந்ததென்பதையும் வடநாட்டில் ஆவுடையார் இல்லாத இலிங்கத்தை வழிபடும் வழக்கம் இருப்பதையும் நூலாசிரியர் சுட்டிக் காட்டுகிறார்.

1992. 06. 27ல் கும்பாபிசேகத்துக்கு நாட் குறிக்கப்பட்டிருந்த நிலையில் 1992. 06. 11ல் விமானப் படையினர் வீசிய குண்டினால் மடைப்பள்ளியும் அதற்குப் பக்கத்திலிருந்த அறையும் கிழக்குப் பக்க மதிலும் மணிக் கோபுரமும் சேதமடைந்ததுடன் மணியிலுந் துவாரமேற்பட்டமை அடியார்களுக்கு எவ்வளவு துன்பத்தை ஏற்படுத்தியிருக்கும் ! 1992. 06. 20இல் இளவாலை மக்கள் இடம் பெயர்ந்த போது கோயிற் பூசகர், எழுந்தருளி விக்கிரகத்தைக் கொண்டு போய்ப் பாதுகாப்பாக வைத்திருந்தார் என்ற செய்தி பாலா ஐயரின் பொறுப்புணர்ச்சியையும் அவர் விநாயகப் பெருமான் மீது கொண்டிருந்த பத்தியின் சிறப்பையும் எடுத்துக் காட்டுகிறது.

ஐந்து ஆண்டுகள் கழித்து மக்கள் இளவாலைக்குத் திரும்பி வந்து குடியேறிய பின் 1997. 12. 2004இற் பிராயச் சித்த அபிஷேகம் நடந்தமை, 1999 ஆம் ஆண்டுச் சித்திராப் பூரணையில் ஆலய மூர்த்திகள் பாலாலயத்தில் வைக்கப்பட்டமை, 1999. 06. 24இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டமை, 2000.03. 08இல் மகோற்சவத்தை ஆரம்பித்தமை முதலிய நிகழ்ச்சிகள் விநாயகப் பெருமானது அடியார்கள் தமது வாழ்வை வளம்படுத்துவதிலும் பார்க்க, விநாயகர் ஆலயத்தைக் கட்டியெழுப்புவதிலும் பெருமானுக்கு நித்திய நைமித்திய பூசைகளைச் செய்ய வேண்டுமென்பதிலுமே கண்ணுங் கருத்துமாக இருந்தார்கள் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. ஆலய அர்ச்சகரும் அடியார்களும் இறை பத்தி உடையவர்களாயும் ஒற்றுமையாகச் செயற்படு பவர்களாயும் இருந்தால் அவ்வாலயஞ் சிறக்கும் என்பதற்கு ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம்

ஒரு எடுத்துக் காட்டாகும் என்பதையும் இவ்விடத்திற் குறிப்பிடுவது இன்றியமையாததாகும்.

இராணுவ நடவடிக்கையால் அழிந்து போன ஆலயங்களை இன்றும் அந்நிலையில் வைத்திருப்போர் ஆனைவிழுந்தான் ஆலயத்தின் வளர்ச்சியைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். புதிய கோயில் ஒன்றைக் கட்டுவதிலும் பார்க்க அழிந்த கோயிலைப் புனரமைத்து விதிப்படி பூசை செய்வித்தல் பெருஞ் சிவ புண்ணியமாகும்.

நூலாசிரியர் விநாயகவழிபாட்டு வரலாற்றையும் எழுதி இந்நூலோடு இணைத்திருக்கிறார். இவ்விணைப்பில் ஆறு கட்டுரைகள் இடம் பெறுகின்றன. வெவ்வினைகள் வேரறுக்கும் விநாயகர் வரலாறு என்னும் கட்டுரையில், விநாயகர் வழிபாடு இலகுவான தொன் றென்று கூறும் ஆசிரியர் விநாயகர் வழிபாடு வடநாட்டிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்ததென்று கூறும் வரலாற்றாசிரியர்களை மறுத்து, வாதாபிப் போரில் புலிகேசியைத் தோற்கடித்த தளபதி பரஞ்சோதி, அந்நாட்டுத் தெய்வமான கணபதியை வெற்றிச் சின்னமாகக் கொண்டு வந்து திருச்செங்காட்டங்குடியிற் பிரதிட்டை செய்யு முன்பே, தமிழகத்தில் விநாயக வழிபாடு இருந்ததற்கான ஆதாரங்களைக் காட்டி இருக்கிறார்.

ஈழநாட்டிலுள்ள சில விநாயகர் கோயில்களைப் பற்றியும் இதில் எழுதப் பட்டிருக்கிறது. விநாயகப் பெருமானின் அருளாற்றலைப் பற்றிக் கூறும் ஆசிரியர், அவரோடு தொடர்புடைய சில புராணக் கதைகளைக் கூறவுந் தவறவில்லை.

படிப்போருக்குப் பத்தி உணர்வை ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்ட இவ்விணைப்பில் விநாயக விரதங்கள் பற்றியும் கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலை எழுதிய சிவயோகமதி கந்தவனம் தன் முயற்சியில் பூரண வெற்றி பெற்றிருக்கிறார். விநாயகப் பெருமான் தோன்றாத் துணையாக நிற்க இந்நூலை எழுதிய சிவயோகமதிக்கு எம்பெருமான் மேலும் மேலும் அருள் புரிவாராக.

25 1/2 E.S. பேணான்டோ மாவத்தை
கொழும்பு - 06

**ஆ. நடராசா**

# ஆசியுரை

திருக்கோயில் வழிபாட்டின் அத்திவாரமாக அமைவது குல தெய்வ வழிபாட்டு முறைமையாகும். இந்து சமய மரபில் குலதெய்வ வழிபாட்டு முறைமை பரம்பரை பரம்பரையாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இன்று நாடளாவிய ரீதியில் மக்கள் புலம் பெயர்ந்து தமது வாழ்வியலை நடாத்தினாலும் தத்தமது குல தெய்வங்களுக்கு நேர்த்திவைத்து அதனை தாமே நேரில் வந்து நிவர்த்தி செய்து வருகின்றமை வழக்கிலுள்ளது. இந்நூலாசிரியர் புலம் பெயர்ந்து வாழ்ந்த போதிலும் அவர் தமது குல தெய்வமான ஆனை விழுந்தான் பெருமானின் பெருமைகளை வரலாற்றுப் பின்னணியில், பொருத்தமான சான்றாதாரங்களுடன், இளவாலை "ஆனைவிழுந்தான் மாட்சிமை" எனும் இந்நூலில் தந்துள்ளார். இந்நூல் வாயிலாக இளவாலை ஆனைவிழுந்தானின் பெருமைகள் மேலும் பொலிவு பெற்றுத் திகழ்கிறது.

இந்நூலாசிரியர் எனது தந்தையாரான முன்னாள் இராமநாதன் கல்லூரி சமஸ்கிருத விரிவுரையாளர் பிரம்மஸ்ரீ இராமஐயர் அவர்களின் மாணவ மணிகளில் குறிப்பிடத்தக்கவர். இந்நூலுக்கு எனது தந்தையார் சார்பில் ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வெய்துகின்றேன்.

சுபம்.

**திருமதி ஞானம் ஞானசேகரஐயா**
*முன்னாள் இந்துசமய பாட இணைப்பாளர்*
*ஆசிரிய ஆலோசகர்*
*மத்திய மாகாண கல்வித் திணைக்களம்*
*கண்டி.*

# சமர்ப்பணம்

என் சகோதரிகள் இருவரையும் என்னையும் தந்தையும் தாயுமாகி நின்று ஆளாக்கிய அன்னை – எம் தெய்வம் திருமதி கந்தவனம் சேதுப் பிள்ளையின் தந்தையை, எனது பாட்டனார் கந்தப்பிள்ளை உபாத்தியாயரை, நான் கண்ணாற் கண்டதில்லை. ஆயின், பிறர் வாய் மொழிகேட்டு மனதாற் கண்ட மகான் ஆவர். பெத்தாச்சியும் (தாயைப் பெற்றவர். பெற்ற ஆச்சி பேச்சு வழக்கில் பெத்தாச்சி என மருவியது) பாட்டனாரது தெய்வ சிந்தனையையும் நற்பழக்க வழக்கங்களையும் ஆற்றல்களையும் கதை கதையாக எமக்கு ஊட்டினார். மேலும், அவருடைய மாணாக்கரும் விசுவாசத்துடன் அவர் செயல்களைக் கூறக் கேட்டுள்ளோம். கற்பனையிற் கண்ட அவரது வடிவத்தை எம் மனத்தில் இவ்வாறு நன்கு பதித்து விட்டனர். அவர் உண்ணும் ஊணும் பருகும் நீரும் தமிழ் மொழி எனவும் நினைப்பதெல்லாம் இறைவன் நினைவே என்றும் வாழ்ந்தவராம். மனித இனத்துக்கு மட்டும் அல்ல. கட்டாக் காலிகளாகத் திரியும் ஆவினத்துக்கும் பரிவு காட்டி, குடிக்க நீர் வைத்து ஆதரித்த பண்பாளர். அந்நியர் ஆட்சியில் எமது உயிருக்கு நிகரான மொழியும் சமயமும் புறக்கணிக்கப்பட்டதைக் கண்டு பொறுக்காது, இவ்விரண்டையும் கட்டிக் காக்க முனைந்தவர். தான் குடி இருந்த தமிழ் மணங் கமழும் வளவில் – இன்று திரு. சின்னத் தம்பியார் நாகேந்திரம் வசிக்கும் வளவில்– ஒரு கொட்டில் அமைத்து, சாதி, சமயம் பாராமல் இலக்கியம், இலக்கணம், நிகண்டு, புராணங்கள் கற்பித்தார். கந்தப்பிள்ளை வாத்தியார் எனப் போற்றப் பெற்றார். அவரது அத்திவாரச் செயற்பாட்டால் எம்மூரிலும் சூழலிலும் வேரூன்றித் தளைத்துவரும் மொழி அறிவும் சமய அறிவும் அந்நியர் ஆட்சியிலும் இன்றும் தன் வளங்குன்றாது, ஓங்கி வளர்ந்து கொண்டே போவது கண்கூடு.

கந்தப்பிள்ளை வாத்தியாரிடம் வடக்கு இளவாலையார் மட்டும் அன்றி மாரீசன்கூடல், அத்துவான்புலம் ஆகிய அயல் ஊரவரும்

வந்து படித்ததாகப் பாட்டி கூறுவார். அவரது மாணாக்கர்களில் நான் அறிந்தவர்கள் ஐவர். ஒருவர் அவரது தங்கை மகன் பொன்னம்பலம். அவர் பெற்ற தமிழ்ப்புலமை பிரசித்த நொத்தாரிசு ஆக்கியது. பிற்காலத்தில் ஆலயப் பஞ்சாயத்தரில் ஒருவராகவுமவர் இருந்தார். அடுத்தவர் அவருடைய ஒன்றுவிட்ட சகோதரியின் மகன் மயில்வாகனம். அவர் மெய்கண்டான் பாடசாலையில் தேவார ஆசிரியராகக் கடமை ஆற்றியவர். அது மட்டும் அன்றி வீட்டில் தேவாரம் (பண்இசை), ஹாமோனியம் பழக்கும் ஆசிரிய ராகவும் செயற்பட்டார். பரம்பரை வைத்தியத் தொழிலையும் செய்தார். இவர் எனது பாட்டனாருக்கு முன் ஆனைவிழுந்தானுக்குப் பூசை செய்த மூத்த தம்பியாரது மகன் என்பதும் குறிப்பிடத் தக்கது. மற்றைய மூவரில் ஒருவர் அத்துவாம்புலத்தைச் சேர்ந்த கத்தோலிக்க மதத்தவரான சூசைப்பிள்ளை. நாங்கள் கன்னியர்மடக்கல்லூரிக்குச் செல்லும் வழியில் இவர் எம்மைக் கண்டால் கந்தப்பிள்ளை வாத்தியாரின் பேர்த்திமார் என மற்றவர்களுக்கு அறிமுகஞ்செய்து வைத்து அளவளாவி, தனது நன்றி உணர்வையும் வெளிப்படுத்துவார். மற்ற இருவரும் தாழ்த்தப்பட்டவர்கள் என மதிக்கப்பட்ட குலத்தவரான வயித்தி, ஐயங்கன் ஆவர். வயித்தி என்பவர் கத்தோலிக்க குருமாரின் சலுகைகளில் மயங்கி, பின் கத்தோலிக்க மதத்தைத் தழுவி, தச்சு வேலையைத் தன் தொழிலாக்கிக் கொண்டார். இவர்கள் எங்கள் வீட்டுக்கு வேலைநிமித்தம் வரும்போது, தாம் படிக்கும் அக்கொட்டிலைத் தாமே வேய்வதாகவும் மாணவர்களாகிய தாம் கோவில்போல அதனை மதித்து வைத்திருந்ததாகவும் கூறும்போது அவர்கள் பேச்சில் ஒரு நன்றி உணர்வு தொனிக்கும். மேலும், பாட்டனாரது அன்புச் சுபாவத்தையும் சமய ஒழுக்கத்தைப் பற்றியும் புகழ்ந்து கூறுவர். காலைக் கடன்கள் முடித்துக் கொண்டு ஆனைவிழுந்தானுக்குச் சென்று பூசைசெய்த பின்னரே பாடம் படிப்பிக்க வருவாராம். தாம் நேரத்தோடுவந்து விட்டால் அவருடன் சேர்ந்து கோவிலுக்குப் போய்த் தேவாரம் படித்துக் கும்பிடுவார்களாம். தலை போகிற காரியமாக இருந்தாலும் கோயிலுக்குச் சென்று பூசிப்பதைத் தள்ளிப் போடமாட்டாராம்.

எல்லாம் அவன் பார்த்துக் கொள்வான் என்ற அதீத நம்பிக்கையில் வாழ்ந்தவராம். பெத்தாச்சியும் பின்னர் கைம்பெண்ணாய் வாழ்ந்தபோதும் கணவன் காட்டியவழியான அந்தக்கடவுள் நம்பிக்கையில் வாழ்ந்து வாழ்க்கையில் வெற்றி கண்டார். எம்அன்னையும் கைம்பெண்ணான போது ஒன்று, மூன்று, ஐந்து வயதிலிருந்த மூன்று பெண் குழந்தைகளை அற்ப சிங்கப்பூர் விதவை ஓய்வூதியத்தில் பிறர் வியக்கும் வண்ணம் வளர்த்து, நல்வழிப்படுத்தியதற்கும் அவர் தந்தை உணர்த்திய தெய்வ நம்பிக்கையே கை கொடுத்தது.

பாட்டனாரது யானைத் தந்தப் பிடி போட்ட எழுத்தாணியும் குமிழ் மிதியடியும் (மரத்தால் ஆனது) பெத்தாச்சியால் பத்திரமாகப் பாது காத்து வரப்பட்ட அவரது நினைவுச் சின்னங்கள். ஏடு தொடக்கும் காலங்களில் மருமகன் மயில்வாகனம் (தேவார உபாத்தி யாயர்) ஏடு எழுத எழுத்தாணியை எடுத்துச் செல்வார். சித்திராப் பூரணை அன்றும் அவ்வெழுத்தாணியை எடுத்துச்சென்று சித்திரபுத்திரனார் எமது பிறப்பு, இறப்பை எழுதுவதான ஐதீகத்தை நினைத்து நெல் நிறைத்த நிறைநாழியில் இந்த எழுத்தாணியைச் செருகி பூசையில் வைத்து வழிபாடு செய்வர். பாட்டி இருக்குங்காலத்தில் பூசை முடிந்து அவர் வீடுதிரும்பும்போது கையோடு எழுத்தாணியை எடுத்து வந்து விடுவார். நிறைநாழியில் எழுத்தாணி வைக்கும் வழக்கம் அவர் இறந்த பின்பும் நடைபெற்றுவந்தது. ஒரு முறை பாட்டி உயிராகப் போற்றிய அந்த எழுத்தாணியை எடுத்துவர மறந்துவிட்டோம். அது எவ்வாறோ தவறி மறைந்துவிட்டது. எழுத்தாணி வைத்துக் கும்பிடும் வழக்கமும் அன்றுடன் மறைந்து விட்டது. கவனக் குறைவு எமக்குப் பெரும் இழப்பில் முடிந்தது.

இன்று அன்னாரது எழுத்தாணியையே எனது பேனாவாக மனதில் கற்பித்து ஆனைவிழுந்தானின் அனுக்கிரகம் ஞானமாகத் தூண்ட எழுதிய இந்நூலை அவருக்குச் சமர்ப்பிக்க முன்வந்துள்ளேன்.

இளவாலையம்பதியில் திண்ணைப் பள்ளியாகக் கொட்டிலில் உதயமாகிய தமிழ்க்கல்வி பல மாற்றங்களைச் சந்தித்து, படிப் படியாக வளர்ந்து - குறிப்பாக திரு ஏழுர் இராசரத்தினத்தினால் பாடசாலையில் படிக்கும் கல்வியாகி - இன்று மஹா வித்தியாலய உயர்கல்வியாகி அறிவொளி வீசிக் கொண்டிருக்கிறது. வெறுங் கொட்டகையாக இருந்த லிங்கப்பிள்ளையார் கோவிலும் ஆகம விதிப்படி அமைந்து பரிவாரத்தெய்வங்கள் புடைசூழ வீற்றிருக்கும் ஐங்கரன் உறைய, தேரோடும் திருக்கோயிலாகி, இரண்டு காலப் பூசையுடன் திகழ்கிறது. அவர் இவற்றின் வளர்ச்சிகளை வானுலகில் இருந்து கண்டு களித்து, தனது இலட்சியம் வெற்றி அடைந்து விட்டதாக இறும்பூது எய்துவது நிச்சயம். அவரது ஆயுள் அற்பமாயினும் தொண்டு அளப்பரியது. அப்பெருந்தகையின் ஆத்ம திருப்திக்காக அவர் வழிபட்ட விநாயகர் சம்பந்தமான இந்நூலை அவருக்குக் காணிக்கையாக்குகிறேன்.



உ

சிவமயம்

# நூன்முகம்

மண்ணுலகத்தினிற் பிறவி மாசற
எண்ணிய பொருளெலாம் எளிதின் முற்றுறக்
கண்ணுதலுடைய தோர் களிற்று மாமுகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்

இதுவரை காலமும் ஆனை விழுந்தான் ஆலய வரலாறு பரம்பரை பரம்பரையாக செவி வழி வந்த கதைகளினாலேயே மக்கள் மனதில் பதிந்து வந்திருக்கிறது. ஏடுகளிலன்று. மட்டுவில் திரு ஆ. நடராசா ஆசிரியர், திருவருள் கூட்ட இவ்வாலயத்தின் பழமை பெருமைகளை உணர்ந்து இந்த ஆலய வரலாற்றை 1990 ஆம் ஆண்டளவில் எழுதித் தந்துள்ளார். இறை உணர்வு உள் நின்று உணர்த்தினால் மட்டுமே இத்தகைய சமய வரலாறுகளை எழுத முடியும். உண்மைகளையும் உணரமுடியும். தலைசிறந்த ஆங்கிலக் காப்பிய எழுத்தாளர் மில்ரன் தன்னுள் ஒரு அற்புதத் தெய்வீக ஒலி கேட்டதாகவும், சொற்களைக்கூடத் தந்ததாகவும், சுவர்க்க நீக்க நூலை எழுதுவதற்கு உந்து சத்தியாக இருந்ததாகவும் தன் அனுபவத்தைக் கூறியுள்ளார். முன்னோடியான திரு ஆ. நடராசா ஆசிரியர் எழுதிய ஸ்ரீ விக்ன விநாயகர்ஆலய வரலாறு அதைப் பின் தொடர்வோர்க்குப் போட்ட பிள்ளையார் சுழி போன்ற பெருமை உடையது. இவ்வளவு காலமும் யாரும் நினைத்துப் பார்க்காத ஒன்றைச் சாதித்துள்ளார். அவருக்கு இது பிறந்த ஊருமன்று. புகுந்த ஊர். இவ்வெண்ணம் உதயமாவதற்கு ஆனைவிழுந்தானே காரணர். இத்தலத்தின் வரலாற்றில் கொண்டுள்ள ஆர்வம், இவ்வரலாற்றின் ஆய்வு தொடர வேண்டும் என அவர் அவாவுதலில் நன்கு பிரதிபலிக்கிறது. அவர் குறிப்பிட்டது போல் எழுதிய அந்நூல் சிறிதன்று. ஆலம் வித்துப் போன்றது.

அந்நூலின் அடிப்படையில் பல நூல்கள் கிளைத்தெழும். அதுவே என் அவாவும். நான் இன்று திரு நடராசா அவர்கள் எடுத்து வைத்த முதலடியைத் தொடரக் காரணங்கள் உண்டு. முதலாவது அவரது ஆய்வு நூல் எனக்கு ஊக்குவிப்பதாகவும் ஒரு வழி காட்டியாகவும் வழிநூலாக இது அமையவும் உதவுகிறது. அடுத்து எனது பிறப்பும் வளர்வும் சூழலும் சில செய்திகளையும் உண்மைகளையும் உணர்த்தின.

(அ.)இக்கோயிலின் முன்னையவரான லிங்கப் பிள்ளையாரை வைத்துப் பூசித்தவர்களில் ஒருவர் கந்தப்பிள்ளை உபாத்தியாயர். அவர் மகள் வழிப் பேர்த்தியாவேன்.

(ஆ).பஞ்சாயத்தில் ஒருவரான கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மகன்செல்லப்பாவின் சகோதரி மகள்.

(இ). இவ்விரு காரணங்களினாலும் எமது குடும்பத்தினர்க்கு இக்கோயிலில் குறிப்பிடத் தக்க ஈடுபாடு இருந்தது, இருக்கிறது. அன்றியும் மாமா குடும்பத்தினரின் நேர்கடன் காரணமாக, மாணவப் பருவத்தில் தினமும் காலையில் நாகதம்பிரானுக்குப் பால் பழம் கொண்டுபோய்க் கொடுப்பேன். ஐயர் அந்நேரம் வந்திராவிடில் பால் பழத்தை அங்கிருக்கும் பீப்பாவுக்குள் வைத்து மூடிவிட்டு பிள்ளையாரை விழுந்து வணங்கிப் பாடசாலை செல்வது என் வழக்கம். இதனால் சிறு வயதிலிருந்தே இத்தலத்தில் ஒருவித பற்று உண்டானது. இவை காரணமாகப் பல தகவல்களைக் கண்டும் கேட்டும் அறிந்துள்ளேன். அவ்வார்வ மேலீட்டினால் மூர்த்தி, தல, விருட்ச விசேடம் பெற்ற, அருள்மிகு ஆனை விழுந்தான் விக்ன விநாயகரின் பழமை வாய்ந்த ஆலய வரலாற்றை அவன்தாள் பணிந்து சில வரி எழுத முற்படுகிறேன். எனது இம்முயற்சியிற் சில சந்தர்ப்பங்களில் விளக்கத்துக்காகக் கூறியதைத் திரும்பக் கூறுதல் தவிர்க்க முடியாததொன்றாக அமைந்துள்ளது. தயைபுரிந்து அக்குற்றத்தை மன்னித்து ஏற்கும்படி வேண்டுகின்றேன்.

பண்டை நாள்– ஹரப்பா மொகெஞ்சதாரோ காலந் தொட்டு தமிழர்களின் வாழ்வியல் ஆலய வழிபாட்டுடன் இணைந்தே வந்திருக்கிறது. மக்கள் ஆலயங்கள் அமைத்து வழிபட்ட வரலாறுகளை, சங்ககால நூல்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது. இந்தியாவில் வாழ்ந்த அரசர்கள் மாபெரும் கோவில்களை நிறுவியதுடன் அவற்றை பராமரிப்பதற்கென நிலங்கள், பொன் பொருளையும் மானியமாகக் கொடுத்துள்ளனர். கருங் கற்களாலான அக்கோவில்கள் இன்றும் வானளாவிய கோபுரங்களுடன் நிலைபெற்று அருள் ஒளி வீசுகின்றன. தூர இருந்து பார்த்தே இறைவன் அருள் பாலிக்கும் கோயிலைக் கைகூப்பித் தொழக்கூடிய வண்ணம் மிக உயரமான கோபுரங்களையும் அமைத்துப் போந்தனர். தெய்வீகக் கலை அம்சம் நிறைந்தவையாகவும் விளங்குகின்றன. அக்காலத்தினரின் ஆன்மீக வாழ்வை இக்கோவில்களும் கோபுரங்களும் பறை சாற்றி நிற்கின்றன. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்றதற் கிணங்க குடிமக்களும் ஆலயவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆன்மீகர்களாக வாழ்ந்தனர். நாயன்மார்கள்தானும் கோவில்களுக்குச் சென்றுதான் வழிபாடியற்றினர். பதிகங்களை நெஞ்சு நெக்குருகப் பாடினர். இறை அன்பு மீதூரப் பெற்றனர். முத்தி இன்பப்பேறும் கிடைக்கப் பெற்றனர். மக்களுக்கும் வழி காட்டியானார்கள்.

ஓர் ஊருக்கு உயிர் நாடிபோல் விளங்குவது ஆலயமாகும். "கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்" என உலக நீதி அறுதி இட்டுக் கூறுகிறது. தமிழ் மூதாட்டி ஔவைப் பாட்டியும் "ஆலயம் தொழுவது சாலவும் நன்று". என்று அறிவுறுத்துகின்றார். "திரு நாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில், தீ வண்ணர் திற மொருகாற் பேசாராகில், ஒருக்காலும் திருக்கோவில் சூழாராகில் ......." என்று பிறவியின் பயனாகிய முத்தி இன்பத்தைப் பெறமுடியாது என்பதை அப்பர் கூறாதே கூறுகின்றார். மேலும், அவர் "திருக்கோவில் இல்லாத திருவில் ஊரும் திருவெண்ணீறணியார் திருவில் ஊரும் ... அவை எல்லாம் அடவி காடே" என ஊர் இலக்கணத்தை வரையறை செய்கின்றார். கோயில் என ஒன்று இருந்தால்

கண்டிப்பாக சிவசின்னமாகிய திருநீறு நெற்றியில் துலங்கும். எனவே கோவிலின்றி குடியிருப்பு இல்லை என்றாகி விட்டது.

இறைவன் தயிரில் வெண்ணெய் போல் ஆலயங்களிலும் பாலில் நெய் போல் எங்கும் நிறைந்துள்ளான். எனவே, ஆலயத்தில் (ஆ+லயம்)தான் நாம் மனம் இலயித்து மனமொருமித்து இறைவனை வழிபட முடியும். மக்களுக்கு மன அமைதியை அளித்து வாழ்வாங்கு வாழ வைத்துக் கொண்டிருப்பதுவும் திருக்கோவில்களே. நமது செயற்பாடுகள் அனைத்துக்கும் காரணமானவை ஐம்புலன்களேயாம். இவை சரியான வழி செல்லாது தவறும்போதுதான் பாவ காரியங்கள் விளைகின்றன. மனிதனை ஆட்டிப் படைக்கும் இவ்வைம்புலன் களை மனமொன்றி அடக்கி ஆளுவதற்கும் பக்திநெறி வயப்படு வதற்கும் ஆலயங்களே வழிகாட்டுகின்றன என்பதை தமிழர் நன்குணர்ந்தே தாம் வாழும் இடமெல்லாம் ஆலயங்களைக் கட்டி எழுப்பினர். வசதி வாய்ப்பு இல்லாவிடத்து மரத்தடியில் நடுதறி, சூலம், வேல், அல்லது ஒரு கல்லாவது வைத்து, சலம் பூவொடு தூப வழிபாடியற்றினர். பேராசிரியர் ஆ. திருஞானசம்பந்தன் "திராவிட மக்கள் நாமரூபத்துடன் கூடிய அடையாளங்களை வைத்தே வழிபட்டனர். மரத்தின் கொம்பு (தறி) கல் என்பவற்றைத் திறந்த வெளிகளிலும் ஊருக்கு ஒதுக்கான இடங்களிலும் கோயில் போன்று வைத்தே வழிபட்டனர்". என்று 'பெரிய புராணம் ஓர் ஆய்வு' எனும் நூலிற் கூறுகிறார். இறைவன் தூய அன்புடன் துதிப்போர்க்கு எளியராகிறார் என்பது காடவர் கோன் கட்டிய மாபெரும்கோயிலை விட்டு, தன் மனதிலே கோயில் கட்டிய பூசலார் நாயனாரின் கோயிலுக்கு முதல் மதிப்பளித்ததிலிருந்து அறிய முடிகிறது.

இந்துக்களாகிய எமது வழிபாட்டு முறையே தனிச் சிறப்பு வாய்ந்தது. அவரவர் அறிவுக்கும் ஆற்றலுக்கும் எட்டியவாறு தியானித்தல், பூசித்தல், நேர்த்தி வைத்தல், வேள்வி செய்தல், யாகம் செய்தல், திருத்தொண்டு செய்தல், தீர்த்த யாத்திரை செய்தல், கோவில் நிறுவுதல், எனப் பல்வேறு வகையில் வழிபடுவர். ஆனைவிழுந்தான் விக்னவிநாயகர் ஆலய

வரலாற்றுக்கும் ஒரு சான்றாக அமைவது தீர்த்த தல யாத்திரை மேற்கொண்டு வந்த சோழ அரச குமாரி மாருதப்புரவீக வல்லியின் கர்ண பரம்பரைக் கதையாகும். தீர்த்த தல யாத்திரைக்கென வந்த அரசிளங் குமாரி ஆனை விழுந்தான் கோவில் உட்பட ஏழு விநாயகர் கோவில்களைக் கட்டினாள் என அக்கதை கூறுகிறது. காலங்காலமாக செவி வழியே வந்த கதையின் நாயகியான அவள், வரலாறு படைத்த கோவில்களான மாவிட்டபுரம் முருகன் கோவில், கீரிமலை நகுலேஸ்வரர் கோவில்களின் புராணங்களின் வரலாற்றிலும் இடம் பெற்றுள்ளாள். ஆகவே அவற்றோடு தொடர்புடைய இக்கர்ண பரம்பரைக் கதை கற்பனையாக இருக்கமுடியாது. அரச குமாரி தீர்த்த, தலயாத்திரைக்குச் செல்லும் வழியிலேயே இக்கோவில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இன்றும் மேற்கில் சோழியபுரத்தில் இருந்து(சுழிபுரம்) கீரிமலைக்கு நடந்து வருவோர்க்கு ஆனைவிழுந்தான் ஊடாகவும் குறுக்கு வழி இருக்கின்றது. இவ்வாலயம் பற்றி எழுத்தில் வடிக்கப்பட்ட சான்றுகள் எதுவும் இல்லையே அன்றி தொல்பொருள் ஆய்வின் போது கிடைத்த சான்றுகள், தலவிருட்சம், லிங்கப் பிள்ளையார், தூர்ந்துபோன கிணறு ஒன்று என வேறு ஆதாரங்களும் இருக்கின்றன.

இந்த எழுத்துச் சான்றுகள் ஆய்வின் ஆதாரமாக எப்போது வந்தன? வேதங்கள் முதற் கொண்டு செவி வழிதானே வந்தன. மனிதன் பிறந்தது முதல் அறியத் தருவது வாய் மொழி – வாய்மை என்பதை மனதில் இருத்துவது நன்று. நாம் எழுதப் படிக்கமுன் பெற்றோர் சொல்லி நெறிப்படுத்திய நல்வார்த்தைகள்– வாய்வழி வந்தவாய்மை மொழிகளேயாம். அங்ஙனமாக எழுத்தில் வடிக்கப்பட வில்லையென வாய்மொழி எல்லாம் ஒதுக்கப்பட வேண்டியவை தானா? இல்லையே.

" absence of evidence is not evidence of absence " Rhy Ruhars (New Zealand )

“சான்று இல்லாமை (உண்மை/நிகழ்ச்சி) இல்லை என்பதற்கு சான்றாகாது”. என்பது அவரின் கூற்று. எனவே ஆனை விழுந்தான

[1] பெரிய புராணம் ஓர் ஆய்வு– பக். 51, பேராசிரியர் ஆ.ஞானசம்பந்தன்

ஆலயத்தை ஒட்டிய நம்பகமான ஐதீகக் கதைகளை அவற்றுக்கு எழுத்து மூலம் சான்றுகள் இல்லாக் காரணத்தால் நிராகரித்தல் தவறு. ஒரு கட்டிடம் இருந்ததற்கு சமீபத்தில் ஆதாரங்கள் 1983 இல் கலாநிதி பொ. இரகுபதி கண்டு பிடித்தபோதும் கோவில் கட்டிடந்தானது என்பதற்கு இக்கர்ணபரம்பரைக் கதையும் ஒரு ஆதாரமாகும்.

இக்கர்ணபரம்பரைக் கதை மேலும் கூறுவதாவது தீர்த்த தல யாத்திரைக்கு வரும் வழியில் அரசகுமாரி ஏறிவந்த யானை ஒரு இடத்தில் வீழ்ந்து வணங்கியதாகவும் அவள் விசாரித்தபோது அங்கு ஒரு விநாயகர் இருப்பதை அறிந்ததாகவும் கூறுகிறது. அந்த ஐந்தறிவு ஜீவனான யானைவீழ்ந்து வணங்கிய – இந்நிகழ்வு ஒரு பெரிய அற்புதமல்லவா. அந்த சக்தி மிக்க விநாயகரின் அதிர்வலைகளே யானையைப் பரவசமடையச் செய்திருக்கிறது. மனிதர் உணர முடியாத அதிர்வலைகளை யானை, நாய் முதலிய பிராணிகள் உணருவது ஒரு புதிய செய்தியல்ல. மனிதன் மட்டும் அல்ல அற்ப பிராணிகளும் இறை அருள் பெற்ற வரலாறுகளைச் சமய நூல்கள் குறிப்பிடக் காண்கிறோம். அதுவுமன்றி, இராச குமாரியும் ஈர்க்கப்பட்டுள்ளாள் என்பதை அவள் அந்நிகழ்வை ஒரு சாதாரண நிகழ்வாகக் கருதாததில் இருந்து புரிந்து கொள்ள முடிகிறது. அவரது சக்தி இன்றும் நிலை பெற்று நிற்கிறது. நானறியக் கூடியதாக (இதை எழுதிக் கொண்டிருக்கும் போது என் வயது 80) இரு குடும்பத்தினர் நீண்ட காலம் மகப் பேறின்றி இருந்து இத்தல விநாயகருக்கு நேர்த்தி வைத்து வழிபட்டு புத்திர பாக்கியம் கிடைக்கப் பெற்றனர். இன்னும் எத்தனையோ பேர்தம் மனதால் வேண்டி மனோரதம் நிறைவேறப் பெற்றிருப்பர். யாமறியோம். ஆனால் ஒன்று மட்டும் கூறவிரும்புகிறேன்.

இன்றும் அவருடைய சக்தி அதிர்வலைகள் பரவிக் கொண்டிருப்பதாலேயே கோயிலும் குடிகளும் இவ்வளவு – யுத்த சூழலிலும் முன்னேறிக் கொண்டே இருக்கின்றன. மேலும், யானை விழுந்து வணங்கியதைப் புனைகதையாக ஏற்பதற்கில்லை. மிருகங்கள் பறவைகள் வழிபட்டதாக எத்தனையோ புராணக்

கதைகள் உண்டு. திருச்சிராப்பள்ளியில் உள்ள அருள்மிகு திருவானைக்கா ஆலயமும் ஆனை வழிபட்ட தலமாகவும் ஆனை உலவிய சோலை (திரு+ஆனை+கா, கா– சோலை) என்பதாலும் அது அவ்வாறு வழங்கப்படுவதாக அதன் வரலாறு கூறுகிறது. ஸ்ரீ காளகஸ்தி கோவிலும் அவ்வாறே சிலந்தி, நாகம், யானை என்பவற்றால் வழிபடப்பட்டதால் அப்பெயர் பெற்றதாக சமய நூல்கள் கூறுகின்றன. இவ்விரு கோயில்களும் முறையே நீர், நெருப்பு ஆகிய பஞ்ச பூத தலங்களாகும். இத்திருத் தலங்களின் பெயர் வந்த கதைகள் நம்பிக்கை உள்ள வரலாற்றுக் கதைகளாகவே ஆளப்பட்டு வருகின்றன. வெறும் புனை கதைகளாக அன்று. பசுவைப் போன்று யானைகளும் மயில்களும் மான்களும் பாம்புகளும் கோவில்களில் முக்கிய இடம் பெறுவதைக் கண்ணாரக் காண்கிறோம். பசுவுக்குக் கோ பூசையென மூலவரின் பூசைக்கு முன்னர் ஒரு பூசையே நிகழ்கிறது. இவை யாவும் விலங்கினங்களுக்கும் இறைவனுக்கும் இடையே உள்ள ஈர்ப்பைக் குறிக்கின்றன.

இக்கதையின்படி இங்கு ஏலவே பிள்ளையார் இருந்திருக்கிறார். பிள்ளையார் வழிபாடும் இருந்திருக்கிறது. எனவே, மாருதப் புரவீக வல்லியின் வருகைக்கு முன்னரே பிள்ளையார் வழிபாடு இருந்தமையையும் இக்கதை ஊர்ஜிதப்படுத்துகிறது. விநாயக வழிபாடு தமிழ் நாட்டிலிருந்தே இலங்கைக்குப் பரவி உள்ளதென் பது முடிந்த முடிபாயினும் மாருதப்புரவீகவல்லி இங்கு ஏழு தலங் களை நிறுவினாள் என்பதன் மூலம் அவள் காலத்தில் விநாயக வழிபாடுவேகமாகப் பரவியிருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

பிள்ளையார் வழிபாடு ஆசியா முழுவதும் கி.பி 6 ஆம் நூற்றாண்டில் இருந்தே பரவியதாக வரலாறுகள் கூறுகின்றன. ஆயின் கபிலர் காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டென கருதப்படுகிறது. அவர் பாடிய புறநானூற்றுப் பாடலில் (106) குவிந்த கொத்தாக இலைகளுடன் கூடிய எருக்கை உவந்து ஏற்பவர் எனக் குறிப்பால் விநாயகரை உணர்த்திப் பாடி உள்ளார். வேறெந்தக் கடவுளரும் (சிவன் தனித்து பூவை மட்டும் ஏற்பவர்) ஏற்காத வெள்ளெருக்கை

இலை, பூ, வேர் என ஏற்பவர் கணபதியே. பூசை தொடங்கு முன் கூறப்படும் "சுக்லாம் ப்ரதரம் விஷ்ணும்" எனும் சுலோகமும் இதே போலத்தான் குறிப்பாலேயே விநாயகரை உணர்த்துவதைக் காணலாம். இச்சுலோகத்தில் விநாயகருடைய பெயர் எதுவுமே இடம் பெற வில்லை. சுக்கிலாம் பரதரம்–வெள்ளை நிற உடை அணிபவர், விஷ்ணு– சர்வ வியாபி , சசிவர்ண – நிலா போன்ற நிறம் உடையவர், சதுர் புஜம் – நாலு கைகள் உடையவர், பிரசன்ன வதனம் – பிரகாசமான முகத்தை உடையவர் என்றே கூறப்பட்டுள்ளது. இவற்றுள் ஒன்றையாவது பிள்ளையாரின் பெயரைக் குறிப்பதாகக் கூறமுடியாது. "த்யாயேத் சர்வ விக்ன சாந்தயே" (தியானிக்கவேண்டும் சகல இடையூறுகளும் நீங்குதற்கு), இக்கடைசி அடியே அவரது விக்கினம் நீக்கும் இலக்கணம் கூறிக் குறிப்பால் பிள்ளையாரை உணர்த்தி நிற்கின்றது.எனவே, கபிலர் உவமையாக எடுத்தாண்ட(புறம்106) இப்பாடலிலிருந்து தமிழ்நாட்டில் கி.பி.முதலாம் நூற்றாண்டளவில் விநாயகர் வழிபாடு வழங்கி வந்திருக்கிறதென்பது உறுதிப்படுகிறது.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய தொடர்புகள் இருந்த மையால் இலங்கையிலும் அக்காலங்களில் விநாயக வழிபாடு இருந்திருக்கலாம். பிற்பட்ட காலங்களில் வளர்ச்சி அடைந்திருக்க லாம். மாருதப்புரவீக வல்லியின் வருகையுடன் தொடர்புபடுத்தி நோக்கினால் நோய் நீங்கியபின் மாருதப்புரவீகவல்லியை (அங்கசுந்தரி நோய் நீங்கிய பின்) கண்டு காதலித்து மணந்த உக்கிர சிங்கசேனன் கி.பி. 9 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன். கதிர்காமத்திலிருந்து அரசாண்டவன் என மாவிட்டபுரத்திருத்தல வரலாறும் யாழ்ப்பாண வைபவ மாலையும் அறியத் தருகின்றன. அதனால் ஆனை விழுந்தான் விநாயகர் ஆலயம் சோழ அரசியால் நிறுவப்பட்ட தாயின் 9 ஆம் நூற்றாண்டளவில் நிறுவப்பட்டது எனலாம். ஆயின் அவ்விளவரசியின் யானை விழுந்து வணங்கிய இடத்தில் விநாயகர் இருந்தார் என்பதைக் கருத்தில் கொண்டால அவ்விடத்தில் விநாயகர் ஒரு சிறு கோவிலிலோ அன்றி மரத்தின்

---

1 விஷ்ணு ஆன்ற சொல்லின் பொருளை அவதானிக்க.

கீழோ குடி கொண்டிருக்க வேண்டும் என நம்ப முடிகிறது. அரச குமாரி பின் தனது வசதிக்கேற்ப பெரியஅளவில் கோவிலை அமைத்திருக்கக் கூடும். ஆனைவிழுந்தான் தொல்பொருள் ஆய்வு மேற்கொண்ட விரிவுரையாளர் கலாநிதி பொ. இரகுபதியும் கி.பி. 6 – 10 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஒரு கட்டிடம் இருந்திருக்கலாம் என அகழ்விற் கிடைத்த சான்றுகளைக் கொண்டு கணிப்பிடுகிறார். ஆனை விழுந்தான் விக்ன விநாயகர் ஆலய ஆய்வு ஒன்று முழு அளவில் நடை பெற்றால் நாம் இலகுவாக அதன் பூர்வீக வரலாற்றை அறியமுடியும். கர்ணபரம்பரைக் கதையும் கல்லில் செதுக்கிய காவியக் கதை போல் ஆகும் வாய்ப்பைக் கிட்டும்.

ஓர் ஊரின் சிறப்பைப் பிரதிபலிப்பது அவ்வூரின் ஆலயமாகும். அது அவ்வூரில் வதியும் மக்களின் பண்பாட்டுக் களனாக விளங்குவது. மக்கள் மனதை ஆன்மீக வழியில் செலுத்த வழிகோலுவது. கோயில்களில் விழாக்கள் நடைபெறும் போது, மக்கள் ஒன்று சேர்வதனால் ஒற்றுமை வளர்கிறது; அன்பு வளர்கிறது; தான தருமஞ் செய்யும் உணர்வு வளர்கிறது; தூயவாழ்வு வாழும் பண்பு உருவாகிறது; கலை உணர்வும் வளர ஏதுவாகிறது. பக்தி மார்க்கத்தை மட்டுமன்றி மனிதன் எப்படி ஆணவத்தை அடக்கி வாழ வேண்டும் என்பதையும் நெறிப்படுத்துகிறது. கோவில் வேறு தெய்வம் வேறு அன்று. அதன் புனிதத் தன்மையைக் கட்டிக் காப்பதும் போற்றிப் பணிவதும் மக்கள் கடனாகும். கோவிலில் செய்யத் தகாதென தவிர்க்கப்பட்ட குற்றங்களைச் செய்யலாகாது. மகாபாவமாகும். ஆலயத்தை வணங்குவோர் மட்டுமன்றி ஆலய ஆசாரியாரின் பங்கும் முக்கியமானது. அந்தணர் முப்போதும் திருமேனி தீண்டுபவர். ஆதலின், மதிப்புக்குரியவர்கள் ஆகிறார்கள்.

“அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலான்”எனதெய்வப்புலவர் வள்ளுவராற் போற்றப்படுபவர்கள். பிறப்பளவில் மட்டும் பார்ப்பான் என இருந்து அர்ச்சனை செய்தால் தீய பயன்கள் விளையும் என்கிறார் திரு மூலர்.

"பேர் கொண்ட பார்ப்பான் பிரான் தன்னைஅர்ச்சித்தால்
பேர் கொண்ட நாட்டுக்குப் பொய்யா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமுமா மென்றே
சீர் கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே"

முப்புரி நூலும் குடுமியும் பழங்காலந் தொட்டே அந்தணரின் அடையாளக் குறியாய் இருந்து வருகிறது. முப்புரிநூல் பிராணாயாமம் செய்து இடகலை, பிங்கலை, சுழுமுனை எனும் மூன்று நாடிகளையும் தொழிற்படுத்தி ஆத்மீக வளர்ச்சியில் ஈடுபடுபவர், முத்தீ வளர்ப்பவர் என்பவற்றின் தத்துவத்தைக் குறிக்கும். குடுமி, ஆடை, பற்றியும் திருமந்திரம்கூறுவது யாதெனில்

"நூலும் சிகையும் நுவலின் பிரமமோ
நூலது கார்ப்பாசம் நுண் சிகை
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காண நுவலிலே" என்பதாம்.

"உரு ஏற திரு ஏறும்" என்பது வழி மொழி. தெய்வத்தின் சக்தியை மேலோங்க வைப்பவர் பூசனைசெய்வோரும் பூசிப்போருமேயாவர். ஆகவே பூசிப்போரும் ஆசார சீலர்களாக கோவிலுக்குச் சென்று விதி முறைப்படி ஓழுகி மனம் ஒன்றித் தோத்தரிக்க வேண்டும். நாம் செய்த பூர்வ புண்ணியத்தின் பயனால் தான் இப் பழம் பெரும் சக்தி வாய்ந்த விநாயகரை வழிபடும்பேறு கிடைத்துளது. திருத்தொண்டுகள் செய்யும் பாக்கியமும் பெற்றுள்ளோம். கோவிலின் வளர்ச்சிக்கு ஊரொருமித்து உழைத்தது போல் தீர்த்தம் இல்லாக் குறையையும் ஊரவர் ஒத்துழைத்துத் தீர்க்க முன்வர வேண்டும் என்பதே என் பணிவன்பான வேண்டுகோள். இத்திருத்தலத்தின் சிறப்பு, காலம் காலமாக வாய்வழியாகவே வராமல் வரிவடிவிலும் வருமாயின் அதன் உண்மை வடிவம் திரிபு படமாட்டாது. வரலாறும் இல்லை என்றாகாது. ஐதீகக் கதை வரலாற்று உண்மை ஆகிவிடும்.

இத்திருத்தல வரலாற்றுடன் மூலவரான விநாயகப் பெருமானின் பொதுவானவரலாறும் வழிபாடும் வருங்காலச் சந்ததியினருக்கு உதவும் எனும் நோக்குடன் நான் அறிந்தவற்றை இலகு தமிழில் தொகுத்து தந்துள்ளேன். இன்றைய இளம் சமுதாயம் விஞ்ஞான மயக்கத்திற் கிடக்கிறது. அது அழிவுப் பாதையிலும் இட்டுச் செல்வதை உணர்வதில்லை. இறைவழிபாட்டினால் நல்லவண்ணம் வாழலாம் என வழிகாட்டும் மெய்ஞ்ஞான வெளிச்சமான சமய தத்துவங்களை உணராது குருடாகிக் கிடக்கின்றது. சமயம் புகட்டும் தத்துவங்களை விளங்கிக்கொள்வது கடினம் என்பதும் ஒரு காரணம். தத்துவத்தை வெளிப்படச் சொல்லாமை முக்கிய காரணம் ஆகும். இன்றைய சிறுவர் ஆலயம், விக்கிரகம் என்பவற்றின் அமைப்பு, அவை கூறும் தத்துவங்களை விளங்கிக் கொள்ளாது வெறும் கட்டிடங்களாக, சிலைகளாகப் பார்ப்பார்களேயானால் அவர்களிடம் பக்தியையோ ஈடுபாட்டையோ எதிர்பார்க்கமுடியாது. இக்காலக் குழந்தைகள் நம்மைப் போலல்லர். ஆயிரம் கேள்வி கேட்டுத் துளைத்து விடுவர். குழந்தைகளுக்குப் புராணக்கதை சொல்லும்போது அவற்றிற் புதைந்துள்ள தத்துவங்களையும் சொல்லுதல் வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு இந்துமதம் அர்த்தமுள்ளமதமாகும். விநாயகர் முதல் வழிபாட்டுத் தெய்வம். அவரின் வியாபகம், பெருமை, கருணை, சக்தி, முதன்மை என்பன அறிய இதன் இணைப்பு உதவும் என நம்புகிறேன்.

சிவயோகமதி கந்தவனம்



# ஆனைவிழுந்தான் ஸ்ரீ விக்கின விநாயகர் ஆலய வரலாறு

## பொருளடக்கம்


நாடும் ஊரும் 03

ஆலயம் அமைந்திருக்கும் கிராமச் சூழல் 05

ஆலயச் சுற்றாடல் 08

ஆனைவிழுந்தான் என்ற அடைமொழிக் காரணம் 12

ஆலயமும் மாருதப்புரவீகவல்லியும் 17

ஆனைவிழுந்தான் ஆலயத்தின் பழம் பெருமை 26

பழமையின் ஆதாரங்கள் 39

19ஆம் நூற்றாண்டிலிருந்து ஆலய வளர்ச்சி 40

19ஆம் நூற்றாண்டிலிருந்து பூசகர்கள், அர்ச்சகர்கள் 73

திருக்கோயிற் காணிகளும் உபகரித்தோரும் 74


(இணைப்பு)

## விநாயகர் வழிபாட்டு வரலாறு


விநாயகர் தத்துவம் 83

ஈழநாட்டில் விசேடம்பெற்ற விநாயக திருத்தலங்கள் 110

விநாயகப் பெருமான் அருளாற்றலும் பெருமையும் 116

விநாயக விரதங்கள் 122

விநாயகரை வழிபாடு செய்யும் முறைமை 129

விநாயக வழிபாட்டிற் சில சிறப்பம்சங்கள் 134


அடிக் குறிப்பு 141

# பயன்படுத்தப் பெற்ற நூல்கள்


- மாவீரன்இலங்கை வேந்தன் – என். எஸ் . எம். பூரணம்பிள்ளை
- யாழ்ப்பாண இராச்சியம் – எஸ். பத்மநாதன்
- யாழ்ப்பாண வைபவமாலை – முதலியார் குலசபாநாதன்
- நகுலகிரிப் புராணம்
- மாவிட்டபுரத் தலவரலாறு
- ஆனைவிழுந்தான் ஆலயவரலாறு – மட்டுவில் ஆ.நடராசா
- இலங்கை இந்திய வரலாறு – எஸ்.எச்.ஹெரெஸ் பெரோராவும் எம். இரத்தினசபாபதியும்
- இலங்கை வரலாறு – பல்கலைக் கழகம் பாகம் 1
- இலங்கை, போர்த்துக்கீசர் காலம் – பாகம் 2 – போல் ஈ. பீரிஸ்
- இலங்கையில் இந்து சமயத்தின் சுருக்க வரலாறு – என்.சி. எஸ்.நவரத்தினம்
- புறநானூறு
- அகநானூறு
- பெரிய புராணம் ஓர் ஆய்வு – அ.ச. ஞானசம்பந்தன்
- இடப் பெயர் ஆய்வு – யாழ் .ப.க. பேராசிரியர் இ.பாலசுந்தரம்
- சைவநெறி தரம் 10 – கல்வி வெளியீட்டுத் திணைக்களம்– இலங்கை வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கோணேஸ்வரக் கோயில்
- Early Tamil Epigraphy – ஐராவதம் மகாதேவன்
- திருக்கேதீஸ்வரம் கும்பாபிடேக மலர்
- காங்கேயன் கல்வி மலர் – காங்கேசன்துறை கல்வி வட்டாரம்
- சக்தி விகடன்–
- ஞான பூமி
- ஞான ஆலயம்

- இணைய தளம் – ஆதி சக்தி
- தத்துவ உலகம் இதழ்
- G.T.V. தொலைக்காட்சி (காலை மலர்)

# ஆனைவிழுந்தான்
# ஸ்ரீவிக்கின விநாயகர் ஆலயம்



பவளமால் வரையில் நிலவெறிப்பதுபோல்
பரந்தநீற் றழகுபச் சுடம்பில்
திவளமா துடன்நின்றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்தில்
தரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்

திருவாதவூரடிகள் புராணம்

உ

சிவமயம்

# அருள் மிகு இளவாலை
# ஆனை விழுந்தான் ஸ்ரீ விக்னவிநாயகர் ஆலய வரலாறு



விஞ்சுபுகழ் ஆனை விழுந்தானில் வீற்றிருக்கும்
குஞ்சரஉன் செய்தி குறித்துரைக்க - நெஞ்சில்
நிறைவாக்கிச் சான்றும் நிகழ்ந்தகதை முற்றும்
முறையாக்கித் தெரிவிப்பாய் முன்.

பொது நூலகம்
வலி-தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம்
உடுவில்.

# நாடும் ஊரும்

இந்து சமுத்திரத்தின் முத்தென மிளிரும் இலங்கைத் தீவிற்குச் சூட்டிய மகுடமென வடபால் திகழ்வது யாழ்ப்பாணம். இந்தியாவில் இருந்து வந்த பாணன் ஒருவனது பாடலைக் கேட்டு மகிழ்ந்த அரசன் அவனுக்கு யானைகளையும் மணற்றியையும் பரிசாக அளித்தான். பாணன் யாழ் பாடிப் பரிசு பெற்றமையால் யாழ்ப்பாணம் எனப் பெயர் பெற்றதும் யாவரும் அறிந்த வரலாறு. அது மணற்றிடராக இருந்தபடியால் மணற்றி என வழங்கப்பட்டது. யாழ் குடாநாட்டின் வடக்கே, மேற்குப்புறமாக அமைந்திருக்கும் இளவாலை–வடக்கில் இவ்வரலாற்றுக்குரிய இத்திருத்தலம் உளது. இளவாலை ஒரு சிறிய கிராமம். ஆகவே இக்கிராமம் அமைந்துள்ள இலங்கைத் தீவு பற்றியும், கர்ண பரம்பரைக் கதை மூலம் ஆனை விழுந்தான் தலவரலாற்றுடன் தொடர்புடைய பண்டைய இலங்கை இந்தியத் தொடர்பு பற்றியும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகிறது.

இந்தியாவும் இலங்கையும் ஒரே நிலப்பரப்பாக இருந்தது என்றும் கடல் கோள்களினால் பிரிந்து தீவானது என்றும் ஆராய்ச்சியாளர் கூறுவர். பண்டுதொட்டு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் நெருங்கிய தொடர்பு இருந்துவந்தது. "இந்திய உபகண்டத்தின் தென்கோடியில் உள்ள லங்கா மிகப்பழைய காலத்தில் இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. அது குமரி ஆற்றுக்கும் பஃறுளியாற்றுக்கும் இடைப்பட்டதாக தமிழகத்தின் ஒரு பகுதியாக இலங்கை என்று இருந்தது. நல்ல நீர்ப்பாசன வசதியும் வளமும் உளதாகவுந் திகழ்ந்தது. இரண்டாம் கடல்கோளில் அதன் ஒருபகுதி கடலால் விழுங்கப்பட இலங்கை எனும் நிலப்பகுதி தப்பிற்று. இடைப்பட்ட கடல் பின் பாக்கு நீரிணையெனப் பெயர்பெற்றது. ஒரு காலத்தில் தென்பொருநை அல்லது தாமிரபர்ணி ஆற்று முகத்தில் இலங்கை இருந்தபடியால் கிரேக்கரும் உரோமரும் தப்பிரபேன் (Taprabane) என்றே அழைத்தனர். இங்கு பெருந்தொகையான பனை மரங்கள்

நிறைந்திருந்தன. வடபகுதி மணற்றிடராக இருந்தது. திருவாங்கூரின் கிழக்குக் கரையோரப் பகுதிகளை ஒத்தனவான சிற்றாறுகள், நீரோடைகள், கெந்தகக் கலப்பு மண், பெருந்தொகை அழகான குயில்கள், சுவாத்தியம், பருவகாலமாற்றம் என்பவற்றை இலங்கையிலும் காணலாம்"[1] என். எம். எஸ். பூரணம்பிள்ளை கூறுகிறார். ரெனன்ற் (Tennent) என்பார். "இலங்கையை இந்தியாவுடன் சேர்ந்த ஒரு கண்டமாகவே இந்துக்கள் கருதி மிக முக்கியத்துவம் கொடுத்தனர். நம்பமுடியாத அளவு விஸ்தீரணம் உடையது. இந்தியாவில் இருந்து தென்கிழக்காக பலமைல் தூரம் பரந்திருந்தது."[2] என 1859 இல் விபரித்திருக்கிறார். ரெனன்ற் இன் இக்கூற்று பண்டைய இலங்கையில் இந்துமதச் செல்வாக்கு, இந்தியாவுடனான தொடர்பு, அதன் பெரும் பரப்பளவு என்பவற்றுக்குச் சான்றாக அமைகிறது.

"இலங்கையானது மிகப்பழைய காலத்தில் இந்திய உபகண்டத் தோடு இணைந்திருந்து பின்னர் ஏற்பட்ட இயற்கை நிகழ்வுகளாற் பிரிந்தது என்னும் கொள்கை யாவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது."[3] என 1803இல் பேர்சிவல் (Percival) கூறுகிறார். ஞானயோகியாகிய திருமூலர் இலங்கையைச் சிவபூமி எனக் குறிப்பிடுகிறார். இலங்கையில் நான்கு திசைகளிலும் நகுலேச்சரம், கோணேச்சரம், கேதீச்சரம், சந்திரசேகரேச்சரம் என நாலு சிவாலயங்கள் இருந்தனவாக வரலாறுகள் கூறுகின்றன. பௌத்த நூலான மகாவம்சமும் இத்தலங்கள் பற்றிக்கூறும். தென்பாலிருந்த சந்திரசேகரேச்சரம் அழிந்துவிட்டது. மற்றைய மூன்று ஈச்சரங்களும் இன்றும் முத்திசையிலும் அருளாட்சி புரிகின்றன. பண்டுதொட்டுத் தெய்வ நம்பிக்கைஉடைய மக்கள்வாழ்விடமாகவும் தெய்வங்கள் அருள்பாலிக்கும் புண்ணிய பூமியாகவும் இலங்கைத்தீவு திகழ்கின்றது.

# ஆலயம் அமைந்திருக்கும் கிராமச் சூழல்

இலங்கையின் வடமேற்கே, காங்கேசன்துறைப் பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் இளவாலையம்பதியில் விக்னவிநாயகர் ஆலயம் அமைந்துளது. காங்கேசன்துறை, மாவிட்டபுரம், கீரிமலைப் பகுதிகளை அடக்கிய பிரதேசம் கோயிற்கடவை என அழைக்கப் பட்டதாக யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ளது. முத்து என்பவர், "கோவில்கள் தோன்றிய காரணத்தால் கோயிற்கடவை என்னும் பெயரைப்பெற்றது. கீரிமலை, காங்கேசன்துறை, மாவிட்டபுரம், ஆகிய மூன்று இடங்களையும் உள்ளடக்கிய பகுதி கோயிற் கடவை என அழைக்கப்படுவதை இன்றுங் காணலாம். இந்த மூன்று இடங்களின் சரித்திரமும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாம்"[4] என நகுலேஸ்வரம் எனும் கட்டுரையில் எழுதியுள்ளார். கோயிற் கடவையைச் சார்ந்து, கீரிமலை நகுலேஸ்வரம், காசி விஸ்வநாதர், கீரிமலை மாரியம்மன், மாவைக்கந்தன், கிருஷ்ணன், கொல்லங்கலட்டி வீரகத்திவிநாயகர், இளவாலை ஆனைவிழுந்தான் விக்னவிநாயகர், பன்னாலை வரத்தலம் கற்பகவிநாயகர், தோதரை அம்மன், துர்க்கை அம்மன், பன்னாலை முருக மூர்த்தி, அளவெட்டி கும்பழாவளை விநாயகர், பெருமாக்கடவைப் பிள்ளையார், நாதோலை அம்மன், கவுணாவத்தை வயிரவர் ஆகிய தெய்வங்கள் எழுந்தருளி இருந்து அருளாட்சி புரியும் தொன்மைமிக்க கோவில்களாகப் பிரசித்தி பெற்று விளங்குகின்றன. இவற்றைத் தவிர அம்மன், நாச்சிமாார், வயிரவர், பிள்ளையார் என குழுமக் கோயில்களாகவும் குடும்பக் கோயில்களாகவும் சில உள.

### *ஆலயம் அமைந்துள்ள கிராமம் :*

இளவாலைக் கிராமத்தின் மேற்கே சேந்தான்குளம் வழியாக யாழ். நகரிலிருந்து கீரிமலை செல்லும் பெருந்தெரு உளது. இவ்வீதியில் பாலும் தயிரும் நிறைந்து மேழிச்செல்வம் கொழிக்கும் சித்திரமேழி எனும் இளவாலையைச் சார்ந்த கிராமம் இருக்கிறது. சித்திரமேழிச் சந்தியிலிருந்து ஏறத்தாழ கால் கிலோ மீற்றர் தூரத்தில் கிழக்கே செல்லும் மெய்கண்டான் வீதியின் இருமருங்கும் சோடக்கன்




பொது நூலகம்
தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம்

பழம்பதி பரந்திருக்கின்றது. பன்னாலை ஊடாகச் செல்லும் யாழ் – கீரிமலைத் தெருவின் நகுலேஸ்வர வீதியின் ஆலடிச் சந்தியிலிருந்து மேற்குப் புறம் செல்லும் வீதி வழியே ஏறக்குறைய முக்கால் கிலோமீற்றர் தூரம் சென்றாலும் இப்பதியை அடையலாம். யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் கலாநிதி இ.பாலசுந்தரம் அவர்கள் யாழ்ப்பாண ஊர்களின் பெயர்கள் வந்த வரலாற்றில் இளவாலை எனும் பெயர் “இலை வாழை என்பதே திரிந்து பேச்சு வழக்கில் இளவாலை என வந்த காரணப்பெயர் என்றும் பெரிய இலை இன வாழைகள் உள்ள ஊரானபடியால் அவ்வாறு வழங்கின [5] என்றும் கூறுகிறார். இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் கற்பித்த கட்டுவன் ஆசிரியர், பண்டிதர் வ. நடராசா "வாலை என்றால் குமரிப் பெண், இளமையான குமரிப் பெண்போல அழகான கிராமம் இளவாலை"என விதந்துகூறியது இன்றும் மனதில் ஆணி அடித்ததுபோல் உளது. இளவாலை இன்றும் இளமையும் செழிப்பும் நிறைந்து வாலையாகவே யுத்த சூழலிலும் தன் செழுமையைக் காத்து நிற்கின்றாள். அது ஆனை விழுந்தானின் அருள்மிகு கொடையேயாம்.

சோடக்கனின் கிழக்காக மெய்கண்டான்வீதியில் ஆனைவிழுந்தான் விக்கினவிநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. இக்குறிச்சிக்கு, சோடக்கன் என்ற பெயர் எப்படி வந்தது என ஆராய்வது நன்று. இது ஒரு விசித்திரமான பெயராகும். ஊர்ப் பெயர்கள் அநேகமாக காரணப்பெயர்களாகவோ, அன்றி வேறொரு பொருள் பொதிந்த பெயராகவோ காணப்படும். ஆகவே இப்புதிர்ப் பெயரான சோடக்கன் ஒரு தமிழ்ப் பெயரின் திரிபாக இருக்கலாம். திருக்கோணேஸ்வரத் தலத்தைக் கட்டிய குளக்கோட்ட மன்னனுக்கு சோடங்கன் எனும் பட்டப்பெயர் இருந்ததாகத் தலவரலாறு கூறுகிறது. “பாண்டுவின் ஆட்சிக் காலத்தில் சகாப்தம் 358 (கி.பி.436) இல் வரராமதேவன் மகன் குளக்கோட்டன் எனும் இளவரசன்* திருகோணமலைக்கு

* 'மாருதப்புரவீகவல்லி யாத்திரைப் படலம்' குளக்கோட்டனை மநுநீதிகண்ட சோழனின் மகனாகக் குறிப்பிடுகிறது. 'வரலாற்றுப்புகழ் திருக்கோணேசர் வரலாறு' எனும் நூலில் அவன் மநுராசன், மநுவேந்தன் எனவும் மநுநீதிகண்ட சோழனின் பெயரனாகவும் கூறப்படுகிறது.

வந்து அங்குள்ள கோயிலைப் புதுப்பித்தான். அவன் புதிய மண்டபங்களைக் கட்டியதோடு பாபநாசம் கேணியையும் வெட்டினான். இது கோட்டை வாயிலிலுள்ள கல்வெட்டினால் உறுதிப் படுத்தப்படுகிறது. இதன் அயலிலுள்ள பாதி உடைந்த வடமொழிக் கல்வெட்டு ஒன்றில் 1223இல் சோடங்கன் என்ற பெயருள்ள இராசகுமாரனுக்குத் திருகோணமலையுடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்பட்டுளளது" என்று என். சி. எஸ்.நவரத்தினம் கூறுகிறார். அதே நூலில் அவர் "சோடங்கன் என்ற பெயர் அறிஞர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் நீண்ட காலமாகக் குழப்பத்தில் ஆழ்த்திக் கொண்டிருந்தது" என்றும் 'சோடங்கன்' என்பது குளக்கோட்டனுக்கு ஒரு பட்டப்பெயராக வழங்கியிருக்கிறது"[6] என்றும் குறிப்பிட்டுள்ளார். அங்ஙனம் என்பது அங்கனம் எனக் கல்வியறிவு குறைந்தோர் வழக்கில் மருவியிருப்பதுபோல சோடங்கன் என்பது சோடக்கன் என மருவி இருக்கலாம். "குளக்கோட்டனுக்கு சோழகங்கன் என பட்டப்பெயரும் உண்டு என்று தட்சண கைலாயபுராணம் கூறுகிறது"[7] என்று எஸ். பத்மநாதன் யாழ்ப்பாண இராச்சியம் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார். வடமராட்சியிலும் கரணவாயில் சோழங்கன் எனும் ஒரு குறிச்சி இருக்கிறது. இவ்வூர்ப் பெயர்களுக்கும் சோடங்கன், சோழகங்கன் எனும் அரசனது பெயர்களுக்கும் முழங்காலுக்கும் மொட்டந்தலைக்கும் முடிச்சுப் போடுவதுபோலிருக்கும் என எண்ணலாம். சோழர்காலத்தில் யாழ்ப்பாணத்திலும் அவர்கள் சார்ந்த பெயர் ஊர்ப் பெயராக இருந்தமைக்கு சோழியபுரம் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். சோழியபுரம் பேச்சு வழக்கில் திரிந்து இன்று சுழிபுரம் ஆனது. சோழகங்கன் காலத்தில் அவன் பெயர் கொண்டு வழங்கிய ஊர்ப் பெயரான சோழகங்கன் பேச்சுவழக்கில் திரிந்து சோழங்கன் எனவும் சோடங்கன் சோடக்கன் எனவும் ஆகியிருக்கலாம். இதனை ஆய்வாளர்களின் சிந்தனைக்கு விட்டுவிடலாம்.



# ஆலயச் சுற்றாடல்

சோடக்கன் ஊர்மனைக்குக் கிழக்காக சிறு பற்றைக் காடும் கற்பாறைகளும் நிறைந்த மேட்டுநிலப் பெருவெளியில் கிழக்கு வாயில் உடையதாய் விக்கின விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தின் மேற்கேயும் வடக்கேயும் மக்களின் குடியிருப்புக்களான சோடக்கன், பத்தாவத்தை, காடிவளை, வேரவல், மயிலங்கூடல் எனும் குறிச்சிகளும் தெற்கே பொல்வத்தையும், தென்மேற்கே கலட்டியவத்தையும் அமைந்துள்ளன. குடியிருப்புப் பகுதிகளில் இலட்சுமியெனப் போற்றி வளர்க்கும் வெற்றிலைக் கொழுந்து, முந்திரிகை, வாழை, கமுகு, தென்னை, மா, பலா, வேம்பு, என்பன செழுமையையும் குளிர்மையையும் ஊட்டுகின்றன. கோயிலுக்கு முக்கியமாகத் தேவைப்படும் அரிசி, பால், தயிர், தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை என எல்லாமே கிடைக்கும் தன்நிறைவு கொண்ட கிராமம்.

குடியிருப்புக்கு வடமேற்குப் புறமாக ஒரு குளமும் வடக்கே மற்றுமொரு சிறு குளமும் உளது. செந்நெல் விளைந்து வருகின்ற மார்கழி, தையில் மழை வீழ்ச்சி குறைந்தால், நீர் நிறைந்து மென்திரை தவழும் இக்குளங்களிலிருந்து நீர்ப்பாய்ச்சுவர். கோடை காலத்தில் பயறு, வெங்காயம் முதலான பயிர்கள் நிறைந்திருப்பதனால் பச்சைக் கம்பளம் விரித்தது போன்று மிளிரும் பெருவயல் வெளியும் உள்ளது. கிழக்கும் தெற்கும் கற்பகதரு எனப் போற்றப்படும் பனைகள் பெரும் தோப்புகளாக உள்ளன. ஆலயத்துக்கு அண்மையில் வடமேற்குப் புறத்தே கலைமகள் கொலுவீற்றிருக்கும் மெய்கண்டான் வித்தியாலயம் அமைந்துளது. மெய்கண்டானுக்குப் பக்கலில் சனசமூகநிலையமும் நெசவு சாலையும் இயங்கி வந்தன. நெசவுசாலையில் பயிற்சி மட்டுமன்றி உற்பத்தியும் நடைபெற்றது. குறிப்பாக, பெண்களுக்கு ஒரு தொழில் வாய்ப்பைக் கொடுத்து வந்த நிலையம். அச்சனசமூக நிலையமும் நெசவுசாலையும் போரால் அழிந்து எலும்புக்கூடுபோல பரிதாபமாகக் கிடந்த நிலையில் முருகையா சிவராசரத்தினத்தின் அயரா முயற்சியாலும் ஊரவரின் ஒத்துழைப்பினாலும் மீளமைக்கப்

பட்டுள்ளது. எனினும் இளவாலை பெரும் பேரழிவுறாமல் தப்பியதற்கு விக்கினங்கள் வேரறுக்கும் விக்னவிநாயகரின் திருவருளே காரணமாகும்.

எல்லாவற்றுக்கும் மேலாக இன்று வைத்திய கலாநிதி வைத்தியநாதர் சற்குணநாயகம் அன்பளிப்புச் செய்த காணியில் மக்கள் நலன் பேணும் ஆரம்ப வைத்தியசாலை ஒன்று அரச நிதி உதவியுடன் இராசாஇரவீந்திரனதும் சின்னத்தம்பு கணேசலிங்கத்தினதும் முயற்சியால் உருவாக்கப் பெற்றுள்ளது. இன்னும் அதை விஸ்தரித்து பிரசவ விடுதி கட்டுவதற்காக மூன்று பரப்புக் காணியை திருமதி அருந்ததி ராஜவிஜயன் அன்பளிப்புச் செய்துள்ளார். இன்று சகல வசதிகளைக் கொண்ட அழகிய கிராமமாகத் திகழ்கிறது. மேலும் அறிவுச் சுடராக ஆசிரியர் இல்லங்களும் அழகும் புனிதமும் செல்வமும் நிறைந்த மற்றைய மனைகளும் நிறைந்திருப்பதும் ஞானக்கொழுந்தன் விக்னவிநாயகர் தன் அடியார்களுக்குப் பொருட் செல்வம், கல்விச் செல்வம், நோயற்ற வாழ்வுச் செல்வம் என்பவற்றை நல்கி அருள் பாலிக்கின்றமையை உணர்த்துகிறது.

விநாயகரை வழிபடு கடவுளாகக் கொண்டவரும் விநாயகர் அகவல் பாடியவருமான ஒளவையாரின் அமுத வாக்கு "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பதாகும். "திருக்கோவில் இல்லா திருவில் ஊரும் . . . . . . ஊரல்ல அடவி காடே." என அப்பர் சுவாமிகள், கோவில்களே மனிதர்களை மாக்களாக அன்றி மக்களாக வாழச்செய்கின்றன எனத் தெளிய வைக்கின்றார். சோடக்கன் பல கோவில்கள் சூழ்ந்து தெய்வமணங் கமழும் திருமிக்க ஊராகத் திகழ்கிறது. கோவில்களுள் பழம்பெரும் கோவிலான ஆனை விழுந்தான் விக்னவிநாயகர் கோயிலின் கிழக்கே கற்பகதருக்களும் சிறு பற்றைக்காடும் பரந்திருக்க, மற்றைய முத்திசைகளிலும் 300மீற்றர் தூரத்துக்குள் பிள்ளையார், அம்மன், வயிரவரென பல கோவில்கள் இருக்கின்றன. வடக்குப் பக்கமாக இளவாலை, காடிவளை, மயிலங்கூடல், கருகம்பனை வாழ் அடியார்கள் போற்ற, ஓலைகள் ஓங்கார நாதம் ஒலிக்கும்

பனங்தோப்பு நடுவே வீற்றிருக்கும் நாதோலை (இல் முன் முன்றில் என்பது போல ஓலை நாதம் நாதோலை ஆனது.) முத்துமாரி அம்மன் கோவில் அமைந்துளது. இது ஆனைவிழுந்தான் அர்ச்சகராக இருந்த வயிரவி வேலையர் நிறுவிய கோவிலாகும். அவரைத் தொடர்ந்து அவரது பூட்டன் வாமதேவன் அடியார்களது கைங்கரியத்துடன் கோயிலை ஆகம விதிப்படி அழகுற அமைத்துப் போற்றி அதன் முன்னேற்றத்திற்காக உழைத்து வருகிறார். வீரசைவர் பூசைசெய்யும் சிறப்புடைய கோயிலாகும். இக்கோவிலுக்குச் செல்லும் வழியில் அண்ணமார் கோவிலுளது. மேற்கே காடிவளை மக்கள் குலதெய்வமாகப் போற்றும் ஒல்லுடை வயிரவர் கோவிலும், தென்மேற்கே கலட்டியவத்தையினரும் அதை அண்மித்த பகுதியினரும் வழிபடும் நாவலடி வயிரவர் கோயிலும் – முன்பு வேலையரால் பூசனை செய்யப் பெற்றதென்பதும் குறிப்பிடத்தக்கது – அந்தணர் பூசை செய்யும் சிறப்புடையன. இவற்றைவிட தனிப்பட்டவர்களின் சிறுகோவில்கள் பல உள.

தனிப்பட்ட குடும்பத்தவர் கோவிலென மேற்கே, சோடக்கன் குறிச்சியில் கனகரத்தினம் கதிர்காமத்தம்பியின் பழவீட்டுப் பிள்ளையார் கோவில். அது அந்தணர் நித்திய பூசை செய்யும் குடும்பக் கோயிலாகத் திகழ்ந்துவந்தது. யுத்தத்தின் கொடுமையால் இடம்பெயர, இன்று திருவிளக்கேற்றி வழிபடும் கோவில் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அதனைஅடுத்து மூத்தவி கணபதிப்பிள்ளை குடும்பத்தவரது பிள்ளையார் கோவிலும் அவர்களாலேயே திருமுறைப் பூசனைசெய்து வழிபடப் பெற்று வருகிறது.

அடுத்து பூலோகர் சங்கரப்பிள்ளை குடும்பத்தவர் கோவில். அந்தணர் பூசை செய்யும் சிறப்புடையது. தென்மேற்கே செந்தில்வேல்ராசா குடும்பத்தவரது நாச்சிமார்கோயில் அமைந்துளது. இங்கே பங்குனித் திங்கட் பொங்கல் விசேடமாகக் கொண்டாடுவர். அன்று சோடக்கனில் வதிபவர்களும் சேர்ந்து பொங்கற் பானைகள் வைத்து வழிபாடியற்றுவர். பூசைக்கு ஆனை

விழுந்தான் ஐயர் அழைக்கப் பெற்று மந்திர ஆராதனையுடன் பொங்கல் விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்படும்.

வடக்கே வேரவலில் பொன்னம்பலம் குடும்பத்தினரது பிராமணரை அர்ச்சகராகக் கொண்ட வயிரவர் கோயிலும் அதன் அயலில் வரசைவரை அர்ச்சகராகக் கொண்ட வயிரவர் கோவிலும் அமைந்துள்ளன.

இக்கோவில்கள் எல்லாவற்றுக்கும் நடுநாயகமாகவும் தொன்மை வாய்ந்ததாகவும் ஆனைவிழுந்தான் ஆலயம் விளங்குகிறது. இன்னும் மேற்கில் பழம்பெரும் தனித்துவமான பிலுப்பினேரியார் கோயில் –இக்கோயிலினுள் மற்றைய கோயில்கள் போன்று பிரேதம் எடுத்துச் செல்லும் வழக்கமில்லை, அதற்கான கோயிலைத் தங்கள் சவக்காலையில் நிர்மாணித்துள்ளனர். இதைவிட வடக்கில் வேளாங்கண்ணி மாதா கோயில், மேற்கில் றீத்தம்மாள் கோயில் என, கத்தோலிக்க மக்களின் கோயில்கள் உள. மத வேறுபாடின்றிக் கலாச்சாரத்தால் ஒன்றுபட்டு வாழும் கோயில்சூழ் கிராமம் ஆகும்.



# ஆனை விழுந்தான் என்ற அடைமொழியின் காரணம்

சோழ அரசன் திசைஉக்கிரன், 'சற்சன சோழ மன்னன்' எனவும் கூறப்பட்டான். அவனது மகள் மாருதப்புரவீகவல்லி குன்ம நோயாற் பீடிக்கப்பட, முகம் குதிரைமுகம் போன்று விகாரமாயிற்று. அரண்மனைச் சித்த வைத்தியம் பயன்தராதுபோகவே, முனிவர்கள் சொற்படி இலங்கையில் தலயாத்திரையும் தீர்த்த யாத்திரையும் மேற்கொண்டு சுழிபுரமென இன்று வழங்கும் சோழியபுரத்தில் வந்திறங்கினாள். குமாரத்திபள்ளம் என்ற இடத்திற் கூடாரம் அமைத்திருந்து நன்னீரும் கடல் நீருங் கலக்கும் கீரிமலையில் நீராடி, கிழக்கே சிறிது தூரத்திலிருந்த முருகனை ஒழுங்காக வழிபாடு செய்து நோய் தீரப்பெற்றாள். இவளுடைய குதிரை முகம் விட்ட தலமாகையால் மாவிட்டபுரம் (மா–குதிரை–குதிரைமுகம்) எனப்பெயர் வழங்கலாயிற்று என்பர். அவ்வாறு தலயாத்திரைக்குச் சென்ற வழியில் மாருதப்புரவீகவல்லி ஊர்ந்து சென்ற யானை ஓரிடத்தில் முன்னங்கால் நீட்டி வீழ்ந்து வணங்கியது. யானை வீழ்ந்து வணங்கிய திசையை ஆராய்ந்தபோது புதர்களுக்கு இடையே விநாயகர் விக்கிரகம் இருக்கக்கண்டு தானும் வழிபாடு செய்து சென்றாள். பின்னர், அவ்விடத்திற் கோயில் ஒன்றையும் நிறுவினாள். ஆனை விழுந்து வணங்கியதால் அவ்விடத்திற்கு ஆனைவிழுந்தான் என அன்றிலிருந்து வழங்கப்பட்டது என்பது கர்ணபரம்பரைக் கதை .

இக்கதையை உறுதிப்படுத்தும் வகையில் "யாழ்ப்பாணத்து ஐதிக இளவரசியான மாருதப்புரவீகவல்லி யானையில் இவ்வழியாக மாவிட்டபுரம் நோக்கிச் சென்றபோது அந்த யானை விழுந்து விட்டதாகவும் பின்னர் இத்தலத்தின் மகிமையை அறிந்து மாருதப்புரவீகவல்லி இப்பிள்ளையாரை வழிபட்டதாகவும் இதனால் இவ்விடம் ஆனை விழுந்தான் எனக் கூறப்பட்டது."[8] என்கிறார் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பொ. இரகுபதி. "இப்பிரதேசங்களில் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் பற்றியும்

மாருதப்புரவீகவல்லி பற்றியும் பெரிதும் பேசப்படுவதால் சோழ அரசியான மாருதப்புரவீகவல்லியின் யானை விழுந்து இறந்த இடமே ஆனை விழுந்தான் என்ற இடம்"[9] எனக் கருதப்படுகிறது எனக் கூறுகிறார் யாழ்.ப.க.பேராசிரியர் பாலசுந்தரம் .

மாருதப்புரவீகவல்லியின் யானை, பாகர்களுக்கு அடங்காது மதங்கொண்டு ஓடித்திரிய அதனை அடக்குவதற்காக ஈட்டி, வேல் முதலியவற்றால் எறிந்தனர். அவை அதன் உடம்பிலே தைத்து முள்போல் நிறைந்திருந்த நிலையில் ஓடித்திரிந்த இடம் முள்ளானை எனப்பட்டது எனவும் அது தளர்ந்து வீழ்ந்து இறந்ததாகவும் அந்த இடத்தில் அவள் ஒரு கோயிலைக் கட்டினாளென்றும் கோவிலுக்கும் அது அமைந்துள்ள இடத்துக்கும் ஆனைவிழுந்தான் என்பது சிறப்புப் பெயரானது என்றும் இன்னொரு வடிவிலுங் கதை கூறப்படுகிறது .

இவற்றைவிட இன்னுமொரு செவிவழிக் கதையும் உண்டு. கோவில் யானை ஒன்று போர்த்துக்கேய வீரர்களால் துரத்தப்பட்டு ஓடி வரும் போது அதன் கால்களில் முட்கள் தைத்தும் இடறியும் ஓட முடியாது தளர்ந்த இடம் முள்ளானை எனப்பட்டதாகவும் ஓடி வந்து வீழ்ந்து வணங்கி இறந்த இடம் ஆனைவிழுந்தான் எனப்பட்டதாகவும் கூறுவர். மேலும் யாழ் குடா நாடு ஊடாக வன்னிக் காடுகளில் பிடிக்கப்பட்ட யானைகள காங்கேசன்துறை ஊடாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட தாகவும், வன்னியிலிருந்து துரத்தி வரும் யானைகள் கட்டப்பட்ட இடம், ஆனைகட்டிமுனை எனவும் அழைக்கப் பட்டதாகவும் வரலாறு. இதுமட்டுமன்றி யாழ் குடாநாடு குதிரைகளைப் போன்று யானைகளையும் பயன்படுத்திய நாடு என்பதற்கு ஆனை இறவு, ஆனைப்பந்தியடி (பந்தி– ஆனை கட்டும் இடம்), ஆனைக்கோட்டை, முள்ளானை, ஆனைவிழுந்தான் என வழங்கும் பெயர்களே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன. இன்று யானைகள் அருகிய நிலையில் இக்கர்ணபரம்பரைக் கதைகளை ஏற்கத் தயக்கம் காட்டுகின்றனர் போலும். இக்கர்ண பரம்பரைக் கதையிலும் யானை வணங்கி வீழ்ந்து இறந்ததாகக் கூறப்படுவதால் அவ்விடத்தில் ஒரு கோயில் இருந்ததாக

அனுமானிக்கமுடிகிறது. கோயில் யானை எனப்படுவதால் அந்த யானை அக்கோயிலுக்கு உரிய ஒரு யானையாக இருந்திருக்கலாம். அக்கால கட்டத்தில் கோயில்களுக்கென யானைகள் இருந்ததாக வரலாறுகள் மூலம் அறிய வருகிறது. மேலும் கோயிற்கடவை எனும் பிரதேசத்துக்கு உட்பட்ட இடம் ஆகையால் அன்று ஒரு பெரிய கோயில் இருந்திருக்க வாய்ப்பு உண்டு. முள்ளானை எனப்படும் ஊரும் ஆனை விழுந்தானுக்குத் தென்மேற்கே அரைக் கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. நகுலமுனிவரது கீரிமுகம் மாறிய இடம் கீரிமலை என்றாயது. மாருதப்புரவீகவல்லியின் குதிரைமுகம் மாறிய இடம் மாவிட்டபுரமானது. அதேபோன்று யானைக்கு முள் இடறியதாலோ அல்லது அது வேல், ஈட்டிகள் முள்போல் குத்திய நிலையில் தோற்றிய இடம் முள்ளானை என்றாயது. எனவே மாருதப்புரவீகவல்லியின் ஆனை விழுந்து வணங்கியதால் அத்தல மூர்த்திக்கு ஆனைவிழுந்தான் என்றாயது எனக் கொள்ளவும் இடமுண்டு.

வாய்வழி வந்த பரம்பரைக் கதைகள் செவி வழி கேட்டு அவற்றை வழங்கும்போது சில மாற்றங்கள் உண்டாவதைத் தவிர்க்க முடியாது. எமது இலக்கியங்கள் செவி வழியாகவும் ஏடுகளிலும் எழுதப்பட்டும் வந்தன. குரு சொல்லிக் கொடுக்கும்போதும் ஏட்டில் எழுதும் போதும் எழுத்துக்கள், சொற்கள் மறைந்தும் மாறியும் புகுந்தும் விட்டன. இதனால் ஏடுகளை ஆராய்ந்து பதிப்பித்த நமது அறிஞரும் பாட பேதம் பல இருந்தமையாற் பெருஞ் சிரமப்பட்டனர். சில பாடல்கள் இடைச் செருகலோ என்றுகூட ஐயப்பட்டனர். இது இவ்வாறாயின் செவிவழி வந்த பரம்பரைக் கதைகள் மாற்றமடைவதில் வியப்பில்லை. ஆகவே, நாம் முற்றாக ஐதீகக் கதைகளைப் புனைகதைகளென நிராகரித்து விடலாகாது.

ஆனைவிழுந்தான் எனும் காரணப்பெயர் அடைமொழியாகக் கோயிலையா அன்றி இடத்தையா குறிக்கின்றதென்பது ஆராயத் தக்கது. ஆனை பிள்ளையாரை வணங்கும் முகமாகவே விழுந்தது. எனவே, ஆனை விழுந்து வணங்கக் காரணனாக இருந்த லிங்க

விநாயகரையே ஆனைவிழுந்தான் என்ற பெயர் குறிப்பதாக வேண்டும். அந்தவிநாயகர் பெயர், அவர் கோயில் கொண்டிருக்கும் இடத்துக்கும் ஆகுபெயராக வழங்கி வந்திருக்கலாம். கிளிநொச்சி போன்ற வேறு இடங்களிலும் ஆனைவிழுந்தான் என்ற ஊர்ப்பெயர் இருப்பது தெரிந்ததே. அவ்விடங்களிலும் குறிப்பிடத்தக்க நிகழ்வுகள் நடந்திருக்கலாம். அல்லாவிடத்து இந்த ஆனை விழுந்தானுக்கு உரிமையுடையோர் அல்லது இங்கிருந்து சென்று குடியேறியோர் இப்பெயரைச் சூட்டியிருக்கலாம். இந்தியாவில் இருக்கும் திருநெல்வேலி, நல்லூர் முதலான பெயர்கள் இலங்கையிலும் இருக்கின்றனவே. முக்கியமாக இன்று இடம் பெயர்ந்து கனடாவிற் குடியேறியவர்கள் அந்நாட்டில் தமதூர்ப் பெயரைச்சூட்ட முடியாவிடத்தும் தாம் நிறுவிய சந்தைகள் கடைகள் கோவில்களுக்குத் தம்மூர்ப் பெயர் சூட்டி வழங்குகிறார்கள். நல்லூர்க் கந்தசாமி கோயில், நல்லூர்க் குமரன்சாறி பலஸ் , சங்கானைச் சந்தை, திருநெல்வேலிச் சந்தை, புங்குடுதீவு அம்மன்கோயில் என யாழ்ப்பாணத்தில் தான் நிற்கிறோமா என்று எண்ணும்படியாக அநேக பெயர்களை ஆங்கே காணமுடியும். பண்டுதொட்டு இக்கோவிலுடன் தொடர்புபடுத்திக் கூறப்படும் வலுவான செல்வாக்குப்பெற்ற மாருதப்புரவீகவல்லிச் செவிவழிக் கதை ஆனைவிழுந்தான் என்ற கோயிற்பெயரை உணர்த்தி நிற்கிறது எனக் கொள்ளலாம்.


ஆனைவிழுந்தான் எனும் பெயர் ஓங்கார ரூபனான விநாயகக் கடவுளின் இறை தத்துவத்தை விளக்கும் பெயராகக் காண்கிறார் மட்டுவில் ஆ.நடராசா ஆசிரியர்.

"ஆன்+ ஐ + விழும் + தான் எனப் பிரித்து
ஆன் + விழும் + ஐ + தான் எனக் கொண்டு கூட்டுவோம் .
ஆன் – உயிர்– பசு, ஐ – இறைவன், விழும் – பதியும் – சத்திநிபாதத்தை அருளும்."

எனவே, ஆனைவிழுந்தான்விநாயகர் என்பதற்கு இருவினைஒப்பும மலபரிபாகமும் அடைந்த உயிர்களுக்குச் சத்திநிபாதத்தை

அருளி முத்தியைக் கொடுக்கும் இறைவனே தானாகிய விநாயகப் பெருமான் என்பது பொருள். அதனால் இத்தலத்தில் இருந்து அருள்புரியும் இறைவனது திருநாமம் காரணமாக இவ்விடம் ஆனைவிழுந்தான் எனப்பெயர் பெற்றிருக்க வேண்டுமெனத் துணியலாம்."[10] என்கிறார். அவர் கூறும் காரணமும் தத்துவ ரீதியாக பொருத்தமுடையதேயாம்.

ஆனைவிழுந்தான் எனும்பெயர் அடைமொழியாகக் கோயிலையா அன்றி இடத்தையா குறிக்கின்றது என்பது ஆராயத் தக்கது. ஆனை விழுந்து வணங்கியது விநாயகரையே. அந்த விநாயகர் எழுந்தருளியிருக்கும் இடத்தையே ஊர் மக்கள் ஆனைவிழுந்தான் என்றும் ஆனைவிழுந்தான் கோயிலடி என்றும் அழைப்பர். சோடக்கன், பொல்வத்தை என்பது போல குறிச்சிக்கோ காணிக்கோ ஆனை் விழுந்தான் என்ற பெயர் இல்லை. கோயிற் காணி உறுதிகளிலோ அன்றி அயற் காணி உறுதிகளிலோ சுட்டப்படவும் இல்லை. ஆகவே பண்டு தொட்டு இக்கோவிலுடன் தொடர்புபடுத்திக் கூறி வரும் மாருதப்புரவீகவல்லியின் செவிவழிக் கதை ஆனை விழுந்தான் என்ற கோயிற் பெயரையே உணர்த்தி நிற்கிறது.



# ஆலயமும் மாருதப்புரவீகவல்லியும்

திசை உக்கிர சோழன் தன் மகளை இலங்கைத் தீர்த்த யாத்திரைக்கு எவ்வாறு அனுப்பினான் என்பதை

*"....... பார்த்திபன் மாமகள்*
*கோலமுற பலாக்கிற் கொலுவுறச்*
*சீல முற்றிடு சிந்தையிலேகினாள்"*

எனக்கூறும்[11] நகுலகிரிப் புராணம் பல்லக்கில் வந்ததாகக் கூறுகிறது. அது ஆனைக் கதையுடன் முரண்படுவதாகக் கூறமுடியாது. அவளது யாத்திரை கீரிமலையுடன் நின்றுவிடவில்லை. கதிர்காமத்துக்குப் போய் அங்கிருந்தே வந்ததாகக் கூறப்படுகிறது. பல்லக்கில் மட்டும் கடல் கடந்த இப்பெரிய யாத்திரையை மேற்கொண்டாளென்று கொள்ள முடியாது. மேடுங் காடும் நிறைந்த இத்தல யாத்திரையை ஒரேயொரு பயண வசதியுடன் புறப்பட்டிருக்கமுடியாது. அவள் பல்லக்கில் கொலுவுற ஏகினாள் என்பது சோழ நாட்டைவிட்டு பல்லக்கில் புறப்பட்டதைக் குறிப்பதாகவே கொள்ளவேண்டும். அவள் கடல் வழியையுங் கடக்க வேண்டியவளாயினளே.

இலங்கையில் அவள் தீர்த்த யாத்திரைக்கு யானையில் இவர்ந்தும் சென்றிருக்கலாம். அரச குடும்பத்தினர் யானை மீது அம்பாரியில் ஆரோகணித்து பவனிவருவதாகவும் விசேடமாகப் பட்டத்து யானையில் உலா வருவதாகவும் இலக்கிய வாயிலாக அறியக்கிடக்கின்றது. அம்பாரி கட்டிய யானை ஊர்தியில் பெண்கள் செல்வர். முந்தை நாளில் யாழ்ப்பாணத்தில் யானைகள் அதிக அளவில் இருந்தது என்பதை வரலாறுகள் மூலம் அறியமுடிகிறது. இன்றும் ஆனைப்பந்தியடி (ஆனைகள் கட்டும் இடம்) எனும் இடப் பெயர் அக்கால இராசதானியாக இருந்த யாழ்ப்பாணத்தில் ஆனை பயன் படுத்தப்பட்டமையை உணர்த்தி நிற்கிறது. மேலும், யானையை ஒரு கௌரவ ஊர்தியாகக் கொள்ளும் வழக்கம் அக்காலத்தில நடைமுறையில் இருந்திருக்கலாம். ஆய் அண்டிரன் ஔவைக்கு

யானையைப் பரிசாக அளித்தமையைக் கொண்டு, பெண்களும் யானையை ஊர்தியாகப் பயன்படுத்தியமை யூகிக்க முடிகின்றது. ஆய்அண்டிரன்தனக்குப் பரிசிலாக யானையை அளித்ததாக ஔவையார் பாடிய செய்யுள் புறநானூறு என்ற சங்க இலக்கியத்தில் உளது.

“தடவு நிலைப் பலவின்நாஞ்சில் பொருநன்,
மடவன் மன்ற செந்நாப் புலவீர்
வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த
அடகின் கண்ணுறையாக, யாம் சில
அரிசி வேண்டினெம் ஆகத், தான் பிற
வரிசை அறிதலின், தன்னும் தூக்கி
இருங்கடறு வளை இய குன்றத்தன்னது ஓர்
பெருங் களிறு நல்கியோனே”[12]

குழந்தை ஞானசம்பந்தர் ஊர்தோறும் சென்று தேவாரம் பாடிய போது அவரது திருவடி நோவு கண்டு இரங்கிய இறைவனால் தங்கப்பல்லக்கு அருளப்பெற்றது. அதே போன்றதே ஆய் அண்டிரனின் கொடையுமாகும். மூதாட்டி ஔவையும் கால் நோவ நடந்து ஊர்தோறுஞ் சென்று தமிழ் பாடியும் அரசர்களுக்கிடையே சமாதானத் தூது சென்றும் அவர்களது ஈகைகளைப் புகழ்ந்து பாடியும் தமிழ்த்தாயை வளர்த்தாள். அவள் அரசனிடம் வேண்டியதோ பசி தீர்க்க அரிசி. ஆனால் அரசனோ அவளது கால் நோவும் தீர்க்க விரும்பி யானையையும் பரிசாக அளித்தான். ஔவைப் பிராட்டியார் இந்திரனின் வெள்ளை யானையில் ஏறி மோட்சம் சென்றதாகக் கூறப்படும் ஐதீகக்கதை ஒன்றும் பிள்ளையார் தனது துதிக்கையால் தூக்கிக் கைலையில் விட்டதாக இன்னொரு கதையும் உண்டு. எனவே, சோழ இளவரசி இவர்ந்து சென்ற யானை வீழ்ந்து வணங்கியமை ஏற்றுக்கொள்ளத் தக்கதாம்.

சோழ அரசிளங்குமாரிக்கு இலங்கையில் நன்மதிப்பு இருந்ததென பதை, கதிர்காமபுரத்து அரசனான உக்கிரசிங்கசேனன் எனும்

அரசன் திருமணஞ் செய்தானென மாவிட்டபுரத் திருத்தல வரலாறு கூறுவதிலிருந்து அனுமானிக்க முடிகிறது. "உக்கிர சிங்கன் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவன் என்றும் கதிர்காமத்தில் அரசுபுரிந்தவன் என்றும் தொண்டமான் உப்பு வியாபாரஞ் செய்ய உதவுதற்காக தொண்டமான் ஆற்றை வெட்ட அவனுக்கு அனுமதி வழங்கினான்"[13] என்றும் யாழ்ப்பாண வைபவமாலை கூறும். மாருதப்புரவீகவல்லி கதிர்காமத்துக்குச் சென்று தீர்த்தமாடிய பின்பே கீரிமலைக்கு வந்ததாக மாவிட்டபுரத் திருத்தல வரலாறு கூறுகிறது. "மாருதப்புரவீகவல்லி முனிவர்களது பாதங்களில் வீழ்ந்து நமஸ்கரித்து இத்தல யாத்திரைக்கான ஏற்பாடுகளைச் செய்தாள். காவிரிப்பூம்பட்டினத் துறையிலிருந்து புறப்பட்டு இந்து சமுத்திரம் எனும் மகேந்திரக் கடலிற் குளித்து தெற்கே ஏமகூடம் எனப் பெயர் பெற்ற சுப்பிரமணிய துவாதசாந்தத் தலமாகிய கதிர்காமத்திற்குச் சென்று மாணிக்க கங்கையிற் தீர்த்தமாடி, கதிரைவேற் பெருமானை வழிபட்டு வருவாளாயினள். அங்கேயும், வட கோடியிலே திவ்விய கடற்கரைத் தீர்த்தம் ஒன்றுளது. ஆங்கு சென்று காங்கேயனை அன்புடன் நினைந்து மூழ்குவையேல் நின் எண்ணம் நிறைவேறும். என அசரீரி கூறிற்று. அங்கசுந்தரியும் மனமகிழ்ச்சியுற்று வட கடற்றுறை அடைந்து கீரிமலைச் சாரலில் வந்திறங்கி வளவர்கோன் எனும் இடத்தில் பாளையம் போட்டிருந்து விரதத்தை அனுட்டிப்பாளாயினள்"[14] என மாவிட்டபுர திருத்தல வரலாறு கூறுகிறது. (குதிரை முகம் போன்ற விகார முகம் மாறிய பின் அங்கசுந்தரியென அழைக்கப்பெற்றாள்.) இக்கூற்றும் மாருதப் புரவீக வல்லி சோழியபுரத்தில் இறங்கி ஆனைவிழுந்தான் என்று இன்று வழங்கப்படும் இடம் வழியாக மாவிட்டபுரம் சென்றாள் என்று கூறப்படும் ஐதீகக் கதையுடன் முரண்படுவதாகக் கருதமுடியாது.

வளவர்கோன் என்பது சோழ அரசர்களுடைய பட்டப் பெயராகும். "மங்கையர்க்கரசி வளவர் கோன் பாவை . . . . . . ." என்று சோழன் மகளான பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியை திருஞானசம்பந்தர் குறிப்பிடுகிறார். மூவேந்தர்களின் ஆட்சிக்காலத்தில் அவர்கள் ஆண்ட நாடுகளிற் சில இடங்களின்

பெயர்கள் அவ்வரசர்களைச் சுட்டுவனவாக அமைந்திருந்தன. வளவர்கோன் என்னும் இடமும் சோழ அரசர்களுடைய பட்டப்பெயரை உடைய இடம். இருப்பினும், சோழ இளவரசியான மாருதப்புரவீகவல்லி அவ்விடத்தில் பாளையம் அடித்து இருந்தாள் எனக் கூற முடியாது. ஏனெனில், உக்கிரசிங்கன் வளவர்கோன் எனும் இடத்தில் பாளையம் அடித்திருந்தான் எனக் கூறப்படுவதாலாம். எனவே, குமாரத்தி பள்ளம் எனும் இடத்திலேயே அரச குமாரி பாளையம் அடித்திருந்தாள் என்பது கொள்ளத்தக்கதாகும்.

இன்றும் குமாரத்தி பள்ளம் என்னும் ஓர் இடம் கீரிமலைக்கு அண்மையில் இருக்கிறது. அதுவும் அரசகுமாரி பாளையம் அடித்து இருந்த இடமாகக் கூறப்பட்டு வருகிறது. "மாருதப்புரவீகவல்லி குமாரத்தி பள்ளத்தீற் கூடாரம் அடித்திருந்தபோது வளவர்கோன் பள்ளத்தில் அப்பிரதேச அரசனான உக்கிரசிங்கன் என்பவனும் கூடாரம் அடித்துத் தங்கி இருந்தான். அவனும் கீரிமலைப் புனித நீரூற்றிலே தீர்த்தமாடி நகுலேஸ்வரப் பெருமானை வழிபடும் நியதியுடையவன். இவ்வாறாக மாருதப்புரவீகவல்லியும் உக்கிரசிங்கனும் நகுலேஸ்வரப் பெருமானை வழிபடச்சென்றபோது அவருடைய சந்நிதியில் ஒருவரை ஒருவர் முதன்முதலாகச் சந்தித்தனர். இதன் விளைவாகப் பின்னர் இந்த இருவருக்கும் திருமணம் நிகழ்ந்தது."[15] என சைவநெறியில் நகுலேச்சரம் எனும் கட்டுரையிற் கூறப்பட்டுள்ளது. இது தனிப்பட்ட ஒருவர் கருத்தன்று. பாடநெறிக் குழுவினர் ஆராய்ந்து கண்டமுடிவு. எனவே, குமாரத்தி பள்ளம் எனும் இடத்திலேயே அரசகுமாரி பாளையம் அடித்திருந்தாள் என்பது ஏற்றுக்கொள்ளத் தகும்.

கீரிமலைக் கடற்கரை கல்லுப் பாறைகளும் பள்ளமும் மாறி மாறி அமைந்துள்ள பகுதி. மீன்பிடி வள்ளங்கூடக் கரையை அண்மிக்க முடியாதது. இறங்குதுறைக்கு ஏற்றதன்று. சோழியபுரம் அக்காலத் தில் ஒரு துறையாக இருந்தது. அது சம்பல்துறை எனவும் அழைக்கப்பட்டது . தேவநம்பிய தீசன் காலத்தில் சங்கமித்தை

புத்த மதத்தைப் பரப்ப வெள்ளரசங் கிளையுடன் இந்தியாவிலிருந்து வந்து சம்பல்துறையில் இறங்கியதாக சரித்திரம் கூறும். இந்தியாவிலிருந்து மாதகல்வழியாக வந்து மக்கள் குடியேறியதாக 'கல்வெட்டு' எனப்படும் நினைவுமலர்களிற் காணமுடிகிறது. கீரிமலை எனக்கூறாது கீரிமலைச்சாரலில் வந்திறங்கினாள் என்பதும் கவனிக்கத் தக்கது. சோழியபுரம் கீரிமலைக்கு அண்மையில் உள்ளது. அதனால், அது கீரிமலைச்சாரல் எனக் கூறப்பட்டிருக்கலாம். எனவே, கீரிமலைக்கு அயலாகிய சோழியபுரத்தில் வந்திறங்கி கீரிமலைக்கு வந்தாள் என்று சொல்வது தவறாகாது. அன்றியும் அவர்களது மன எண்ணமும் கீரிமலைத்தல யாத்திரையேயாம். மேற்குத் திசை ஊர்களிலிருந்து மாவிட்டபுரம் செல்வோருக்கான குறுக்கு வழியிலேயே ஆனைவிழுந்தான் அமைந்துள்ளது. கர்ணபரம்பரைக் கதை கூறும் மாருதப்புரவீக வல்லியின் ஆனை, வழியில் விழுந்து வணங்கிய இடமாகையால் அஃது ஆனைவிழுந்தான் எனப்பெயர் பெற்றதென வழி வழியாக வழங்கப்பட்டு வருவது பொருத்தமானதே. எனவே, மாருதப்புரவீக வல்லிக்கும் எமது விநாயகருக்கும் தொடர்பு உண்டு.

### *மாருதப்புரவீகவல்லியின் வருகைக்கு முன்னரே எமது விநாயகர் ஆலயம் இருந்தது*

வேத காலத்தில் விநாயகர் வணக்கம் இருந்ததாகத் தெரியவில்லை. பழைய சங்க இலக்கியங்களிலே சிவன், முருகன், விஷ்ணு பற்றிக் குறிப்பிடப்பெற்ற போதும், விநாயகர் எந்த இடத்திலும் பாடப்பட வில்லை. பின்னாளிற் சங்க இலக்கியங்களை அகம் புறமெனத் தொகுத்த பெருந்தேவனாரும் சிவனையே காப்புச் செய்யுளிற் பாடியுள்ளார். அதனால் விநாயகவழிபாடும், விநாயகர் காப்புச் செய்யுள்முறையும் நாலு, ஐந்தாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகும். விநாயக வழிபாடு இடையிட்டு வந்ததாகவே ஆய்வாளராலும் கொள்ளப்படுகிறது. “கி.பி. 4ஆம் நூற்ருண்டுக்கும் கி.பி. 6ஆம் நூற்ருண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் வர்த்தக மூலமாக ஆசியா முழுவதும்

விநாயக வழிபாடு வேகமாகப் பரவியது."[16] என்கிறார் என். ஸ்ரீநிவாசன். ஆசிய நாடுகளுக்கு வர்த்தகமுறை பரவுமுன்னரே யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் குடியேற்றம், அரசியல், கலாச்சாரம் முதலான தொடர்புகள் இருந்திருக்கின்றன. ஏலவே குறிப்பிடப்பட்டுள்ள 'ரெனன்ற்றின்' கூற்றும் பண்டைய இலங்கையில் இந்து மதச் செல்வாக்கும் இந்தியத் தொடர்புகளுக்குச் சிறந்த ஆதாரமாகும். இந்தியா, இலங்கையிலும் முதலாம் இரண்டாம் நூற்றாண்டளவில் கணபதிவழிபாடு, சிலைகள் இருந்ததாக ஆராய்வாளர் கூறுவர். எனவே, யாழ்ப்பாணத்தில் நாலாம் நூற்றாண்டுக்கு முன்னரே, மாருதப்புரவீகவல்லியின் காலத்துக்கு மிகமிக முன்னரே விநாயகவழிபாடு நிலவியதாகக் கருதலாம்.

மாருதப்புரவீகவல்லியின் யானை வீழ்ந்து வணங்கிய இடத்தில் ஒரு விநாயகர் கோயில் இருந்தது எனக் கூறப்படுவதால் பிள்ளையார் வழிபாடு அவள் வருகைக்கு முன்பு இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. இதே கதையில் அவள் தீர்த்த யாத்திரை மேற்கொண்டு மாவிட்டபுரம் வரும்வழியில் ஏழு விநாயகர் கோயில்களைக் கட்டியதாகவும் கூறப்படுகிறது. விநாயகர் வெவ்வினைகள் வேரறுப்பவராக, காக்கும் தெய்வமாகக் கணிக்கப் படுவதால் நேர்த்திக் கடனாக அரசகுமாரியும் தன் பிணிதீர, அல்லது தீர்ந்த பின்போ கட்டியிருக்கலாம். நேர்த்திக்கடன்களுக்கும் ஏழுக்குந் தொடர்பு இருக்கிறதே. ஏழு பிள்ளையார் கோயில் கட்டினாள் என்ற கதையும் பொருத்தமானதே. எது எப்படி இருப்பினும் மாருதப்புரவீகவல்லிக்கும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலுடனும், கீரிமலை நகுலேசர் கோவிலுடனும் நெருங்கிய தொடர்புள்ளதாக மாவிட்டபுரத்தல வரலாறும் நகுலகிரிப் புராணமும் கூறுகின்றன. அத்துடன் ஆனைவிழுந்தான் பிள்ளையாருடனும் தொடர்புபடுத்திக் கர்ணபரம்பரைக் கதைகள் கூறப்படுகின்றன. இத்தகைய கதைகள் ஆனைவிழுந்தானுக்கு மட்டும் இருக்கவில்லை. ஏறத்தாழ எல்லாச் சைவக் கோயிலுக்கும், உதாரணமாகப் பன்றித்தலைச்சி அம்மன் கோவில், செல்லச்சந்நிதி கோவில், வல்லிபுர ஆழ்வார் கோவில் போன்ற பிரசித்தி பெற்ற

கோவில்களின் பின்னணியிலும் அவை பற்றிய செவிவழிக் கதைகள் உள. ஆயின், ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயம் அவற்றிலிருந்து சிறிது வேறுபட்டதாக, வரலாற்றுடன் தொடர்புபட்டுள்ளதாக இருக்கிறது. பதினைந்து பதினாறாம் நூற்றாண்டுகளில் இருந்து பெருகிவந்த தலபுராண மரபு இது போன்ற கதைகளைப் பேணியுள்ளது. ஐதிகக் கதைகளை ஆதார பூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாவிடினும், இவ்வாலயத்துக்கும் மாருதப்புரவீகவல்லிக்கும் தொடர்பு உண்டு என்பதை ஏற்றுக் கொண்டால் உக்கிரசேனன் காலம் எனக் கருதப்படும் ஒன்பதாம் நூற்றாண்டுக்குமுன்பாகவே இத்திருத்தலம் நிலை பெற்றிருக்கலாம எனக் கருத இடமுண்டு.

“பௌத்த மதத்தினதும் இலங்கை அரச வரலாற்றினதும் முக்கிய ஆதாரமாகக் கொள்ளப்படும் மகாவம்சம் என்ற பழைய நூலும் பல்லாண்டுகளாக, செவிவழிவந்த கதைகளே. ஆறாம் நூற்ருண்டில் வாழ்ந்த மகாநாமன் என்ற பௌத்த துறவியினால், தான் சார்ந்திருந்த மகாவிகாரைக் கொள்கைக்குத் தக இந்தியாவில் வழங்கிய புராணக் கதைகளைப் பின்பற்றி எழுதப்பட்ட ஒன்றே”[17] மேற்குலகினரின் புகழ்பெற்ற இலக்கியங்களான மில்டனின் சுவர்க்க நீக்கம், ஹோமரின் இலியட் போன்ற காவியங்கள் கூட வாய்மொழி இலக்கியங்கள் தோன்றி நீண்டகாலங் கழித்தே எழுத்தில் இடம் பெற்றதாகப் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் பெரிய புராணம் ஓர் ஆய்வு எனும் நூலில் கூறுகிறார். ஆகவே நாமும் சிறிது சீர்தூக்கிப் பார்க்கவேண்டும். ஆனைவிழுந்தான் ஆலயத்தைப் பொறுத்த வரை நம்பகமான பண்டுதொட்டு செவிவழி வந்த கதைகளே ஆதாரமாக உள்ளன. அவற்றுள் மாருதப்புரவீக வல்லியுடன் தொடர்புடைய கதைகளை நாம் வாய்மொழிக் கதைகள் என்றோ வெறுங்கட்டுக் கதைகளென்றோ புறந்தள்ளமுடியாது. ஏனெனில் அது வரலாற்றுடன் தொடர்புடைய ஒரு கதை. அக்கதைகளின் அசையா நம்பிக்கையிலேயே மக்களும் வாழ்கிறார்கள். அருள் மிக்க ஆலயமாகப் போற்றி வணங்குகிறார்கள். மேலே காட்டிய கருத்துக்களைத் தொகுத்து

நோக்கினால் ஒன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னரே இத்திருத்தலம் நிலைபெற்று இருந்ததென்றும் மாருதப்புரவீகவல்லிக்குப் பின் ஆனைவிழுந்தான் என்ற பெயர் பெற்றிருக்கலாம் என்றும் கொள்ள இடமுண்டு.

### *சோழ அரசகுமாரி கட்டியதாகக் கூறப்படும் கோவில்கள்*

(1) இளவாலை விக்ன விநாயகர் ஆலயம் .

வி+நாயகர், வி– மேலானவர், மேம்பட்டவர்,சிறந்தவர், நாயகர் – தலைவர். விக்ன+விநாயகர்– விக்னங்களை அகற்றும் சிறந்த தலைவர். (அகற்றும் தொக்கு நிற்கிறது) விக்ன+வி+நாசகர், நாசகர்– அழிப்பவர். விக்னங்களை அழிப்பவர் மாருதப்புரவீக வல்லியும் தனது முறைமையான வழிபாட்டுக்கு ஏற்படக்கூடிய தடை, விக்கினங்கள் தீர வழிபடப்பட்ட விநாயகர் தலம் எனக்கருத இடமுண்டு. லிங்க புராணக் கதையை இவ்விடத்தில் எடுத்துக் காட்டுவது பொருத்தமாகும். தேவர்கள் தாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு அசுரர்கள் இடையூறு விளைவிப்பதாக சிவபிரானிடம் முறையிட்டபோது விக்னவிநாயகரைத் தோற்றுவித்தார். தேவர்கள் மட்டுமன்று நல்ல காரியம் செய்யும் எவருக்கும் வரும் இடையூறுகளைத் தடுத்து துணை நிற்க வேண்டும் எனவும் பணித்தார். விநாயகர் விக்ன கணங்களைத் தோற்றுவித்து தேவர்களது விக்னங்களைத் தடுத்துக் காத்து விக்னவிநாயகராகத் திகழ்கிறார். ஆனைவிழுந்தான் விக்னவிநாயகரும் என்றுமே தான் எழுந்தருளியிருக்கும் இளவாலை மக்களது விக்னங்களைத் தடுத்து துணை நிற்கின்றார்.

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் கோவில். இக்கோவில் மாவிட்டபுரம் கந்தன் ஆலயத்துக்கு அண்மையில் உள்ளது. வீரகத்தி காவலுக்கு உரியவர். அதனாற் காவல் பிள்ளையாராக வீரகத்திப்பிள்ளையார் கோவிலை மாவைமுருகன் கோயிலுக்கு அணித்தாகக் கட்டி இருக்கலாம் எனக் கருத இடமுண்டு. நகுலகிரிப்புராணம் "நகுலவரை அமர்ந்த நால்வாய் உறுமியத்தின் வல நன் முகத்து வீரகத்தி வள்ளல் அடியை மனம் பரவி

நாடொறும் நதியின்வாய் நணுகி அந்தி வேணியன் அடி போற்றி அன்னைபாற் சிந்தையின் எழில்முகம் சிறப்பின் உற்றதே” எனக்[18] கூறுகிறது. கீரிமலைத் தீர்த்தம், விநாயகர், முருகன் கோயில்கள் நிர்மாணித்த திருப்பணி, தல வழிபாடுகள் என்பனவும் மாருதப்புரவீகவல்லியின் முக்கிய நோக்கமுமான தீர்த்த தலயாத்திரையையும் நிறைவேற்றி, தீராத நோயும் தீர திருவருள் பாலித்ததால், காரியசித்தியை அளிக்கும் விநாயகர் வள்ளல் எனக் குறிப்பிடப் பெற்றார். இங்கு வீரகத்தி வள்ளல் எனக் குறிப்பிடப்படுபவர் மாருதப்புரவீகவல்லியால் நிறுவப்பட்ட ஏழு தலங்களில் ஒன்றான கொல்லங் கலட்டி வீரகத்தி விநாயகரேயாம். இக்கோயில் எழுபத்தைந்து எண்பது ஆண்டுக்கு முன்னிருந்தே தேரோடுங் கோயிலாக இருந்து வருகிறது. சிறு பராயத்தில் இக்கோயிலின் தேர்த்திருவிழாவைக் கண்டு களித்த காரணத்தால் அங்ஙனம் காலங் குறிப்பிடுகிறேன். இன்றும் வேளாளச் சைவர்களே பூசகர்களாகவும் இருந்து வருகிறார்கள்.

(3) பன்னாலை வரத்தல விநாயகர் ஆலயம்.

(4) அளவெட்டி அழகொல்லைப் பிள்ளையார் கோவில்.


(5) கும்பழாவளைப் பிள்ளையார் கோவில்.

(6) பெருமாக் கடவைப் பிள்ளையார் கோவில்.

(7) சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவில்.

இத்திருத் தலங்கள் ஏழும் இன்றும் சிறப்புடைத் தலங்களாக விளங்குகின்றன.

நேர்த்தி வைப்பதும் அதை நிறைவேற்றுவதும் எமது வழக்கமும் சமய நம்பிக்கையின் ஒரு அம்சமுமாகும். மாருதப்புரவீகவல்லியும் கோவில்களைக் கட்டி தன் நேர்த்தியை நிறைவு செய்திருக்கிறாள்.



# ஆனைவிழுந்தான் கோவிலின் பழம் பெருமை

கர்ணபரம்பரைக் கதைகளைவிட, ஆனை விழுந்தான் ஆலயத்தின் பழமையை அறிய ஐந்து ஆதாரங்கள் இருக்கின்றன.

(1) மூலவரான லிங்கப்பிள்ளையார்

(2) பல நூற்றாண்டுகளாக நிலைத்துத் தழைத்துக் குடையென விரிந்து நிற்கும் தல விருட்சமான அரசமரம்.

(3) தூர்ந்த நிலையில் இருந்த கிணறு. இது செடிகள் மண்டிக் கிடந்தபடியால் செடிக் கிணறு என்று சொல்வர்.

(4) பழைய கட்டிடத்தின் இடி பாடுகளினாலே மேடாகி நிற்கும் ஆய்வுக்குரிய இடம். கோயிலின் சரித்திரமே புதைந்திருக்குமென கருதக் கூடிய மேடு.

(5) பழைய காலத்துக்குரிய கைவிரல்களினால் பள்ளமிடப்பட்ட கூரை ஓட்டுத்துண்டுகள், தடித்த விழும்புள்ளமட்பாண்டத்தின் உடைந்த துண்டுகள், உடைந்த செங்கட்டித் துண்டுகள்.

### *பழமையைப் புலப்படுத்தி நிற்கும் லிங்கப் பிள்ளையார்*

பண்டைநாள்முதல் வழிபடப்பட்டு வந்தது எனப் போற்றிப் பாதுகாக்கப்படுகின்ற லிங்கப்பிள்ளையார் இன்றும் மகாமண்டப வலப்பக்கத்தில் வீற்றிருக்கின்றார். அந்த லிங்கப் பிள்ளையார் சிலை எக்காலத்தது எனக் கூற ஆதாரம் எதுவும் இல்லை. சிவனது அருவுருவான லிங்கத்தைப் பிள்ளையார் என்று வழிபட்டமைக்குக் காரணமும் அறியமுடியவில்லை. நம் முன்னோர் தாம் வழிபடு தெய்வத்தை கல், கந்து, தறி என கற்களையும் தடிகளையும் வைத்து வழிபட்டனர் என்று பண்டை வரலாறுகள் கூறுகின்றன. அது மட்டுமன்றி நமது இந்து மதக் கொள்கைப்படி, விநாயகரும் சிவனின் தோற்றமேயாதலால் லிங்கத்தில் விநாயகரைக் கண்டனர் போலும். ஆவுடையார் இல்லாதபடியால் சிவலிங்கம் அன்று என்றும் கொள்ளமுடியாது. ஏனெனில், “சுழியோடிகளான வில்ஸனும் றோட்னியும் திருகோணமலையில் கண்டெடுத்த கோணேஸ்வரக் கோயில் லிங்கம் – சிவலிங்கம்

ஆவுடையார் இல்லாத நிலையில் அமைக்கப்பெற்ற கால கட்டத்தைக் குறிப்பதாகும்." என, சி.எஸ்.நவரத்தினம்[19] கூறுகிறார். கோணேஸ்வரர் ஆலய ஆய்வின்போது கண்டெடுக்கப் பெற்ற ஊனமடைந்த லிங்கம் சிவலிங்கமா அல்லது பிள்ளையாரா என ஆய்வாளரைச் சிந்திக்க வைப்பதாகக் கூறப்பட்டுள்ளது.

பண்டைநாளில் எமது லிங்கப் பிள்ளையாரை ஆதரித்து வழிபட்டுவந்த மூதாதையர், பூசகர்கள் வயதுக் கணக்குப்படி (தலைமுறைப்படி) 140 – 150 வருடங்கட்கு உட்பட்ட விபரந்தான் எமக்குத் தெரிய வருகிறது. அவர்களும் வழி வழியாக அந்த ஆவுடையார் இல்லாத லிங்கத்தையே பிள்ளையார் என வழிபட்டு வந்திருக்கின்றனர். எனவே, ஆனைவிழுந்தானில் இருக்கும் லிங்கமும் அக்காலத்தில் பிள்ளையார் வணக்கத்துக்கெனவே நிறுவிக்கொண்ட ஒன்றெனக் கருதலாம். பண்டுதொட்டு வடஇந்தியாவில் ஆவுடையார் இல்லாத லிங்கமே வழிபடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ஆகவே எமது லிங்கப் பிள்ளையார்களது கால எல்லை ஆய்வுக்குரிய ஒன்றாகவே கருதப்படவேண்டும்.

யாழ் மாவட்டத்திலேயே இன்னும் இரண்டு தலங்களில் ஆவுடையார் இல்லாத லிங்கப்பிள்ளையார் வழிபாடு நிகழுகின்றது. ஒன்று இருபாலைப் பழம்பதி கிழக்கில் கேணிக் குளம்பதியில் உள்ள லிங்கப் பிள்ளையார் தலமாகும். அத்தலத்தில் குடிகொண்டுள்ள லிங்கப் பிள்ளையாரின் பழமை கருதி பழம் பிள்ளையார் என்றும் அழைக்கப்படுகிறார். தாமாகத் தோன்றிய தாகவும் கூறப்படுகிறது, இந்த லிங்கம் கோழிமுட்டை வடிவிலே மிகச்சிறிய கல்லிலே இடஞ்சுழி தும்பிக்கை போன்ற தொரு புடைப்பை உடையது. ஆலயம்



இருபாலைலிங்கப் பிள்ளையார்


புதுக்கி அமைக்கப்பட்ட போது லிங்கப்பிள்ளையாரை முன்பாக வைத்து விநாயக விக்கிரகம்பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. அபிடேகம் பூசை என்பன இரண்டுக்கும் சேர்த்தே செய்யப்படுகின்றன. இதன் காலம் பற்றி அறிய ஏது ஒன்றும் கிடைத்திலது. கோயிலின் வரலாறும் கர்ணபரம்பரைக் கதையிலேயே வளர்ந்துள்ளது. இன்று தேரோடும் கோயிலாகச் சிறப்புற்று விளங்குகிறது.

மற்றையது காங்கேசன்துறையில் இருக்கும் காயாற்றுறைப் (காசாத்துறை) பிள்ளையார் கோயிலாகும். இது கி.பி 8ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதெனக் கருதப்படுகிறது. இக்கோயிலிலும் லிங்கப் பிள்ளையாரே மூலமூர்த்தியாக இருக்கிறார். ஏறக்குறைய ஒரு சிவலிங்கத்தின் தோற்றம் உடையதாகவே காணப்படுகிறது. இருந்த போதிலும் அங்குள்ள மக்களும் இந்த லிங்கத்தை விநாயகராகவே மனதிற் கொண்டு வழிபட்டு வருகிறார்கள்.

யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள இம் மூன்று கோயில்களிலும் மூல மூர்த்திகள் லிங்க வடிவினராயிருக்க மக்கள் விநாயகர் என வழிபட்டு வருவதாலும் ஒரே காலப்பகுதியில் இக்கோயில்கள் அமைந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு.

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பில் மூர்த்தி, தல, விருட்ச, தீர்த்த விசேடம்பெற்ற அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயிலிலும்மூலஸ்தானத்தில் லிங்கமே மூலவராக உள்ளார். மாமாங்கேஸ்வரர் என அழைக்கப்படுகின்றார்.அக்கோயிலுக்கும் இராமாயணத்துடன் தொடர்புள்ள ஒரு செவிவழிக் கதை உண்டு. அனுமார் இலங்கையை எரியூட்டிய வாலை இக்குளத்திலேயே அவித்தார் என்பதாம். இந்நாலு லிங்கங்களும் சமகாலத்தவையாக இருக்கலாம் அல்லவா?

ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தில் மூலவராக இருந்து வந்த பிள்ளையார் லிங்கம் ஒரு புதுவகை அமைப்பினது.



ஆதிலிங்கப் பிள்ளையார்
இளவாலை

சிவலிங்கம்போல் உருண்டையானதன்று. இவ்வாதிலிங்கப் பிள்ளையார் சப்பையான அமைப்பும் அன்று. ஓரளவு திரட்சியானது. ஊனப்பட்டதுமன்று. ஏறத்தாழ 9 அங்குல உயரமுடைய பொள்ளாத(செதுக்கப்படாத) கருங்கல்லாம். பின் புறத்திலே பூணூல் எனக் கருதத்தக்கதான மெல்லிய ஒரு கோடு இடது,மேற் புறத்திலிருந்து வலப்புற அடி நோக்கிச் சரிந்து செல்கிறது. ஆனால், முன்புறத்தில் அத்தகைய அடையாளம் எதுவும் காணப்படவில்லை, எண்ணெய் தேய்த்தும் அபிடேகப் பொருட்களால் அபிடேகம் செய்தும் வந்தமையால் அழிந்திருக்க வாய்ப்புண்டு. எழுபதுகளில் ஞானபூமி எனும் மாத இதழில் (இந்தியா) "கருவறையிலுள்ள மூலவரில் (கோயிற்பெயர் இப்போது நினைவிலில்லை) பல்கலைக்கழக மாணவர்கள் தேய்மான ஆய்வுக்காக அபிடேகப் பொருட்களால் அபிடேகம் செய்வதைச் சிறிதுகாலம் ஒத்திப் போடும்படி கேட்டதாக தகவல்"[20] இருந்தது. "எறும்பூரக் கல்லும் குழியும்" என்பதும் உண்மை. லிங்கத்தினது இத்தேய்மானம் அதன் பழமையையும் எடுத்துக் காட்டுவதாகக் கொள்ளமுடியும். இந்த லிங்கம் கோவில் அமைந்திருக்கும் சூழலிற் கிடைக்கக்கூடிய சுண்ணாம்புக் கல்லாலானதும் அன்று. ஆதலால் சூழலில் கிடைத்த லிங்கம் போன்ற தோற்றத்தைக் கண்டு எடுத்து வந்து வழிபடப்பட்டதன்று என்பது தெளிவு. இதன் விஷேட அமைவு காரணமாக வழிபாட்டுக்கு என வேறிடத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாக இருத்தல் வேண்டும். பழமையைத் தாங்கி நிற்பதால் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நம் கடமை.

ஆனைவிழுந்தான் கோவிலில் இருக்கும் லிங்கப் பிள்ளையார் முன்பு தல விருட்சமான அரசமரத்தடியில் இருந்தாரா அல்லது அண்மையில் இருந்தாரா என்றறிய உறுதியான சான்றுகள்

இல்லை. " . . . . ஆற்றங்கரை மீதிலே அரச மரநிழலிலே வீற்றிருக்கும் பிள்ளையார் . . . " என பிள்ளையாரின் வியாபகம் பாடப்பட்டுள்ளதால் அவர் கோவிலில் தான் குடி கொண்டிருந்திருப்பார் என எண்ணத் தேவையில்லை. பிள்ளையார் வணங்குவதற்கும் எளியவர். நாம் வீடுகளில் சுபகருமங்கள் செய்யும் போது பிள்ளையார் பூசைசெய்து தொடங்குவது வழக்கம். அப்போது சாணத்தாலோ மஞ்சளாலோ மாவிலோ செம்மண்ணிலோ ஒரு உருண்டையைப் பிடித்து அறுகுசொருகி வைத்து, பிள்ளையாரென வழிபடுகிறோம். மார்கழிமாதம் 30நாளும் பிடிக்கும் சாணகப் பிள்ளையார் எல்லோர் நினைவிலும் வரும்.

ஆனை விழுந்தானில் உள்ள இந்த லிங்கம் கோவில் அழிவிலிருந்து தப்பிக் கண்டெடுத்த கருத்துக்கு எளியவரான பிள்ளையாராக இருப்பின் தல விருட்சமாக இன்றும் உள்ள அரசமரம் பழமை வாய்ந்ததாகக் கொண்டால், அந்த அரசமர நிழலில் வீற்றிருந்திருப்பார் எனக் கருதவும் இடமுண்டு. அவ்வாறு அரசமர நிழலில் வீற்றிருந்த பிள்ளையாரை மாருதப்புரவீகவல்லி கண்டு எடுத்துக் கட்டிய கோயில் போர்த்துக்கேயரால் சமய ஒழிப்பின்போது அழிக்கப்பட்டிருக்கலாம். அத்தகைய அழிவாக இருந்திருந்தால் அவர்கள் கெடுபிடி முடியும் வரையும் கோவில் அமைத்து பகிரங்கமாக வழிபட வாய்ப்பில்லை.

புதிர் எடுத்த நாட்களிலாயினும் விரதநாட்களிலாயினும் வாழையிலையிற் சாப்பிட்டால், அந்த இலைகளை போர்த்துக்கேயருக்குப் பயந்து வீட்டு இறப்புகளுக்குள் சொருகி மறைப்பதாக, பெரியவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். திருக்கோயில் வழிபாடு செய்யாமல் தடுத்ததாகவும், விக்கிரகங்களையும் அவர்களுக்குப் பயந்து ஒளித்ததாகவும் வரலாறு கூறும். மேலும், அவர்களுடைய சமயக் காழ்ப்பினால் சைவர் பலர் தமிழ் நாட்டிற்குப் புலம் பெயர்ந்ததும் வரலாறு கண்ட உண்மை. அவ்வாறான சைவ சமய, கலாச்சார ஒழிப்பு முயற்சிக் காலகட்டத்தில் நம்முன்னோர் வாழ்ந்திருக்கின்றனர். அப்படியாயின்

இத்தகைய கொடிய சூழ்நிலையில் இந்த லிங்கப்பிள்ளையார் அன்று எப்படித் தப்பினார் என்பதும் வினாவுக்குரிய ஒன்று. போர்த்துக்கேயர் இடித்தழித்த போது இந்த மிகச்சிறிய லிங்கம் (9அங்குல உயரம்) இடிபாடுகளுக்குள் மறைந்து கல்லோடு கல்லாக இருந்திருக்கலாம். பின் அடியார்களின் கண்ணிற்பட, விக்கிரகமாக இல்லாமல் லிங்க அமைப்பில் இருந்த படியாற் பயமின்றி அந்த அரசமரத்தின்கீழ் வைத்து பூவும் நீரும் கொண்டு வழிபடப்பெற்றிருக்கலாம். ஆனால் கோயில் ஒன்று இருந்து அது போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்டதாகக் கதைகள் இல்லை. கீரிமலை, ஆனைவிழுந்தான் பகுதியில் மறைத்துப் புதைக்கப்பட்ட கோயிற் பொருட்கள் எதுவும் கிடைக்கவும் இல்லை.

### *அரச மரம் (தலவிருட்சம்)*

பண்டைய ஆலயங்கள் இன்று போல விரும்பிய காணிகளில் கட்டப்பட்டவை அல்ல. இறை அடையாளங்கள் (கல், கந்து, தறி) வைத்து வழிபட்ட இடம், முனிவர்கள் தவஞ் செய்த இடம், எவரேனும் இறை அருள் பெற்ற இடம், காட்சி தந்த இடம், ஏதும் அற்புதம் நடந்த இடம், தீர்த்த மகிமை முதலிய சிறப்பு வாய்ந்த இடம் ஆகியவற்றுள் ஒன்றோ பலவோ வாய்க்கப் பெற்றிருந்த இடங்களிலேயே அவை நிறுவப் பெற்றன. ரிஷிகள், முனிவர்கள் ஆலயங்களின் அருகிலுள்ள விருட்சங்களின் கீழ் இருந்து தான் தவம், தியானம் செய்வர். சில விருட்சங்களுக்கு உரிய மந்திரங்கள், தேவதைகள் என்பன சாத்திர நூல்களிற் கூறப்பட்டுள்ளன. அவர்கள் அச்சாத்திர விதிக்கு அமைய தவமோ தியானமோ செய்து சித்தி வாய்க்கப்பெற்ற இடத்து மரங்களே மகிமை மிக்க தலவிருட்சங்களாகப் போற்றப்பட்டு வருகின்றன.

ஆனைவிழுந்தான் ஆலயத்தின் தலவிருக்ஷமாக விளங்கும் அரசமரமும் மிகத் தொன்மையானதாக இருக்கின்றபடியால் அவ்வாறு மகிமை பெற்ற தலவிருட்சமாக இருந்திருக்கலாம். பழைய அரசமரம் முதிர்ந்து காய்ந்து போக அதன் அடி வேரிலிருந்து



கிழக்குப் பக்கமாக, புதிய கிளை தோன்றி வளர்ந்து பருத்து நிற்பதே இப்போதுள்ள மரம். எழுபது, எண்பது வருடங்களுக்கு முன், அரச மரத்தடியைச் சுத்தப்படுத்தியபோது புதிய மரத்தின் மேற்கு ஓரமாக இருந்த பழைய மரத்தின் பட்டு உக்கும் நிலையிலிருந்த அடிப்பாகம் அகற்றப்பட்டதாக முதியவர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறோம். காலத்துக்குக் காலம் அடியிலிருந்து வளரும் கன்றுகள் வெட்டப்படுவது உண்டு. நாமறிய நாகதம்பிரானுக்குப் பால், பழம் வைத்து வழிபாடு இயற்றிய பொந்து இருந்த அடிமரம் இப்போது இல்லை. இம்மரத்தை தாவர இயல் முறையில் ஆராய்ந்து அதன் வயது கணிப்பிடுதற்கு பழைய அடி மரத்தின் எச்சம் அவசியம். மேடை அமைப்பினுள் அடங்கியிருக்கும் அடிமரம் வயது ஆய்வுக்கு எவ்வளவு பயன்படுமோ தெரியவில்லை. வயது ஆய்வு செய்ய முடியுமானால் கோயிற் பழமைக்கு உறுதியான சான்று கிடைக்கும். அரச மரத்தின்கீழ் விநாயகரை வைத்து வழிபடும் மரபும் இந்து மதத்தினரிடம் உண்டு. தல விருட்சமான அரசமரம் ஆலயத்துக்கு முன்னாகவோ அல்லது ஆதிமூலத்தின் பின்னாகவோ நிற்பதுண்டு. எமது முன்னைய மூலவர் அரசமரத்தின் முன்பாக இருந்திருக்கலாம்.

இவ்வரச மரத்தின் பழமையைக் குறிக்க மாருதப்புரவீகவல்லியுடன் தொடர்புடைய கதையும் உண்டு. மாருதப்புரவீகவல்லி இறைவன் அருளால் நோய் நீங்கி முகமும் திருந்திச் சோழதேசம் சென்று பல்லாண்டுகளுக்குப் பின் யாழ்ப்பாணத்திலிருந்து தென் இந்தியாவுக்குத் தலயாத்திரை சென்றவர்களைச் சந்தித்து உரையாடிய போது "ஆனைவிழுந்தானில் அரசமரம் நிற்கிறதா, பொற்கலன் தம்பையிற் புளியமரம் நிற்கிறதா, சத்துருக்கன் வாய்க்காலிற் சவுக்கமரம் நிற்கிறதா[21] எனக் கேட்டதாகச்

சொல்லப்படுகிறது. பொற்கலன்தம்பை எனும் இடம் கொல்லங்கலட்டிப் பிள்ளையார் கோவிலுக்கும் ஆனைவிழுந்தான் பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் உள்ளது. சத்துருக்கன் வாய்க்கால் ஆனைவிழுந்தான் கோவிலுக்குச் சுமார் அரைக் கிலோமீற்றர் தூரத்தில் வடமேற்குப் புறமாக உள்ள புன்செய் நிலமாகும்.

அரசமரத்தடியில் ஏழுகிடாரம் பொன் புதையலாக இருப்பதாகவும் தேவதைகள் காவல் காப்பதாகவும் ஏழு கன்னிப்பெண்களைப் பலியிட்டால் அப்புதையலை எடுக்கமுடியும் எனவும் இன்னொரு கர்ணபரம்பரைக் கதை இத்தல விருட்சத்துடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இன்னும் ஒருவடிவில் ஐதீகக்கதை சிறு மாற்றமடைந்துளது. ஏழு கன்னிப் பெண்கள் இவ்விநாயகரை வைத்து வழிபட்டதாகவும் அவர்களே அரசமரத்தடியில் இருக்கும் புதையலைக் காக்கின்றனர் என்றும் அதனால், அக்காலத்தில் இரவு வேளைகளில் அயலிற் போகவும் பயந்தனர் என்றும் சொல்லப்படுகிறது.

அரசமரச் சூழலில் நிறைந்து கிடக்கும் பாம்புப் புற்றுக்களிலிருந்து வெள்ளி அரைஞாண் போன்று பாம்புக் குட்டிகள் வந்து குவியல் குவியலாக கோவில் சூழலில் கிடக்கும் என்றும் தொண்டரான ஐயாத்தை எனும் முதியவர் கைகளால் அள்ளி வைத்துவிட்டு கோவிலை அலகிடுவதாகவும் கோவிலுக்கு வருவோர்க்கு அவை தீங்கு செய்வதில்லை என்றும் பாட்டி சொல்லக் கேட்டுள்ளோம். பாட்டிவாய்க் கேட்ட இப்புதுமை என் தாயாருக்குத் தெரியாதது. அதனால் தாயாரின் காலத்துக்கு முற்பட்ட புதுமையிது. முன்பு சோடக்கனில் நாலு கூட்டுக் குடும்பங்கள் நாற்சார், எட்டுச்சார் வீடுகளில் வாழ்ந்தனராம். அவர்களின் வளர்ந்து வருஞ் சந்ததியினரே இன்று வாழ்பவராகும். அச்சந்ததியினரால் பற்றைக் காடுகள் அழிக்கப்பட்டுக் குடிமனைகள் பரம்பிய போது பாம்புகளும் அகன்றிருக்கலாம்.

எமது பாட்டி எழுபத்தொரு வயதில் 1941ஆம் ஆண்டு சித்திரை மாதம் காலமானார். அவர் இவ்விநாயகரைப் பூசித்த கந்தப்பிள்ளை

உபாத்தியாயரின் மனைவியார் என்பதையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம். அவர் கோயிற் கதைகள் இன்னும் பல சொல்வார். நாம் அன்று அவற்றைக் கருத்தில் எடுக்காது கதையாகக் கருதிவிட்டோம். இப்போதுதான் மீள நினைத்துப் பார்க்கிறோம்.

இன்று இம்மரம் மண்டபத்தைப் பெருப்பிக்கத் தடையாக இருந்தபோதிலும் தலவிருட்சம் என்பதாலும் தேவதைகள் காக்கின்றன என்பதாலும் அஞ்சி, முற்றாக அழிக்காது அதன்பிரமாண்டமான கீழாகப் பரந்துள்ள கிளைகளை வெட்டி, மேற்கிளைகளை மண்டபக்கூரை ஊடாக மேலே விட்டு, கீழே அடி அரசமரத்தைச் சுற்றி அழகான அணைச் சுவர் கட்டி மேடையாக்கப் பெற்றுள்ளது.

### *செடிக்கிணறு*

ஆலய வளவின் தென்மேற்கு மூலையில் பாழடைந்து தூர்ந்த நிலையில் செடிகள் மண்டிய ஒரு கிணறு நாம் அறியத் தக்கதாக இருந்தது. அக்கிணறு தென்மேற்கில் இருந்ததால், அடியார்களின் உபயோகத்திற்குரியதாக இருந்திருக்கலாம். முன்பு கோவிலைச் சார்ந்த கிணறாகவும் இருந்திருக்கலாம். 1936 சீர்திருத்தப் பணிகளில் ஒன்றான சுற்று மதில் கட்டும்போது அதன் நேரிலே இருந்தமையால் அக்கிணறு முழுமையாகத் தூர்க்கப்பட்டது. கோயில் அமைந்திருக்கும் பகுதி மேட்டு நிலமாதலால் இளவாலைக் கிராமத்திலேயே கோவில் திருமஞ்சனக் கிணறு தான் ஆழமானது. எனவே, தூர்க்கப்பெற்ற அக்கிணறும் மிக ஆழமானதாகவே இருந்திருக்கும். இத்தகைய ஆழமான கிணறு தானாகவே தூர்ந்து செடிகள் முளைக்கக் கூடியதாக இருந்திருப்பின் அதன் பழமை சொல்லாமலே விளங்கும்.

இக்கிணறு பற்றியும் ஒரு ஐதீகக் கதை உண்டு. இக்கிணற்றுக்குள் ஒரு தங்க அம்மியும் குழவியும் இருப்பதாகவும் அவை மேலிருந்து பார்க்கும் போது தெரிவதாகவும் கீழே இறங்கிப் பார்த்தால் தெரிவதில்லை என்றும் அவற்றை கன்னிமாப் பெண்கள்

போகும்போது போட்டுச் சென்றார்கள் என்றும் கூறுவர். இவ்விநாயகரை வைத்து வழிபட்டவர்களாகக் கூறப்படும் இக்கன்னிமாப் பெண்கள் யார்? என்ற வினா எழத்தான் செய்யும். இந்தியாவில் கிராமியத் தெய்வங்களாகக் கன்னிமாப் பெண்கள் வழிபடப்படுகிறார்கள். பழமை வாய்ந்த செவிவழி வரலாறுகள் பல கொண்ட வல்லிபுர ஆழ்வார் கோவிலிலும் இன்றும் கன்னிமாப் பெண்கள் வழிபாடு நடைபெற்று வருகிறது.

## *தொன்மையை உள்ளடக்கி வைத்திருக்கும் மேட்டு நிலம்*

ஆலயத்து மேட்டு நிலம் பழைய கட்டிடத்தின் இடிபாடுகளாலும் மண்ணாலும் ஆனபோலும். இதனை அங்கு கண்டெடுக்கப்பட்ட உடைந்த பொருள்கள் உறுதிப்படுத்துகின்றன. 1983 இல் ஆய்வு மேற்கொண்ட யாழ்.ப.க.வரலாற்றுத்துறை விரிவுரையாளர் கலாநிதி பொ. இரகுபதியால் கண்டெடுக்கப்பட்ட செங்கட்டித் துண்டுகள் உடைந்த கூரை ஓட்டுத்துண்டுகள், ஆலயத்துக்குச் சுற்றுமதில் அமைப்பதற்காக அத்திவாரம் வெட்டியபோது காணப்பட்ட உடைந்த செங்கட்டித் துண்டுகள் என்பன கட்டிடம் ஒன்று இருந்தது என்பதற்கு காத்திரமான சான்றுகளாகும். இதை உறுதிப்படுத்த கலாநிதி பொ. இரகுபதி "ஆனைவிழுந்தானிற் பெற்ற தடயங்கள் இரு தகவல்கள் தந்துள்ளன. ஒன்று ஆங்கு கட்டிடம் ஒன்று இருந்தமை. மற்றையது அக்கட்டிடம் கி.பி. 6–10ஆம் நூற்றாண்டுக்கு உரித்தாகலாம் என்பது"[22] என காங்கேயன் கல்விமலரில் 1983ஆம் ஆண்டு மேற்கொண்ட தனது ஆய்வுபற்றிய செய்தியிற் குறிப்பிட்டுள்ளார்.

பழைய காலத்தில் கோயில்கள் சுட்ட செங்கட்டிகளினால் கட்டப்பட்டன என்பதைச் சங்ககால இலக்கியங்களிற் காண முடிகிறது. இச்செங்கட்டிகள் இட்டிகை எனப் பெயர் பெற்றிருந்தன.

> "------இட்டிகை நெடுஞ் சுவர் விட்டம் வீழ்ந்தென
> மணி புறாத் துறந்த மரஞ்சேர் மாடத்து
> எழுதணி கடவுள் போகலின் -----------"[23]

இப்பாடலில் நெடுஞ்சுவர் எனக் கூறப்பட்டதனால் அக்காலத்தில் நீள அகல உயரமுடைய பெரும் பரப்பிற் கோயில்கள் கட்டப் பெற்றிருந்தன எனக் குறிக்கப்படுகின்றது. கருங்கல்லாற் கோயில்கள் நிறுவப்பட முன்பு அல்லது கருங்கற்களாற் கட்டும் வசதி இல்லாத இடங்களிற் செங்கட்டிகளாற் கோயில் கட்டினர் எனக்கருதலாம். கடியலூர் உருத்திரங்கண்ணனாரின் இப்பாடல் கலாநிதியின் கருத்தை உறுதிப் படுத்துகிறது. கோச்செங்கணான் சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் எழுபது கோயில்கள் கட்டினான் என, சைவ வரலாறுகள் கூறுகின்றன.

"இருக்கு இலங்கு திருமொழி வாய் எண்தோள் ஈசற்கு
எழில் மாடம் எழுபது செய்த உலகம் ஆண்ட
திருக்குலத்த வளச் சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர்மணி மாடம் சேர்மின்களே" –
திருமொழி

திருமங்கையாழ்வார் திருநறையூர்ப்பதத்திற் பாடியுள்ளார். காரைக்காலம்மையார், முதலாழ்வார்களின் பாசுரங்களும் பெரிய அளவிலான கோயில்கள் கட்டப்பெற்றிருந்த உண்மையையும் புலப்படுத்துகின்றன. இவை இட்டிகை எனக்குறிக்கப்படும் செங்கட்டிகளினால் ஆனவை. அதனாலேயே இவைகள் இருந்த இடந்தெரியாமல் அழிந்தும் பாழடைந்தும் போயின. பல்லவ மன்னர் காலத்திலேதான் கருங்கற்களால் கோயில்கள் அமைக்கும் முறை தொடங்கியது. அதற்கு முன்பும், பின்னரும் கருங்கல்லாற் கட்டும் வசதிகள் இல்லாத இடங்களில் செங்கட்டிகளாற் கோயில்கள் நிறுவப்பெற்றன. ஆனைவிழுந்தானிற் கிடைத்த தடயமான செங்கட்டித் துண்டுகளும் (இட்டிகைகள்) செங்கட்டிகளாற் கட்டப் பெற்ற கோவில் ஒன்று இருந்ததற்கு சிறந்த ஆதாரமாகின்றன. கலாநிதி பொ. இரகுபதியின் கருத்தும் உறுதிப்படுத்தப்படுகிறது.

ஆனைவிழுந்தான் ஆலயம்பற்றி சாசன ஆதாரம் எதுவும் இது வரை கிடைக்கவில்லை. முழுக்கமுழுக்க நம்பகமான பாரம்பரியக்

கதைகளே ஆலயத்தின் வரலாற்றை அறியத்தருகின்றன. மட்டுவில் ஆ. நடராசா ஆசிரியர் "ஆனைவிழுந்தானில் வேறு ஏதாவது கட்டிடம் இருந்ததாகக் கூறப்படும் கர்ணபரம்பரைக் கதை கூட வழங்காமையாலும் இவ்வாலயத்தை மட்டுமன்றி நகுலேஸ்வரத்தின் சூழலில் ஏழு விநாயகர் ஆலயங்களை மாருதப்புரவீகவல்லி அமைத்தாளெனக் கூறப்படுவதாலும், மாருதப்புரவீகவல்லியின் காலமென யாழ்ப்பாண வைபவமாலை குறிப்பிடும் காலமும் ஆலயத் தொல்பொருள் மேலாய்விலிருந்து இங்கிருந்த கட்டிடம் கட்டப்பட்ட காலமெனக் கண்டறியப்பட்ட காலமும் ஒரே காலமாய் இருப்பதனாலும் இங்கிருந்த கட்டிடம் ஆனைவிழுந்தான் எனத் துணியலாம்."[24] என்கிறார். கோவில் ஒன்று இருந்தது என்பதை உறுதிப்படுத்தினால் அதன் அழிவை போர்த்துக்கேயர் ஆட்சியில் நடந்த அழிவுகளுடன் இலகுவாக தொடர்புபடுத்தி அழிவுக் காலத்தையும் காரணத்தையும் அறிய முடியும். இவ்வாராய்ச்சி சாதாரண மக்களால் இயலாத காரியம் என்பது உண்மை. என்றோ ஒரு நாள் தெய்வ அருள் கூட்டும்.

1621இல் யாழ்ப்பாணம் அந்நியர் ஆட்சியில் (போர்த்துக்கேயர்) இருந்தபோது கோவில்கள் இடித்து அழிக்கப்பட்டன. போர்த்துக்கேயர் கோயில்களை இடித்தெடுத்த கற்களைக் கொண்டு கோட்டைகள் கட்டினர். மக்கள் சமயக் கிரியைகள் அநுட்டிக்க அஞ்சி வாழ்ந்தனர் என்பதும் யாவரும் அறிந்த உண்மை. "ஈழத்தில் ஐந்து ஈஸ்வரங்களில் (சிவதலங்கள்) பிரதானமானதும் சிவனடியார்கள் போற்றி வணங்குவதுமான பிரசித்திபெற்ற கோயிலை (கோணேஸ்வரம்) இடித்து அதன் கற்களைக் கொண்டு போர்த்துக்கேயர் கோட்டைகட்டியது மிக இழிவான செயலாகும்."[25] என, போல் ஈ. பீரிஸ் கூறுகிறார்.

சைவசமய அழிப்பில் ஈடுபட்ட போர்த்துக்கேயர் ஆனைவிழுந்தான் கோயிலையும் இடிக்காது விட்டு வைத்திருப்பார்களா? இடித்தெடுத்த செங்கட்டிகள் யாழ்ப்பாணக் கோட்டை கட்டப் பயன்பட்டிருக்கலாம். யாழ்ப்பாணம் நல்லூர்க் கந்தன் கோயிலையும்,

கீரிமலை நகுலேஸ்வரத்தையும், கீரிமலைச் சாரலில் உள்ள சைவக் கோயில்கள் அனைத்தையும் 1621 இல் இடித்து அழித்தது வரலாறு கூறும் உண்மை. ஆட்சி அதிகாரத்திலிருந்த பரராசசிங்க முதலி இறந்தபின் தாம் இடியாது தவற விட்ட ஆலயங்களையும் இடிப்பித்ததாகவும், அப்போது பரசுபாணி ஐயர் என்பவர் கீரிமலைச் சாரலில் உள்ள ஆலயங்களின் விக்கிரகங்களையும் பூசைக்குரிய பொருட்களையும் கிணறுகளிற் போட்டு மறைத்ததாகவும் யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. இவ்வாறு போர்த்துக்கேயரால் இடித்து அழிக்கப்பட்ட பல கோயில்களுள் ஆனைவிழுந்தான் விநாயகர் கோவிலும் ஒன்றாக இருந்திருக்கலாம். அவ்வழிவின் சிதைவுகளே இன்று அகழ்வு ஆய்வின் போது கண்டு எடுக்கப்பட்டவையாகும் என்பது கூறாதே விளங்குகின்றது.



# பழமையின் ஆதாரங்கள்

***ஆனைவிழுந்தானில் பழமைவாய்ந்த கோயில் ஒன்று இருந்ததென்பதற்கு ஆதாரங்கள் :-***

(1) 1983இல் கலாநிதி. பொ. இரகுபதி அவர்கள் கண்டெடுத்த உடைந்த செங்கட்டித் துண்டுகள் அதாவது பழைய காலத்தில் கோவில்கள் கட்ட உபயோகப்படுத்திய இட்டிகை என வழங்கப்பட்ட செங்கட்டிகள்.

(2) கை விரல்களினாற் பள்ளம் இடப்பெற்ற பழையகாலத்திய உடைந்த ஓட்டுத் துண்டுகளும், தடித்த விழும்பினை உடைய உடைந்த மட்பாண்டத் துண்டுகளும்.

(3) ஆனைவிழுந்தான் கோயிலின் ஆவுடையார் இல்லாத லிங்கமும் திருகோணமலைக் கடலில் கண்டெடுத்த ஆவுடையார் இல்லாத கோணேஸ்வரக் கோயிலின் லிங்கமும் ஒரே காலத்தைச் சேர்ந்ததெனக் கொள்ள முடிகின்றமை.

(4) சுமார் நூறு வருடங்களுக்கு மேல் பழமையானதற்குச் சான்றான காணி உறுதி

மயிலங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளை வயிரவப்பிள்ளை 1913 வைகாசி 14 ஆந் தேதி பிரசித்த நொத்தாரிசு சி. சுப்பிரமணியம் முகதாவில் 3759ஆம் இலக்கத்தில் கோயில் அடங்கியிருந்த காணியை விற்று முடித்த அந்த அறுதி உறுதியில் கோயில் அமைந்திருக்கும்காணி, கோயிலுக்கென ஒதுக்கி விடப்பட்டுள்ளது என எழுதப்பெற்றுளது.. 1936 ஆம் ஆண்டு முடிந்த ஓர் உறுதியில் தெற்கெல்லைக் காணி விக்னவிநாயக மூர்த்தி கோயிலுக்குரிய ஆதனமமெனக் குறிக்கப் பெற்றுள்ள மையால் கோயில் உரிமை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலே குறித்த அறுதி உறுதி இக்கோயில் 100 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பதற்கான ஓர் எழுத்து மூலச் சான்றாகின்றது.

******

# பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து ஆலய வளர்ச்சி

சோடக்கன் வாசியான நன்னிக்குட்டியர் பூசகராக இருந்த காலத்திலிருந்து அதாவது ஏறக்குறைய பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து ஆலயவரலாறு உறுதியாகக் கூற முடிகிறது. நாமறிந்த வரையில் பூசை செய்து வந்தவர்களுள் முன்னையவர் நன்னிக்குட்டியர். அவருக்குப்பின் அவருடைய மருகரான பரிகாரியார் மூத்ததம்பி பொறுப்பேற்றுப் பூசை செய்து வந்தார். அடுத்து அவரின் மகன் மயில்வாகனம் சிறுவனாக இருந்தபடியால் அவரது ஒன்றுவிட்ட சகோதரியின் மகனும் சைவ ஆசார சீலராக இலக்கண இலக்கிய புராண இதிகாசங்கள் கற்பித்தவருமான தம்பர் கந்தப்பிள்ளை உபாத்தியாயர் பொறுப் பேற்றுப் பூசைசெய்து வந்தார். கந்தப்பிள்ளை உபாத்தியாயர் தனது நாலாவது தசாப்தத்தில் 1903 சித்திரை மாதம் காலமானார். ஆயின், அவர் எப்பொழுது பூசனை செய்யத் தொடங்கினார் என்பதை அறியக் கிடைக்கவில்லை. அவரின் மனைவியார் மூலமாகவும் வேறு ஊர் முதியவர்கள் வாயிலாகவும் கோவிலை ஒட்டிய சில தகவல்களும், இன்னார் இன்னார் பூசைசெய்தார்கள் என்ற செய்திகளும் அறிந்தவையாகும். சிறுவர்களாகிய எமக்கு அவர்கள்- பாட்டனார் உட்பட எவ்வளவு காலத்துக்குப் பூசை செய்தார்கள் என்ற தகவல்கள் அந்நேரம் அவசியமானதாக தோன்றவில்லை. இவர்கட்கு முந்தைய தகவல்கள் எதுவும் எம்மால் கூற முடியாதுளது.

1913 வைகாசி 14ஆந் தேதி 3759ஆம் இலக்கத்தில் கோயிலைச் சார்ந்த காணிக்கு அறுதியாக முடித்த உறுதியில் கோயில் அமைந்திருக்கும் காணி கோயிலுக்கென ஒதுக்கி

விடப்பட் டுள்ளது என எழுதப்பட்டு இருக்கிறது. இவ்வுறுதி ஆனை விழுந்தான் கோயில் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட வழிபடப்பட்டு வந்தமைக்கு நல்லதொரு எழுத்து மூலச்சான்றாகும்.

## *ஆகம விதிக்கு அடிகோலல்*

தம்பர். கந்தப்பிள்ளை உபாத்தியாயருடன் மந்திரமின்றிப் பூசித்த வழக்கம் முடிவடைந்தது. அவருக்குப்பின் அவர்களுக்கிடையே வேறு பொருத்தமானவர்கள் இல்லாத காரணத்தால் பூசைப் பொறுப்பை வீரசைவரான வயிரவி வேலுப்பிள்ளையிடம் ஒப்படைத்தனர். அவர் மந்திரம் கற்ற லிங்கதாரி. நாதோலையில் ஒருஅம்மன் கோயிலை வைத்து ஆராதனை செய்தபடியால் அவரைத் தகுதியானவராகத் தெரிந்தனர். ஏறக்குறைய நூறு நூற்றைந்து ஆண்டு காலத்திலிருந்து – வேலையர் பூசை செய்யத் தொடங்கிய காலந் தொட்டு– மிகஉறுதியான வரலாறு எம்மாற் கூறமுடிகிறது. சுண்ணாம்புக் கட்டிடத்தால் ஆன ஒரு சிறு கோவில் இருந்தது. அதற்கு முன்பு அந்த அரச மரத்தின் கீழா அன்றி ஒரு கொட்டிலில் இருந்தாரா என்பதற்கு ஆதாரம் எதுவும் தெரிந்திலது. மூலவர் சிறு மூடு சாந்துக் கட்டிடத்திலிருந்தார். அதனைச் சார்ந்த ஒருமண்டபமும் இருந்தது. அது சுமார் பத்து பன்னிரண்டு முழத்துக்குக் குறையாதது. அம்மண்டபம் எப்போது கட்டப்பட்டதென அறியச் சான்றுகள் இல்லை. புத்திரப்பேற்றுக்காக வேண்டுதல் செய்து அவ்வேண்டுதலை நிறைவேற்ற (கலட்டி) இளையதம்பியால் வெட்டப்பட்ட கிணறு ஒன்றும் இருந்தது. அதுவும் வெட்டப்பட்ட காலம் திட்டவட்டமாக அறிய முடியவில்லை. 1935ஆம் ஆண்டு வரையும் அச்சிறிய கோயிலிலேயே வழிபாடு நடந்து வந்தது.

வீரசைவரான வேலையர் ஊரவர்களின் உபயத்துடன் ஒருநேரப் பூசை செய்து வந்தார். பரிவார தெய்வங்களாக வடகிழக்குப் பக்கத்தில் வயிரவரென்று இரும்பினாலான ஒரு சிறிய சூலமும் வடக்குப் பக்கத்தில் நின்ற கொன்றை மரத்தின் கீழ் ஏழு செங்கட்டித் துண்டுகள் (கோயில் வளவிற் கிடந்த தொல்பொருள்) வைத்து கன்னிமாப் பெண்க ளென்றும் மற்றொரு செங்கட்டித் துண்டொன்றைப் பெத்தையன் என்றும் அரசமரப் பொந்தில் நாகதம்பிரான் என பால் பழம் நிவேதித்தும் பூசை செய்வார். நாகவழிபாடு மிகமிகப் பழமையானது. நாகவழிபாட்டு மரபு சிந்து வெளி நாகரிகத்திலேயே சிவ வழிபாட்டுடன் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. சிந்து வெளியில் கிடைத்த ஒரு தாமிர முத்திரையில் யோகியின் இரு புறமும் இருவர் மண்டியிட்டு வணங்கும் நிலையிலும் இரு பாம்புகள் பின்னி இணைந்த நிலையிலும் காணப்படுகின்றன. இது சிந்து வெளிச் சிவ வழிபாட்டு மரபினரிடம் நாகவழிபாட்டு மரபும் வழங்கியதற்குச் சிறந்த சான்றாகின்றது.

பழமையில் ஊறிய விஸ்வலிங்கம் நாகரத்தினம் குடும்பத்தினரும் புத்திரபாக்கியம் வேண்டி, சோதிடர் சொற்படி செம்பாம்பு செய்து அந்த அரசமரப் பொந்து வாயிலில் வைத்து நாளும் பால் பழம் வைத்து வழிபட்டு வந்தனர். புதுமை என்னவெனில் அடுத்த நாள் ஐயர் பால், பழம்வைத்த பாத்திரத்தை எடுக்கும்போது பாலும் இருக்காது. பழமும் இருக்காது. நாகம் வந்து குடித்துப் போவதாக ஐயரும் ஊரவரும் நம்பினர். அதனால் பய பக்தியுடன் கிரமமாகப் பால் பழம் படைத்து வழிபாடு இயற்றினர். வீட்டுக்குச் சாரைப் பாம்பு வந்தாலும் நாகதம்பிரான் வந்ததாகக் கருதி மறுநாள் நாகதம்பிரானுக்குப் பால், பழம் வைத்து வணங்குவர். சிறு பற்றைக் காடுகள் நடுவில் மக்கள் வாழ்ந்தமையால் பாம்புப் பீதியை



நிவர்த்திக்கவும் நாக வழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். மாதப் பூசைக்காரர் இணைந்து விசேஷ பூசைகளான பிள்ளையார் கதையும் சித்திராப் பூரணையும் வெகு சிறப்பாகக் கொண்டாடுவர். 21 நாட்களும் பிள்ளையார் கதையும் சித்திர புத்திரனார் கதையும் வாசிக்கப்பட்டு பூசையும் நடைபெறும். சித்திராப் பூரணையிற் பெரிய கிடாரத்தில் கஞ்சி காய்ச்சிப் அடியார்களுக்கு பிரசாதமாக வழங்குவர். சதுர்த்திகளில் ஆவணிச் சதுர்த்தி மாத்திரம் கொண்டாடுவர். கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மூத்த மகன் செல்லப்பா ஆவணிச் சதய நட்சத்திரத்தில் பிறந்தமையால் ஆவணிச் சதுர்த்தியை அக்குடும்பத்தவர் செய்து வந்தனர். இன்றும் தொடர்ந்து அவர் வழியினர் செய்துவருகிறார்கள்.

சிறிது காலம் (இடைக்காடு திரு. கணபதிப்பிள்ளை தலைமைஆசிரியர் பதவியில் இருந்தகாலம் என்ற நினைவு) மெய்கண்டான் வித்தியாலய ஆசிரியர் களும் மாணவர்களும் சேர்ந்து ஆனைவிழுந்தான் ஆலயத்தில் நவராத்திரி விழாவைக் கொண்டாடினார்கள். முதல் எட்டு நாளும் ஊர் ரீதியாக படிக்கும் மாணவர் பொறுப்பில் நடைபெறும். கீரிமலை, கருகம்பனை, மயிலங்கூடல், வேரவல் – பொல்வத்தை, முள்ளானை, மாரீசன் கூடல், சித்திரமேழி, காடிவளை, சோடக்கன் ஆகிய பகுதிகளில் படிக்கும் மாணவர்களது உபயமாகும். மாணவர் சிலர் ஆசிரியர் சிலருடன் சேர்ந்து, மயில்வாகன உபாத்தியாயர் ஹாமோனியம் வாசிக்க, "கன்னித் திங்கள் வருகுதையா கருத்துடன் நவராத்திரிக்கு..." என்ற தொடக்கமுடைய பாடலைப் பாடிக்கொண்டு வீடுதோறும் சென்று, கோலாட்டம் அடித்துச் சேர்த்த பணத்திற் சரஸ்வதி பூசையும், ஆசிரியர் குழாத்தாற் பன்னீர்வாழை (மானம்பூ) வெட்டும் செய்யப்பட்டன. அதுமட்டுமன்றி வெள்ளி தோறும் மாணவர் சென்று தேவாரம் பாடிப் பூசை கண்டு விபூதிப் பிரசாதம் பெற்று வருவதும் வழக்கத்தில் இருந்தது.

மார்கழிமாதத் திருவெம்பாவை பத்து நாட்களும் சிறப்பாகக் கொண்டாடப்படும். ஊரவர்களைத் துயிலெழுப்பும் நோக்குடன் ஆலய

பூசகரான வேலையர் அதிகாலையில் குடிமக்கள் படலையில் நின்று சேமக்கலம் தட்டி, சங்கூதி மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருப்பள்ளி எழுச்சிப் பாடலை வீதி வழியே பாடிச் செல்வார். அவர் மறைவுக்குப் பின்னர் மகன் கந்தவனஐயர் அப்பணியைச் செய்துவந்தார். அவருக்குப் பின் சில காலம் ஊர் இளைஞர்கள் சேர்ந்து பாடிவந்தனர். நாளடைவில் அவ்வழக்கொழிந்து விட்டது. பாடல் கேட்டு விழித்தெழுந்த மக்கள் மார்கழிக் கடுங் குளிரையும் பொருட்படுத்தாது குளித்து ஆசார சீலர்களாகத் திருவெம்பாப்பூசை காணச் செல்வர். மார்கழி மாதத்தில் தெய்வ மணங் கமழும் ஊராக நம்மூர் திகழும்.


கோயில் முகப்பில் பன்னிரண்டு மாதமும், மாதப்பூசையைச் செய்யும் அவ்வூர்வாசிகளான பன்னிரண்டு குடும்பத்தவர் விடிவிளக்கு எரிப்பர். இவ்விளக்கு ஊருக்கு அருள் ஒளி பாய்ச்சுவது போல் இரவில் ஒளி வீசிக் கொண்டிருக்கும். அதே சமயம் கிழக்கே பரந்து கிடக்கும் சிறுபற்றைக் காட்டு வழியாக வருவோருக்குக் கலங்கரை விளக்குப்போலவும், விக்கின விநாயகரை நினைக்கத் தூண்டுவதாகவும் ஒளி காலும். விளக்கேற்றும் குடும்பத்தார் சார்பில் தவறாது விளக்கு ஏற்றும் பணியையும் ஐயருக்கு உதவிசெய்யும் பொறுப்பையும் தொண்டரான வேலுப்பிள்ளை செய்து வந்தார். கோவில் பராமரிக்கும் பொறுப்பும் அவராகவே ஏற்றுக்கொண்டார்.

வீரசைவரான வேலையர் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக பூசகராக இருந்து மக்கள் மதிப்பினைப் பெற்றவர். அடியார்களுக்காக வேண்டி, அழுதழுது பூசை செய்வது இன்றும் எம் கண்முன் நிற்கின்றது. தள்ளாத வயது. தெய்வத்துடன் பேசுவதுபோலவே இருக்கும். அவர் விபூதி ஓதிப் பார்வை பார்ப்பது, நூல் ஓதிக் கட்டுவது சித்திக்கும் என்ற நம்பிக்கை ஊர் மக்களனைவர்க்கும் இருந்து வந்தது. பயபக்தியும் பண்பும் அன்பும் நிறைந்த பூசகராக விளங்கினார்.

## *பஞ்சாயமும் ஆகம வழிபாடும்*

1935 இல் ஊர்மக்கள் சிவாகம விதிப்படி பூசைசெய்ய விழைந்தனர். ஆலயத்தையும் சிறிது பெருப்பிக்க எண்ணினர். முக்கியமாக விநாயகருக்கு ஒரு சிறப்புப் பெயரையும் சூட்ட விரும்பினர். பஞ்சாயத்தார் இந்திய தலயாத்திரை மேற்கொள்பவர்கள் ஆனமையால் விக்கினங்களை வேரறுக்கும் விநாயகர் எனப் போற்றும் விக்ன விநாயகர் தலத்தின் பெயரை கர்ணபரம்பரைக் கதையைக் கருத்திற் கொண்டு ஸ்ரீவிக்ன விநாயகர் என்று சூட்டினர். அதுவரை காலமும் ஆனை விழுந்தான் பிள்ளையார் என்றே வணங்கப் பெற்றார். வீரசைவரான வேலையரும் விலக வேண்டிய சூழ்நிலை உருவானது. தள்ளாத வயதும் ஒரு காரணமானது. அக்கால கட்டத்தில் கீரிமலை ஆதீனத்தைச் சேர்ந்த நடராசாஐயர் இந்தியாவிலிருந்து குடும்பத்துடன் வந்து கீரிமலையில் தங்கியிருந்தார். இவர் கீரிமலை நகுலேஸ்வரத்தின் பிரதம குருக்களான குருசாமிக் குருக்களின் தம்பியாவர். ஊரவர் விருப்பின்படி திருவருள்கூட்ட, சிவஸ்ரீ குருசாமிக் குருக்கள் ஆனை விழுந்தான் லிங்கப்பிள்ளை யாரை அவர் எழுந்தருளியிருந்த சிறிய தலத்துக்கு அருகே தகரத்தாலாய பாலாயத்தில் பிரதிட்டை செய்தார். தனது தம்பி நடராசையரையும் கோவில் பூசகராக்கினார்.

அந்நாளில் நடைமுறையில் இருந்தவாறு காட்டுக்கல், சுண்ணாம்பு கொண்டு கர்ப்பக்கிருகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், நந்தி பலிபீடம் என்பன ஊர்ப் பிரமுகர்களின் ஆதரவில் அமைக்கப் பட்டன. தபாலதிபர் நாகநாதர் செல்லப்பா கருங்கல்லாலான ஐங்கரன் விக்கிரகத்தை இந்தியாவிலிருந்து தருவித்து உபயஞ் செய்தார். கோயிலுக்கு வடக்காக உள்ள நிலம் பிறருக்கு உரியதாக இருந்தது. அதனால் பஞ்சாயத்தாரில் நால்வர்



மூலவர் 1936

சேர்ந்து நாலு பரப்பு நிலம் வாங்கிக் கோயிற் பெயரில் எழுதினர். கோயிலின் முதல் விஸ்தரிப்பாக இது அமைந்தது. அந்த நிலம் இன்று முருகன் கோயில், வசந்தமண்டபம், யாகசாலை என்பன அமைந்திருக்கும் பகுதியாகும். 1936இல் பழைய லிங்கப்பிள்ளையாரும் புதிய ஐங்கரனும் கருவறையிற் பிரதிட்டை செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. கீரிமலை ஆதீன சிவஸ்ரீ குருசாமிக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கும்பாபிஷேக விழாவைச் சிறப்பித்தார்.

முன்னர் மாதப்பூசை ஏற்று, விளக்கேற்றிவந்த பன்னிரண்டு குடும்பத்தவரும் குறித்த மாதந்தோறும் நித்திய பூசைப் பொறுப்பையும் வாயிலில் விடிவிளக்கு ஏற்றும் பொறுப்பையும் ஏற்றனர். கொடியேற்றமின்றி அலங்காரத் திருவிழா மாதப்பூசைக்காரரால் வெகு விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. சுவாமியும் மேளக்கச்சேரி வாண வேடிக்கை, அழகழகான அலங்காரத்துடன் உள்வீதி வெளிவீதி எனப் பவனி வந்தார். விடியவிடியவிழாக்கள் நடைபெற்றன. அப்போது எழுந்தருளி விக்கிரகம் இல்லாதபடியால் முன்னைய அர்ச்சகர் வேலையரின் கைத்திறனால் அங்கங்களை நுட்பமாக வைத்துக்கட்டி அழகிய எழுந்தருளி உருவானது. இன்னும் அவரது கண்கவரும் அழகிய சார்த்துப்படி அலங்காரத்தோடு பிள்ளையார் வீதி உலா வந்தார். எழுந்தருளி இல்லாக் குறை நீக்கக்கருதி, மலேசியப் புகையிரத நிலைய அதிபராயிருந்து ஓய்வு பெற்று வந்திருந்த வரும், கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மகனுமாகிய செல்லப்பா, ஐம் பொன்னாலாகிய எழுந்தருளியையும் திருவாசி, குடை என்பவற்றையும் இந்தியாவிலிருந்து தருவித்து உபயம் செய்தார். கோயில் தனிமையான



எழுந்தருளி –1938

இடத்தில் அமைந்திருப்பதால் பாதுகாப்புக் கருதி திருவாசி, குடை உபயகாரர் வீட்டிலும் எழுந்தருளிப் பிள்ளையார் ஐயர் வீட்டிலும் வைக்கப்பட்டுவந்தன. கந்தப்பிள்ளை உபாத்தியாயரின் மருமகனான நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலம் பெருச்சாளி வாகனம், தண்டு என்பன உபயம் செய்தார். தண்டுகளும் பாதுகாப்புக் கருதி அவருடைய வீட்டிலேயே வைக்கப்பெற்றன.

நடராசையர் நித்திய நைமித்திய பூசைகளை முறையாகவும் ஒழுங்காகவும் செய்துவந்தார். காலை நேரப்பூசை மட்டும் நடைபெற்றது. அவருக்கு ஏழுரூபா மாதவேதனம் வழங்கப்பட்டது. மக்கள் கொடுக்கும் அர்ச்சனைக்காசு ஒருபணம் (6சதம்) அவருக்கே உரியது. நடராசாஐயர் சிலகாலம் பூசைசெய்தபின் இந்தியா சென்றுவிட்டார். அதனால் அவருக்குப்பின் சிறிது காலம் விஸ்வநாத சர்மாவும், பின்னர் மாவைக் கந்தசாமி கோவிலைச் சார்ந்த தாணுஐயரும் பூசை செய்தனர். முன்பு அர்ச்சகராக இருந்த நடராச ஐயரின் மகன் பூணூல் அணிந்து அர்ச்சகராகும் தகுதி எய்தியதும், நடராசஐயரின் சேவைக்கு நன்றிக் கடனாகவும் அக்குடும்பத்துக்கு உதவிபுரியும் நோக்குடனும் பூசைப்பொறுப்பு இளைய மகனான இராமச்சந்திரன் ஐயருக்கு அளிக்கப்பெற்றது. இராமச்சந்திரர் சிறுவராக இருந்தபடியால் தாயாரின் அநுசரணையுடன் பூசையை நிறைவாக நடத்துவார்.

ஆலயம் புனரமைக்கப்பட்டு கும்பாபிடேகம் நடைபெற்றதுடன் மக்கள் மனதில் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. தம்பர் சின்னத்தம்பி (பாலியடைப்பான் எனவும் பாலியடைப்புத்தம்பி எனவும் வழங்குவர்) ஆலயத்துக்கு மணிக்கோபுரமும் கண்டாமணியும் சுற்றுமதிலும் உபயம் செய்தார். சுற்றுமதில் சுண்ணாம்பு கண்ட கற்களாலானது. மணிக்கோபுரம் கொங்கிறீற் கட்டிகளாலானது என்பது குறிப்பிடத் தகும். அதிலேற்றிய கண்டாமணி ஓசை சோழகக் காலத்தில் கீரிமலை வரை கேட்கும். அதன் விழுமிய ஓங்கார நாதம் ஊர் நிறைந்து நிற்கும். ஊரவர் மணி கேட்டதும் எங்கிருந்தாலும் ஆலய திசை நோக்கி 'ஆனைவிழுந்தானே அப்பனே' என, கைகூப்பி வணங்குவர்.

பொது நூலகம்
வலி-தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம்
உடுவில்.

**1936 இல் உபயங்கள்**

(1) மூலவர் (ஐங்கரன்) – நாகநாதர் செல்லப்பா

(2) உற்சவர்+திருவாசி + பட்டுக்குடை – கந்தப்பிள்ளை செல்லப்பா

(3) பெருச்சாளி வாகனம் + தண்டு – ஆறுமுகம் பொன்னம்பலம்

(4) கண்டாமணி + கோபுரம் + சுற்றுமதில் – தம்பர் சின்னத்தம்பி

*பஞ்சாயம்*

தம்பர்சின்னத்தம்பி(பாலியடைப்புத்தம்பி)1938மார்கழியில் மரணிக்க முன்னரே தனக்கு வாரிசு இல்லாதபடியால் தனதுஇரண்டு காணிளை ஆனைவிழுந்தான் விக்னவிநாயகர் கோயிலுக்கு மரணசாதனம் எழுதிவைத்தார். அக்காணிகளுக்கும் மற்றைய உபயங்களுக்கும் மேற்பார்வையாளராக பஞ்சாயத்தாரையும் நியமித்திருந்தார். பஞ்சாயத்தார் ஐவரும் கோயிலை ஆதரித்தவர்களும் அவருடைய உறவினர்களாவர் என்பதும் குறிப்பிடத்தகும்.

(1) தாய், மனைவி இருவர் வழியிலும் உரிமைவந்த புன்னாலைக்கட்டுவன் நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலம்

(2) மனைவிவழி உரிமை வந்த தெல்லிப்பளை தபால் அதிபர் நாகநாதர் செல்லப்பா.

(3) மனைவி வழி உரிமை வந்த பன்னாலை விதானை வயிரமுத்து கந்தையா

(4) மனைவிவழி உரிமை வந்த தெல்லிப்பளை அரசாங்க உத்தியோகத்தர் அப்பாப்பிள்ளை கந்தையா

(5) தந்தைவழி உரிமைவந்த ஓய்வுபெற்ற புகையிரதநிலைய அதிபர் சோடக்கன் கந்தப்பிள்ளை செல்லப்பா ஆகியோரே நியமிக்கப் பெற்ற பஞ்சாயத்தாராவர். இவர்கள் ஐவரும் சோடக்கனில் வாழ்ந்தவர்களாவர்.

கீரிமலையிற் குடியிருந்த நடராசையர் குடும்பத்தினர், இராமச்சந்திரஐயர் பூசைப் பொறுப்பேற்றபின் சோடக்கனில் பாலியடைப் புத்தம்பியால் கோயிலுக்கு உபகரிக்கப்பெற்ற வீட்டில்

குடியமர்த்தப்பட்டனர். பயபக்தியுடனும் பொறுப்புடனும் ஊரவர் மனங்குளிர, தான் ஏற்ற பணியைச் செய்து பலகாலம் பூசை செய்து வந்த இராமச்சந்திரஜயர் திருமணமாகிய பின்னும் தன் குடும்பத்தவர்களுடன் கோயிலுக்கென உபகரிக்கப்பட்ட வீட்டிலேயே வாழ்ந்து வந்தார். அவர் காலமானபின் மகன் பாலச்சந்திரஜயர் தொடர்ந்து பூசைப்பொறுப்பை ஏற்று யுத்த நெருக்கடியால் இடம் பெயரும்வரை அந்த வீட்டிலேயே வாழ்ந்து வந்தார். நிற்க.,

1940களில் இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் பஞ்சாயத்தார்க்கி டையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக நிருவாகத்தில் சிறு குழப்பநிலை இருந்தது. மாதப் பூசைகாரர் பதினொருவரும் மாதப் பூசையைச் செய்யாது நிறுத்திக் கொண்டனர். பஞ்சாயத்தாரில் ஒருவரான விதானை கந்தையா அர்ச்சகரின் வேதனமான ஏழு ரூபாவைக் கொடுக்கவே கோயில் பூட்டப்படாது வழமை போல் தினபூசை நடைபெற்றது. ஆனைவிழுந்தானும் தன் ஊர் மக்களைப்போல் கூப்பன் அரிசி நிவேதனம் ஏற்றுச் சிறிது காலம் வீற்றிருந்தார்.

"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங் குன்றுங்
கன்னங் களவு மிகுந்திடுங் காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத் தானே"

என, திருமூலரும் ஆலயப் பூசைகள் முடங்கிக் கிடப்பதால் ஏற்படும் தீய விளைவுகளை இவ்வாறு குறிப்பிடுகிறார். பிள்ளையார் திருவருள்பாலிக்க ஊர்மக்களும் மற்றைப் பஞ்சாயத்தாரும் பிள்ளையாரை அப்படியேவிடுதல் நன்றன்று என்பதை அவர்களின் உள்ளுணர்வு உணர்த்த, வேற்றுமையை மறந்து ஒன்றுபட்டு, பூசல் தவிர்க்க, கோவில் பழைய நிலை எய்தியது. பூசைகளை உபயகாரர் ஏற்று, பழையபடி முறைப்படி செய்யத் தொடங்கினர். விநாயக பக்தையான வேலு லக்சுமி கோயில் திருப்பணித் தொண்டுக்குத் தன்னை அர்ப்பணித்தமை குறிப்பிடத் தக்கது. 1952வரை குடும்பங்கள் பிள்ளை குட்டி எனவளர கோவிற் பூசைகளிலும்

பிள்ளைகள் பங்குபற்ற விரும்பினர். கோயிலும் வளர்ச்சி உற்றது. அதன் பலனாக நித்திய, நைமித்திய பூசைகள் மாற்றி ஒழுங்கமைக்கப் பெற்றன.

1936இல் நாகநாதர் செல்லப்பா உபயஞ்செய்து பிரதிட்டை செய்யப்பெற்ற மூலவர் அங்க ஊனப்பட்டமையால் மீண்டும் பாலஸ்தாபனம் செய்யப்பெற்றார். பஞ்சாயத்தாரும் ஊரவரும் ஆலயத்தையும் இன்னும் பெருப்பித்துக் கும்பாபிஷேகம் செய்ய முயற்சித்தனர். பயனற்ற நிலையில் விநாயகப் பெருமான் பாலாலயத்திலேயே இருக்க, பூசைநடை பெற்றுவந்தது.

## *ஆலயமும் பரிபாலன சபையும்*

1975இல் இளைஞர்கள் ஒன்றிணைந்து ஏழு உறுப்பினர் கொண்ட பரிபாலன சபை ஒன்றை நிறுவினர். "1975ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஏழு உறுப்பினர்களைக் கொண்ட ஆலய பரிபாலன சபையில் மேலுஞ் சிலருக்கு இடமளிக்க வேண்டுமென 1977. 03. 13 இல் கூடிய கூட்டமொன்றில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக் கமைவாக பரிபாலனசபையில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. இதுவும் இவ்வாலயம் வளர்ச்சியடைந்து வருவதற்குரிய காரணங்களில் ஒன்றாகும்." என 1990 இல் முதன் முதலாக இவ்வாலய வரலாற்றை எழுதிய திரு ஆ.நடராசா ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

## *பரிபாலன சபை உறுப்பினர்கள்*

பாலசுப்பிரமணியம் தர்மபாலா – தலைவர்*
பொன்னம்பலம் இராஜேந்திரன் – உபதலைவர்
சின்னத்தம்பு குமாரலிங்கம் – செயலாளர்
நாகேந்திரம் விஜயேந்திரன் – உபசெயலாளர்
வேலும்மயிலும் சிவலிங்கம் – பொருளாளர்
கனகசுந்தரம் முருகதாசனும், கந்தப்பிள்ளை இரத்தினமும் நிர்வாக சபை உறுப்பினர்களாக இணைக்கப்பட்டனர்.

பி.கு.* தாமோதரம்பிள்ளை கனகசுந்தரத்தின் மறைவின் பின் அன்னாரின் சகோதரர் ஆ.தா.ஆறுமுகம் பொறுப்பேற்றார். அவர் வெளிநாடு சென்றதும் அவ்விடத்துக்கு தர்மபாலா நியமிக்கப்பெற்றார்.

### *தர்மகர்த்தா உறுப்பினர்கள்*

தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் – தலைவர்
செல்லப்பா பாலசுப்பிரமணியம்
செல்லப்பா சபாரத்தினம்
விசுவநாதர் சிவகுருநாதர்
சுப்பிரமணியம் சண்முகலிங்கம்
திருநாவுக்கரசு நாகேந்திரன்
வீரகத்தி கணபதிப்பிள்ளை

தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் காலமானதும் அவர் மகன் முருகதாஸனும் செல்லப்பா பாலசுப்பிரமணியம் காலமானதும் அவர் மகன் தர்மபாலாவும், செல்லப்பா சபாரத்தினம் காலமானதும் சின்னத்தம்பு குமாரலிங்கமும் நியமிக்கப்பட்டனர். சின்னத்தம்பு குமாரலிங்கம் தலைவராக ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டார்.

மக்கள் மனமும் கோயில் முன்னேற்றத்திலும், தெய்வத்தின் மீதும் இலயிக்கக் கோயிலும் வளர்ச்சி அடையத் தொடங்கியது. விநாயகப்பெருமானின் திருவருள்கூட்ட பழைய கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபங்கள் இடிக்கப்பட்டு வெள்ளைக் கல்லினாற் புதிய கட்டிடம் எழும்பியது. விநாயக பக்தர்களிடம் இளைஞர்கள் முயன்று சேர்த்த பணம் புதிய மூலவரான விநாயகர் சிலை அமைப்பதற்கும் கோயிற் கருவறை, அழகான பண்டிகை, அர்த்தமண்டபம் என்பனகட்டவும் உதவியது. மேலும், திருப்பணிகள் பல பின்வருவோர் உபயங்களாக 1975 இல் நிறைவேறின.

(1) கந்தப்பிள்ளை செல்லப்பாவின் பேரன், கனடா வாழ் நாகரத்தினம் சிவலிங்கம் மகாமண்டபத் திருப்பணிச் செலவை ஏற்றார். கோவில் தனிமையான இடத்தில் அமைந்திருப்பதால்

திருடர் தொல்லை தவிர்க்கும் நோக்கில் மூடுசாந்துக் கட்டிடமாகவும் இரும்புச் சட்டத்தாலும் தகரத்தாலுமான கதவுகளுடனும் பாதுகாப்பாக அமைக்கப்பட்டது.

(2) நிருத்தமண்டபம் தாமோதரம்பிள்ளை ஆறுமுகம் குடும்பத்தினர்

(3) அரசமரம் வரையிலான ஐந்தாம் மண்டபம் தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் குடும்பத்தினர்.

(4) சண்டேஸ்வரர் ஆலயம் திருமதி. சரஸ்வதி சின்னத்தம்பு.

(5) நேர்த்திக் கடனாக வெள்ளி வேலாயுதம் வைத்து முருகன் கோயில் இளையதம்பி ஏழூர்நாயகம் குடும்பத்தினர்.

(6) புத்திரப்பேறுவேண்டி அமைத்த சந்தானகோபாலர் பரிவார ஆசனம் இளையதம்பி கனகநாயகம் மனைவி செல்வரத்தினம்.

(7) சூலம் வைத்துப் பூசிக்கப்பட்ட வைரவர் ஆலயம் விதானை கந்தையா மகன் சுப்பிரமணியம் குடும்பம்.

(8) நொத்தாரிசு பொன்னம்பலம் குடும்பத்தினர் முன்னர் உபகரித்த பெருச்சாளி வாகனம் அவருடைய பேரன் வைத்தியநாதர் சற்குணத்தாற் புதுப்பிக்கப்பெற்றது.

(9) பெருச்சாளி வாகனம் பெரிதாக இருந்தமையால் சிறிய மூஷிக வாகனம் ஒன்றை அமரர் வி. நாகலிங்கம் நினைவாக அவரது மனைவி திருமதி வள்ளியம்மையும் மக்களும்.

(10) பாலியடைப்புத் தம்பியின் உபயமான கண்டாமணிக் கோபுரமும் சாஸ்திர விதிக்கமைய பொதுச் செலவில் புதிதாகக் கட்டப்பட்டு மணியும் ஏற்றப்பட்டது.

சுவாமி வெளிவீதி வலம் வருவதற்கேற்றதாக காணியும் வாங்கி வீதி அகலமாக்கப்பட்டது. கோவில் திருப்பணி யாவும் சிறப்புற முடிந்தன. 1976. 09. 10இல் கீரிமலை நகுலேஸ்வர ஆலய தர்மகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாருமான சிவ ஸ்ரீ குமாரசாமி நகுலேஸ்வரக் குருக்கள் புதிதாகச் செதுக்கப்பட்ட விக்னவிநாயகர் விக்கிரகத்தை பிரதிட்டை செய்து மகாகும்பாபிஷேகமும் மண்டலாபிஷேகமும் சிறப்புற நிறைவேற்றினார். மாதப்பூசை, தினப்பூசையாக உபயகாரர்களால் ஏற்கப்பட்டது. தினப்பூசை உபயகாரரால் ஆலயகுருவுக்குரிய தினச்சம்பளமும் திருவிழா, விசேட

அபிஷேகம் போன்றவற்றுக்காக வேறாக திருவிழா உபயகாரர்களால் உரிய தட்சிணையும் வழங்கப் பெறலாயிற்று. அவ்வழக்கம் இன்றும் தொடர்கிறது. சம்பளம் கால விலைவாசிகளுக்கு ஏற்ப மாற்றியமைப்பதுண்டு.

முன்பு நடந்த ஒருகாலப் பூசையும், குடமுழுக்கின்பின் இருகாலமாக நடைபெறத் தொடங்கியது. வெள்ளிக் கிழமைகளில் மாலை நேரப் பூசையுடன் சில பக்தர்களின் அனுசரணையுடன் பஜனையும் நடைபெறத் தொடங்கியது. மோதகம், அவல், கடலை, பழம் எனப் பஜனை உபயகாரராற் பிரசாதமும் வழங்கப்பெற்றது. பண்ணிசையாளர் சின்னத்துரை அடியார்களையும் பிள்ளைகளையும் சேர்த்து தவறாது வெள்ளிதோறும் பஜனை நிகழ்த்தி வந்தார். மனதை உருக்கும் கார்த்திகேசு மாஸ்ரருடைய பண்ணிசையும் அவரது உருவமும் திருத்தொண்டும் அப்பர் சுவாமிகளைக் கண் முன் நிறுத்தும். காண்டிபன் சிவகுமார் ஒலிபெருக்கிப் பணிப் பொறுப்பேற்றார். ஆலயத்தில் அருட்பாக்கள் முழக்கம் செய்தன. குடமுழுக்கைத் தொடர்ந்து அலங்காரத் திருவிழாவும் ஆண்டு தோறும் சிறப்பாக நடைபெற்று வந்தது. திருவெம்பாவை, நவராத்திரி, சித்திராப்பூரணை, பிள்ளையார் கதை, கஜமுக சங்காரம், சதுர்த்தசி, சங்கட சதுர்த்தசி, ஏகாதசி, பங்குனி உத்தரம், தைப்பூசம், பொங்கல், சித்திரைப் புத்தாண்டு, கந்த சஷ்டி காலத்தில் கந்த புராண சூரபன்மன் வதைப்படலம் படித்துப் பயன் சொல்லல் என்பன சிறப்பு விழாக்களாக நடை பெற்றன. மாவைக் கந்தன் கோயிலுக்குச் செல்ல வசதி வாய்ப்பு இல்லாத அடியார்கள் கந்தசஷ்டி விரதமிருந்து படிப்புக் கேட்டனர்.

இராமச்சந்திர ஐயரின் திடீர்மரணம் காரணமாக அவருடைய மகன் பாலச்சந்திரஐயர் வேதாகம பாடசாலை மாணவனாகப் படித்துக் கொண்டு இருந்தாராயினும் பூசைப் பொறுப்பை ஏற்கவேண்டிய நிலை ஏற்பட்டது. தந்தையைப் போன்றே இவருக்கும் தாயின் வழிகாட்டல் தேவைப்பட்டது. வெகு விரைவாகப் பூசை முறையும் வேதாகமப் பயிற்சியும் பெற்றுப் பாண்டித்தியம் அடைந்தார். மக்கள் மத்தியிலும் நன்மதிப்பைப் பெற்றார். குடும்பஸ்தனாகி குருக்களாக அபிஷேகமும்

செய்யப்பெற்றார். ஆனைமுகன் அருளால் சகல செல்வங்களும் பெற்று வளர்ந்து நிற்கிறார். கோவிலும் வளர்ந்து வருகிறது.

1987.03.20 இல் பாதுகாப்பு அமைப்புகளையும் மீறி, கருவறையில் திருடர் புகுந்து இயந்திரத் தகட்டைத் திருடினர். மீண்டும் விநாயகப் பெருமான் பாலஸ்தாபனம் செய்யப் பெற்றார். தங்க இயந்திரத் தகடு மீண்டும் திருடத்தூண்டும் எனக் கருதி, செப்பு இயந்திரத் தகடு செய்து வைத்து மீளவும் விநாயகர் பிரதிட்டை செய்யப்பெற்றார். நித்திய நைமித்திய பூசைகளும் அலங்காரத் திருவிழாவும் முன்போல நடைபெற்று வந்தன. முருகன் கோவிலில் இருந்த வெள்ளி வேலைத் திருடர் திருடிய காரணத்தாலும் இன்னும் மூர்த்திகரம் மேலோங்க வேண்டும் என்ற நன்னோக்கினாலும் ஏழூர்நாயகம் ஈஸ்வரம் குடும்பத்தினர் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியப் பெருமானது திருவுருவம் பிரதிஷ்டை செய்து, கும்பாபிஷேகம் செய்தனர்.

மீண்டும் 10–12–1989இல் போர்க்காலத்து வெடிச் சத்தங்களுக்கிடையே திருடர்கள் கிழக்கு வாயில் இரும்புக் கதவை நெளித்து உட்புகுந்து இயந்திரத் தகட்டை அகற்றினர். அது செப்புத் தகடாக இருக்கக் கண்டு அதனை விடுத்துச் சென்றனர். பிராயச்சித்த அபிஷேகத்துடன் மீளவும் விநாயகப் பெருமான் பிரதிட்டை செய்யப்பெற்று நித்திய நைமித்திய பூசைகள் நடைபெற்றன. அலங்காரத் திருவிழா உட்பட சகல விழாக்களும் பழமைபோல் ஒழுங்காகச் சிறப்புற நிகழ்ந்துவந்தன. விநாயகப்பெருமானின் திருவருள் கூட்ட அவர் அடியார்களான ஊர்மக்கள் இன்னும் கோயிலைச் சிறக்கச் செய்ய விழைந்தனர்.

### *1990இல் உபயங்கள்*

(1) ஆகம விதிக்கமைய அமைக்க விரும்பிய, ஏழூர் நாயகத்தின் மகள் ஈஸ்வரி குடும்பத்தினர் மேற்கு வீதியில் புதிதாக சந்தானகோபாலர் ஆலயம் அமைத்து அரச மரத்தடியில் ஏழூர் நாயகத்தால் அமைக்கப்பட்ட சந்தான கோபாலரைப் புதுப்பித்து சாஸ்திர விதிக்கு அமையப் பிரதிட்டை செய்தனர்.

(2) ஏழூர்நாயகத்தின் மகன் ஈஸ்வரம் குடும்பத்தினரும் வள்ளி தெய்வானை சமேத முருகன் கோவிலைப் பழைய இடத்திலே ஆகம விதிப்படி நிறுவினர்.

(3) திருமதி தியாகராசா சண்முகேஸ்வரி, தந்தை சுப்பிரமணியம் நிறுவிய வயிரவர் கோவிலை இடம் மாற்றி ஆகம விதிக்கமைவாக மணிக்கோபுரத்துக்கு அயலில் நிறுவினர். சூலத்திற்குப் பதிலாக கருங்கல்லாலான வைரவர் திருவுருவத்தைப் பிரதிட்டை செய்தனர்.

(4) சுப்பிரமணியம் தில்லைநாதன் குடும்பத்தினர் மேற்கு வீதியில் நாகதம்பிரானுக்குப் பரிவாராலயம் கட்டி விக்கிரகத்தையும் பிரதிட்டை செய்வித்தனர்.

(5) பொதுஉபயமாக வடக்குவீதியில் பேய்ச்சி அம்மன் பரிவாராலயம் அமைக்கப்பட்டது.

(7) வி.நாகலிங்கம் குடும்பத்தினர் யாகசாலை அமைத்தனர்.

(8) சிவராசரத்தினம் குடும்பத்தினர் விமானம் அமைந்த அழகிய வசந்தமண்டபம் நிறுவினர்.

(9) நந்தி பலி பீடத்துக்குரிய கட்டிட அமைப்பை வ. தம்பியனும் வேலுப்பிள்ளை இலட்சுமியும் நிறுவினர்.

(10) கொடிக்கம்பப் பிள்ளையார் சின்னத்தம்பு குமாரலிங்கம்

(11) புதிய மணிக் கோபுரம் பொது உபயம்.

(12) புதிய மடப்பள்ளி பொ. இராசேந்திரம் கட்டுவித்தார்.

(13) மடப்பள்ளி அயலில் அறை ஒன்று பொது உபயம்.

(14) க. இரத்தினம், எழுந்தருளி தெற்கு வாயிலில் மக்கள் நின்று கும்பிட வசதியாக ஒரு கொட்டகை அமைத்தார்.

(15) சுற்று மதிலின் ஒரு பகுதியை பொ. தருமலிங்கம் குடும்பத்தினரும் மற்றொருபகுதியை கனகசுந்தரம் முருகதாசும் கட்டுவித்தனர்.

(16) ஊர் செல்வச் செழிப்புடன் பொலிவுற்று விளங்கவேண்டும் என்ற பெரு நோக்குடன் ஊர் மக்கள் ஒன்று சேர்ந்து தென்மேற்குமூலையில் மகாலட்சுமி பரிவாராலயம் நிறுவினர். மகாலட்சுமி விக்கிரகப் பொறுப்பை ஆறுமுகம் இளமுருகன் ஏற்றார்.



பொது
தெற்கு
உப அலுவலகம்
உடுவில்.

அப்போது அவர் சென்னையில் விமானப்பொறியியல் விரிவுரையாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தமையால் இந்தியாவிலே, சிற்பக்கலையிற் சிறந்துவிளங்கும் மகாபலிபுர சிற்பியைக் கொண்டு மகாலட்சுமி சிலையைச் செய்விக்க விழைந்து அச்சிற்பியிடம் ஒப்படைத்திருந்தார். ஆனைவிழுந்தான் கடாட்சத்தால் அவரைப் பேராதனைப் பல்கலைக்கழகம் விரிவுரையாளராக அழைத்தது. இந்துக் கலாச்சார அலுவலகத்திலும் தென்னிந்தியத் தொல் பொருள் திணைக்களத்திலும் உத்தரவு பெற்று, மஹாலட்சுமி விக்கிரகத்துடன் 1990ஆம் ஆண்டு கொழும்பு வந்தார். ஆயினும், தமிழீழப் போர்காரணமாக யாழ்ப்பாணத்துக்கு விக்கிரகத்தைக் கொண்டுவர முடியாதநிலை ஏற்படவே, பம்பலப்பிட்டிக் கதிரேசன் ஆலயத்தில் ஒன்பது ஆண்டு வைத்திருக்க வேண்டியிருந்தது. இந்நிலையில் சிலையில் லட்சுமீகரம் மிளிர்வதனாற் கவரப்பெற்ற அக்கோயில் நிர்வாகிகளான செட்டிமார் தங்கள் கோயிலிற் பிரதிட்டைசெய்ய விரும்பி தம்மிடந் தந்துவிடும்படியும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பக் கூடிய காலம் வரும்போது தாம் வேறொரு சிலை செய்வித்துத் தருவதாகவும் பலமுறை வற்புறுத்தினர். விக்கிரகத்தை வேறு இடத்துக்கு மாற்ற எண்ணிக் கேட்டபோதும் கையளிக்காது, சாக்குப்போக்குச் சொல்லி அலைக்கழித்தனர். ஆனைவிழுந்தானின் அருளாலும் பெரியார் பலரின் உதவியாலும், குறிப்பாக, முன்னாள் தினகரன் ஆசிரியர் சிவகுருநாதனின் செல்வாக்கினாலும், அவ்வாலய நிர்வாகிகளின் வாதங்களையும் நெருக்குதல்களையும் சமாளித்து, மஹாலட்சுமி சிலையை ஆனைவிழுந்தானுக்கு அனுப்ப முடிந்தது.

ஈழப்போர் ஒருபுறம் நடந்துகொண்டிருக்க ஆனைவிழுந்தான் திருப்பணிகளும் மெல்ல மெல்ல நடந்துகொண்டிருந்தன. திருப்பணி வேலைகள் நிறைவேற, கோவிலும் புதுப்பொலிவு பெற்றது. முன்னரே இருந்த மின்வசதிகள் புதுப்பிக்கப்பட்டு விரிவாக்கம் செய்யப்பட்டன. மின் இணைப்பு வேலைகளை சி. கிருபாகரன் சிரமதானப் பணியாகச் செய்துமுடித்தார். அவ்வூர் இளைஞர்கள் அனைவரும் சிரமதான

முறையில் உள்வீதி வெளிவீதி என, கோவில் காணி முழுவதையும் புல், பற்றைகள் வெட்டிச் சுத்தம் செய்தனர்.

கும்பாபிஷேகம் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழ்த்தப் படவேண்டும் என்பது விதி. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு மேலானால், தெய்வசக்தியானது கர்ப்பகிருகத்தின் மேல்நிலைக்கும், அடுத்த பன்னிரண்டு ஆண்டுகளில் அருள் நிலையானது கோபுர உச்சிக்கும் சென்றுவிடும். எனவே கும்பாபிஷேகம் இருபத்து நான்கு ஆண்டுகளிலாவது செய்யவேண்டும் என்பது சாஸ்திரவிதி என்பர் சைவ அறிஞர். இதனையுங் கருத்திற் கொண்டு 1992–06–27 ஆந் திகதி கும்பாபிஷேகத்துக்கென நாளும் குறித்தாயிற்று. சி. சோதிநாகரத்தினம் குடும்பம் பிள்ளையார் கவசம், கலசங்கள், திருவாசிகள் என்பவற்றை வெள்ளிமுலாம் பூசுவதற்கு தகுதி வாய்ந்தவரிடம் ஒப்படைத்தும்விட்டனர். குடமுழுக்குச் செய்யத் தேவையான துணி மணிகள், பட்டுகள் கொள்வனவுசெய்து மகாமண்டபத்துள் குவித்தாயிற்று.

கும்பாபிஷேகம் செய்வதற்குரிய ஏற்பாடுகள் நிறைவெய்தும் நிலையில் 1992–06–11 இல் அயற்கிராமமாகிய கருகம்பனையை அரசபடைகள் கைப்பற்றியது. வெடி குண்டுகள் பறந்துவரலாயின. இளவாலை மக்களுக்கு வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த நிலை ஏற்பட்டது. இராணுவம் முன்னேறுவதைக் கண்டு திகைத்த இளவாலை மக்களும் தெற்கு நோக்கி இடம்பெயரத் தொடங்கினர். இலங்கை விமானப் படையினர் கோவிலையும் மதியாது வீசிய குண்டொன்று மடப்பள்ளி அயலில் வீழ்ந்து வெடித்தது. மடப்பள்ளி, அதன் அயலறை, கிழக்குப் பக்கச் சுற்றுமதில், மணிக்கோபுரம் என்பவற்றைச் சேதப்படுத்தியது. ஊர் முழுக்க ஓங்கார நாதம் பேசிநிற்கும் அசையா மணியிலும் ஒரு துளையிட்டுவிட்டது. அம்மணி ஓசையிலிருந்து எழும் ஓங்கார ஒலி ஊரின் உயிரோட்டம். திரும்ப இந்த ஓங்கார நாதம் கிடைக்குமா என்று மக்கள் ஏக்கமுற்றனர். அதன் சேதம் ஊருக்கே ஏற்பட்ட பெரும் விபத்தாக இழப்பாகக் கருதினர். திருக்கோயிலின்

தென்கிழக்குப் பகுதி சேதமடைந்த போதிலும் இரண்டு மாதகாலம் இடப்பெயர்வினால் ஊர்மக்கள் நடமாட்டம் இல்லாத பயங்கரச் சூழ்நிலையிலும் கோயில் பூசையின்றிப் பூட்டிக்கிடக்காமல் 1992-08 – 20ஆந் தேதிவரையும் விநாயகப் பெருமானுக்கு பாலா ஐயர் ஒருநேரப் பூசை செய்துவந்தார். இச்செயல் அவர் விநாயகப் பெருமானில் கொண்டிருந்த பக்தியையும் நம்பிக்கையையும் புலப்படுத்திற்று. மக்கள் சிலநாள் முன்னரே இடம்பெயர்ந்து சென்றிருந்தாலும், வீடு, வளவுகளைப் பார்ப்பதற்கும் இன்றியமையாத பொருட்களை எடுத்துக்கொண்டு செல்வதற்கும் வந்து செல்வர். அவர்கள் பாலாஐயர் பூசைசெய்யும் நேரமானால் பூசை காணத் தவறார்.


1992-08-20 இளவாலைக்குப் பேரிடி வீழ்ந்த நாள். இளவாலை முழுவதும் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டது. ஊரவர் அனைவரும் உடலில் உயிரும் கையில் உடைமை சிலவுங் கொண்டு தெற்கு நோக்கி ஓடித்தப்பிய நாள். ஆனைவிழுந்தான் துணை நிற்க, பாலா ஐயர் ஐம்பொன் எழுந்தருளி விநாயக விக்கிரகத்தை தான் இடம்பெயர்ந்து வாழ்ந்த இடத்திற் கொண்டுபோய் வைத்திருந்த படியால் இராணுவத்தினரின் கையில் அகப்படாது தப்பியது. அல்லாவிடில், கோவிலை உடைத்துச் சூறையாடும் இராணுவத்தினர் ஐம்பொன் விக்கிரகத்தை விட்டுவைப்பார்களா? மூலவர் கருங்கல்லால் ஆனபடியால் அவரை விட்டுவைத்தனர். பூசை செய்பவரும் பூசிப்போரும் இன்றி, மூலவர் அரசபடையின் பீரங்கி ஓசையே மணி ஓசையாக, குண்டு மாரி பூமாரியாக, அமைந்த கடும் போர்ச் சூழலில் ஊரைக் காத்திருந்தார்.

### *மீளக் குடியேறியபின்*

சில மாதங்கள் செல்ல, மக்கள் 1997இல் மீளக்குடியேறத் தொடங்கினர். முதலில் மீண்டு வந்தோர் கோயிலிற் பொங்கல், கூட்டு வழிபாடு முதலான முறைகளில் வழிபட்டு வந்தனர். படிப் படியாக மக்கள்வந்து குடியேறியதும் 1997.12.14 ஞாயிற்றுக் கிழமை சிவ ஸ்ரீ பாலசந்திரக் குருக்களால் பிராயச்சித்த அபிடேகம் செய்யப்பெற்றுப் பூசை நடைபெறத் தொடங்கியது. ஆலய பூசகராக

மாவிட்டபுர ஆதீனத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ து. குமாரசாமி சர்மா பணிபுரிந்தார். 1999ஆம் ஆண்டு சித்திராப் பூரணை அன்று கொடித்தம்ப மண்டபத்தில் அமைக்கப்பெற்ற தற்காலிக கொட்டகையில் மூலவரையும் லிங்கப் பிள்ளையாரையும் சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் பாலஸ்தாபனம் செய்துவைத்தார். இவ்விக்கிரகங்கள் இடப்பெயர்வின் முன் மகா மண்டபத்தில் பாலஸ்தாபனம் செய்யப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1999. 06. 24. அன்று சுவாதி நட்சத்திர நல்லோரையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இடம் பெயர்ந்திருந்த காலத்திற் குருக்களாக அபிஷேகம் செய்யப்பெற்றிருந்த சிவஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாகவும், சிவ ஸ்ரீ து. குமாரசாமிசர்மா ஆலய பூசகராகவும் இருந்து கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நிறைவேற்றினர். கும்பாபிஷேகத்துக்கு நாள் குறித்தமையறிந்து, விக்கிரகத்தை காங்கேசன்துறைக்கு கப்பலில் அனுப்பி வைத்தார் இளமுருகன். குறித்த கும்பாபிஷேக நாளன்று இலட்சுமி சிலை வந்து சேரவில்லை. எனவே, இலட்சுமிக்கென ஏலவே ஊரவர்களால் கட்டப்பெற்றிருந்த பரிவாரக் கோயிலில் 1999.09.12 அதிகாலை அத்த நட்சத்திர நல்லோரையில் பிரதிட்டை செய்து தனித்தொரு கும்பாபிஷேகம் நிகழ்த்த வேண்டியதாயிற்று.




ஆனைவிழுந்தான் இன்று யானை, மயில், இடபம் என, பல வாகனங்களிற் பவனிவந்து காட்சிதருகிறார். நாகேந்திரன் விஜயேந்திரன் மகனின் நேர்கடனாகச் செய்து வைத்த நாக வாகனத்தில் 2006 ஆடி நாகசதுர்த்தி முதல், பிள்ளையார் வலம் வருகிறார். வேட்டைத் திருவிழாவின் போது செல்லப்பா சபாரத்தினம் உபயமாகிய குதிரை வாகனத்தில் வேட்டைக்குச் செல்கிறார்.

2008 ஆவணிச்சதுர்த்தி விழாதொடக்கம் ஆதிலிங்கப் பிள்ளையாரது பக்த குடும்பம் ஒன்றினால் உபகரிக்கப்பெற்ற மஞ்சத்தில் சதுர்த்தி அன்று ஆரோகணித்து வீதிவலம் வருகின்றார். இவைகள் வேறு கோவில்களில் இரவல் வாங்கிய நிலை இன்று மாறிவிட்டது.

சுப்பிரமணியம் ஜெகதீஸன் செய்வித்து உதவிய எவர் சில்வர்ப் பிள்ளையாரங்கி இடப்பெயர்வு காலத்தில் தவறிவிட அதை ஈடு செய்தற் பொருட்டு சங்கரப்பிள்ளை சந்தானம் சிதம்பரநாதன் ஒரு புதிய வெள்ளி அங்கி உபயஞ் செய்தார். பல்லாண்டு காலமாகச் சிறப்பாகக் கொண்டாடிவரும் பிள்ளையார் பெருங்கதை இறுதி நாள் (21ஆம் நாள்) அன்று நடைபெறும் கஜமுக சங்கார விழாவுக்கு நித்தியானந்தன் மயூரன் கஜமுகன் உபகரித்துள்ளார். மின்சார வேலைத் திருப்பணிப் பொறுப்பு அனைத்துக்கும் வேலும்மயிலும் சிவலிங்கம் தன்னை அர்ப்பணித்து, தொடர்ந்து அப்பணியை ஆற்றி வருகிறார். ஆலயம் ஒளி மயமாகக் காட்சி தருகிறது. இவ்வாறாக இளவாலை மக்களின் கனவுகளும் சிறுகச் சிறுக நனவாகத் தொடங்கின. மக்களின் மனம் கோயிலில் நன்கு லயிக்கத் தொடங்கியது. மகோற்சவம் காணவிழைந்தனர். கட்டிடங்கள் கட்டிக் கோவிலைப் பெருப்பிக்க முன்வந்தனர். அயரா முயற்சியால் கொடியேற்றித் தேரோடும் கோயிலாக்கி விட்டனர்.

உபாத்தியாயர் கந்தப்பிள்ளையின் பேரன் சின்னத்தம்பு குமாரலிங்கமும் விதானை கந்தையாவின் பேரன் சுப்பிரமணியம் சண்முகலிங்கமும் கொடிக்கம்பம் அமைப்பதற்கு முன்வந்தனர். கைதேர்ந்த புகழ் பெற்ற சிற்பாசாரியாரான கொழும்பு சற்குருநாதனைக்கொண்டு ஆகம விதிக்கமைவாகச் செய்வித்து உபகரித்தனர். நாகலிங்கம் குடும்பத்தினர் தேர்செய்யும் பொறுப்பேற்றனர். சிற்பக்கலை வல்லுனரான திருநெல்வேலி செ. பாலச்சந்திரன் சிற்பாசாரியைக் கொண்டு சாஸ்திர விதிகளுக்கமைய அழகிய சிற்பக்கலை மிளிர தெய்வீக அம்சங்கள் பொருந்திய சித்திரத்தேர் ஒன்றைச் செய்வித்தனர். குமாரலிங்கம் முன்னர் செய்து வைத்த கொடிக்கம்பப் பிள்ளையார்

(மூலாதாரப்பிள்ளையார்) திருட்டுப் போனதால் புதியதொரு மூலாதாரப் பிள்ளையாரை உபயஞ் செய்தனர். திருமதி சின்னத்தம்பு சரஸ்வதி, சண்டேஸ்வரர் உற்சவ மூர்த்தி உருவை உபயஞ் செய்தார். இவற்றின் பெறுபேறாக இதுவரை காலமும் அலங்காரத் திருவிழாவாக நடைபெற்றுவந்த கோயில், முழுமையான ஆகம விதிக்கமைய மகோற்சவ விழாக் காணும் கோவிலாக உயர்வடைந்திருக்கின்றது. ஆண்டுதோறும் பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறத்தக்கதாக 2000.03.08 புதன்கிழமை திருவருள்கூட்ட ஆலயப் பூசகருங் குருக்களுமாகிய சிவாகம தத்துவநிதி, சிவாகம வித்வஜோதி சிவஸ்ரீ இராம.பாலச்சந்திரக் குருக்கள் முதலாங் கொடியேற்றத்தை



கொடியேற்றம் 2000



தேர் வீதி வலம் வருதல் 2000

நிகழ்த்தினார். தேர் வெள்ளோட்டம் பக்தர்கள் வெள்ளம் புடைசூழ 2000.03.15 புதன்கிழமை நிகழ்ந்தது. அவ்வாண்டு முதல் பூங்காவனத்தை அடுத்துவரும் வெள்ளி அல்லது செவ்வாயில் வைரவர்மடை நிகழும். இங்ஙனம் பன்னிரண்டு நாள் மகோற்சவம் நடைபெற்று வரலாயிற்று.

மகோற்சவங்கள் இறைவனின் ஐந்தொழிலையும் குறிப்பனவாகும். கொடியேற்றத் திருவிழா படைத்தலையும், வாகனத்திருவிழா காத்தலையும், தேர்த்திருவிழா அழித்தலையும், தீர்த்தத் திருவிழா அருளலையும், மௌனத் திருவிழா மறைத்தலையும் தத்துவமாகக் குறிக்கும் என்பர். கொடிமரம் சிவத்தையும் கொடிக் கயிறு திருவருட் சக்தியையும் முகப்பில் நந்தி எழுதப்பெற்ற கொடித்துணி ஆன்மாவையும் மஞ்சட்கயிறு திரோதான சக்தியையும் தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்குமென ஆகமங்களில் விளக்கப் பெற்றுள்ளன.

மகோற்சவத்துக்கு முன் கிராம சாந்தி செய்யப்படும். அது கிராமத்தைக் காப்பதற்காகச் செய்யப்படும் சாந்தியாகும். கிராம அதிபதியாகிய அஷ்ட வைரவரைப் பூசித்து அக்கிராமத்திலுள்ள கெட்ட தேவதைகளைப் போக்குவதாகும். மகோற்சவ சாந்திகளைத் தொடர்ந்து, கொடியேற்றம் வேட்டைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா, சங்காபிஷேகம்- மகேஸ்வர பூசை, பூங்காவனம் என்பன விசேஷ விழாக்களாக விளங்கப் பன்னிரண்டு நாட்கள் மகோற்சவ விழாக்கள் ஆண்டுதோறும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

கொடியேற்றம் முதல் கொடி இறக்கும் வரை அடியார்கள் சிலர் விரதம் இருப்பர். சிலர் அங்கப் பிரதட்சணம், கர்ப்பூரச் சட்டி ஏந்துதல், காவடி எடுத்தல் முதலான நேர்த்திக் கடன்களையும் நிறைவேற்றுவர். தேர்த்திருவிழா அன்று ஆனைவிழுந்தான் புஷ்பக விமானம் போன்ற அழகிய தேரில் எழுந்தருளி மேள தாளத்துடன் வீதி வலம் வருங் காட்சியை ஊரவரும் அயலவரும் கண்டு களிப்பர்.

நேர்த்திக் கடன் செலுத்துவோரும் பக்தர்களும் எரிக்கும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அவன் சென்ற திருமண் மீது ஆண்கள் அங்கப் பிரதட்சணமும், பெண்கள் அடிஅழித்தலும் செய்வர். ஒரு புறம் அரோகரா ஓசை விண் நிறைந்து நிற்க, பக்தி வெள்ளத்தில் மிதந்து கற்பூரச் சட்டி சுவாலை விட்டு எரிய எடுத்து வருவோரும் மறுபுறம் நெஞ்சை நெகிழ்க்கும் பஜனை பாடிவரும் பக்தர்களும் பரவச நிலையை ஏற்படுத்திவிடுவர். வேட்டைத் திருவிழா அன்று விநாயகப் பெருமான் குதிரை வாகனத்தில் பக்தர்கள் புடைசூழப் புறப்பட்டு, வலமாக சோடக்கனைச் சுற்றி வந்து, ஒல்லுடை வயிரவர் கோயிலில் இளைப்பாறித் தனது இருப்பிடம் வந்து சேருவார். தீர்த்தவிழாவின் அடுத்தநாள் பூங்காவனத்தன்று (13ஆம் நாள்) பொது உபயமாக மாகேசுர பூசை நடைபெறும். சப்பறத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா அன்று உபயகாரர்களது உபயமாக மகேசுர பூசை நடைபெறும். வயிரவர் மடையுடன் மகோற்சவ விழா பூர்த்தியடையும்.

2009ம் ஆண்டிலிருந்து பஞ்சமுக விநாயகர் சித்திரத் தேரிலும் வள்ளி தேவ சேனா முத்துக்குமார சுவாமிகள் அழகிய கட்டுத் தேரிலும் சண்டேஸ்வரர் மஞ்சத்திலும் வீதி உலா வருகிறார்கள்.

### *மகோற்சவ உபயகாரர்கள்*

1ம் திருவிழா – கொடியேற்றம் – சுப்பிரமணியம் சண்முகலிங்கம, சின்னத்தம்பு குமாரலிங்கம்
2ம் திருவிழா – பொன்னம்பலம் இராசேந்திரம்
3ம் திருவிழா – கனகசுந்தரம் முருகதாசன்
4ம் திருவிழா – திருமதி ஶ்ரீசண்முகா தயாளினி
5ம் திருவிழா – சுப்பிரமணியம் சண்முகலிங்கம், சின்னத்தம்பு குமாரலிங்கம்
6ம் திருவிழா – சின்னத்தம்பு கணேசலிங்கம்
7ம் திருவிழா – தம்பிப்பிள்ளை குகநாதன்



பொது ... தெற்கு ... அலுவலகம் உடுவில்.

8ம் திருவிழா – சுப்பிரமணியம் ஜெகதீஸன்
9ம் திருவிழா – வேட்டைத் திருவிழா தாமோதரம்பிள்ளை ஆறுமுகம்
10ம் திருவிழா – சப்பறத்திருவிழா திருமதி ஸ்ரீவள்ளிநாயகி ஈஸ்வரம்
11ம் திருவிழா – தேர்த் திருவிழா திருமதி வள்ளியம்மை நாகலிங்கம் குடும்பத்தினர்
12ம் திருவிழா – தீர்த்தத் திருவிழா வேலும்மயிலும் சண்முகநாதன் வேலும்மயிலும் சிவலிங்கம்
பூங்காவனம் – பரமசாமி சிவசுப்பிரமணியம்
வைரவர் மடை – திருநாவுக்கரசு நாகேஸ்வரன்

## *விசேட விழாக்கள்*

- ✦ சித்திரை மாதம் பூரணை அன்று அபிடேகம், சித்திர புத்திரனார் கதை படிப்பு,சித்திரைக் கஞ்சி, மகேசுர பூசை நடைபெறும்
- ✦ ஆனி மாதம் கும்பாபிஷேக தினம்
- ✦ ஆவணி மாதம் வரலட்சுமி நோன்பு தினம். பரிவார தெய்வமாக மஹாலட்சுமி ஸ்தாபித்த பின்னர் வரலட்சுமி நோன்பு தினத்தன்று திருவிளக்குப் பூசை வெகுசிறப்பாக நிகழ்ந்து வருகிறது. திருவிளக்குப் பூசையில் பங்கு பற்றுவோர் ஒருசிலராய் இருப்பினும் பூசையில் நூல் எடுப்போர் நூற்றுக் கணக்கானோர் எனலாம்.
- ✦ புரட்டாதி மாதம் நவராத்திரி விழா
- ✦ ஐப்பசி மாதம் கந்தசஷ்டி விரத உற்சவம், கந்தபுராணம் வாசித்துப் பயன் சொல்லல், வள்ளி தேவசேனா முத்துக்குமார சுவாமிகள் வெளிவீதி உலா வருதல். சூரசங்காரம், திருக்கல்யாண உற்சவத்தன்று மகேசுர பூசை நடைபெறும்.
- ✦ கார்த்திகை மாதம், விநாயக விரத உற்சவம் 21 நாள் நடைபெறும்.லட்சார்ச்சனையுடன் ஆரம்பமாகும், பிள்ளையார் கதை படிததல், இருபதாம் நாள் கஜமுக சங்காரம், அடுத்த நாள் காலை லட்சார்ச்சனையுடன் பூர்த்தியாகும். மாலை விநாயகசஷ்டி உற்சவம்

- மார்கழி திருவெம்பாவை உற்சவம், பத்து நாட்கள் நடைபெறும் சதுர்த்தி உற்சவம், பன்னிரண்டு மாத சதுர்த்தியும் கொண்டாடப்படும். அபிடேகம் நடை பெற்று, விநாயகப் பெருமான் வெளிவீதி உலா வருவார். வெள்ளிக் கிழமை தோறும் பொங்கலும் பஜனை வழிபாடும் நடைபெறும்.

திருமகள் திருவுடன் பொலிய வேண்டும் என அவாவி தங்கத்தாலான ஆரம் ஒன்றை நகநந்தினி சங்கரப்பிள்ளை உபயம்செய்துள்ளார். அது மட்டுமன்றி மலர்மாலை தொடுத்து மகாலட்சுமிக்கும் மூலவருக்கும் நாள்தோறும் கொடுப்பதைத் தன்கடனாகக் கொண்டுள்ளார். வேலும்மயிலும் சண்முகநாதனும் திருமதி யோகமதி (கிச்சி)றாதாகிருஷ்ணனும், அப்புத்துரையும் (மயிலிட்டி) உற்சவ மூர்த்தியை அலங்கரித்து அழகு காணும் விருப்புடன் தங்கத்தாலான மாலை ஒவ்வொன்றை அன்பளிப்புச் செய்துள்ளனர். அருட்கவி திருவிநாசித்தம்பி அவர்கள் ஆனைவிழுந்தானின் அருள் வாக்கால் அவன்மேல் பக்திச்சுவை மிகச்சொட்டும் ஊஞ்சற் பாட்டுப் பாடி அர்ப்பணித்துள்ளார். உற்சவகாலங்களில் அப்பாடல் அர்ச்சனையாகி அடியார்களைப் பரவசப்படுத்துகிறது. கோயில் சிறக்க ஊரும் சிறந்து நிற்கின்றது. யாவும் அவன் செயலேயெனத் துணிவோமாக.

1997 இல் மீளக் குடியேறியபின் மக்களின் மனம் ஆலயத்தில் லயிக்கத் தொடங்கியது. அதன் பிரதிபலிப்பாக 1998 இன் பின்னர் ஆலயத்தில் பல கட்டிடங்கள் எழும்பத் தொடங்கின.

### *ஊபயங்கள் 1998 இலும் பின்னரும்*

(1) ஆலயக் குருக்களான பாலசந்திரக்குருக்களின் வேண்டு கோளுக்கு இணங்க, அமரர் நாகநாதர் செல்லப்பாவினால் உபயஞ் செய்யப்பட்டு, ஊனப்பட்ட பிள்ளையாரை அவர் பேரனான பாலசுப்பிரமணியம் தர்மபாலா திருத்துவித்துத் தலவிருட்சமான அரசமரத்தைச் சுற்றிவர அழகிய மேடை அமைத்து அதன் முன்புறத்தில் பிரதிஷ்டை செய்வித்துள்ளார்.

(2) புதிய மணிக் கோபுரம் – பொது உபயம்
(3) குருக்கள் அறை – சுப்பிரமணியம் சண்முகலிங்கம் .
(4) களஞ்சிய அறை – இராசா இரவீந்திரன்.
(5) வாகன சாலை – டாக்டர் வயித்தியநாதன் சற்குணநாயகம்.
(6) தேர்க் கொட்டகை திருமதி நாகலிங்கம் வள்ளியம்மை.
(7) சகடைக் கொட்டகை புனரமைப்பு – சின்னத்தம்பியார் (சின்னத்துரை) நாகேந்திரம்
(8) பொங்கல் மண்டபம் – நாகேந்திரம் இரவீந்திரன் .
(9) மலசலகூடம் – டாக்டர் சிவராசரத்தினம் மோகன் .
(10) நீரிறைக்கும் இயந்திரமும் நீர்த் தாங்கியும் – சங்கரப்பிள்ளை மாஸ்ரர் குடும்பத்தினர்
(11) வசந்த மண்டபம் – முருகையா. சிவராசரத்தினம்
(12) தலவிருட்சத்தைச் சுற்றிய கட்டிடஅமைப்பு– பாலசுப்பிரமணியம் தர்மபாலா .
(13) வாயில் அலங்காரவளைவு – அமரர் தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் குடும்பம் .
(14) உள்வீதிக்கொட்டகை– வடக்கு முதலாம் வெளி – அமரர் கந்தப்பிள்ளை சின்னத்தம்பு குடும்பம்.
(15) உள்வீதிக் கொட்டகை – வடக்கு இரண்டாம் வெளி – டாக்டர் சிவஞானவேல் குடும்பம்
(16) உள்வீதிக் கொட்டகை–வடக்கு மூன்றாம் நாலாம் வெளி – இராசர் இராமச்சந்திரன் .
(17) உள்வீதிக் கொட்டகை– தெற்கு முதலாம் இரண்டாம் வெளி – அமரர் தாமோதரம்பிள்ளை கனகசுந்தரம் நினைவாக பிள்ளைகள்.
(18) உள்வீதிக் கொட்டகை – தெற்கு முன்றும் நாலாம்வெளி– அமரர் கந்தர் இளையவரின் நினைவாகப் பிள்ளைகள் – கருணாகரன், பிரபாகரன், திருமதி பிரேமா கைலாயநாதன்
(19) உள்வீதிக் கொட்டகை – தெற்கு ஐந்தாம் ஆறாம்வெளி, இலட்சுமி பரிவாரக் கோயில் வடக்கே திரும்பும் வரை– ஆறுமுகம் இளமுருகனின் நினைவாகத் தம்பி ஆ. இளங்கோ.

(20) உள்வீதிக் கொட்டகை – கிழக்கு வெளி – கனகசுந்தரம் முருகதாஸ் குடும்பத்தினர்
(21) உள்வீதிக் கொட்டகை மேற்கு வெளி – சந்தான கோபாலர் பரிவாரக் கோயில், நாகதம்பிரான் பரிவாரக் கோயில்மேலாக – நாகலிங்கம் மகாலிங்கம்
(22) உள்வீதிக் கொட்டகை தென்மேற்கு மூலை வெளி – முருகன் கோயில் மேலாக – பொது உபயம்
(23) அடியார்கள் கால் கை கழுவுவதற்கென கோயில் வாசலில் அப்புத்துரை வேதநாயகியால் (இராணி) கட்டப்பெற்ற தொட்டி ஒன்றில் நீர்நிரப்பி வைப்பது வழக்கத்தில் இருந்தது. அச்சிரமந் தவிர்ப்பதற்கான நல்ல எண்ணத்துடன் கோவில் முன்புறத்தருகில் ஒரு குழாய்க்கிணறு, தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபரின் உதவியில் 1999இல் தோண்டப் பெற்றிருக்கிறது.

காத்தல் தொழிலைக் குறிப்பது வாகனத் திருவிழா என உணர்ந்து அவ்விழா சிறப்புற அமைய அடியார்களால் உவந்து உபகரிக்கப்பட்ட அழகிய வாகனங்கள்.

(1) பெருச்சாளி வாகனம் – அமரர் நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலம்
(2) எலி வாகனம் – அமரர் நாகலிங்கம் குடும்பத்தினர்
(3) பத்ம பீடம் – சங்கரப்பிள்ளை நகநந்தினி
(4) குதிரை வாகனம் – செல்லப்பா சபாரத்தினம்
(5) யானை வாகனம் – சங்கரப்பிள்ளை குடும்பத்தினர்
(6) நாக வாகனம் – நாகேந்திரன் விஜயேந்திரன்
(7) மயில் வாகனம் – திருமதி ஸ்ரீ வள்ளிநாயகி ஈஸ்வரம்
(8) இடபம் – போஜன் உல்லாசன்

*உற்சவங்களுடன் தொடர்பான உபயங்கள் சில*

(1) கொடிக்கம்பம் – சுப்பிரமணியம் சண்முகலிங்கமும் சின்னத்தம்பு குமாரலிங்கமும்

(2) தேர், தேர்ப் பீடம், தேர் முட்டி – நாகலிங்கம் குடும்பத்தினர். நாகலிங்கம் மகாலிங்கம் தேர் முட்டி கட்டுவதற்காக மூன்று பரப்புக் காணியை வாங்கி விஸ்தரித்துள்ளார்.

(3) சகடை – திருமதி ஸ்ரீவள்ளிநாயகி ஈஸ்வரம்

(4) மஞ்சம் – லிங்கப்பிள்ளையார் பக்தர் குடும்பம்

(5) புதிய மூலாதாரப்பிள்ளையார் – குமாரலிங்கம்

(6) சண்டேஸ்வர உற்சவ மூர்த்தி– திருமதி சின்னத்தம்பு சரஸ்வதி

(7) புதிய கஜமுகாசுரன் – கருகம்பனை நித்தியானந்தன் மயூரன்.

(8) பஞ்ச முக விநாயகர் – சிவ ஸ்ரீ இராம. பாலச்சந்திரக் குருக்கள்

(9) வள்ளி தேவசேனை பாக முத்துக்குமாரசுவாமி– திருமதி ஸ்ரீ வள்ளிநாயகி (ராதா) ஈஸ்வரம்

இவ்வாலயத் திருப்பணிக்கு உதவி புரிந்தவர்களின் விபரம் முடிந்த அளவில் முயன்று, பலரிடம் விசாரித்தும், நான் அறிந்தவற்றையும் என்னால் அறியமுடிந்த விபரங்களையும் தந்துள்ளேன். ஏதாவது இங்கு தவற விடப்பட்டிருப்பின் தயவு செய்து மன்னித்து அவற்றைச் சிவபுண்ணியமாகவே கருத்தில் கொள்ளுங்கள். இன்னும் தவறை, தவற விட்டவை இருப்பின் அடுத்த வெளியீட்டில் அவற்றை நிவிர்த்தி செய்ய முடியும்.

ஆலயத் திருப்பணிகள் செய்வதுடன் நமது சமயப் பணி பூர்த்தி ஆகாது. அவற்றைப் பேணுவதும் முக்கிய கடனாம். ஆலயங்கள் மக்கள் வழிபாட்டாலும், முறையாகச் செய்யப்படும் பூசனைகளாலுமே சக்தி உள்ள இறை நிலையங்களாகப் பொலிவுடன் விளங்குகின்றன. ஆகவே ஆலயங்கள் தூய்மையுடன் பேணப்பட வேண்டும். தூய்மையற்ற திருக்கோயில்களில் இறையாற்றல் இருக்காது. அப்பர் பெருமான் திருக்கோயில்களின் தூய்மையையும் வீதிவலம்வரும் மக்கள் இடர்ப்பாட்டையும் கருத்திற் கொண்டே உழவாரத் தொண்டை மேற்கொண்டார். பிரகாரங்களில் உள்ள புல், பூண்டுகளைச் செருக்கினார். சமய குரவர் நால்வரும் இறை


பணி செய்து முத்திவழிக்கு நம்மை வழிப்படுத்திப் போந்துள்ளனர். ஆகவே, நாமும் அவர்கள் அடியொற்றி ஆலயத் திருப்பணிகளையும் ஆலயப் பாதுகாப்புப் பணிகளையும் தங்கள் பெருமை, சிறுமை பாராது செய்யவேண்டும். கோயிலை ஸ்தாபிப்பதுடன் நின்றுவிடுவ திற்பயனில்லை. அதைப் பாதுகாத்துப் புனிதத் தன்மை உடையதாக, கண்டதும் கையெடுத்து வணங்கக் கூடியதாக வைத்திருத்தல் இன்றி யமையாததாகும். எனவே, திருக்கோயிற் சீரிய தொண்டு களைச் செய்ய இளைஞர்கள் ஆர்வத்துடன் முன்வர வேண்டும்.

பொது நூலகம்
வலி. தெற்கு உடுவில்
வரவுப் பதிவு எண் D. 692
வகுப்பு எண் 200



பொது நூலகம்
வலி தெற்கு பிரதேச சபை
உடுவில்.


# மூலவர் இருவரும் பரிவாரங்களும்



மஹா லட்சுமி



சந்தான கோபாலர்




நாக தம்பிரான்



வள்ளி முருகன் தேவயானை



ஸ்ரீ விக்ன விநாயகர்



லிங்கப்பிள்ளையார்



சண்டேஸ்வரர்





பேய்ச்சியம்மன்



வைரவர்

# எழுந்தருளும் மூவர்









வேட்டைத் திருவிழா 2010



சப்பறத் திருவிழா 2010



பஞ்சமுக விநாயகர்,முருகன்
சண்டேசர் தேர் உலா 2010



தீர்த்தத் திருவிழா 2010

# பத்தொன்பதாம் நூற்றாண்டிலிருந்து பூசகர்களும், அர்ச்சகர்களும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இருந்து, கீழே முதலிற் குறிப்பிட்ட மூவரும் பூசித்தவர்கள் அடுத்த எண்மரும் அர்ச்சகர்கள்.

1. திரு நன்னிக்குட்டியர்
2. திரு பரிகாரி மூத்ததம்பி
3. திரு தம்பர் கந்தப்பிள்ளை உபாத்தியாயர்
4. வீர சைவர் திரு வயிரவி வேலுப்பிள்ளை
5. சிவ ஸ்ரீ நடராசா ஐயர்
6. சிவ ஸ்ரீ விஷ்வநாத சர்மா
7. சிவ ஸ்ரீ தாணுஜயர்
8. சிவஸ்ரீ இராமச்சந்திர ஐயர்
9. சிவ ஸ்ரீபாலசந்திர சர்மா
10. சிவ ஸ்ரீ து . குமாரசாமி சர்மா (மெய்ஞ்ஞானி)
11. சிவஸ்ரீ பாலசந்திரக்குருக்கள். (இப்பொழுதும் பூசகராக இருப்பவர்)

பெரு நெறியான் பிரணவம் ஓர்ந்து
குரு நெறியாம் உரை கூடி நால் வேதத்
திரு நெறியான கிரியை இருந்து
சொரூபம் தானோர் துகளில் பார்ப்பாரே

(திருமூலர்)

# திருக்கோயிலுக்கு உரித்தான காணிகளும் உபகரித்தோரும்

### *1. திருக்கோயில் அமைந்திருக்கும் காணி*

ஆனைவிழுந்தான்விக்னவிநாயகர் ஆலயம் அமைந்திருக்கும் காணி மயிலங்கூடலைச் சேர்ந்த வேலுப்பிள்ளைவயிரவப்பிள்ளை என்பவருக்குச் சொந்தமாக இருந்தது. அவர் தமது காணியை விற்க நேர்ந்தபோது ஆலயம் அமைந்திருந்த பகுதியை அவ்வாறே இருக்கவிட்டு மிகுதியை 1913ஆமாண்டு வைகாசி மாதம் 14ஆந் திகதி பிரசித்த நொத்தாரிசு சி. சுப்பிரமணியம் முகதாவில் 3759ஆம் இலக்கத்தில் அறுதியாக விற்றிருந்தார். கோவிலுக்குச் சாசனம் எதுவும் எழுதிக் கொடுக்கவில்லை. அன்றியும் புறநீங்கலாக என்றோ நிலக்கொடை என்றோ குறிப்பிடப்படவு மில்லை. பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலத்தினால் 1936 – 08 – 09இல் 14980 ஆம் இலக்கத்தில் முடித்த அறுதி உறுதியில் தெற்கெல்லைக் காணிகளாக வைரமுத்து கந்தையாவுக்கும் பங்காளருக்கும் உரிய ஆதனமும் விக்ன விநாயக மூர்த்தி கோவிலுக்கும் உரிய ஆதனமும் எனக் குறிக்கப் பட்டுள்ளமை கோயிலின் உரிமை உறுதிப்படுத்தப் பட்டதுடன் அக்காணியின் உறுதி இல்லாவிடினும் ஆட்சிப்படி உரிமையாகி விட்டது. கோயில் 1913க்கு முற்பட்டது என்பதற்கு ஆவணச் சான்றும் ஆயிற்று. மேலும் எவரும் கோயிலுக்கென நிலக் கொடை அளித்ததாகச் சாதனம் எதுவும் இல்லாமையாலும் ஆட்சிப்படி தான் உரிமைப்படுத்தப்பட்டுள்ளது.

### *2. தம்பர் சின்னத்தம்பியால் (பாலியடைப்புத்தம்பி) தர்ம சாதனம் – இரண்டு காணிகள். மொத்தம் 24 பரப்பு.*

1. ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் ஆலயத்திற்குத் தென் மேற்கே சோடக்கன், பாலியடைப்பு வீடு வளவு – 12 பரப்பு
2. அதற்கு அண்மையில் வடலிக் காணி – 12 பரப்பு

   1938 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 6ஆந் தேதி பிரசித்த நொத்தாரிசு சீனிவாசகம் இளையதம்பி முகதாவில் 1286 ஆம்

இலக்கத்திலும் 1287ஆம் இலக்கத்திலும் இரண்டு உறுதிகள் தர்ம சாதனங்களாக நிபந்தனைகளுடன் எழுதினார்.

நிபந்தனை 1

ஆனைவிழுந்தான் விக்ன விநாயகருக்குப் பூசை செய்பவருக்கு, பூசகராகக் கடமையாற்றும் வரையும் மேற்கே இருக்கும் பெரியஅறையில் வசிக்கவும் வளவு வருமானங்களை எடுக்கவும் உரிமை உண்டு.

நிபந்தனை 2

வேதாரண்யத்தில் இருந்து யாத்திரிகர்களாக வரும் சைவக் குருமார் இங்கு தங்குங்காலம் வரை கிழக்கு அறையைக் கொடுத்து உதவவேண்டும்.

(இதிலிருந்து வேதாரண்யச் சைவக் குருமார் யாத்திரையாக வந்தார்களென்றும் அவர்களை தங்கும் இடவசதிகள் செய்து ஆதரித்தனர் என்றும் புலனாகிறது.) பாலியடைப்பானின் இந்த நன்கொடை உயில் அவர் ஒரு தர்மசீலர் மட்டுமல்ல எமது சைவ சமய பாரம்பரியத்தையும் கட்டிக் காத்தவர் என்பதையும் சுட்டுகிறது.

### *3. முருகன் ஆலய பரிபாலன உபகரிப்புக் காணி*

முருகனின் வேல் நிறுவப்பட்டிருந்த பரிவாரக் கோயிலின் பராமரிப்புக்கென தமது தந்தை அமரர் நாகநாதர். இளையதம்பியால் தமக்குத் தரப்பட்ட பதினைந்து பரப்புக் காணியை, அமரர் ஏழூர்நாயகம் தனதுமகன் ஈஸ்வரத்திடம் அதே நோக்கத்துடன் ஒப்படைத்துள்ளார் .

### *4. வீதி விஸ்தரிப்புக்கென வாங்கப்பட்ட காணிகள்*

உள்வீதி அமைப்புக்கென பஞ்சாயத்தார் நால்வரால் வாங்கப்பட்ட நாலு பரப்புக்காணி. 1936இல் நடக்கவிருந்த குடமுழுக்கு, அலங்காரத் திருவிழாக்காலங்களில் சுவாமி வெளிவீதி வரும் நாற்புறமும், தனியாரின் காணிகளே இருந்தன. வடக்குப்

புறக்காணி கத்தோலிக்கர் ஒருவருக்கு உரிமையாக இருந்தது. அதனால், அவரிடம் பஞ்சாயத்தாரில் நால்வர் நாகநாதர் செல்லப்பா, கந்தப்பிள்ளை செல்லப்பா, வயிரமுத்து கந்தையா, ஆறுமுகம் பொன்னம்பலம் தனது மகன் கார்த்திகேசு பெயராலும் விலை கொடுத்து வாங்கிக் கோவிலுக்கு எழுதினர். 1936-08-09 இல் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலம் முகதாவில் 14980ஆம் இலக்கத்தில் இவ்வறுதி உறுதி முடிக்கப்பட்டது.

5. மெய்கண்டான் வீதியிலிருந்து திருக் கோயில் வடக்கு வீதிக்கு வரும் ஒன்பது அடி அகல வழி. கோவிலுக்கு வருவதற்கு கிழக்கேயும் வழி இருக்கின்றது. ஆயின் பெரும்பாலான அடியார்கள் மேற்கிலும் வடக்கிலும் இருப்பதால் அவர்களின் வசதி கருதி குறுக்குவழி அமைக்கக் கருதிய திருமதி அப்புத்துரை வேதநாயகி முன்நின்று அடியார்களிடம் பணம் சேர்த்து வாங்கப்பட்டதாகும்.

6. கிழக்கிலிருந்து வரும்வீதியை அகலமாக அமைப்பதற்குத் தேவையான காணியை கனகரத்தினம் கதிர்காமத்தம்பியும் சுப்பிர மணியம் சண்முகலிங்கமும் தமது காணியில் விட்டுக் கொடுத்தனர்.

7. வடக்குவீதி சீராயமையத் தேவையான ஒருபரப்புக் காணியை ஆறுமுகம் சங்கரப்பிள்ளை ஆசிரியர் குடும்பத்தினர் விலைக்கு வாங்கி பிரசித்த நொத்தாரிசு ---------- முகதாவில் --- ஆந் திகதியில்...... ஆம் இலக்கத்தில் ஆனைவிழுந்தான் விக்ன விநாயகர் பெயரில் எழுதி விட்டிருக்கிறார்கள்.

8. வ.வயிரமுத்து, சி. கணேசலிங்கம், சி. குமாரலிங்கம், சு. சண்முகலிங்கம் ஆகிய நால்வரதும் தர்ம சாதனம். திருக்கோவிலின் தெற்கே சொரியலாக இருந்த காணியை வல்லிபுரம் வயிரமுத்து, சின்னத்தம்பு கணேசலிங்கம், சின்னத்தம்பு குமாரலிங்கம், சுப்பிரமணியம் சண்முகலிங்கம் ஆகியோர் நிந்தப்படுத்தும்போது பத்துப் பரப்புக் காணியை பிரசித்த நொத்தாரிசு செ. புண்ணியமூர்த்தி முகதாவில் 1984ஆம் ஆண்டு நவம்பர் 30ஆந் திகதி 2353ஆம் இலக்க உறுதி மூலம்

தரும சாதனம் செய்தனர். மேற்கேஇருந்துவரும் பேரொழுங்கையிலிருந்து கோயிலுக்கு வர வசதியாக பன்னிரண்டு அடி அகல வழியும் விட்டுக் கொடுத்துள்ளனர். இவர்களனைவரதும் தொண்டுள்ளத்தினால் நாற்புறமும் கோயிலுக்கே உரிய வீதிகளானதுடன் சுவாமி வெளிவீதி வருவதற்கும் தேர் ஓடுவதற்கும் போதிய அளவு விசாலம் ஆக்கப் பெற்றுள்ளது.

### *(9) கோயிலின் வடக்கு வடகிழக்கு வீதி விஸ்தரிப்பு*

யோசேப்புநவரத்தினத்திடம் நில. பர. மூன்று குழி பதின்நான்கு தயாளினி தேவதாசன் கோயில்வீதி விஸ்தரிப்புக்காக வாங்கி உபயஞ் செய்துள்ளார். உறுதி இல. 5628. 2002.01.30 அன்று சட்டத்தரணி சபாநாதன் முகதாவில் எழுதப்பெற்றது.

ஊர் மக்களால் கட்டப்பெற்று, பராமரிக்கப்பெற்று வரும் ஒற்றுமைச் சின்னமான இவ்வாலயம் சிறிது. ஆனால் அதன் மூர்த்திகரம், மாட்சிமை பெரிது சொல்லில் அடங்காதது.

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரவண அற்புதமலர் தலைக் கணிவோமே.



"ஒரு கோட்டன் இரு செவியன் மும்மதத்தன்
நால்வாய் ஐங்கரத்தன் ஆறு
தருகோட்டம் பிறை இதழபத் தாழ்சடையன்
தரும் ஒருவா ரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகோட்டும் அயன்திருமால் செல்வமும் ஒன்றோ
என்னச் செய்யும் தேவே"

*அருணந்திசிவாச்சாரியார்*

*முற்றும்*

கருடம் சார்ந்தவர் செயற்குக். கொடுக்கேருக் குலவருக் கொண்டுவருவதற்குக் கோயிலுக்கு வரவேற்பு நல்லிணக்கம் நிகழ்த்தும் தெய்வ வழிபாடு கொண்டு நடந்தோம். இவ்வகையாகவும் நேர்மை தீவிரமாக நடந்ததுடன் விழா கொண்டாடியதுடன் மக்களைப் பேணி வழிபாட்டுடன் ஊர் மக்களும் வந்து கலந்து கொண்டனர் பெருமை அடைந்தனர்.


(9) கோயிலினில் வடக்கு வடகிழக்கு மற்றி வீதிகளிலிருந்து செல்வதற்கான பாதை அமைக்கப்பட்ட பின் பாதை புதிய பாதையாக்கி வீதியை திருத்தி கோயிலுக்கு அமைக்கப்பட்டுள்ள காணி உறுதி செய்யப்பட்டது. உறுதி இல. 5628, 2002.01.30 அன்று எழுதப்பட்டது. கோயிலுக்குச் சொந்தமாக எழுதப்பட்டுள்ளது.

நல் மனைவியும் மக்களும் பாலகர்களுடன் வாழ ஆசீர்வாதம் செய்தவனை இறைவனாய் நினைந்து அவன் அருள் நாடுவோம். மட்டில்லா பெரிய செல்வத்தில் வாழ்வோம்.

இறைவன் கொடுத்த பெருமையை நினைந்து என்றும் மகிழ்வுடன் வாழ்வோம்.

"ஒருவினைப்பட்ட ஒரு பெருமை குமரேசக்குடன்
மனையும் குறைவுமில் லாது
கருவேற்றாடு கொடு இறைவர் உருவாக்கிய
கருவிக் குருவை மனக்கிலி நினைக்க
உருவேற்றுடன் கொடுத்த அமைந்த இறைவர்
இருவரும் உவந்தனர் சிவனருக
திருவருளுடன் அருளிடுவாக வேண்டும் அருள்
தாள்களைச் சென்னியில் சேர்க"

இருவர்





# வெவ்வினையை வேரறுக்கும் விநாயக வழிபாட்டு வரலாறு

அகர மென அறிவாகி உலகமெங்கும்
அமர்ந்து அகரஉகர மகரங்கள் தம்மால்
பகரு மொரு முதலாக வேறுமாகிப்
பல்வேறு திருமேனி தரித்துக் கொண்டு
புகரில் பொருள் நான்கினையும் இடர் தீர்த்தெய்தப
போற்றுநருக்கு அறக்கருணை புரிந்தாண்டுகொள்ளும்
நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

– *(கச்சியப்ப சிவாச்சாரியார்)*

# விநாயகர் தத்துவம்

விநாயகர் வணங்குவதற்கு எளியவர். பூரண இதயசுத்தி வழிபாட்டை விரும்பி ஏற்றுக்கொள்பவர். எந்தவடிவிலும் வணங்கலாம். கோமயம் (சாணம்), புற்று மண், மஞ்சள் மா, அரிசி மா, வெண்ணெய், சந்தனம் என்பவற்றில் அறுகம்புல்லைச் சொருகி ஓங்கார வடிவு அமைத்தும் வழிபடலாம். ஐம்பொன், செம்பு, வெள்ளைச் சலவைக் கல், பவளம், வெள்ளெருக்கம் வேர், என்பவற்றில் உருவம் அமைத்தும் வழிபடலாம். கோடும் சுழியும், நாதமும் விந்துவுமான பிரணவ சொரூபி விநாயகர், மூலாதாரத் தெய்வம். மூலாதாரம் பூமி. இதனாலேதான் களிமண்ணெடுத்துப் பிள்ளையார் செய்வார்கள். இந்தியாவில் விநாயக சதுர்த்தியில் சிறப்பாக களிமண்ணிலேதான் பிள்ளையார் செய்து வழிபடுவர். விநாயக வழிபாடு இலகுவானது. விசேட வழிபாட்டு முறைகள் அவசியமில்லை. கோபுரங்களுடன் கூடியதும், ஆகம விதிப்படி அமைந்ததுமான பெரும் ஆலயங்கள் அவசியமில்லை. மரங்களின் கீழும், ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும், சந்திகளிலும், வீதி ஓரங்களிலும், சிறிய மண்டபங்களிலும் வைத்து எந்நேரம் என்றில்லை வழிபடலாம்.

நாம் எந்தவொரு காரியத்தைச் செய்யப் புகுமுன்னும் அது தடையின்றி நிறைவேற வேண்டி, பிள்ளையார் பூசை செய்வது பாரம்பரிய வழக்கம். மங்களகரமான நாட்களில் நிறை குடம் வைக்கும் போதும் சாணியில் உருண்டை செய்து அறுகு சொருகி, அதை ஓங்கார வடிவரான பிள்ளையாரெனப் பாவனை செய்து வைக்கிறோம். நல்ல காரியங்கள் செய்யுமுன் காவலாகக் கையில் காப்புக் கட்டும் வழக்கம் இன்றும் தொடர்கிறது. புலவவர்களும் தமது ஆக்கங்களை முதலில் பிள்ளையார் காப்புப் பாடியே தொடர்வர். பிள்ளையார் வழிபாடு பிரசித்தி அடையுமுன் சிவனுக்கே காப்புச் செய்யுள் பாடினர் என்று கருதக் கிடக்கின்றது. சங்கச் செய்யுள்களைத் தொகுத்தவர் காப்புச் செய்யுளில் சிவனையே பாடியுள்ளனர். எவரும் எழுதத் தொடங்கு முன் காப்பு ஆகப் பிள்ளையார் சுழி (உ)போடுவது வழக்கத்தில் இருக்கிறது. இப்போது இவ்வழக்கம் அருகி வருகிறது.விநாயகர் விக்கினங்களை விலக்குபவராக, காரிய சித்தியைத் தருபவராக விளங்குவதால் நாமனைவரும் முதலில் அவரை வணங்கித் தொழிற்படுகிறோம்.

பிரபஞ்சம் முழுவதுக்கும் முதற் காரணமாகிய மகா மாயைக்குத் தலைமையாக இருக்கும் சிவசக்தி, விநாயகர் எனப்படுகிறார். அவர் ஞானமே உருவான திருமேனி உடையவர். தனக்குத்தானே தலைவனாய் வேறுதலைவனின்றி விளங்குபவர். அந்தப் பொருளிலேயே விநாயகர்எனப் பெயர்பெறுகிறார். உயர் திணை அஃறிணை என்ற பாகுபாட்டைக் கடந்து நிற்கும் நிலையை உணர்த்த தேவ, பூத, மனித உருவ உடலும் யானை முகமும் கொண்ட வடிவினர். அத்திருமுகம் பிரணவ ஐந்தெழுத்தின் அடக்கமுமாகும்.

"இறை, சக்தி, பாசம், எழில்மாயை,
ஆவி உற நிற்கும் ஓங்காரத்துள்"


என்று திருவருட்பயன் கூறுகிறது. விநாயகரின் துதிக்கை, ஓம் எனும் மந்திரத்தின் சுருக்க வடிவம் 'உ' ஆகும். பிரணவம் யாவற்றுக்கும் ஆதியாக இருத்தல் காரணமாகவே பிரணவ ரூபியான பிள்ளையார் முதற் பூசை, வழிபாடு களுக்கு உரியவர் ஆகிறார். மூலவர் எவராயிருப்பினும் இவருக்கு முதற்பூசை நடந்த பின்பே பிற தெய்வங்களுக்குப் பூசை நடைபெறும்.

இவர் சிவபெருமானின் வாக்கின் வடிவினர். அதாவது ஓம் எனும் ஒலி வடிவம். பஞ்ச கிருத்தியங்களைச் செய்யும் சிவனும் விநாயகரும் ஒருவரே. இருவரும் முக்கண்ணர். ஐந்து திருமுகம் உடையவர்கள். முடியிற் பிறை சூடியவர்களும் இவர்களே. பிரபஞ்ச இயக்கத்தைக்குறிக்கின்ற திருநடனக் கோலத்தில் நடராஜராகவும் நர்த்தன விநாயகராகவும் காட்சி அளிப்பவர்களும் எருக்கம்பூவை ஏற்பவர்களும் இவ்விருவருந்தான். லிங்கவழிபாடும் இவ்விருவருக்கும் மட்டுமே உரித்தா னது. ஆகவே, சிவன் வேறு. விநாயகர் வேறு அல்லர்.

தஞ்சாவூரில் பாபநாசம் நகர் வடக்கு வீதியின் மேற்கே குடமுருட்டி ஆற்றின் தென்கரையில் அரச மரத்தடியில் இரட்டை

பொது நூலகம்
வலி தெற்கு பிரதேச சபை
உடுவில்.

விநாயகராலயம் அமைந்துள்ளது. "இந்த ஆலயத்தை சைதன்ய பிரபு வந்து தரிசித்ததாகவும், சைதன்ய பிரபு காலம் 1050 எனவும் புஷ்யம் மாத ஏட்டில் (1981) குறிப்பிடப்பட்டுள்ளது.[26] இவ் விரட்டை விநாயகர்சிலை ஒன்று பெரிதாயும் மற்றது சிறிதாயும் இருப்பது குறிப்பிடத்தகும். சிவபார்வதி அம்சமாக இருப்பதாகக் கருதப்படுகிறது. மேலும், தாமோதர விநாயகர் (தாமோதரன்– விஷ்ணு) என்றும் அழைக்கப்படுகிறார். பண்டைய மக்கள் விநாயகரில் சிவனையும் விஷ்ணுவையும் கண்டனர் என்பதற்கு பல நூற்றாண்டுகட்கு முன் இருந்த இவ்வாலயம் சிறந்த சான்றாகின்றது. சிவனது அர்த்தநாரீஸ்வர வடிவம் – ஆண் பெண் இணைந்த வடிவம் – ஒருமையில் இருமை எனும் தத்துவத்தைப் புகட்டும் முழுமையான வடிவம். அவ்விதமே ஆனைமுகனது மனிதனும் மிருகமும் இணைந்த வடிவமும் ஒருமையில் இருமை என்ற தத்துவத்தைப் புகட்டுகிறது.



*இரட்டைவிநாயகர்*

எனினும், எல்லாவற்றுக்கும் முதன்மையானவராக விளங்கும் விநாயகப்பெருமான் பற்றி எவ்வித தெளிவான குறிப்பும் வேதங்கள், சங்க இலக்கியங்கள், மணிமேகலை, சிலப்பதிகாரம் முதலான பழைய இலக்கியங்களில் இல்லை. அதனால், தமிழ்நாட்டில் இடையில் புகுந்தவராகக் கணிக்கப்படுகிறார். ஆயின், கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் வியாசமுனிவர் மஹாபாரதக் கதை பாட, விநாயகர் தனது மருப்பொன்றை ஒடித்து எழுதியதாகக் கூறப்படுகிறது. வடநாட்டில் வழங்கி வந்த விநாயக வழிபாடு ஒரு காலகட்டத்தில் தமிழ்நாட்டுக்கு வந்ததாகக்கருதப்பட்டது. வாதாபிப் போரில் புலிகேசியைத் தோற்கடித்த தளபதி பரஞ்சோதி

அந்நாட்டுத் தெய்வமான கணபதியை வெற்றிச் சின்னமாகக் கொண்டுவந்து, தனதூரான திருச்செங்காட்டங்குடியில் பிரதிட்டைசெய்து, விநாயக வழிபாட்டையும் பரப்பினார் என வரலாற்று ஆசிரியர் சிலர் கூறுவர்.

ஆயினும், மேற்கண்ட கருத்து இப்போது ஆதாரங்களுடன் மறுக்கப்பட் டுள்ளது. திருச்செங்காட்டங்குடிக்குக் கணபதீச்சரம் எனும் பெயரும் உண்டு. இத்தலத்தில் கணபதி, சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதால் இவ்வூருக்கு இப்பெயர் வழங்கியதாகவும் இவ்விடத்திலேயே கஜமுகாசுரனுடன் விநாயகர் போர் புரிந்தார் என்றும் அதனால் அவ்விடம் இரத்தம் தோய்ந்து செங்காடாகக் கிடந்ததால் செங்காட்டங்குடி எனப்பெயர் பெற்றதாகவும் புராணங் கூறும். அன்றியும், அப்பர், சம்பந்தர் பாடிய தேவாரப்பதிகங்கள் வாயிலாகவும் அறியமுடிகிறது. சம்பந்தர் கணபதீச்சரத் தலத்தின் மீது பதினொரு பாசுரங்கள் கொண்ட மூன்று பதிகங்கள் பாடியுள்ளார்.

> நுண்ணியான் மிகப் பெரியான் ஓவுளார் வாயுளான்
> துண்ணியான் வெய்யான் நம்தலை மேலான் மனத்துளான்
> திண்ணியான் செங்காட்டங்குடியான் செஞ்சடைமதியக்
> கண்ணியான் கண்ணுதலான் கணபதீச்சரத்தானே.
> முதலாந் திருமுறை – *ஞானசம்பந்தர்.*


கணபதீச்சர சுவாமியின் திருநாமம் கணபதீச்சுரர் என்றும் அம்மையின் திருநாமம் திருக்குழல் நன்மாது எனவும் குறிப்பிடப்படுவதால் அத்தலம் சிவத்தலம் என்பதும் கணபதியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தலமென்பதும் உறுதிப்படுத்தப்படுகிறது. மேலும், மூன்றாம் திருமுறையில் "கன்னவில் சிறுத்தொண்டன் கணபதீச்சர மேய" என்று குறிப்பது சிறுத்தொண்டர் (சேனாபதி பரஞ்சோதி) காலத்துக்கும் முற்பட்ட தலமென்பதையும் சுட்டுகிறது.

"கைவேழ முகத்தவனைப் படைத்தார் போலுங்
கஜாசுரனை அவனாற்கொல்வித்தார் போலுஞ்,
செய்வேள்வித் தக்கனைமுன் சிதைத்தார் போலுந்
திசைமுகன்றன் சிரமொன்று சிதைத்தார் போலும்,
மெய்வேள்வி மூர்த்திதலை யறுத்தார் போலும்
வியன்வீழி மிழலையிடங் கொண்டார் போலும்
ஐவேள்வி ஆறங்கமானார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே"

அப்பர் சுவாமிகள் கணபதியின் தோற்றம், கஜமுகாசுரன் வதம்பற்றி இப்பாசுரத்திற் குறிப்பிடுகிறார். வாதாபிப் போர் கி.பி 642 இல் நடை பெற்றது. அப்பர்(கி.பி.590-671) திருவதிகை வீரட்டானத் தலத்தில் சமணரால் துன்புறுத்தப்பட்டபோது பாடிய பாசுரங்களில் ஒன்றான

"பலபல காமத்தராகிப் பகைத்தெழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியுங் கணபதி யென்னுங் களிறும்
வலமேந்திரண்டு சுடரும் வான் கயிலாய மலையும்
நலமார் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாதொன்று மில்லை யஞ்ச வருவதுமில்லை"

எனும் பாசுரத்தில் கணபதி குறிப்பிடப்பட்டுள்ளார். அப்பர் சுவாமிகளுக்குத் தீங்கு இழைத்த பல்லவன் கி.பி.630 இல் இறந்து பட்டான். வாதாபிப் போர் அவன் இறந்து 12 ஆண்டுக்குப்பின் நிகழ்ந்தது. அப்பர் பாடிய தேவாரம் வாதாபிப் போருக்கு முற்பட்ட காலத்தது. மேலும்; அப்பர் திருக்கைலாயத்தைத் தரிசிக்கும் வேட்கையில் பனிமலை ஏறிச் செல்லும்போது சிவபெருமான் அசரீரியாகக் கூறியவாறு அவர் அங்கே தோற்றுவித்த குளத்தில் மூழ்கி திருவையாற்றில் (இன்று உப்புக்குளம் எனப்படும்) குளத்தில் எழுந்து வாயு



*உப்புக் குட்டை*


அபீஷ்டவரத மஹா கணபதி

மூலையில் எழுந்தருளியிருக்கும் விநாயகரை வணங்கி, கைலைக் காட்சியைக் கண்டதாக வரலாறு கூறும். கைலைக்காட்சி கண்ட தலம் ஆதலால் அப்பதி தென்கைலை எனப் போற்றப்படுகிறது. அப்பருக்கு இஷ்டமானதை அருளியதால் அப்பிள்ளையார் அபீஷ்டவரத மஹா கணபதி எனப் பெயர் பெற்றார். இன்றும் மக்கள் வழிபட்டு விருப்பம் இனிது நிறைவேறப் பெறுவர். அப்பர் மூழ்கி எழுந்த அக்குளம் சமுத்திர ராசனுடைய குளம் எனக் கருதப்படுதலால் உப்புக் குட்டை எனப் பெயர் பெற்றது. அது தெப்பக்குளமாக இன்று படிக்கட்டு முதலானவை கட்டப்பெற்று அழகாக விளங்குகிறது.

இத்தலத்தை அப்பரும் சம்பந்தரும் பாடியிருப்பதனால் அவ்விருவருக்கும் இத்தலம் முற்பட்டதாகவேயிருந்திருக்கும் எனத் துணியலாம். இத்தலத்தைப் பாடிய சம்பந்தர் "பிடியதன் உருவுமை கொள மிகுகரியது" என, கணபதி தோற்றம் பற்றிப் பாடியிருக்கிறார். ஆகவே வாதாபிப் போருக்கு முன்பே தமிழ் நாட்டில் கணபதி வழிபாடு பரவி இருந்தது என உறுதியாகக் கூறலாம்.

வேள் பாரியின் நண்பர் கபிலர், பாரியின் கொடையைப் புகழ்ந்து பாடிய பாடல் ஒன்றில் கணபதியைக் குறிப்பால் உவமைப்படுத்தி யுள்ளார். எருக்கு இலை, பூ, வேர், என்பவற்றை ஏற்பவர் விநாயகர் ஒருவரே. எனவே, "நல்லவும் தீயவும் அல்ல குவி இணர்ப் புல்லிலை எருக்கம் ஆயினும் உடையவை கடவுள் பேணேம் என்னா–"(புறம்–106) இங்கே கபிலர் கணபதியையே குறித்துள்ளாரென்பது தெளிபு. பூசைத் தொடக்கத்தில் ஓதப்படும் "சுக்லாம் பரதம்.." எனும் கணபதி சுலோகத்திலும் கணபதி குறிப்பாலேயே உணர்த்தப் பெற்றுள்ளார். கபிலர் கி.பி. முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக்கருதப்படுவதால் விநாயக வழிபாடு முதலாம்


பொது நூலகம்
மாநகர தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம்
உடுவில்.



நூற்றாண்டிலேயே தமிழ் நாட்டில் வழக்கத்தில் இருந்ததெனக் கொள்ள முடியும்.

இலங்கையில் மிகுந்தலையில் உலகிலேயே மிகப்பழைய(கி.பி. 2ஆம் நூற்றாண்டு) கணபதி உருவம் கற்சுவரிற் செதுக்கப் பட்டுள்ளது என நியூசிலந்து, ஒக்லண்டில் வாழும் இலங்கையரான ஆய்வாளர், செந்திறத் தமிழ்ச் செல்வர், ஆ.தேவராசன் கூறுகிறார்.

"பிள்ளையார்பட்டியில் இருக்கும் குடைவரைப் பிள்ளையார் கோயிற் கல்வெட்டில் 'எக்காட்ரூக்கோன் பெருந்தசன்' எனக் குறிக்கப் பட்டுள்ளது அதற்கு, எக்காட்டுருத் தலைவன் தலைமை ஸ்தபதி என்று பொருள். அதன் காலம் கி.பி. 6ஆம் நூ.ஆண்டு".[27] என்பது கல்வெட்டியல் அறிஞர் ஐராவதம் மஹாதேவன்கருத்து. பிள்ளையார்பட்டிக்கு எருக்காட்டூர் அல்லது எக்காட்டூர், மருதங்குடி, திருவீங்கைச்சரம், திருவீங்கைக்குடி, என ஐந்து பெயர் உண்டு. விநாயகருக்குத்தனியாக அமைக்கப் பெற்ற முதற் குடைவரைக் கோயில் இதுவாகும். இக்கோயில் பிள்ளையார் 6 அடி உயரம் உடையவர். இடக்கையை இடுப்பில் ஊன்றியபடி வலக்கையில் மோதகம் ஏந்தி வலம்புரி விநாயகராக வீற்றிருக்கின்றார். 1600 வருடப் பழமை வாய்ந்தவர். களப்பிரர்கள் ஆட்சி முடிவுக் காலத்தில் அந்த நகரத்துத் தன வைசியர்களால் இக்குடைவரைக் கோயில் கட்டப் பெற்றதாகக் கொள்ளப்படுகிறது.


குடைவரைகற்பகப் பிள்ளையார்

வடஇந்தியாவில் அகமத் நகரில் ராஞ்சன்காவ்ன் என்னுமிடத்தில் 9ஆம் நூற்றாண்டிற் கட்டப்பெற்ற ஒரு கணபதி ஆலயம் உண்டு. இவ்வாலயத்தில் எழுந்தருளி உள்ள மஹாகணபதி சுயம்பு மூர்த்தியாக அகன்ற நெற்றியுடன் இடம்புரியாகச் சப்பணமிட்டு



ஸ்ரீ மகா கணபதி

வீற்றிருக்கிறார். இவர்மீது சூரிய கிரணம் தினமும் நேராக விழுவது சிறப்பு அம்சமாகும். சித்தி, புத்தி சிலைகள் இருபுறமும் நின்ற நிலையில்உள. சதுர்த்தி விழாவில் இருந்து நாலு நாள் ஊர்மக்கள் மூலமூர்த்திக்குத் தங்கள்கையாலே பூசை செய்ய அனுமதி உண்டு. இவர் மஹாவரப் பிரசாதியாகப் (பேரருளாளர்) போற்றப்படுகிறார். ஆதியில் இருந்த முத்கல புராணம் கூறும் மகோத்கடர் எனும் அபூர்வரூப மஹாகணபதி பத்துத் தும்பிக்கைகள் இருபது கரங்களுடன் இந்த ஆலயத்தில் ஒரு பாதாள அறையில் அமர்ந்திருக்கிறார்.

மத்யகைலாசத்தில் விநாயகரும் ஆஞ்சநேயரும் சேர்ந்த திருவுருவம் உளது. அவரை "ஆத்யந்தப் பிரபு" என அழைப்பர்.

கிழக்கிந்தியத் தீவிற் கிடைத்ததாக கபாலங்களின் மீதிருக்கும் விநாயகர் சிலை ஒன்று யாழ்ப்பாணத்துக்கும் கொண்டுவரப்பெற்று, தேவாலயங்கள் வித்தியாலயங்களில் வணக்கத்துக்கு வைக்கப் பெற்று அபிஷேக ஆராதனைகள் நிகழ்ந்தன. எமது இளம்வயதில் நிகழ்ந்த இது எந்த ஆண்டில் என உறுதியாக இப்போது சொல்ல முடியவில்லை.

கி.பி. 4ஆம் நூற்றாண்டுக்கும் 17ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஆசியா முழுவதும் விநாயக வழிபாடு பரவி உள்ளதாக வரலாறுகள் மூலம் அறியவருகிறது. எனினும், சீனாவில் கி.பி 2 ஆம் நூற்றாண்டுக்கு முன்னரே விநாயகர் வழிபாடு பரவ ஆரம்பித் துள்ளது. சீனப் புராணத்தில் பத்துத் தெய்வீக மன்னர்களுள் ஒருவராக விநாயகர் கணிக்கப்படுகிறார். இவரது பெயர் குஆன் ஷிரின் (Kuan - shi - t'ien) சீன பௌத்த இலக்கியத்திலும் தாந்திரீக நூல்களிலும் இவர் உக்கிர சக்தியாகவே குறிக்கப்பட்டுள்ளார். கம்போடியாவில் கி.பி.6ஆம் நூற்றாண்டுக் கும் 10ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் கல்லிலே ஏராளமான

விநாயக சிலைகள் அமைக்கப் பட்டுள்ளன. விநாயகரின் பெயர் பிரா கெனிஸ் (Prah Kenes). தெற்குவியட்நாம், சம்பாவில் 7ஆம் நூற்றாண்டுக்குரிய பெருந்தொகையான விநாயகர் சிலைகளும் கல்வெட்டுகளும் கிடைத்துள்ளன. அங்கே விநாயகருக்குத் தனிக்கோவில் கட்டப்பெற்றிருந்ததற்கான சான்றுகளும் கிடைத்துள்ளன.


சீனாவிற்பிள்ளையார்

திபெத்தில் விநாயகர் வழிபாடு 11 ஆம் நூற்றாண்டில் இருந்து ஆரம்பமானது. அவரது பெயர் த்சோக் பராக் (Ts'ogsbdag). விநாயக வழிபாடு திபெத்திலிருந்து மங்கோலியாவுக்கு கி.பி. 12 – 17 ஆண்டு காலப் பகுதியில் பரவியது. மங்கோலியர் விநாயகரை தேஷ்கார் என்றும், பர்மாவில் மஹா பியன்னே என்றும் வணங்குவர். யப்பானில் விநாயகரை வினாயட்ச என அழைப்பர்.

ஆப்கானிஸ்தானில் கர்டேஸ் என்னும் இடத்தில் கிரேக்கர் கலைப் பாணியில் சலவைக் கல்லினால் அமைந்த சிலை கிடைத்துளது. இதன் காலம் கி.பி. 500 எனக் கருதப்படுகிறது. கிரேக்கர் விநாயகரை, பெஸ் (Bes) பானை வயிற்று சந்தோஷமான கடவுளாகக் கொண்டனர். றோமன்ஸ் ஜனஸ் என்று அழைத்தனர். பொலினீஸியன்ஸ், லோனோ (Lono) என அழைப்பர்.


*கிரேக்க பாணியில் மற்றொரு விநாயக ஓவியம்*

ஸ்ரீ. எச்.கிருஷ்ண மூர்த்தி 'தத்துவ உலகம்' என்ற இதழின் 1990பெப். – மார்ச் வெளியீட்டில் "மத்திய அமெரிக்காவிலும் மெச்சிக்கோவிலும் நிகழ்ந்த அகழ்வாராய்ச்சியில் கணேச தெய்வத்தின் உருவங்கள் பல கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. மெச்சிக்கோவில் கணேசருக்கு வீரகோஷ் என்ற பெயர் வழங்கப் பெற்றது."[28] எனக் கூறியிருக்கிறார். இந்தியாவின் பிர்லா விஞ்ஞான சங்கம் பின்வரும் புதிய கண்டறிவை வெளியிட்டிருக்கிறது.

"யானை முகக் கடவுள் எழுதுகோல் ஒன்றை வைத்திருப்பது போன்று, உலோகத் தகட்டில் Etching சித்திரம் (வேதிப் பொருளால் அரிந்து ஆக்கும்) ஒன்று ஈரான் நாட்டின் மேற்குப்பகுதியில் இருக்கும் லூறிஸ்தான் (Luristan) என்ற இடத்தில் கண்டெடுக்கப் பெற்றுள்ளது. மஹா பாரதக் கதையை வியாசர் சொல்ல கணேசர் எழுதிய கதையுடன் தொடர்புடையது இது. ஏறத்தாழ கி. மு.1200 காலப் பகுதியைச் சார்ந்தது"[29]



*ஜாவாப் பிள்ளையார்*

ஜாவாவிலும் பாளித் தீவிலும் தென்னிந்தியப் பாணியிலேயே விநாயகர் கோவில்கள் அமைந்துள்ளன. இலங்கையிலும் தமிழ் நாட்டைப் போன்றே விநாயகர் வழிபாடு இயற்றி வருகிறார்கள். இலங்கைக்கு தமிழ் நாட்டிலிருந்தே அந்தணப்பூசகர்களும் விநாயக விக்கிரகங்களும் வந்தமையும் அதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். அவர்களின் வருகைக்கு முன் திருமுறை வழிபாடாகவே இருந்திருக்கும்.

"20 ஆம் நூற்றாண்டளவில் இந்தியா, ஸ்ரீலங்கா, நேபாளம், மலேசியா, ஜாவா, போணியோ, பாலி, திபெத், பர்மா, சீயம், இந்தோசீனா, சீனா, ஜப்பான், றினிடாட்,



நேபாளப்பிள்ளையார்

ரொபாகோ, ஹாவே, பசிபிக்தீவுகள், ஆபிரிக்கா, ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய நாடுகளிலும் உலகளாவிய ரீதியில் கோவில்களிலும் வீடுகளிலும் கணேசவழிபாடு நிகழ்கிறது. 600 கோடிக்கு மேற்பட்ட இந்துக்களால் வழிபடப்படுகிறது."[30]



யப்பானில்இரட்டைப் பிள்ளையாா

"ஒரு நாமம் ஒரு உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி தெள்ளேணம் கொட்டாமோ" என, திருவாசகத்தில் மணிவாசகர் மனமுருகிப்பாடுகிறார். நாம் மட்டுமல்ல தெய்வபக்தி பரவசத்தினால் பிற, இன, சமய மக்களும் தாம் வணங்கும் தெய்வங்களுக்குப் பல நாமங்களைச் சூட்டுவதைக் காண முடிகிறது. யப்பானில், பிள்ளையார் விநாயக்சா, ஷோட்டேன் (Sho-ten சிறந்த கடவுள்) டெய் ஷோட்டேன் (மிகப் பெரிய சிறந்த கடவுள்) கணபஸ்சி எனப் போற்றப்படுகிறார். ஆயினும், பெரும்பாலும் யப்பானியர் பினாய் கேடன், காங்கி டேன், ஷோட்டேன் என்றே அழைப்பர்.கி.மு 806 இல் கணேச வழிபாடு இருந்ததாகவும் யோக்கோகாமாவில் 737இல் ஒரு கணேசர் கோயில் கட்டப்பெற்றிருந்த தாகவும் வரலாறு கூறும். அன்றியும் யப்பானில் 250 பிள்ளையார் கோயில்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. மகாவிக்னேஷ்வா், குஞ்சானானர் என்று அழைக்கப்படுகிறார். சீனர் ஹோரி (Ho-Te), குஆன்–ஷிரின் (Kuan-shit'ien) சந்தோசத்துக்கு உரிய பெரு வயிற்றுக் கடவுள் என வணங்குவர்.

வைஷ்ணவரும் தமது முழுமுதற் கடவுளான விஷ்ணுவுக்கு திருமால், திருவேங்கடன், நாராயணன், பெருமாள், நாரணன் என ஆயிரம் நாமங்கள் சூட்டி வணங்குகின்றனர். கிறிஸ்துவ மதத்தினரும் யேசுநாதரைக் கர்த்தர், கிறிஸ்து நாதர், பரம பிதா, யேசுக்கிறிஸ்து, ஆண்டவர் எனப் பல பெயர்கொண்டு வழிபடுகின்றனர். சைவ மதத்தினராகிய நாமும் விநாயகருடைய குணாதிசயங்களானஞானம், முதன்மை, கருணை, வீரம், தோற்றம்

ஆகியவற்றுக்கமைய பலப்பலபெயர்களைச் சூட்டி வணங்குகிறோம். பிரணவன், சுமுகர், கணபதி, குஞ்சரன், விகடர், விக்னேஸ்வரர் என ஆயிரம் பெயர்கள் கொண்டு வழிபடுகிறோம்.

கணபதியையே முழுமுதற் கடவுளாக – பரம் பொருளாகக் கொண்டு வழிபடும் சமயம் காணாபத்தியம் எனப்படும். அது இந்து மதத்தின் ஆறு பிரிவுகளில் ஒன்றாகும். மகாராஷ்டிரத்தில் கணபதி முழுமுதல் கடவுளாகப் போற்றப்படுகிறார். சமணம், வைஷ்ணவம், சைவம், பௌத்தம் என பல மதத்தவராலும் வணங்கப்படுகிறார். அன்றியும் விநாயகர் பல இன மக்களால் வணங்கப்படும் பெருமையும் பெற்றவர். ஆயினும் இத்தகைய பெருமைவாய்ந்த பிள்ளையாருக்கு ஆதியில் இத்தனை சிறப்பு இருக்கவில்லை. இவருக்கெனத் தனிக் கோவில் எதுவும் இருக்கவும் இல்லை. சிவபெருமானின் கோவில்களில் துவாரபாலகராகவும் மண்டபங்களிலும் தூண்களிலும் சிலா ரூபங்களில் வடிவமைக்கப்பட்டிருந்தார்.



ஆதி விநாயகர்
(மனிதமுகம்)

விநாயகர் முதலில் மனித முகத்துடனும் இரு கைகளுடனுந்தான் விளங்கினார். தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும், சிதலைப்பதி என்னும் இடத்திலும் மனித முகத்துடன் விநாயகரை இன்றுங் காணமுடியும் யானைமுகம் பெறுவதற்கு முன்னர் இருந்த மனித முகத்துடன் காட்சி அளிப்பதால் ஆதிவிநாயகர் எனப் பெயர் பெற்று சிதலைப்பதியில் வீற்றிருக்கிறார். இத்தலத்திலே இராமபிரான் தனது தந்தைக்குப் பிதிர்க் கடனாகத் தர்ப்பணம் செய்தார் என வரலாறு கூறும். அதனால், சிவதர்ப்பண பதி எனப் பெற்ற பெயர் பேச்சுவழக்கில் திரிபுற்று சிதலைப்பதி என மருவிய தாக ஆய்வாளர்கூறுவர். இப்பதியின் புண்ணிய தீர்த்தம் கரிசலாறு. இங்கே பிதிர்க் கடன் செய்வது புண்ணியமெனக் கருதப்படுகின்றது.

இப்பதியில் இராமபிரானுக்கும் கருடனுக்கும் கோயில்கள் அமைந்துள்ளன. பிற்காலத்தில் உமா மகேஸ்வரன் பிள்ளை ஆகிய பின்பே நான்கு கைகளும் ஆனை முகமும் உடையவர் எனக் கணிக்கப்படுகிறார். பஞ்சகிருத்திய தத்துவத்துக்கு அமைவாக கற்பிக்கப் பட்டிருக்கலாம்.

முதலில் தெய்வமாக அல்லாமல் கிராம தேவதையாகவே கணிக்கப்பட்டவர். மானவ கிரஹய சூத்திராவில் (கி.மு.7–4ஆம் நூற்றாண்டு) நான்கு விநாயகர்கள் சித்திரிக்கப் பட்டுள்ளனர். நால்வரும் கிராம தேவதைகளேயாம். "யக்ஞ வாக்கிய ஸ்மிருதியில் (கி.பி.1–3ஆம் நூற்றாண்டு) இந்த நான்கு விநாயகரும் ஒரே விநாயகராக உருவகப்படுத்தப்பட்டுளது. இந்த யக்ஞ வாக்ய ஸ்மிருதியில் தான் முதன் முதலாக உமையின் புதல்வனாகக் கூறப்படுகிறார். பார்வதிபரமேஸ்வரரின் மூத்த பிள்ளையாக பிள்ளையார் எனும் பெயரைப் பெறுகிறார்"[31] என, என். ஸ்ரீநிவாசன் கூறுகிறார். இவ்வாறு, இந்தியாவிலும் மற்றும் சில இடங்களிலும் விதம் விதமான தோற்றங்களில் விநாயகர் வழிபாடு நிகழ்கின்றது. கிரேக்க நாட்டிலும் கி.பி. 5ஆம் நூற்றாண்டளவில் விநாயக வழிபாடு இருந்ததற்கான சான்றுகள் கிடைத்துள்ளதாகக் கூறப்படுவது இங்கு குறிப்பிடத் தகும்.

ஆனைமுகனாவதற்கு புராணங்கள் கூறும் தத்துவக் கதையாவது, தவவலிமை பெற்ற அரக்கர்களை மனிதனாலோ விலங்கினாலோ கொல்ல முடியாது. அவர்கள் பெற்ற வரம் அத்தகையது. அதனால் அவ்வசுரர்களை (ஆணவத்தை) வதம் செய்வதற்கு சிவனின் திருவிளையாடலால் ஆனை முகன் தோற்றினார் என்பதாகும்.

ஞான முதல்வனான விக்னங்களை வேரறுத்துக் காக்கும் பிள்ளையாரை ஆனை வடிவினன் ஆக்கியமைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனை கொன்று புசிக்காது. தாவர போஷணி. ஞாபக சக்தி மிக்கது. அறியும் ஆற்றல் படைத்தது. தம்மினத்துக்கு மட்டும் கேட்கக் கூடிய ஒருவித அகஒலி (காத்தல்

சமிக்ஞை) எழுப்பும் தனித்துவமானஅற்புத சக்தி கொண்டது. கெம்பீரமான தோற்றம் உடையது. மிருகங்களுள் பெரியது, சிறந்தது. சுமை தாங்கும் வலிமை உடையது. வீரம் உள்ளது. போர் புரியும் திறமை கொண்டது. முற்காலத்தில் நால் வகைப் படையில் யானைப் படையும் ஒன்று. பாகன் கையில் இருக்கும் அங்குசத்துக்கு அடங்கிப் பணிந்து நடக்கும். விநாயகர் கையில் தாங்கி இருக்கும் ஆயுதமும் அஃதேயாம். ஆயின் மதங் கொண்டால் தாங்காது. தன் பாகன் என்றும் பாராது. பகைவனைக் காத்திருந்து அழிக்கும். இத்தகைய சிறப்பியல்களை உடையதான படியினால் யானையில் விநாயகனைக் கண்டிருக்கலாம். அதி உயர்வான ஒரு பொருளில் இறைவனைக் காண்பது எமது மரபு.

பல புராணங்கள் வாயிலாக விநாயகரின் தோற்றம் பற்றி அறியக் கிடக்கிறது. வியாசமுனிவர் அருளிய பதினெண் புராணங்களில் விநாயக புராணமும் முத்கல புராணமும் விநாயகரின் உதயம், அசுரர்களின் வதம், பக்தர்களுக்கு அருளிய அனுக்கிரகங்கள் பற்றிக் கூறுகின்றன. விநாயக புகழை வியாச முனிவர் வாயிலாகக் கேட்ட பிருகுமுனிவர் 12000 சுலோகங்களில் விநாயகரின் பெருமைகளைப் பாடி உள்ளார். அதனால் 'பார்க்கவ' புராணம் எனும் பெயரும் பெற்றது. பிள்ளையார் புராணம் எனவும் வழங்குகிறது. பத்ம புராணம், லிங்க புராணம், சிவ புராணம் ஆகியன விநாயகரின் தோற்றம் பற்றிக் குறிப்பிட்டுள்ளன. விநாயக புராணம் விநாயகப் பெருமான் பன்னிரண்டு தோற்றங்களை எடுத்ததாகக் கூறி அத்தோற்றங்களின் விவரங்களையும் அறியத் தருகிறது. விநாயகர் ஒவ்வொரு யுகத்திலும் ஒவ்வொரு பெயரும் உருவமும் தாங்கி, அசுரர்களை வதம் செய்ததாகக் கூறுகிறது.

கிருத யுகத்தில் மஹோத்கட விநாயகராக பத்துக் கரங்களுடன் சிம்ம வாகனத்தில் தோன்றி, நராந்தகன், தேவாந்தகன் என்ற அசுரர்களை வதைத்தார். திரேதா யுகத்தில் ஸ்ரீ மயுரேசர் என்ற பெயரைத் தாங்கி ஆறு திருக் கரங்களோடு மயில் வாகனத்தில்

ஆரோகணித்து, சிந்து எனும் அசுரனை வதம் செய்தார். துவாபர யுகத்தில் ஸ்ரீ கஜானனன் என்னும் பெயருடன் எலி வாகனத்தில் ஏறி, சிந்துாரன் என்ற அரக்கனை அழித்தார். கலி யுகத்தில் தூம்ரகேது என்ற பெயரை உடையராய் இரண்டு கரங்களுடன் குதிரை வாகனம் மீதமர்ந்து, எண்ணற்ற அசுரர்களை அழித்ததாகக் கூறப்படுகிறது. பிரளய கால முடிவில் வக்ரதுண்ட விநாயகராகத் தோன்றி அரி, அயன், உருத்திரன் முதலான மூவர்க்கும் முத்தொழில்களான படைத்தல், காத்தல், அழித்தலை அருளிச் செய்தார். கபில முனிவரது சிந்தாமணியைக் கவர்ந்து சென்ற கணராஜனை வென்று அதனை மீட்டருள, சிந்தாமணி விநாயகராக தோற்றம் எடுத்தார். காகரூபன் எனும் கொடியவனை அழித்து உலகினைக் காக்க, விக்ன ராஜ விநாயகர் என்ற தோற்றத்தைத் தாங்கினார். தேவர்களைச் சிறையில் வைத்த சிந்தாசுரனைக் கொன்று, அவர்களைக் காப்பாற்ற உபமயுரேச விநாயகராக தோற்றினார். பாலசந்திர விநாயகர் எனும் பெயருடன் ஆதவ ராசனுக்கும் அவனுடைய மனைவி சுமுதைக்கும் தீங்கு செய்த தூமராசனைக் கொன்று, அவர்களைக் காப்பாற்றினார். கணபதி விநாயகர் எனும் பெயருடன் கஜமுகாசுரனை வெல்வதற்காக சிவபிரானால் படைக்கப் பெற்றவர். விஷ்ணுவின் சாபத்தையும் நீக்கியவர். கணேச விநாயகராக ஐந்து முகத்துடன் தன்னிடம் வரம் பெற்ற பெலி எனும் அசுரன், தேவர்களை வருத்தி கொடுமை செய்த போது தேவர்களின் வேண்டுதலுக்கு இணங்கி அக்கொடிய அசுரனை அழித்தார். துண்டி விநாயகர் என்ற பெயருடன் கொடியவனான துராசதனை அழித்து திவோதாசனைக் காப்பாற்றினார். வல்லபை விநாயகராக மரிசு முனிவரிடம் பெற்ற வல்லபை எனும் சக்தியையும் விஷ்ணுஅளித்த பன்னிரு சக்திகளையும் ஏற்று விஷ்ணுவுக்கும் யோக ஞான தத்துவம் எனும் கணேச கீதையை அருளிச் செய்தார்.

விநாயகர் எட்டுத் தோற்றங்களை எடுத்ததாக முத்கல புராணம் கூறுகிறது. அசுரர்களைப் போன்ற மனிதர்களிடம் காணப்படுகிற மாத்ஸர்யம், மதம், மோகம், உலோபம் , காமம், குரோதம், மமதை,



பொது
வாசிகசாலை
...

தன்னலம் என்ற எட்டுக் கெட்ட குணங்களைக் கொல்ல அவர் அந்தத் தோற்றங்களை எடுத்ததாகக் குறிப்பிடுகிறது. தேவர்கள் சிவபிரானிடஞ் சென்று, தாம் செய்யும் நல்ல காரியங்களுக்கு அசுரர்கள் குந்தகம் விளைப்பதாகவும் அவர்கள் செய்யும் பாவச் செயல்களுக்கே வெற்றி கிடைப்பதாகவும் முறையிட அவர் கருணை கொண்டு விநாயகரைத் தோற்றுவித்தார் எனலிங்க புராணம் கூறுகிறது. தேவர்கள் மட்டுமன்றி யார் நல்ல காரியம் செய்தாலும் விக்னங்களைத் தடுத்து, அவர்களுக்கு துணை நிற்க வேண்டுமெனவும் பணித்தார். விநாயகர் விக்ன கணங்களைத் தோற்றுவித்து விக்கினங்களைத் தடுத்துக் காத்து, விக்கின விநாயகராக திகழ்கிறார் என கூறுகிறது.

காஞ்சிப்புராணமும் கந்தபுராணமும் தோற்றம் பற்றி ஒரே கருத்துடையன. சிவபெருமானும் உமையம்மையும் கைலாயத்திலுள்ள மந்திர சாலாவுக்குச் சென்று அங்கு தீட்டப்பட்ட ஓங்கார வடிவத்தில் தங்களை மறந்து லயித்து நின்றபோது அகர ரூபமான ஆண் யானையாக சிவபெருமானும் உகர ரூபமான பெண் யானையாக உமையும் மாற, அதாவது இச்சா சக்தியும் கிரியா சக்தியும் இணைய ஞானசக்தியான ஓங்கார ரூபனான (அ + உ + ம் – ஓம்) பிரணவன் தோற்றியதாக கூறும்.

"பிடியதனுரு வுமை கொள மிகுகரியது
வடி கொடு தானதடி வழிபடு மவரிடர்
கடி கணபதி வர அருளினன் மிகு கொடை
வடிவினர் பயில்வலி வலம் உறை இறையே"

திருஞான சம்பந்தர், விநாயகர் அடியவர் இடர்(விக்கினம்) நீக்கத் தோன்றியதாகத் தன் திருப்பாடலில் அழகாகத் தீட்டி உள்ளார். சிவபிரான் அடியார்களின் இடர் களைய ஆனை முகனை அருளிச் செய்தவாறு, அசுரர்கிளை அற ஆறு முகனையும் அருளினார் என்க.

"இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவனிறைவன் என்றெழுதிக் காட்டொணாதே" என்கிறார் அப்பர் சுவாமிகள்.

இறைவன் உருவிலி. ஆதி அந்தம் இலாதவன். எங்கும் நிறைந்தவன். இதுவே சித்தாந்தங்களின் முடிபு. தெய்வங்களை யாரும் கண்டிலர். கண்டவர் விண்டிலர் என்கின்றனர். எப்படிப்பட்டவர் என எவரும் கண்டிராத கடவுளுக்கு இவ்வுருவங்களும் உருவகங்களும் கூறுவதேன் என்பது பலர் எழுப்பும் வினா.

பக்குவமடையாத மனிதர்களுக்கு வழிகாட்டிகளாகவே முனிவர்கள், மகாரிஷிகள், மகான்கள், தீர்க்கதரிசிகள் போன்ற பக்குவர்களால் புராணக்கதைகள் உருவாக்கப்பட்டன. தத்துவக் கருத்துக்களைக் கதை மூலமும் தத்துவ உருவ மூலமும் புரியவைத்துள்ளனர். இவைகள் யாவும் வெறுங் கற்பனை அன்று. ஆழ்ந்த தத்துவக் கருத்துக்கள் பொதிந்தவை. புராணக் கதைகளில் ஆணவம், அகந்தை, கொடூரம் என்பவற்றை அசுரர்களாக உருவகப்படுத்தி உள்ளனர். அவர்களுடன் நடத்தும் போர் ஆணவத்தை வலி கெடச் செய்யும் முயற்சியான உருவகம். ஆணவச் செருக்கை அழிக்க திருவருள் ஒன்றால்தான் முடியும். ஆணவத்தைப் பெரும் போராடியே அடக்கமுடியும். இறைவன் திருவருளால் ஆணவம் வலி கெட்ட பின்பே இறைவன் திருவடியை அடையமுடியும் என்பதைக் காட்டுவனவே சூரன் முதலான அசுரப்போராட்டமும் தோற்றபின் இறைவன் காலடியில் சரண் புகுந்து தொண்டராவதுமாகும். விஷ்ணு சர்மாவின் பஞ்ச தந்திரக் கதைகள் எவ்வாறு மூடர்களான இராசகுமாரருக்கு அறிவைப் புகட்டினவோ அவ்வாறுதான் இப்புராணக் கதைகளும் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞ்ஞானத்தைப் புகட்டுகின்றன.

ஊனக்கண்ணரான எமக்கு மனிதனிலும் இருந்து, இறையுருவங்கள் வேறுபட்ட அற்புதமான மனித உருவங்களில் உணர்த்தப்பெற்றவையாகும். அவ்வுருவங்கள் அனைத்தும் தத்துவக் கருத்துக்கள் அடங்கியவை. உதாரணமாக அர்த்த நாரீஸ்வர வடிவம் உலகியலுக்கு அமைவாக ஆயிரந் தத்துவங்களைக் கற்பிக்கிறது. அம்மை அப்பனின் இணைந்த தோற்றம் ஒருமையில் இருமையின் வடிவமாகும்.

ஆணும் பெண்ணும் இணைந்ததே வாழ்க்கை எனும் தத்துவத்தையும் இரு எதிரான சக்திகள், (உதாரணமாக வன்மை – மென்மை, சூடு– குளிர், நட்பு – பகை, இரவு – பகல்) ஒன்று இன்றி ஒன்று இல்லை; இணைந்தே காணப்படும் எனும் நியதியையும் குறிப்பிடுகின்றன. வன்மையும் மென்மையும்– எதிர் சக்திகள் எம்மில் இணைந்திருக்கும் உண்மையை நம் வலம் இடமே மிகத் தெளிவாகப் புகட்டுகின்றன. அதனாலேயே பெண்மையின் மென்மையைப் புகட்டுவான் வேண்டி சக்திக்கு இடப்பாகம் உரித்தாக்கப்பட்டுளது. ஆணின் வலிமையை உணர்த்த சிவனுக்கு வலப்பாகம் உரித்தானது. சிவ சத்தி வடிவினரான ஆனைமுகனின் உருவமும் தத்துவப் பொருளாகவே அமைந்துளது.

ஐங்கரனது ஐந்து திருக் கரங்களும் ஐம் பெருந் தொழில்களைக் குறிக்கும். எழுத்தாணி ஏந்திய திருக்கரம் படைத்தல் தொழிலையும், வரதம் (மோதகம் – பூரணமானவர் என்பதை உணர்த்தும்) தாங்கிய திருக்கரம் காத்தல் தொழிலையும், அங்குசம் ஏந்திய திருக்கரம் அழித்தல் தொழிலையும், பாசம் ஏந்திய திருக்கரம் மறைத்தல் தொழிலையும் உணர்த்தும். நீண்ட துதிக்கை அவரவர் பக்குவ நிலைக்கேற்ப அருளும் அருளலையும் குறிக்கும். சில உருவமைப்பில் கீழ்நோக்கிய திருக்கரம் காணப்படும். அத்திருக்கரம் முத்திப் பேறாகிய திருவடி அடைதலைச் சுட்டுவதாகும். அவரது ஆனை முகம் ஓங்கார வடிவம் குறிக்கும். அது பிரணவ ரூபம்.

நாம் எழுதும் பிள்ளையார் சுழி (உ) பிரணவத்தை உணர்த்தும். பெருவயிறு பிரபஞ்சம் உள்ளடங்கியதைக் காட்டுகின்ற லம்போதர வடிவம். (லம்போ – பெரிய, உதரன்– வயிறு). ஒடிந்த கொம்பு அபர ஞானமாகிய விந்து. இக் கொம்பு கஜமுகாசுரனை அழித்ததுமன்றி ஆக்கல் தொழிலான பாரதக் கதையையும் எழுதியது. ஒற்றைக் கொம்பு இறைவனை உணரக் கூடிய நிலைபேறான பரஞானமாகும். முறம் போன்ற பெரிய திருச்செவிகள் உயிர்களின் மும்மலங்களினது வேதனையைப் போக்கி அருள் புரிவதைக் குறிக்கும். முக்கண்கள் சூரியர், சந்திரர், அக்னியைக் குறிக்கும்.

(சூரியன் – படைத்தல், சந்திரன் – காத்தல், அக்னி – அழித்தல்) முடியில் சூடிய களங்கம் நீங்கிய பிறைச் சந்திரன் உயிர்கள் இருண் மலம் (களங்கம்) நீங்கிய பின் இறைவனடி சேரலாம் என்பதைச் சுட்டுகிறது. அவரது திருவடிகள் வீடுபேறாகிய முத்தி இன்பத்தை குறிப்பனவாகும். அவரது ஆசனமான நான்கு இதழ்களுடைய தாமரைமலர் மூலாதாரத்தைக் குறிப்பதாக அமைந்துளது. வாகனமாகிய பெருச்சாளி ஆணவமலம் நீங்கித் திருவடி அடைந்த ஆன்மாவைக் குறிப்பதாகும். இவ்வளவு பெரிய தொந்திப் பிள்ளையாரை இந்த அற்ப பிராணி எப்படிச் சுமக்கும் என அதிசயப்படுகிறீர்களா? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். அவரது இயக்க சக்தியின் வலிமையையும், தத்துவரீதி யாக அணுவுக்குள் அணுவாகவும் இருப்பார் என்பதையும், ஆணவத்துடன் தன்னை எதிர்த்துப் போராடிய கொடியவனைச் செருக்கடக்கி, அழிக்காமல் தொண்டனாக (எலிவாகனமாக) மாற்றியமை பகைமையை மனதார மறந்தால் அன்புக்குஅடிமையாகலாம் என்பதையும் சுட்டுகிறது. “தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்உற்றால் தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்” என மாயையின் மைந்தன், கந்தனின் அருள் பெற்றுய்ந்ததைக் கூறுகிறார் கச்சியப்பர்.

கணபதியைப் பரம்பொருளாகக் கொள்ளும் காணாபத்தியரும் அவரின் அங்கங்களுக்கும் பெயர்களுக்கும் தத்துவப் பொருள் கூறுவர். கணபதி மூலாதார சக்தி வடிவினர் என்றும் துதிக் கை ஓங்காரத்தைக் குறிக்கும் என்றுங் கொள்வர். கணபதி என்பதில் உள்ள க – ஞானம் என்றும் ண– மோட்சம் என்றும் பதி – இருப்பிடம் என்றும் பொருள் கொண்டு அவர் அறிவுக்கும் வீடு பேற்றுக்கும் உரிய கடவுள் என்பர். கணபதியின் முகம் விஷ்ணு ஸ்வரூபம் என்றும் கண் சிவ ஸ்வரூபம் என்றும் இடப் பாகம் சக்தி ஸ்வரூபம் என்றும் வலது பாகம் சூரியஸ்வரூபம் என்றும் அங்கதத்துவம் கூறுவர். காரியங்களைக் கெடுக்கும் ஆணவம் என்ற அரக்கனை அழித்து வெல்லுபவர் கணபதி என்ற நம்பிக்கை உடையவர்கள்.

கிரேக்கப் பேரரசு காலத்திலேயும் உருவ வழிபாடு நடந்து வந்திருக்கிறது. பக்குவர்களால் தான் அரூபனான இறைவனைத்

தியானிக்கமுடியும். சாதாரண மனிதர்களாகிய நாம் ஒரு உருவம் இல்லாது மனக்கண் முன் நிலைநிறுத்த முடியாது. எம்போன்ற பக்குவம் இல்லாதோர்க்கு உருவ வழிபாடு அவசியமாகிறது. இஸ்லாம் மதத்தைத் தவிர்ந்த மற்றைய சமயங்கள் எல்லாவற்றிலும் உருவ வழிபாடு முக்கிய இடம் பெறுகிறது. உருவ வழிபாடு இல்லாவிடிலும் ஒரு குறியீடாவது இருக்கும். இஸ்லாம் மதத்திலும் நோன்பை ஒட்டிய ஒரு பழ மொழி உண்டு. 'பிறையைக் கண்டு பிடி, கண்டு விடு' என்பதாம். பிற மதக் கடவுளர் பலர் பூமியில் அவதரித்த மகான்கள். கண்ணால் காணப் பெற்ற அவதார புருஷர்கள். ஆயின், சைவக்கடவுளர் அப்படியல்லர். ஆதி அந்தம், பிறப்பு இறப்பு, உருவம் என இல்லாதவர். எமது அறிவுக்கும் அப்பாற்பட்டவர். ஞானியர், பக்தர்களின் மனதில் தோற்றிய தெய்வீக வடிவங்களே இந்துக்கடவுளர் உருவங்கள். அவரவர் பக்குவ நிலைக்குத் தக்க வாறு அருவமாகவும், அருவுருவமாகவும், உருவமாகவும் வழிபடுவர். உருவ வழிபாட்டில் நம்பிக்கை அற்றவர்களுக்குச் சுவாமி விவேகானந்தர் விளக்கிய ஒரு செயதியைத் தருவது பொருந்தும்.

ஆல்வார் (Alwar) மாநில இளவரசன் உருவ வழிபாட்டைத் தான் ஏற்பதில்லை எனக் கூறிய போது, சுவாமிகள் அவ்விளவரசரது உருவப் படம் ஒன்றைக் கொண்டு வரும்படி பணித்தார். அவரது வேலையாளை அழைத்து அப்படத்தின் மீது எச்சியைத் துப்பும்படி பணித்தார். சபையோர் திகைக்க வேலையாள் துடிதுடித்து நின்றான்.சுவாமிகள் பல முறை வற்புறுத்திய போதும் மறுப்புத் தெரிவித்த அவன் "சுவாமி, இது எமது மகாராசா. இதை எப்படி நான் எச்சிற்படுத்துவேன்' எனப் பதில் இறுத்தான். இளவரசரின் கண்ணும் திறந்தது. மகாராசாவின் படம் அந்த வேலையாளுக்கு எப்படி மகாராசா ஆனதோ அதேபோன்று வணங்கப்படுகின்ற உருவங்களும் அவரவர்க்குத் தெய்வமாகின்றனவென விளங்க வைத்தார். இதே கருத்தை திருமூலர் அழகாக விளக்குகிறார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார் முதற் பூதம்
பரத்தில் மறைந்தது பார் முதற் பூதம்"

இத்திருமந்திரம் எமது பக்குவ நிலையின் தன்மையை உணர்த்தி நிற்கிறது. மரத்திற் செதுக்கப்பெற்ற யானைச் சிற்பம் அல்லது வாகனத்தை 'இது என்ன இன மரம்? வேம்பா தேக்கா?' என ஆராய்பவன் கண்ணுக்கு அது மரமாகவே தோற்றும். யானையாகத் தெரியாது.. யானை என எண்ணிப் பார்ப்பவனுக்கு அதன் அங்க அமைப்பு, கலைநுட்பம் என்பனவே தெரியும். அவன் கண்ணுக்கோ மனத்துக்கோ மரமாகத் தெரியாது. இதே கருத்துப்பட கிராமிய மக்கள் "கல்லைக் கண்டால் நாயைக் காணோம், நாயைக் கண்டால் கல்லைக் காணோம்" எனக் கூறுவர். கல்லிற் செதுக்கிய நாயின் சிற்பத்தை வெறுங்கல்லாகக் காண்பதில்லை. விக்கிரகங்களும் தெய்வம் என எண்ணுவோனுக்கு தெய்வமாகும். அது கல்லாகவோ செம்பாகவோ தெரிய மாட்டாது. கல்லு, செம்பு என எண்ணி நோக்குபவனுக்கு அங்கே கடவுள் தெரியமாட்டார்.

அன்றியும் எப்பொருளையும் நாம் உருவம் இன்றி சிந்திக்க முடியாது என்பது மறுக்க முடியாத உண்மை. உதாரணமாக மனிதன், விலங்கு என நாம் சுட்டும்போது அவற்றின் உருவம் எம் மனதில் பதிகிறது. உருவமின்றேல் எப்பொருளையும் மனதில் நினைப்பது அரிதாகிறது.இந்த காத்திரத்தன்மையை புரிந்ததால்தான் நம் முன்னோர் அருவமான இறைவனை எம் சிந்தையில் இருத்த உருவத் திருமேனியாக காட்சிக்கு உட்படுத்தினர். விநாயகப் பெருமானது உருவங்களையும் பலவடிவங்களில்– நர்த்தன விநாயகர், சுபாசன விநாயகர், இடம்புரி விநாயகர், வலம்புரி விநாயகர், பஞ்சமுக விநாயகர் என பல வடிவில் அமைத்துள்ளனர்.

மேலும் சுயம்பு மூர்த்தியாக சாதாரண கல்லிலும் அரச, ஆலமர வேர்களிலும் அவர் வடிவுகண்டனர். இத்திருவுருவங்கள் யாவும்

ரிஷிகளாலும் முனிவர் களாலும் இறைவனையும் மனிதனையும் தொடர்புபடுத்தும் ஒரு தொடர்பு சாதனமாக அமைக்கப் பெற்றவை என்பதை உணர்ந்து கொண்டால் வேறு கேள்விக்கே இடமில்லை. இந்தத் திருவுருவங்கள் யாவும் ஆகம விதிப்படி தத்துவங்களின் விளக்க மாக அளவுப் பிரமாணங்களுக்கு ஏற்ப அமைக்கப்படும். அவ்வமைப்பில் ஏதும் குற்றம் இருப்பின் அதனால் பல் வேறு தீங்குகள் ஏற்படும் என சிற்ப சாஸ்திரநூல்களும் ஆகமங்களும் கூறுகின்றன.

விநாயகரின் திருவடிவம் மனதில் நினைப்பதற்கு மிகவும் எளியது. பவள நிறம், அருள் பொழியும் அழகிய ஆனை முகம், பக்தர்கள் குறை கேட்கும் பெரிய சுளகுக்காதுகள், நீண்ட துதிக்கை, ஒற்றை மருப்பு, புருவம் அமைந்த தீட்ஷண்யமாக நோக்கும் மானுடக் கண்கள், பூதகணம் போன்று தொப்பை வயிறும் குறுகிய கால்களும், தேவர் போன்ற நான்கு திருக்கரங்களும் கொழு கொழு என்ற குழந்தை உடல்வாகும், மனதிற் பதிந்திடும் நரகஜ விசித்திர உருவம்.



விநாயகரின் வடிவம் பெரும்பாலும் துதிக்கை இடப்பக்கம் வளைந்திருக்கும். இடம்புரி விநாயகர் என்பர். துதிக்கை வலப்பக்கமாக வளைந்த வலம்புரி விநாயகர் வடிங்கள் சில இடங்களில் அபூர்வமாகக் காணப்படுகின்றன. அவை சக்தி மிக்கனவாகக் கருதப்படும். மகா கணபதி, மோட்ச கணபதி, சித்தி கணபதி, வித்தியா கணபதி, ஏகம்ப கணபதி ஆகிய ஐந்து மூர்த்தங்கள் சேர்ந்த வடிவமே பஞ்சமுக கணபதி ஆவர். ஐந்து திருமுகங் கொண்டவர். சிவமூர்த்தம் போன்ற முகம் ஐந்து உடைமை சிவ அம்சம் உடையவர் என்பதைக் குறிக்கின்றது. வெண்மை நிறமும் யானை வாகனமும் உடையவர்.

ஏரம்ப கணபதி யானை முகம் ஐந்துடையவர். அபயம், வரதம், பாசம், தந்தம், அட்சமாலை, மாலை, பரசு, சம்மட்டி, மோதகம்,


பொது நூலகம்
தெற்கு பிரதேச
அலுவலகம்

பழம் தாங்கிய பத்துத் திருக் கரங்களை உடையவர். ஏரம்ப கணபதி சிங்க வாகனத்தில் வீற்றிருப்பவர். பசுமை கலந்த கருமை நிறமுடையவர்.


ஏரம்ப கணபதி

கொடிக் கம்பத்தின் அடியில் சிறிய உருவில் நாலு இதழ்க்கமலத்தில் வீற்றிருப்பவர் மூலாதார விநாயகர். மனித உடலில் அமைந்திருக்கும் முள்ளந் தண்டின் உருவகமாக ஆலயத்தில் கொடிமரம் அமைந்துளது. முள்ளந்தண்டின் அடியில் குண்டலினி சக்தி அமைந்திருக்கிறது. அக்குண்டலினி போன்றே மூலாதாரக் கணபதி இருக்கிறார். இவர் எல்லாக் கோவில்களிலும் கொடி மரத்தின் அடியில் வீற்றிருந்து அருளாட்சி புரிவதைக் காணமுடியும். இம்மூலாதாரக் கணபதியை நாம் வணங்கி தோப்புக்கரணம் போடும்போது நமது முள்ளந்தண்டின் அடியிலுள்ள குண்டலினி சக்தியை (எம்மில் மறைந்திருக்கும் தெய்வீக சக்தி) சுழுமுனை நாடியைத் தட்டி எழுப்புகிறோம்.

அடுத்து தூமகேது கணபதி, தூமம் என்றால் இராகுவையும் கேது என்றால் ஞானாகரன் கேதுவையும் குறிக்கும். இந்த இரண்டும் சேர்ந்த உருவமைப்பு தூமகேது கணபதி ஆகும். "புராணகால முக்கியத்துவம் பெற்ற திருநீர் மலையிலுள்ள (சென்னை) மணிகர்ணிகா தடாகத்தின்கிழக்குக் கரையில் தூமகேது கணபதி வீற்றிருக்கிறார். இராகு, கேது தோஷங்களைப் போக்கும் சக்திமிக்க தலமாக விளங்குகிறது. புராண, ஆகமங்களில் புகைவடிவ தூமராசன்


*தூமகேது கணபதி*

## பிள்ளையாரின் தோற்றங்கள் சில



இடஞ்சுழிவிநாயகர்



வலஞ்சுழி விநாயகர்



இரட்டை விநாயகர்



நர்த்தன விநாயகர்



பாலச்சந்திர விநாயகர்



பஞ்சமுக விநாயகர்



சித்தி புத்தி விநாயகா



வல்லபை கணபதி



சுஹாசன கணபதி

என்ற அரக்கனை அழித்த ரூபமான தூமகேது எனப் புகழப்படுகிறார்."[32]


ஒரிஸாவில்சித்திகணபதி

பிள்ளையார் பிரமச்சாரி என்றே கொள்ளப்படுபவர். ஆயினும் உலகியல் ரீதியில், சித்தி (வெற்றி), புத்தி(ஞானம்), வல்லபி(வல்லமை) என்பவற்றை, சக்தி–மனைவி என்ற அர்த்தத்திற் குறிப்பிடுகின்றனர். ஆனால் பிள்ளையார் மட்டுமன்றி சிவன், முருகன் முதலானோருக்கும் சக்தி என்பது அவரவரவது ஆற்றலையே குறிக்கின்றது. சக்திக்கு மனைவி, ஆற்றல் எனும் இரு பொருள் உண்டு. மனைவி என்பவள் மனைக்குரிய பெண் என்பது பொருள். ஆகவே சக்தி என்பது பெண்ணைக் குறிக்கும் ஒரு சிறப்புச் சொல்லாகும். தனித்து மனையாட்டியை மட்டும்குறிக்கும் சொல்லன்று. சைவவினா விடையில் ஆறுமுகநாவலர் சிவபெருமான் ஐந்தொழில்களையும் தன் சக்தியாகிய (இங்கு ஆற்றலையே குறிக்கின்றது) உமையம்மையைக் கொண்டு செய்விக் கின்றாரெனக் கூறியிருப்பது தெரிந்ததே. நம்மவர்கள் சக்தியை அதாவது ஆற்றலைப் பெண்ணாகவே உருவகப் படுத்துதல் மரபு. அதனாலே தான் அவரது ஆற்றல்களான சித்தியும், புத்தியும், வலிமையும் பெண்ணாக உருவகம் பெற்றுள்ளன. சிவனது நெற்றிக்கண் ஞான ஒளித்தோற்றம் முருகன் போல் பிள்ளையாரும் அவரது சித்தி, புத்தி அம்ச தோற்றமென சைவ நூல்கள் கூறுகின்றன. பிள்ளையார் கொழு கொழு என்ற வாளிப்பான குழந்தைகட்கே உரிய உடலமைப்பையும், அன்றலர்ந்த மலர் முகத்தையுங் குறுகிய கால்களையும், தொப்பை வயிற்றையும் கொண்டவர். பார்வதி பரமேஸ்வரனது அரவணைப்பில் சோமகணபதியாக வீற்றிருக்கும் பிள்ளையார் (குழந்தை) அவர். பிள்ளை+ஆர் –பிள்ளையார். ஆர் விகுதி மரியாதையைக் குறிப்பது. தந்தையார், தங்கையார், மைத்துனனார் என்பன போல மரியாதை உணர்த்தப் பிறந்த சொல்லே பிள்ளையார். தன் மடி மீது வல்லபை எனும் சக்தியைத் தாங்கி இருக்கும்போது வல்லபை கணபதி ஆகிறார். இருபக்கலும் சித்தி,

புத்தி எனும் சக்திகளையும் இருத்தி, தன் அடியாருக்குக் காரிய சித்தியையும் ஞானத்தையும் அளிக்கும் தோற்றத்தில் சித்தி விநாயகன், ஞானக் கொழுந்தன் ஆகிறார்.

விநாயக சோடச மூர்த்தங்கள் 32 என்றும் அவற்றுள் தற்காலம் நடைமுறையில் சுகர் முதல் ஸ்கந்த பூர்வஜர் வரையான 16 மூர்த்தங்களே விஷேடம் பெற்றனவாகவும் கொள்ளப்படுகின்றன. சோடச அர்ச்சனையின்போது இம்மூர்த்தங்களின் திருநாமங்களே ஓதப்படுகின்றன. அவையாவன.

சுமுகச்ச ஏக தந்தச்ச கபிலோ கஜ கர்ணக /
லம்போதரச்ச விகடோ விக்ன ராஜோ விநாயக/
தூம கேதுர் கணாத்யஷோ பாலசந்திரோ கஜானனா/
வக்ரதுண்ட சூர்ப்பகர்ணோ ஹேரம்ப ஸ்கந்தபூர்வஜ/

இந்த மூர்த்த தத்துவங்களுக்கு அமையவே திருக்கரங்கள், முகங்கள், வாகனங்கள், நிறங்கள் என்பன அமையும். மூர்த்தங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவையாகக் கொள்ளப்படுகின்றன. ஏனெனிற் குறித்த காரிய நிறைவேற்றத்துக்காகவே கொள்ளப்படுந் தோற்றங்கள் அவை. விநாயகருக்கும் 108 திரு நாமங்கள் உண்டு. அவைகள் நாமாவலியின் போது ஓதப்படுகின்றன. இத்திரு நாமங்கள் அவரது முதன்மை, வீரம், வெற்றி, காரிய சித்தி, ஞானம், சக்தி, உருத் தோற்றம் முதலான பல அம்சங்கள் அடங்கியன.

அவற்றில் சிலவற்றிற்கு விளக்கம்: விநாயகர் எனும் பெயர் வி+மேலான, சிறந்த, இன்மை எனப் பல பொருள் உணர்த்தும். நாயகன் - தலைவன். தனக்கு மேலான ஒரு தலைவன் இல்லாதவர் என முதன்மையை குறிக்கிறது. கணபதி, கணேஸ்வரர் பதினெண் கணங்களுக்கும் தலைவன். வக்ரதுண்டர், (வக்ரம் –வளைவு, சென்ற வழியே மீளுதல், பொய்ம்மை எனப் பலபொருள் கொண்டது) வளைந்த கொம்பு எனவும், கஜமுகாசுரனை மூர்ஷிகமாக மாற்றியபின் மீண்ட கொம்பை உடையவர், பொய்ம்மை உணர்வு தருகின்ற மாயையைத் துண்டிப்பவர் எனப் பொருள்படும். விக்னேஸ்வரர் – விக்கினங்களை நீக்கி காரியசித்தி தருபவர்.

பிள்ளையார்–பார்வதி பரமேஸ்வரனுக்கு மூத்த பிள்ளையாக அவதரித்தமையால் அப்பெயர் அமைந்தது. ஐங்கரன்– நான்கு கரங்களுடன் ஐந்தாங்கரமாகத் துதிக்கையும் சேர ஐங்கரன் எனப் பெயர் பெற்றார். கஜானனன், ஆனை முகன்– ஆனை முகம் அமையப்பெற்றதனால் அப்பெயர் பெறுவர். (கஜ+ஆனனம்,கஜம்– யானை, ஆனனம்–முகம்) விகடன்–விஷ்ணுவை நடனமாட வைத்து சிரிப்பூட்டியமையால் விகடன் ஆனார்.

கணேசர் – க – மனோ வாக்குகள், ண – அவற்றைக் கடந்த நிலை, ஈசன் – இறைவன்என மனோ வாக்குகளுக்கும் அவற்றைக் கடந்த நிலைக்கும் இறைவன் கணேசன் ஆகிறார். பூத கணங்களுக்குத் தலைவன் என்றும் பொருள் கொள்வர். கணபதி என்பதன் பொருளும் அஃதேயாம். லம்போதரன், லம்போ – பெரிய, உதரன் – வயிறு – பெரியவயிற்றுக் கடவுள் என வழங்கலாயிற்று.

பாலச்சந்திரர் – முடியில் பிறை சூடியபடியால் அவ்வாறு அழைக்கப் பெற்றார். பிரணவன் – ஓம் எனும் பிரணவ வடிவினன்.

## விநாயகரின் ஆறு படைவீடு

| | |
|---|---|
| முதலாம் படைவீடு | திருவண்ணாமலை–அல்லல் தீர்க்கும் விநாயகர் |
| இரண்டாம் படை வீடு | திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) ஆழத்துப் பிள்ளையார் கல்விச் செல்வம் சிறந்து விளங்கச் செய்பவர் |
| மூன்றாம் படைவீடு | திருக்கடவூர் கள்ளவாரண பிள்ளையார். மரண பயத்தை நீக்குபவர். |
| நாலாம் படைவீடு | மதுரை சித்தி விநாயகர். காரியசித்தி அருளுபவர். |
| ஐந்தாம் படைவீடு | பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர். அனைத்து இன்பங்களையும் தருபவர். |
| ஆறாம் படைவீடு | திருநாரையூர் பொள்ளாப்பிள்ளையார். ஞானந் தருபவர். |

# ஈழநாட்டில் உள்ள விஷேடம் பெற்ற விநாயக திருத்தலங்கள்

"ஆக்கையாற் பயனென்
அரன் கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாத இவ்
வாக்கையாற் பயனென்"

*அப்பர் சுவாமிகள்*

விநாயகப் பெருமானின் முதன்மையையும் சக்தியையும் உணர்ந்த நம் முன்னோர் எமது தாய்த் திருநாட்டிலும் அநேக விநாயகர் கோயில்களை அமைத்துப் போற்றினர். விநாயகர் துணை வேண்டி அவரை வழிபட்ட பின்னரே எந்தவொரு நல்ல காரியமும் தொடங்குவது மரபாகிவிட்டமையால் பிள்ளையார் இல்லாத ஊரே இல்லை எனும்படி மரங்களின் கீழும் சிறிய கோயில்களிலும் ஆகம விதிப்படி அமைந்த கோயில்களிலுமாக மூலை முடுக்கு யாங்கணும் பிள்ளையார் எழுந்தருளச் செய்துள்ளனர். அவர் எழுந்தருளி யிருக்கும் (ஆவாகனம் செய்யப்பெற்றிருக்கும்) கோயில்களிற்பல, மூர்த்தி, தல, விருட்ச, தீர்த்த விஷேடம் பெற்றவையாக விளங்குகின்றன. பண்டை நாளிலும் இலங்கையிற் பரவலாக விநாயகர் ஆலயங்கள் இருந்தமைக்கு மிகுந்தலைச் சிற்பமும், வன்னி, பூவரசங்குளம், அனுராதபுரம், பொலநறுவை, களுத்துறை, தெய்வந்துறை, ஆகிய இடங்களில் காணப்படும் அவற்றின் அழிபாடுகளும் சான்று பகர்கின்றன. இவை அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிந்தனவேனும், இன்றும் பல இடங்களில் பழைய விநாயக ஆலயங்கள் பிரசித்தி பெற்று விளங்குகின்றன.

(1) பரராசசேகரனால் நிர்மாணிக்கப்பட்ட நல்லூரில் அமைந்திருக்கும் வெயிலுகந்த பிள்ளையார் கோயில். நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கும் முத்திரைச் சந்திக்கும் இடையில் பருத்தித்துறை வீதியில் சிறிய கோயிலாக இன்றுமுளது.

(2) கருணாகரத் தொண்டமானால் உரும்பராயில் அமைக்கப்பெற்ற விநாயகர் ஆலயம். அது இன்றும் ஸ்தாபித்தவர் பெயர் கொண்டே அழைக்கப்படுகிறது.

(3) பள்ளுப்பாடல்பெற்ற தலமான சுளிபுரம் பறாளாய்ப் பிள்ளையார் கோயில். ஓரற்புதம் நிகழ்ந்த கோயிலுமாகும். அந்த ஆலயத்தை அழிக்க வந்த அந்நிய தளபதியின் கண்ணைக் காகம் கோதியதே அவ்வற்புதம். அதனால் கண்ணைக் கோதிக் காக்கைப் பிள்ளையார் எனவும் வழங்கப்படுகிறது. இவ்விபரம் அவ்விநாயகர்மேல் பாடப்பெற்ற பள்ளுப் பாடல் மூலம் அறிய முடிகிறது.

(4) இரகுவம்ச காவியத்தைத் தமிழில் யாத்த அரச கேசரியினால் நீர்வேலியில் நிர்மாணிக்கப் பெற்ற அரச கேசரிப் பிள்ளையார் ஆலயம். இன்றும் அவர் பெயர் கொண்டே வழங்குகின்றது.

(5) வல்லிபுரத்தில் உள்ள ஆலமரங்களும் குளமும் வயலும் சூழ்ந்த குருக்கட்டு சித்தி விநாயகர் கோயில். தல விருட்சம் ஆலமரம். இவருக்கு முதற்பூசை முடித்தே வல்லிபுர ஆழ்வாருக்குப் (மூலவர்) பூசை நடைபெறுகிறது. இங்கே மட்டுமன்று; தென்னிந்திய வைஷ்ணவத் திருத்தலங்களிலும் பிள்ளையாருக்கு முதற்பூசை நடைபெறுகிறது. இவ்வழக்கம் பண்டுதொட்டு நடைபெற்றுவரு கிறது. இஃது, வைஷ்ணவ கோயில்களிலும் பண்டைநாள் முதல் பிள்ளையாருக்கு முதற்பூசை செய்யும் வழக்கம் இருந்துவந்தது என்பதைத் தெரியத்தருகிறது. இவ்வாலயத்தின் மேற்குத் திசையில் உள்ள ஆலயத் திருக்குளம் ஒன்றில் இருந்தே திருமண் எடுக்கப்படுஞ் சிறப்பும் உடையது.

(6) மானிப்பாயில் அமைந்துள்ள மருதடிப் பிள்ளையார் கோயில். இக்கோயிலின் தல விருட்சம் மருத மரமாகையால் அப்பெயர் கொண்டு வழங்கப்படுகிறது. இக்கோயிலை ஒட்டிய செவி வழிக்கதை ஒன்று உண்டு. கோயிலுக்கு எதிரே கிறிஸ்தவ கோயில

ஒன்று கட்டப்பட்டபோது கிழக்குப் பார்த்த மூலவர் திரும்பி மேற்குப் பார்த்துத் திரும்பியதாகக் கூறப்படுகிறது. இந்துக் கோயில்களை அழித்து கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்ட காலத்தில் நடந்ததாகக் கூறப்படும் இச்செவி வழிக்கதைக்குக் காரணம் எதுவும் தெரியவில்லை. இந்து மதம் சிவனை யேசுவிலும், புத்தரிலும், நபிகளிலும் கண்ட மதம். எம்மதமும் சம்மதமெனக் கொண்ட மதம். ஆகையால் இந்த ஐதீகக் கதையின் உண்மைத் தன்மை கேள்விக்குரியதே! மேலேகுறிப்பிட்ட விநாயகர் கோயில்கள் அனைத்தும் யாழ் குடா நாட்டில் அமைந்தவையாகும்.

இது இவ்வாறிருக்க, இந்தியாவிலும் இத்தகைய கதைகள் உண்டு. திருச்சி தாயுமானவர் கோயில் மூலவர் செவ்வந்திநாதரும் தன்னை நித்தம் செவ்வந்திப் பூக் கொண்டு அர்ச்சிக்கும் பக்தனின் குறை தீர்க்க, கிழக்குப் பார்த்தவர் அப்பக்தனின் குறையைத் தீர்க்காத அந்நாட்டு அரசனைத் தண்டிக்கும் முகமாக அவனது தலை நகரைப் பாராது மேற்கே திரும்பியதாக அத்தல வரலாறு கூறுகிறது. இன்னும் ஆந்திரப்பிர தேசத்தில் உள்ள ஐம்பூத தலங்களில் ஒன்றான திருக்காளகஸ்தியில் பொன்முகலி ஆற்றில் தீர்த்தமாடி, கிழக்குப் பார்த்து வணங்கிய முனிவர்களுக்கு காளகஸ்தீஸ்வரர் மேற்கு நோக்கிக் காட்சி அளித்ததாகக் கூறப்படும் ஒரு ஐதீகக் கதையும் உண்டு. அத்தலத்திலும் காளகஸ்தீஸ்வரர் மேற்குப் பார்த்தே இருக்கிறார். மேற்குப் பார்த்த கோயில்கள் அரிதாகவே காணப்படும். அவ்வாறு இருப்பதற்கான காரணங்களும் கற்பிக்கப்படுகின்றன. அவைகள் கற்பனையோ உண்மையோ ஒருவிதத்தில் கடவுள் நம்பிக்கைக்கு வலுவூட்ட எழுந்த யுக்தியாயும் இருக்கலாம்.

(7) கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புப் பகுதி அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. மாமாங்கத் தீர்த்தக்குளத்தின் அருகே மடாலயங்கள் கடை வீதிகள் சூழ இக்கோயில் அமைந்துள்ளது. இங்கேயும் மூலஸ்தானத்தில்

லிங்கமே உளது. இப்போது வெள்ளியினாலாய ஐங்கரன் கவசம் சார்த்தி வழிபாடு நிகழ்கிறது. இலங்காபுரியை எரித்த அநுமன் தன் வாலிற் பற்றவைத்த நெருப்பை இக்குளத்திலேயே அவித்தமையால் இத்திருக்குளம் புனிதம் பெற்றது என்பர். வடக்கே கீரிமலை நகுலேஸ்வரர் கோயில்போன்று கிழக்கே ஆடி அமாவாசையன்று பிதிர்க்கடன் செய்யும் புண்ணிய தலமாக இது விளங்குவதற்கு இக்கதை காரணமாம். இது மூர்த்தி, தல, தீர்த்த விஷேடம் பெற்ற கோயிலாகும்.

(8) தெற்கே கதிர்காம மாணிக்கப் பிள்ளையார் கோயில் பிரசித்தி பெற்ற கோயிலாகும். இக்கோயில் கதிர்காம முருகன் கோயிலின் வலப்பக்கமாக அமைந்துள்ளது. பக்தர்கள் மாணிக்க கங்கையில் நீராடி மாணிக்கப் பிள்ளையாரை வணங்கிய பின்னரே கதிர்காமக் கந்தனை வணங்கச் செல்வர். பூசை முறைமையும் பிள்ளையார் கோயிலில் பிராமணர் மந்திரபூசை செய்த பின்னரே கதிர்காமக் கந்தனுக்கு, கப்புறாளைகளால் மந்திரமின்றி வாய்கட்டிப் பூசை நடைபெறும். கி.பி 500ஆம் ஆண்டளவில் இலங்கைக்கு வந்த விஜயன் கதிர்காம முருகன் கோயிலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. ஆகவே, முதற்பூசைக்கு உரியவராக இருக்கும் பிள்ளையார் வழிபாடும் வழக்கொழியாது அன்று தொட்டு இன்று வரை நடை பெறுவதாகக் கருத இடமுண்டு.


இங்கே, முத்துலிங்க சுவாமி கோயிலில் இயற்கையான கல்லில் அற்புதமான மூன்று பொள்ளாப் பிள்ளையார்களைத் தரிசிக்க முடியும்.

(9) செல்லக்கதிர்காமப் பிள்ளையார்கோயில், கதிர்காமக்கந்தன் கோயிலுக்குச் சுமார் 2கி.மீ. தொலைவில் மாணிக்க கங்கைக் கரையிலேயே அமைந்துள்ளது. அதனால் யாத்திரிகர்கள் அப்புனித தீர்த்தத்தில் நீராடிப் பொங்கிப் படைத்து வழிபடுவர். கதிர்காம முருகன் கோயில் யாத்திரிகர்கள் செல்லக் கதிர்காமப் பிள்ளையாரையுந் தரிசிக்கத் தவறுவதில்லை.

(10) வடக்கில் மகோற்சவச் சிறப்புக்களோ ஆகம முறைப்படி கட்டிடமோ இல்லாமல் மகிமையுடன் விளங்குவன தில்லையம்பலப் பிள்ளையார்கோயிலும் முறிகண்டிப் பிள்ளையார் கோயிலுமாகும். தில்லையம்பலப் பிள்ளையார் கோயில் வரணிப் பகுதியில் திறந்த வயல்வெளி நடுவே அமைந்துள்ளது. மாடு வளர்ப்போரால் சிறப்பாக வழிபடப்படும் ஒரு கோயிலாகும். பசுக்குலத்துக்கு நோய் நொடி தீங்குகள் நேரிடும்போது இத்தல மூர்த்திக்கு நேர்த்தி வைப்பர். தமது பசுக்களின் பாலில் இருந்து கிடைக்கும் நெய்யை முதலில் இப்பிள்ளையாருக்கு நேர்ந்து எடுத்துவைத்த பின்பே உபயோகத்துக்கு எடுப்பார்கள். வசதிப்படும்போது அக்கோயிலுக்குச் சென்று அப்பசுவின் பாலபிஷேகம் செய்வர். மோதகம், கொழுக்கட்டை செய்து நேர்ந்து வைத்திருந்த நெய்யிற் பொரித்து, பொங்கிய பாற் பொங்கலுடன் படைத்து வழிபாடு செய்வர். கோயில் சிறிதானாலும் இவை செய்வதற்கான வசதிகள் அனைத்தும் உண்டு. குடிமனை யற்ற இடமாக இருந்தாலும் வயல் வெளியில் ஆடு மாடு மேய்க்கும் சிறுவர்கள் வந்து பூசையிற் கலந்து கொள்வர். வழிபாட்டுக்குச் செல்வோரும் அவர்களுடன் சேர்ந்து வழிபட்டுப் பிரசாதமும் வழங்கி, மனநிறைவுடன் வீடு திரும்புவர்.

(11) நடுக்காட்டு வழியில் அரச மரத்தடியில் கடைவீதிகள் அயலில் அமைய ஒரு சிறு குடிலில் இருந்துகொண்டு அருளாட்சி புரிபவர் முறிகண்டிப் பிள்ளையார். இவருக்குக் கோபுரமும் இல்லை; ஆகமவிதிப்படி அமைக்கப்பட்டகோயிலும் இல்லை; மகோற்சவச் சிறப்புகள் எவையும் இல்லை. ஆயினும், மகோற்சவ காலம்போல் எந்நேரமும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழியும். இரவுபகலிலும் கொழுந்து விட்டெரியும் கற்பூரச் சுவாலையும் அரோஹரா ஓசையும் பக்தி வெள்ளம் பெருக் கெடுத்து ஓடும் சூழலை வெளிப்படுத்தி நிற்கும். கொளுத்தும் வெய்யிலிலும் நின்று தம் பயணம் இடையூறு ஏதும் இன்றி இனிது நிறைவேற வேண்டுமென வேண்டிச் சிதறு தேங்காய் உடைக்கும் பயணிகள் கூட்டம் சொல்லுந் தரமன்று. அவ்வீதியிற் செல்லும் எந்த வாகனம்

என்றில்லை, எச்சமயத்தவர் என்றில்லை, கோவிலில் தரிக்காமல் தொடர்ந்து செல்வதில்லை. வாகனத்தை விட்டுக் கீழிறங்கிப் பணிந்து வழிபட்டுச் சென்றால் இடையூறு வராது என்று நம்புவர். நம்பிக்கை இன்றிப் புறக்கணித்துச் செல்வோர் இடையூறு சந்திப்பது நிகழ்வுண்மை. தலம் சிறிதாயினும் அதன் சக்தி அளப்பரியது. விக்கினங்களைத் தடுத்து உயிர் காக்கும் விநாயகராக நடுக்காட்டில் இருந்து கொண்டு பயணிகளின் பிரயாணப் பயத்தைப் போக்குகிறார். மேலும், தலச்சூழலில் உணவுக் கடைகள், குளிர் பானவகைகள், இளநீர், பழவகைகள் என்பன நிறைந்திருப்பதால் பசி, தாகம், களை ஆகியவற்றைப் போக்கவும். நீண்ட தூரப் பயணிகட்கு ஒரு இளைப்பாறும் இடமாகவும் அமைந்துளது.



# விநாயகப் பெருமானின் அருளாற்றலும் பெருமையும்

“ஞானத் தால் தொழுவார்சில ஞானிகள்
ஞானத் தால் தொழு வேன் உனை நான்அலேன்
ஞானத் தால் தொழு வார்கள் தொழக்கண்டு
ஞானத் தாய் உனை நானுந் தொழுவனே“

*– அப்பர் சுவாமி*

விநாயகப் பெருமானை வழிபடுவோரும் விரதம் அனுட்டிப்போரும் அடையும் பலன்களை முனிவர்களும் நாயன்மார்களும் அவனடி பணிந்து உய்யப் பெற்றோரும் கூறியவற்றைப் புராணங்கள், வரலாறுகள், சமயநூல்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது. வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் அளிப்பவன் விநாயகன். ஆனை முகன் திருவடி பணிந்தால் கலை ஞானம் கற்காமலே வரும் எனத் திருவருட் பயன் கூறுகிறது.

“நற்குஞ்சரக் கன்று நண்ணின் கலை ஞானம்
கற்குஞ் சரக் கன்று காண்”

கலை ஞானம் என்பது கற்றுத் தெளியும் நூலறிவு அன்று. குஞ்சரக் கன்றின் அருள் பெற்றவருக்குக் கற்காமலே வரும் நல் அறிவு. இதற்கு நம்பியாண்டார்நம்பி, கண்ணப்பநாயனார் சான்றாவர். குருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் (பொள்ளாப் பிள்ளையார் – உளியினாற் பொள்ளப் பெறாதவர்) நம்பியாண்டார் நம்பியின் துயர் துடைக்க அவர் படைத்த நிவேதனத்தை உண்டு அவருடைய அன்பின் திறத்தை உலகு அறியச்செய்தார். நம்பி அவர் திருவருள் பெற்றவர். கலை ஞானமும் கற்காமலே கைவரப் பெற்றவர். கற்காமலே கற்பித்த பெருமை பொல்லாப் பிள்ளையாருக்கு உண்டு. பொல்லாப் பிள்ளையார் அருளால் திருமுறைகள் இருந்த இடம் தில்லை என்பதையும்

உணரப்பெற்றார். அவரை ஞானாசிரியராகப் பெற்ற நம்பி திருமுறைகளைப் பதினொன்றாக வகுத்துத் தந்தார். திருவிரட்டைமணிமாலையே அவர் பாடிய முதல் பாமாலையாகும். அத்துடன், மேலும் ஏழு நூல்களை இயற்றியுள்ளார். அவரால் இயற்றப்பெற்ற திருத்தொண்டர்த் திருவந்தாதியே பெரிய புராணத்துக்கு முதல் நூலாக அமைந்தது.

ஔவையார் விநாயகரை வழிபடு கடவுளாகக் கொண்டவர். விநாயகர் திருவருள் பெற்ற தமிழ் மூதாட்டி. அவர் மேல் விநாயகர் அகவலைப் பாடி, வழிபாட்டால் கிடைக்கும் பயன்களையும் நன்கு தெளிவு படுத்தியுள்ளார். தான் பெற்ற இன்பம் வையமெல்லாம் பெற்று வாழ வழி வகுத்துள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாரும் சேரமான் பெருமாள்நாயனாரும் கைலாயம் செல்லும்போது ஔவையாரையும் அழைத்தனர். அதற்கு ஔவையார் தான் விநாயக பூசையை முடித்துக்கொண்டு வருவதாகக்கூறி அவர்களை அனுப்பினார். விநாயகர் அருளால் அவர் சுந்தரரையும் சேரமான் பெருமானையும் முந்திக் கொண்டார். தமக்கு முன் ஔவைப்பாட்டி திருக்கைலாயத்தில் இருப்பதைக் கண்ட சேரமான் பெருமான் ஆச்சரியமுற்று வினவிய போது பாவலரான அவர் பாவாலேயே பதிலளிக்கின்றார்.

"மதுரமொழி நல்உமையாள் சிறுவன் மலரடியை
முதிரநினைய வல்லார்க்கு அரிதோ? முகில்போல் முழங்கி
அதிரவருகின்ற யானையும் தேருமதன் பின்சென்ற
குதிரையும் காதம் கிழவியும் காதம் குலமன்னனே"

என்று விநாயகப் பெருமானின் திருவடிகளை வணங்குபவர்க்கு எந்தச் செயலும் செய்வதற்கு அரிதன்று என விளக்குகின்றார்.

***புராணக் கதைகளிற் சில***

(1) தாருகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்ற மூன்று அசுரரும் சிவபெருமானை நோக்கிக் கடுந்தவஞ் செய்து



பொது நூலகம்
வலி-தெற்கு பிரதேச சபை
உடுவில்.

பலவரங்கள் பெற்றனர். ஆகாயத்தில் தங்கம், வெள்ளி, இரும்பாலான மூன்று கோட்டைகள் நிறுவியிருந்துகொண்டு, வரம் பெற்ற இறுமாப்பினால் தேவலோகத்தைக் கைப்பற்றித் தேவர்களை வருத்தினர். தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டனர். தேவர்களைக் காப்பாற்ற இணங்கிய சிவன் யுத்த சன்னத்தராகி, பூமித்தேர் மீதேறி, அவர்களது முப்புரங்களை அழிக்கச் சென்றார். பிரணவ சொருபியான விநாயகர் தன்னை நினையாமற் சென்றதனால், உலகத்தவர்க்கு உணர்த்தக் கருதி எலிவடிவங் கொண்டு தேரின் அச்சு முறித்தார். பின்னர் விநாயகரை நினைந்ததும் முறிந்த அச்சுப் பொருந்தியது என, புராணம் கூறும். சங்க இலக்கியங்களும் இச்செய்தி கூறுகின்றன. திருமூலர் இக்கதையின் தத்துவப் பொருளை "முப்புரம் என்பது மும்மல காரியம்ஏ என்று கூறுவர். அருணகிரிநாதர் "முப்புரம் எரிசெய்த அச்சுதன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" என்று பாடிப் போற்றுகிறார். இங்ஙனம், சான்றோர்களாலும் அருளாளராலும் போற்றப்படும் இப்புராணக் கதை விநாயகரை நினையாது தொடங்கும் எந்தவொரு காரியத்திலும் தடங்கல் ஏற்படும் என்பதையும் அவரது ஆற்றலையும் உணர்த்துகின்றது.

(2) நீர் வளம் குன்றிய தென்னாட்டில் காவிரி பாயக் காரணனானவர் விநாயகரெனத் தலவரலாறுகள் கூறுகின்றன. பொதிகையிலும் நீர் எப்போதும் கிடைப்பதில்லை. அதனால் அகத்தியர் தனது சிவ வழிபாட்டுக்கு சிவனிடம் தீர்த்தம் வேண்டினார். சிவன் காவிரியைக் கொடுக்க, அதைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு அவரின் ஏவலின்படி தென் திசை நோக்கிப் புறப்பட்டார் அகத்தியர். குடகநாட்டைக் கடந்து கொங்கு நாட்டில் சில காலங் தங்கிச் சிவபூசை செய்து கொண்டிருந்தார். அவ்வேளை தென்னாட்டை நீர்ப்பஞ்சம் உலுக்கியது. அதைப் போக்கக் கருதிய விநாயகர் காக வடிவெடுத்து வந்து அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்த்துக் காவிரியைப் பாய வைத்த செயல் வியக்கத் தக்கதே. நம்நாட்டிலும் கோயிலை இடிக்கவந்த அந்நிய தளபதியின் கண்ணை காகவடிவெடுத்து கோதி பறாளாய்ப்

பிள்ளையார் கோயிலைக் காப்பாற்றினார். இதனால், கண்ணைக் கோதிக் காக்கைப் பிள்ளை யார் எனப்பெயர் பெற்றதும் நினைவிற் கொள்ள வேண்டியதே.

(3) ஐந்தாம் வேதமெனப் போற்றப்படும் மஹா பாரதக் கதையை எழுத விநாயகப் பெருமானே வேத வியாசருக்கும் துணை புரிந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. விநாயகர் தனது மருப்பொன்றை ஒடித்து வியாச மாமுனிவர் சொல்லச் சொல்ல எழுதியதாக வரலாறுகள் தெரிய வைக்கின்றன. இம்மஹா பாரதம் 74,000 பாடல்களையும் 1,800,000 சொற்களையும் கொண்ட அற்புத நூலாகும்.

இதற்கு மேலும் வலுவூட்டும் ஆதாரமாகக் கி.மு. 1200 ஆம் ஆண்டுப் பகுதியைச் சார்ந்த உலோகத் தகடு ஒன்றில் யானை முகக் கடவுள் எழுது கோல் ஒன்றை வைத்திருப்பது போல ஈரான் நாட்டில் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

(4) கன்ன நாட்டு அரசன் சந்திரகாந்தன் அரக்கர்களை அழித்து நாடு திரும்பும் வழியில் ஒரு அழகிய குளத்தைக் கண்டான். களை தீர அக்குளத்தில் இறங்கி நீராடினான். அக்குளத்தின் அடியில் நாகலோகம் செல்லும் வழி உண்டு. அவ்வழியே வந்த நாக கன்னியர் அரசன் அழகில் மயங்கி கடத்திச் சென்று விட்டனர். கணவனைக் காணாது கலங்கிய மனைவி இந்துமதி முனிவர்கள் சொற்படி விநாயக சதுர்த்தி விரதத்தை 12 வருடங்கள் அனுஷ்டித்தாள். முனிவர்கள் கூற்றின்படி விநாயகரைக் கும்பத்தில் ஆவாகனம் பண்ணி அவர் உருவை மஞ்சள்மாவில் வடித்து அறுகு கொண்டு அர்ச்சித்து வருவாளாயினள். அவளின் விரதம் பூர்த்தி அடையும் போது விநாயகர் திருவருளால் சந்திர காந்தன் மயக்கந் தெளிந்து மனைவியின் நினைவு வர நாக கன்னியரை விட்டுத் தன் இராச்சியம் வந்து இந்துமதி முன் தோன்றினான். சதுர்த்தி விரதம் நோற்றதன் பலனால் இழந்த கணவனை மீளப் பெற்றனள் என அவ்விரதத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது.

(5) திரிபுராசுரனின் மகன்மாரான சண்டனும் பிரசண்டனும் தேவர்களையும் முனிவர்களையும் வருத்தினர். அப்போது, நாரத மகரிஷி அவர்களுக்கு ஓம் எனும் பிரணவ மந்திரத்தை உபதேசித்து, சங்கட நாசன கணபதி சுலோகத்தைச் சொல்லி, விநாயகரைத் துதிக்கும்படி கூறினார். நாரதர் சொற்படி விநாயகரைத் துதித்தனர். விநாயகர் அவர்கள்முன் தோன்றி "கஷ்டத்தில் இருக்கும் யார் இந்தச் சுலோகத்தைச் சொன்னாலும் என்னால் அவர்கள் காப்பாற்றப்படுவர்" எனத் திருவாய் மலர்ந்து அருள்பாலித்தார். தேவர்களும் அக்கொடிய துன்பத்தின் நின்றும் நீங்கினர். அத்தேவர்களால் துதித்துப் பாடப்பட்ட, துன்பத்தை நீக்கிய ஸ்ரீ நாரத புராண சங்கட நாசனம் ஸ்ரீ கணபதி ஸ்தோத்திரமாவது :

1 . ப்ரணாம்ய சிரஸா தேவம் கௌரி புத்ரம் விநாயகம்/
பக்தாவாஸம் ஸ்மரே நித்யம் ஆயுகாமார்த்த ஸித்தயே/
2. ப்ரதமம் வக்ரதுண்டம் ஏகதந்தம் த்விதியகம்//
த்ரிதீயம் க்ருஷ்ண பிங்காக்ஷம் கஜவக்ரம் சதுர்த்தகம்/
3. லம்போதரம் பஞ்சமம்ச விஷ்டம் விகட மேவசம்//
சப்தமம் விக்னராஜேந்த்ரம் தூம்ரவர்ணம் ததாஷ்டகம்/
4. நவமம் பாலசந்த்ரம்ச தசமம் து விநாயகம்//
ஏகாதசம் கணபதி துவாதசம் து கஜானனம்/
5. த்வாதசைதானி நாமானி த்ரிசங்யா யா பதேன்னரம்/
நசம் விக்ன பயம் தஸ்யா ஸர்வசித்தி கரம் ப்ரபோ//
6. வித்யார்த்தி லபதே வித்யா தனார்த்தி லபதே தனாம்//
புத்ரார்த்தி லபதே புத்ரா மோக்ஷார்த்தி லபதே கதிம்/
7. ஜபேத் கணபதி ஸ்தோத்ரம் ஷட்பிர் மாஸே பலம் ப்ரதம்//
ஸம்வத்ஸரேன் ஸித்திஞ்ச லபதே நாத்ர ஸன்ஷய:/
8. அஷ்டோப்யோ ப்ரம்மாணேச்ய லிகித்வாய: ஸமர்ப்பயேத்/
தஸ்ய வித்யா பவேத்ஸர்வா கணேஷஸ்ய ப்ரஸாதத: /

இருபதாம் நூற்றாண்டில் நிகழ்ந்த அற்புதநிகழ்வு ஒன்று, பிள்ளையார் பால் குடித்தமையாகும். அந்நிகழ்வு எம்மைப் பத்தாம் நூற்றாண்டுக்கு இட்டுச்சென்றுவிட்டது. சிறுவன் நம்பியாண்டார்

நம்பி படைத்த அமுதை பொல்லாப் பிள்ளையார் திருவமுது செய்தமை எம் கண் முன் விரிகின்றது. 1995 புரட்டாதி மாதம் டெல்கியில் மட்டுமல்ல பிள்ளையார் வழிபாடு நடக்கும் இடங்க ளெல்லாம் நடந்த அற்புதத் திருவிளையாடல் அது. அன்று பிள்ளையார் தனி ஒருவரின் தூயஅன்புக்கு அடிமையானார். இன்று, உலகளாவிய ரீதியில் எல்லாப் பக்தர்களினதும் பாலமுதம் பருகியமை கண்டு உலகமே அதிசயித்த அற்புதம் நிகழ்ந்துள்ளது. இற்றைக்கு 600 ஆண்டுக்குமுன்பும் ஒரு புதுமை நிகழ்ந்திருக்கிறது. மகாராஷ்டிரத்தில் காணாபத அடியாரான சுவாமி ஜனனேஸ்வரருக்காகப் பிள்ளையார், நீர் எருமையை வேதம் ஓத வைத்து எதிர் வாதிட்ட வேதாந்திகளை ஓடவைத்தார். இத்தகைய அற்புத நிகழ்வுகள் எமக்கு இறை நம்பிக்கையையும் பக்தியையும் வளர்க்க ஏதுவாகின்றன.

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய மெய்ச் சுகத்தவனே - என்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடை யஞ்சரனே
தற்பரனே நின்தாள் சரண்

# விநாயக விரதங்கள்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம் பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன் தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

– திருமூலர்

விரதத்தை நோன்பு, தவம் எனவும் கூறுவர். மனிதன் மன ஒருமைப்பாட்டிற்கும் இடைவிடாத தியானத்திற்கும் உறுதுணை யாக இருப்பது விரதமாகும். எமது உளத்தூய்மையையும் உடற் சுகத்தையும் பேணுகிறது. விரதம் என்பது மனம் பொறி வழியே போகாது நிறுத்தற் பொருட்டு உணவைச் சுருக்கி மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்புடன் வழிபடுதல் என்று ஆறுமுக நாவலர் விளக்கம் கூறியுள்ளார்.

முனிவர்கள் காட்டிலே தனிமையாக இருந்து கடுந்தவம் செய்வர். இல்லறத்தோர் வீட்டில் இருந்துகொண்டு செய்யுந்தவம் விரதம் எனலாம். இலகுவானவை முதல் சிறிது கடினமானவை வரை விரதங்கள் பல விதிக்கப்பட்டுள்ளன. பொதுவாக விரதம் அனுஷ்டிப்போர் சிலவிதி முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். விரத தினத்திலும் அதற்கு முதல் நாளும் புலால் உண்பதைத் தவிர்க்க வேண்டும். காலையில் எழுந்து நீராடி, தூய ஆடை தரித்து, விபூதி அணிந்து இறை வழிபாடு செய்தல் வேண்டும். சாத்வீகர்களாக ஆசார சீலர்களாக இருக்கவேண்டும். பகல் நித்திரை கொள்ளல் ஆகாது; வீண் வார்த்தை பேசலாகாது; நற் சிந்தனையுடன் இருக்க வேண்டும். உபவாசம் இருப்போர் முதல் நாளும் அடுத்த நாளும் ஒரு நேரம் மட்டும் உணவு உண்ண வேண்டும்.

இந்த விதிமுறைகள் வயிற்றில் உள்ள உறுப்புகளுக்குச் சிறிது ஓய்வு கொடுத்து உடல் நலம் பேணுவனவாகவும்

அமைந்துவிடுகின்றன. விரத தினத்தன்று கோவிலுக்குச் சென்று வழிபடல், அடியார்களுக்கு விருந்துபசாரஞ் செய்தல், தான தருமஞ் செய்தல், நற்சிந்தனையில் ஈடுபடுதல், நல்லோருடன் பழகுதல் பக்திமார்க்கத்தை மட்டுமன்றி ஆரோக்கியம் ஆத்மீக வளர்ச்சி ஆகிய நன்மைகளையும் பயக்கும்.எமது வாழ்க்கையில் எடுத்த கருமங்கள் இடையூறின்றி சித்தி பெற விநாயக விரதத்தையே மேற்கொள்வோம். விநாயகப் பெருமானை வேண்டி மேற்கொள்ளும் விரதங்களாவன:- விநாயக சதுர்த்தி விரதம், நாக சதுர்த்தி விரதம், சங்கட ஹர சதுர்த்தி விரதம், விநாயக சஷ்டி விரதம், மாத சதுர்த்தி விரதம், வெள்ளிக் கிழமை விரதம் (முருகன், அம்மனுக்கும் உரித்துடைய விரதநாள்) மார்கழிப் பிள்ளையார் விரதம் முதலானவையாகும்.

### *விநாயக சதுர்த்தி விரதம்*

ஆவணிமாத பூர்வபக்கச் சதுர்த்தியில் அநுட்டிக்கப்படும். நடுப்பகலில் சதுர்த்தி நிற்கும் தினத்தில் இவ்விரதம் அனுஷ்டிப்பது நல்ல பலன் தரும. விரதங்களுள் விநாயக சதுர்த்தி மிகச் சிறந்தது. வனவாச காலத்தில் பஞ்சபாண்டவர் சூத முனிவரின் உபதேசத்திற்கு இணங்க அநுஷ்டித்த வரலாற்றுச் சிறப்பு மிக்க விரதமாகும். சதுர்த்தி தினத்தை ஒட்டிய புராணக் கதைகளும் உண்டு. விநாயகப் பெருமான் அன்று உதித்தபடியால் அத்தினம் சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகவும், அத்தினத்தில் தான் சந்திரன் பிள்ளையாருடைய சாபத்துக்கு ஆளானார் என்றும் கூறப்படுகிறது. சைவர்கள் மட்டுமன்றி இந்து மதத்தவர் அனைவராலும் அனுஷ்டிக்கப்படும் விரதமாகும்.

சதுர்த்தி விரதம் ஏற்போர் அதி காலை துயிலெழுந்து நீராடி ஆசார சீலராக பிரார்த்தனை, வழிபாடு, ஆலய தரிசனம் முதலானவற்றில் ஈடுபட வேண்டும். அன்றைய தினம் பகலில் ஒருநேர உணவு உண்டு இரவில் பால் பழம் புசித்து விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். அபிடேகம் , ஆராதனை ஆகியவற்றில் கலந்து வழிபாடு இயற்றுவது பயனுள்ளதாகும். 21 அறுகினால்

அர்ச்சிப்பது, அறுகுமாலை சார்த்துதல் சாலச் சிறந்தது. இவ்விரதம் இருப்போர் பன்னிரண்டு வருடங்கள் தொடர்ந்து கடைப்பிடித்து, விநாயகப் பெருமானுக்கு அபிடேக ஆராதனை வழிபாடுகள் செய்து விரதோத்தியானம் செய்யலாம். விநாயக சதுர்த்தி விரதம் மேற்கொள்வோர்க்கு காரிய சித்தி, நற்சந்ததி, செல்வச் சிறப்பு, ஆத்ம திருப்தி, புகழ் என்பன கிட்டும். நோன்பு நோற்காவிடினும் விநாயகரை வணங்கி 21 அறுகு அல்லது அறுகு மாலை சார்த்தி அர்ச்சித்தால் விக்னங்கள் விலகும். சதுர்த்திப் பூசையில் ஒரு முக்கிய அம்சம் என்னவெனில் நிவேதனம், அர்ச்சனைப் பொருட்கள் ஆகியவை எண்ணிக்கையில் 21 ஆக இருக்க வேண்டும். கர்நாடகம், மஹாராஷ்டிரம், ஆந்திரா போன்ற சில மாநிலங்களில் விநாயக சதுர்த்தியை, கணேச பூசையென பெரும்பாலும் களி மண்ணில் செய்த பிள்ளையாரை வைத்துப்பூசை செய்து பத்து நாட்கள் நவராத்திரி விழா போன்று கொண்டாடுவர். மா போன்ற நீரிற் கரையக்கூடிய பொருள்களிற் செய்வதும் உண்டு. பத்தாவது தினத்தன்று கணேச உருவத்தை, மேள, தாளத்துடன் பக்தர்கள் புடை சூழ திருவீதி உலா வந்து தீர்த்தத்தில் (நீரில்) விடுவார்கள். எமது மார்கழிப் பிள்ளையார் வழிபாடு போன்றதே அவர்களது சதுர்த்தி வழிபாடு.

முக்கியமாக சதுர்த்தி நாளன்று பிறையைப் பார்த்தல் ஆகாது. துன்பம் விளையும் என்பர். அதை ஒட்டிய புராணக் கதை ஒன்றுண்டு. திருக்கைலாயத்தில் பிள்ளையார் கையில் மோதகம் ஏந்தி பெரு வயிற்றுடன் ஆடிய நடனத்தைப் பார்த்து சந்திரன் சிரித்தான். கோபம் அடைந்த விநாயகர் "எவரும் உன்னைப் பார்க்காது இகழ்ந்து விலகிச் செல்லும்படி நீ ஒரு நீசனைப் போல் இருக்கக் கடவை" எனச் சபித்தார். தேவர்கள் சந்திரனையும் உலகையும் காக்க வேண்டி விநாயகரிடம் சென்று மன்னிக்குமாறு வேண்டினர். சந்திரனும் பணிந்து அருள்புரியும்படி வேண்டினான். விநாயகரும் மன்னித்து இட்ட சாபத்தை ஆண்டில் ஒருநாளாக– அந்த நாளாகிய ஆவணிச்சதுர்த்தியாகக் குறைத்து அருள் புரிந்தார்.

சந்திரன் விநாயகரை இழித்த நீசனானதால் நாலாம் பிறை பார்த்தால் துன்பம் விளையும் என நம்பினர். ஔவைப் பாட்டியின் "தீயாரைக் காண்பதுவும் தீதே" என்ற திரு வாக்கு இங்கு நோக்கத் தக்கது. இக்கதை தெய்வத்தை இழித்தல், நிந்தித்தல் ஆகாது என்பதனையும் குற்றம் புரிந்தவர் உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் போது மன்னிக்கப்படுவார், மன்னிக்கப்பட வேண்டும் என்பதையும் கற்பிக்கின்றது. இதைத்தவிர இத்தினத்தில் மையக்கவர்ச்சிச் சக்தியின் தாக்க வேறுபாட்டுக் காரணம், கிரகண காலங்களில் ஏற்படுவது போல ஒன்றும் இருக்கவேண்டும். நமது முன்னோர் படிப்பறிவு குறைந்தவர்களை இலகுவாக வழிக்குக் கொண்டு வரத் தெய்வங்களில் ஏற்றிக் கதைகள் புனைவது வழக்கம். தெய்வம் மீது கொண்ட பயபக்தி காரணமாக அவைகளை விளங்காமலே அன்று ஏற்று வந்தனர். இன்று விஞ்ஞான அறிவு விரிந்துள்ள காலத்தில் வாழும் நம் மக்கள் இவற்றை ஏற்க மறுக்கின்றனர். எனவே இதற்கு விஞ்ஞானிகளின் கருத்தைப் பெறுவது அவசியம். நம்முன்னோர் நாலாம் பிறை பார்ப்பதில் தீமை விளையலாம் எனக் கூறியதில் ஏதோ ஒரு உண்மை இருக்கும் என்பது நிச்சயம்.

### *சங்கடஹர சதுர்த்தி விரதம்*

சங்கட ஹர சதுர்த்தி விரதம் மாதந் தோறும் வரும் தேய் பிறைப் பக்கம் சதுர்த்தி அன்று அனுஷ்டிக்கும் விரதமாகும். மாசி மாதத் தேய் பிறையில் செவ்வாய்க் கிழமையோடு வரும் சதுர்த்தியில் ஆரம்பிப்பது சிறந்தது. இவ்விரதம் நோற்பவரது சங்கடங்கள் நீங்கி கடன் தொல்லை அகல்வதோடு ஆத்ம திருப்தியும் உண்டாகும். மாதந்தோறும் மேற்கொள்ளப்படும் சதுர்த்தி விரதங்களுள் விநாயக சதுர்த்தியும் நாக சதுர்த்தியும் சங்கடஹர சதுர்த்தியும் மாத சதுர்த்திகளிற் சிறப்பானவை. அதனாலே வேறாகப் பிரித்துச் சொல்லப்படுகின்றன.

### *நாக சதுர்த்தி விரதம்*

ஆடி மாதத்தில் வரும் வளர் பிறைச் சதுர்த்தி அன்று அனுஷ்டிக்கப்படும் விரதமாகும். இதுவும் விநாயக சதுர்த்தி விரதம்

அனுஷ்டிக்கும் முறை போன்றதேயாம். வட இந்தியாவில் செம் பாம்பு செய்து வைத்து வழிபடும் வழக்கம் உண்டு.

### *விநாயக சஷ்டி விரதம்*

விஷ்ணுவின் பாவம் விநாயகரால் விமோசனமான தினமே விநாயக சஷ்டியாகும். விநாயக சஷ்டி விரதத்தை பிள்ளையார் பெருங் கதை விரதம், பிள்ளையார் விரதம், பிள்ளையார் கதை எனவும் சொல்வர். இத்தினத்தில் விநாயகர் ஆலயங்களிலும் பிற ஆலயங்களிலும் பிள்ளையார் கதை, விநாயக புராணம் என்பன பாராயணஞ் செய்வர். கார்த்திகை மாதத்து தேய்பிறைப் பக்கத்துப் பிரதமை முதலாக மார்கழி மாத சஷ்டி ஈறாக உள்ள 21 நாட்களும் நோற்கப்படும் விரதமாகும். இவ்விரத ஆரம்ப நாளில் இருபத்தொரு இழையிலால் ஆன நூல் காப்பினை அந்தணரால் ஆண்கள் வலக் கையிலும் பெண்கள் இடக் கையிலும் கட்டப் பெறுதல் வேண்டும். முதல் இருபது நாட்களும் பகலில் ஒரு நேர உணவு உட்கொண்டு இரவில் பால், பழம் அருந்தல் வேண்டும். கோவிலுக்குச் சென்று பிள்ளையார் பூசை காணுதல், விநாயகர் சரித்திரங் கூறும் பெருங்கதை, விநாயகர் புராணம், விநாயகர் அகவல் என்பவற்றைப் படிப்பதுங் கேட்பதும் இன்றியமையாதது. தினமும் விநாயகப் பெருமானுக்கு மோதகம், அவல், எள்ளுருண்டை, இளநீர், கரும்பு, என்பன நிவேதனம் செய்து வழிபடல் நன்று. இறுதி நாளில் உபவாசம் இருந்து அடுத்த நாள் பாரணை பண்ண வேண்டும். பாரணை காலை பவித்திரமாகக் காப்பை அவிழ்த்தல் வேண்டும். இவ்விரதத்தை இருபத்தொரு வருடங்கள் அநுட்டிப்பது உத்தமம். இயலாதவர்கள் ஏழு வருடமாவது அநுட்டிப்பது பலனுடையதாகும்.

### *மாத சதுர்த்தி விரதம்*

இவ்விரதம் ஒவ்வொரு மாதத்திலும் வளர்பிறைச் சதுர்த்தியில் விநாயகரைக் குறித்து நோற்பதாகும். விரதம் அனுஷ்டிக்கும் பொதுவான ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி, பகல் ஒரு பொழுது உண்டு இரவில் பால், பழம் அல்லது பலகாரம் உண்டு விரதத்தை

நிறைவு செய்யலாம். ஆலயம் சென்று விநாயகப் பெருமானைத் தரிசனம் செய்து 21 அறுகினால் அர்ச்சனை செய்து வழிபடல் சிறந்தது.

### *வெள்ளிக் கிழமை விரதம்*

வெள்ளிக் கிழமை தோறும் அனுஷ்டிக்கும் விரதமாகும். இவ்விரதம் விநாயகர் குறித்ததுடன் முருகன், அம்மனையும் நினைத்து அநுட்டிக்கப்படும் விரதமாகும். இந்த விரதத்தை சித்திரைமாதத்து வளர்பிறைப் பக்கத்தில் வரும் முதலாம் வெள்ளிக்கிழமை ஆரம்பிப்பது நன்று. முடிந்தால் உபவாசம் இருக்கலாம். இயலாதவர்கள் பால் பழம் அருந்தலாம். அல்லது பகல் முழுவதும் உண்ணாமல் இருந்து ஒரு நேரமாக உண்ணவேண்டும். தொடர்ந்து ஓராண்டாவது அனுஷ்டிப்பது நன்று. விநாயகருக்கு அறுகினால் அர்ச்சிப்பது சிறந்த பலன் தரும்.

### *மார்கழிப் பிள்ளையார் விரதம்*


மார்கழிமாதம் முழுவதும் அனுஷ்டிக்கப்படுவதாகும். அதிகாலையில் எழுந்து முற்றம் மெழுகி, நீராடித் தோய்த்து உலர்ந்த ஆடை அணிய வேண்டும். வாயிலில் அழகிய மாக் கோலம் இட்டு, பசுவின் சாண உருண்டையில் அறுகு சொருகிப் பிள்ளையார் பிடித்து வைத்து வைகறைப் பொழுதிலேயே வணங்க வேண்டும். இந்தியாவில் பரங்கிப் பூசினிப் பூ (சர்க்கரைப் பூசினிப் பூ ) பிள்ளையாரிற் சொருகுவர். முப்பது நாளும் விரதம் அனுஷ்டிக்க இயலாதவர்கள் ஆசார சீலர்களாக ஒழுகி பிள்ளையாரைப் பிடித்து வைத்து வணங்கலாம். பிடித்து வைத்த பிள்ளையாரை அடுத்துவரும் வரும் நாள்களில் எடுத்துச் சேர்த்து வைத்துப் பொங்கல் அன்று சூரியனுக்குப் பொங்கிப் படைத்து வழிபடும்போது வைத்து வணங்க வேண்டும். பின் மாலைப்பொழுதில் அந்த முப்பது பிள்ளையார்களையும் முப்பது மோதகம் கொளுக்கட்டைப் பிரசாதத்துடன் கேணி, குளம், பாழ்ங்கிணறு போன்ற நீர் நிலைகளில் விடவேண்டும். சிலர் தேர் கட்டி அயலவரது பிள்ளையார்களையும் சேர்த்து மேள தாளத்துடன் ஆரவாரமாகச் சென்று நீரில் விடுவர். மார்கழி மாதம் தெய்வீகம் நிறைந்த மாதமாகும்.

பொதுவாக எம்மிற் பலரும் விருப்பங்கள் தேவைகளை நிறைவேற்ற விநாயகர், சிவன், முருகன், சக்தி ஆகிய தெய்வங்களை மட்டும் அன்றி கிரகங்களான சனி, வியாழன் சூரியனையும் வேண்டி விரதம் அனுஷ்டிப்பர். இவற்றைத்தவிர நட்சத்திர விரதங்கள், திதி விரதங்கள், வார விரதங்கள் என்றும் பல விரதங்கள் அனுஷ்டிக்கப் பெறுகின்றன.

உணவு உண்ட பின் புலன்களை அடக்கி இறைவன் மீது மனம் இலயிப்பது கடினம். இதனால் தான் பெரியோர்கள் 'தனித்திரு, பசித்திரு, விழித்திரு' என்று ஒரு விதியை வகுத்துக் காட்டி உள்ளனர். இவ்விரதங்கள் எல்லாமே இவ்விதிகளில் குறைந்தது ஒன்றையாவது அடிப்படையாகக் கொண்டு அனுஷ்டிக்கப்படும். இவ்வாறு தனித்து, பசித்து, விழித்து இறை உணர்வுடன் இருப்பதால் எமது அந்தக்கர்ணங்கள் சிறிதளவாவது சுத்தி பெறும் வாய்ப்பைப் பெறுகின்றன. பசித்திருத்தல் இச்சையை அடக்கும் பயிற்சியை அளிக்கிறது. இது புலனடக்கத்தின் முதற் படியாகிறது. விழிப்பும் இச்சையை அடக்குவதேயாம். ஆயின் இறை தரிசனத்துடன் விழித்திருத்தல் (சிவராத்திரி) அகவிழிப்பை ஏற்படுத்தி இறை உணர்வை வளர்க்க ஏதுவாகிறது. தனிமையின்போது புலன் அடக்கம் உண்டாக ஆசாபாசங்கள் மறக்கடிக்கப்படுகின்றன. மனமானது ஒருநிலைப்பட வேதனைகள் சோதனைகள் மறைந்து விடுகின்றன. அதனால் வாழ்க்கைச் சக்கரம் இனிதே சுழரும். மொத்தத்தில் மனிதன் நல்ல வண்ணம் வாழ விரதங்கள் வழி சமைக்கின்றன.

# வழிபாடு செய்யும் முறைமை

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன்னம்பலவன்
ஞானகுரு வாணி பதம் நாடு



கோவிலுக்குச் செல்லும்போது நீராடி நீறணிந்து தூய உடை அணிந்து ஆசார சீலராகச் செல்ல வேண்டும். ஆண்கள் தோளில் சால்வை, மேல் அங்கி தரித்தல் ஆகாது. அன்று புலால் உண்ணாது இருத்தல் வேண்டும். புலால் புசித்தல் பஞ்ச மாபாதகங்களில் ஒன்றாகும். கோவிலுக்குள் புகு முன் கால், கை, முகம் கழுவுதல் வேண்டும். கால் கழுவும் போது முழுப் பாதமும் புள்ளி விழாது கழுவுதல் அவசியம்.

கோபுரம் உள்ள திருக்கோவிலாயின் கோபுரத்தை (தூலலிங்கம்) வணங்கிய பின்பே சந்நிதிக்குட் சென்று மூன்று முறை தோப்புக்கர்ணம்செய்து குட்டிக் கும்பிடல் வேண்டும். கொடி மரம் உள்ள கோவிலாயின் கொடி மரத்தின் அடி முன்னிருக்கும் மூலாதாரப் பிள்ளையார் முன்னே குட்டிக் கும்பிட்டுத் தோப்புக்கர்ணம் போட்டு வலப்புறமாக விழுந்து வணங்குதல் வேண்டும். (கொடிமரம் பிரதிட்டை செய்வதின் நோக்கம் யாதெனில் அசுரர்களை அகற்றவும் சிவ கணங்களையும் தேவர்களையும் அழைக்கவும் ஆலயத்தையும் பக்தர்களையும் காக்கவும் ஆகும். இதனால் தான் மூலவருக்குச் செய்யப்படும் அத்தனை அபிடேக அலங்காரங்களும் கொடித் தம்பத்துக்கும் செய்யப்படுகின்றது.) பின் பிள்ளையார் திரு நாமத்தை மனதில் உச்சாடனம் செய்து கொண்டு திருக்கோவிலை மும்முறை வலம் வருதல் வேண்டும்.

கோவிலுக்குச் செல்லும்போது வெறுங் கையுடன் செல்லல் ஆகாது. அர்ச்சனைப் பொருட்கள் கொண்டு செல்லாவிடிலும் ஒரு பச்சிலையோ பூவோ கொண்டு செல்லுதல் வேண்டும். பச்சிலை யாவர்க்கும் எளியது. "யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை -----" என திருமூலரின் பாடல் ஒன்று அறிவுறுத்துகிறது. பூசை வேளையில் உலக மாயையான திரை விலகியதும் கற்பூர தீப ஒளியில் மூர்த்தியை வணங்க வேண்டும். அபிஷேகம் பூசைகளை ஐம்புலன்களையும் அடக்கி இறைவனுடன் ஐக்கியப் பட்டுத் தரிசிக்க வேண்டும். அபிடேகம் நடக்கும்போது சுவாமியை மனதில் தியானித்தல் வேண்டும். பூசைகள் நிறைவேறியதும் சண்டேஸ்வரர்– விநாயகர் கோவிலில் கும்போதர சண்டேஸ்வரரை வணங்கல் வேண்டும். சிவ யோகத்தில் இருக்கும் அவரை விழிக்கச் செய்வதற்காக மும்முறை கை தட்டி எம் வழி பாட்டின் பலனைத் தருமாறு இறைஞ்சி வணங்குதல் வேண்டும். சண்டேஸ்வரரைச் சுற்றி வரல் ஆகாது. இப்படி வருவது மூலவருடன் அவரது தொடர்பைத் துண்டித்த குற்றமாக அமையும். அதனால் அவருடைய இடப்பக்கமாகச் சென்று வழிபட்டுச் சென்ற வழியில் மீள வேண்டும். சண்டேஸ்வர பூசையின் பின்விபூதி பிரசாதம் பெற்று மூலாதார விநாயகருக்கு பூப் போட்டு வணங்கிய பின் அமர்ந்து சில நிமிடங்கள் தியானத்தில் இருந்த பின்பே வீடு செல்ல வேண்டும்.

விநாயகரையும் அரச மரத்தையும் ஒரு முறை தான் வலம் வந்து வணங்குதல் வேண்டும் என சில நூல்கள் கூறுகின்றன. பிரத்தியேக நேர்கடன் இருப்பின் 21 முறை அல்லது 108 முறை வலம் வரலாம் எனக் கூறப்படுகிறது. பூசை நடை பெறும் போது வலம் வருதல், அபிடேக காலத்தில் உட்பிரகாரத்தில் வலம் வருதல், அபிடேகம், நிவேதனம் நடைபெறும் போதும், திரை போட்டிருக்கும் போதும், சுவாமி தரிசனம் செய்து வணங்குதல் குற்றமாகும். கிழக்கு, மேற்கு நோக்கிய சந்நிதிகளில் வடக்கே தலை வைத்தும் தெற்கு, வடக்கு நோக்கிய சந்நிதிகளில் கிழக்கே தலை வைத்தும் வணங்குதல் வேண்டும். கால் நீட்டும் பின் புறத்தில் எந்த தெய்வ சந்நிதியும் இல்லாதிருக்க வேண்டும்.

கொடி மரத்தின் முன்பாக விழுந்து நாம் வணங்கும் போது கால் நீட்டும் பக்கத்தில் எந்த சந்நிதியும் இருக்காது.

நாம் வலம் வரும் போது பலிபீடத்தையும் சேர்த்தே வலம் வந்து வணங்குகிறோம். பலிபீடம் இறைவனின் மாயா சக்கரம். பாசத்தைக் குறிப்பது. இங்கு நமது பாசம் அனைத்தையும் பலி இடுவதான கருத்தை உடையது. பலிபீடத்துக்கு அப்பால் நின்று ஸ்தூல, சூட்சும, காரண, காரியத்திலிருந்து எம்மை விடுவிப்பாயாக என்று வேண்டுதல் வேண்டும். கோவில் பிரகாரங்களும் 3, 5, 7, என்ற எண்ணிக்கையில் அமைந்திருக்கும். இவை அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயம், ஸ்தூலமயம், சூட்சம் ஆகிய கோசங்களை உணர்த்துவன. இறைவன் இக்கோசங்களைக் கடந்து மூலவராக வீற்றிருக்கிறார். நாம் இப்பிரகாரங்களை வலம்வந்து கடந்து சென்று மூலவரைத் தரிசிக்கும் போது இக் கோசங்களைக் கடந்து இறை தரிசனமும் திருவருளும் பெற்றவராகிறோம்.

### *நமஸ்கரித்தல்*

நமஸ்காரம் வெறும் உடலின் செயற்பாடாக இல்லாது உள்ளத்தோடும் தொடர்புடையதாக அமைந்துள்ளது. அது தெய்வீகத்தோடு, பஞ்சேந்திரியங்களோடு, ஆத்மாவோடு, ஆரோக்கி யத்தோடு நெருங்கிய தொடர்புடையது. இறைவனது பாதார விந்தங்களில் சாஷ்டாங்கமாக விழுந்து விட்டால் அருள் வெள்ளம் அவனுக்குட் புகுந்து ஆசிகள் அருளும். வெறுமனே உண்மையான பக்தி சிரத்தை இல்லாது விழுந்து விழுந்து ஆயிரம் முறை வணங்கினாலும் எந்தப் பயனும் கிட்டாது. அஃது வெளி வேஷமாகவே முடியும். கிருபானந்த வாரியார் சொன்ன கை கூப்பி வணங்குவதன் தத்துவம் "நம் வலது கரம் எழுதுவது உணவு உண்பது போன்ற நல்ல காரியங்களுக்குப் பயன்படுகிறது. இடது கரமோ ஈனமான காரியங்களுக்குப் பயன்படுகிறது. ஆனால் ஆண்டவன் முன்னிலையில் உயர்வு தாழ்வு இல்லை என்பதை உணர்த்தவே இரண்டு கரங்களையும் ஒன்றாகச் சேர்த்து கரங்கூப்பி சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்" என்பதாம்.


தலை மேல் இரு கரங்களையும கூப்பி வணங்குதல் திரியங்க நமஸ்காரம் எனப்படும். தலை மட்டும் குனிந்து வணங்குதல் ஏகாங்க நமஸ்காரம் ஆகும். கை இரண்டு முழந்தாள் இரண்டு சிரம் ஆகிய ஐந்து உறுப்புக்களும் தரையிற் படும்படி வீழ்ந்து வணங்குதல் பஞ்சாங்க நமஸ்காரம் எனப்படும். இது சுகாதார விதிக்கு அமைய பெண்களுக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கென அட்டாங்க நமஸ்காரம் விதிகப்பட்டுள்ளது. தலை, கை இரண்டு, காதுகள் இரண்டு, முழந்தாள் இரண்டு, மார்பு ஆகிய எட்டு உறுப்புகளும் பூமியில் படும்படி நெடுங் கிடையாக வீழ்ந்து வணங்குதல் ஆகும். இரு கைகளையும் நன்றாக முன்னால் நீட்டி, ஒன்று சேர்த்துக் குவித்துக் கும்பிடல் வேண்டும். பின் இரண்டு கைகளையும் மும்முறை மாறி மாறி பின் புறம் நன்றாக நீட்டியும் முன்புறம் நீட்டியும் கும்பிடல் வேண்டும். காது நன்றாகத் தரையிற் படும்படியும் தலையைச் சாய்த்து வணங்க வேண்டும்.

இவ்வாறு உடல் அங்கங்களைப் பல வகையாகத் திருப்பி, மடக்கி, நீட்டி, வளைத்து, நின்று, கிடந்து, இருந்து, எழுந்து என்றெல்லாம் அசைப்பதால் இவை ஒரு யோகாசனம் போன்று பயனளிக்கின்றன. பல நல்ல நாடி சலனங்களை உருவாக்கி ஆத்ம சக்திக்கும் சுக வாழ்வுக்கும் காரணமாகிறது. சாஷ்டாங்க நமஸ்காரம் தமிழில் தண்டனிடுதல் எனப்படும். ஒரு ஆதாரம் அற்ற தண்டு விழுவதைப் போல் உடம்பு முழுவதும் பூமியில் படும்படி வீழ்ந்து வணங்குதலாகும். எம்மை பூரணமாக அர்ப்பணித்து அடைக்கலம் அடைவதே இவ்வழிபாட்டின் வெளிப்பாடு ஆகும். அங்கப் பிரதட்சணம் ஆண்களுக்கு உரியதாகும். பெண்களுக்கு அடி அழித்தல் சுகாதார விதிப்படி விதிக்கட்பட்ட பிரதட்சணம் ஆகும்.

சுவாமி வீதி வலம் வரும் போது,அங்கப் பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல் இறைவன் உலாவிய திரு வீதி மண் எமது மேனி முழுவதும் தீண்டும் போது எமது நோய் மாறி விடும் என்றும்

அன்றி வேண்டுதல் பலிதமாகும் என்றும் அசையாத தெய்வ நம்பிக்கை பிறக்கிறது. புண்ணிய நதிகளில் நீராடுவதும் இந்த நம்பிக்கையில் தான். (பாவத்தைத் தீராத் தீர்த்தம் . . . பயனில்லை – ஔவையார் கூற்று) கடவுளை நம்பினோர் கை விடப்பட மாட்டார். இது முது மொழி. இந்த நம்பிக்கைகள் ஆன்மீக ரீதியில் தொழிற்பட்டு நோயை மாற்றியும் வேண்டுதலைப் பூர்த்தியாக்கியும் விடுகின்றன. அநேகமாக தேர்த் திருவிழா உற்சவத்தின் போதும் விசேட திருவிழாக் காலங்களிலும் சுவாமி வீதி வலம் வரும் போது காவடி எடுத்தல், கற்பூரச் சட்டி எடுத்தல். முள்ளு மிதிதடியில் நடத்தல், பஜனைபாடுதல் என அடியார்கள் தம் நேர்த்திகளைப் பக்தி மேம்பாட்டுடனும் பக்தி வைராக்கியத்துடனும் செய்து வணங்கி நலம் பெறுவது கண்கூடு.

இறைவனைஅடைய எளிய வழி பக்தி நெறியேயாகும். ஆகவே அந்நெறி வழியே வழிபட்டு அண்டசராசரங்களைச் சார்ந்து நிற்பவரும் கணங்கள் எல்லாவற்றுக்கும் தலைவனுமானவரும் பிரணவப் பொருளானவரும் முந்தை வினைகளின் வேரறுப்பவரும் இடையூறகற்றிக் காரியசித்தியையும் ஞானத்தையும் தருபவரும் ஆகிய விக்ன விநாயகர் திருவடிகளை வணங்கி ஆன்ம ஈடேற்றத்தைப் பெறுவோமாக.



# விநாயக வழிபாட்டில் சில சிறப்பம்சங்கள்

சங்கரன் மகனே போற்றி சங்கடம் தீர்ப்பாய் போற்றி
திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சுடர் மணியே போற்றி
துங்கநான் மறைதுதிக்கும் துதிக்கைவாரணமேபோற்றி
ஐங்கரத்தண்ணால் போற்றி ஆனைமாமுகனே போற்றி



பிள்ளையாரை வணங்குவதற்கென தனித்துவமான முறைகள் உண்டு. அவை குட்டிக் கும்பிடுதல், தோப்புக் கரணம் போடுதல், சிதறு தேங்காய் அடித்தல், அறுகு மாலை சார்த்துதல், அறுகினால் அர்ச்சித்தல் என்பனவாகும்.

## தோப்புக் கர்ணம் போடுதல்

நாம் ஆலயத்துள் புகுந்ததும் மூன்று முறை குட்டிக் கும்பிடுகிறோம். தோப்புக்கரணம் போடுகிறோம். தோர்பிக்கர்ணம் என்பதே பேச்சு வழக்கில் மருவி தோப்புக்கரணம் ஆனது. தோர்பி – கைகளால், கர்ணம் – காது; கைகளால் காதைப் பிடித்துக் கொள்வது. தோப்புக்கரணம் என்பது இரண்டு கைகளையும் மாறி இடக்கையால் வலக் காதையும் வலக்கையால் இடக் காதையும் பிடித்துக் கொண்டு பூமியில் படாதவாறு இருந்து எழும்புதல் ஆகும். இது ஒரு யோகாசன முறையுமாகும். சுழுமுனை தத்துவம் எனக் கூறுவர். நெற்றிப் பொட்டில் குட்டி, தோப்புக்கர்ணம் போடும் போது காது, சிரசில் உள்ள சீவ புள்ளிகள் தூண்டப்படுவதை விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர். நாம் முறைப்படி தோப்புக்கர்ணம் போடும் போது சுவாசத்தில் ஏற்படும் மாற்றம் மனதில் தெய்வீக உணர்வு , மன அமைதியை ஏற்படுத்துவதுடன் சிறந்த அப்பியாசமாகி உடல் நலத்தையும் நீண்ட ஆயுளைந் தருகிறது.

"ஒன்பது வாயில் ஒரு மந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி ------ –
இடைபிங்கலையின்எழுத்தறிவித்து
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி-------
குண்டலியதனிற் கூடிய அசைப
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலை க்
காலால் எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி-----"

என்று விநாயகர் அகவலில் ஔவைப் பாட்டி அழகு தமிழில் தோப்புக்கரண வழிபாட்டின் மகத்துவத்தை விளக்கி வைக்கிறார்.

தோப்புக்கர்ணம் போடும் வழக்கம் வந்ததை ஒட்டிய புராணக் கதை ஒன்றுளது. கஜமுகாசுரன் எனும் அசுரன் சிவபிரானிடம் அரிய வரங்களைப் பெற்றதுமன்றி சாகா வரமும் பெற்றவன். அவன்தேவர்களையும் வானவர்களையும் தினமும் 1000 தோப்புக்கர்ணம் போட வைத்தான். வருந்திய தேவர்கள் சிவனிடம் முறையிட்டனர். சிவன் உமையுடன் ஏழு கோடிமந்திரம் பொதிந்த மந்திர சாலைக்கு எழுந்தருளினார். அம் மந்திரங்களுக்கு இடையே சமஷ்டி பிரணவம், வியஷ்டி பிரணவம் எனும் இரு பிரணவங்கள் இருந்தன. இவற்றை அம்மையும் அப்பனும் திருக்கண் நோக்கினர். அவ்வருள் நோக்கால் இரு பிரணவங்களும் ஒன்று சேர பிரணவ வடிவினனான விநாயகர் உதித்தார். சிவபிரானின் ஆணைப்படி கஜமுகாசுரனை வதம் செய்ய, பூதகணங்களுடன் சென்று போர் புரிந்தார். அவன் பெற்ற வரங்களின் காரணமாக எந்த அத்திர சத்திரங்களும் ஊறு செய்யவில்லை. அதனால் விநாயகப் பெருமான் தன் கொம்பொன்றை ஒடித்து ஏவினார். அது ஞானமானதால் அஞ்ஞான வடிவினனான கஜமுகனைத் தடிந்தது. அவன் சாகா வரம் வாங்கியமையால் பெருச்சாளியாக மாறி எதிர்த்தான். ஆணவ முனைப்பு ஆனைமுகனின் கருணை

நோக்கில் வலியிழந்தது. அவன் பணிந்து ஊர்தியானான். வானவர்கள் கயமுகாசுரன் முன் தோப்புக் கர்ணம் போட்டு வணங்கியது போல் அவன் விநாயகர் முன்வணங்கிய போது மூன்று முறையுடன் போதுமென தடுத்து அருளினார்.

“பதி, பசு போற் பாசமும் அநாதி”. இக்கதையிலே பாச முதன்மையானதான ஆணவம் கஜமுகனாக உருவகிக்கப் படுகிறது. ஆணவம் திரோதான சக்தி தூண்ட சித்சக்தியின் திருவருளால் இருவினை ஒப்பு ஏற்படும் காலத்தில் மலபரிபாகம் நிகழும். அக்காலத்தில் பரிபாகம் பெற்ற ஆன்மாவிடத்திலும் சில வேளையில் ஆணவம் முனைக்கும். இத்தகைய முனைப்பைப் பெருங்காயம் இருந்த பேணியில் மணம் வருவதற்கு உவமிப்பர் ஆன்றோர். இந்நிலையையே எலியாக மாறியதாக உருவகித்தனர். இருவினை ஒப்பு, மலபரிபாகம் மிகும் போது சத்திநிபாதம் நிகழும். (சத்தி- திருவருட்சக்தி, நி- நன்றாக, பாதம்-விழுதல்) சத்திநிபாதம் நிகழ ஆணவத்தின் வலிமை நன்றாகக் குன்றி திருவடி அடைந்து முத்திப் பேரின்பம் பெறுகிறது ஆன்மா. இந்நிலையில் திருவருள் நோக்கினாற் செருக்கிழந்து இறைவனின் பாதத்தை அடைகிறது. இதுவும் இதுபோன்று தவவலிமையாற் செருக்குற்ற அசுரர் அடக்கப்படுதலும் புகட்டும் தத்துவம் இதுவாகும்.

## *குட்டிக் கும்பிடுதல்*

விநாயகரை வணங்கும் சிறப்பான குட்டிக் கும்பிடுதல் எமக்கு ஞானத்தை வழங்குகிறது. இரண்டு கைகளையும் மாறி நெற்றிப் பொட்டில் குட்டிக் கும்பிடுவதால் எமது புத்தி, ஞாபக சக்தி தட்டி எழுப்பப்படுகிறது. கிட்டத்தட்ட ஊசி குத்தும் சீன+மருத்துவ முறை (acupuncture) போன்றது. விநாயகப் பெருமானை நாம் விநயமாக இவ்வாறு வணங்குவதால் எமக்கு ஞானப்பேறு கிடைக்கின்றது. எமது புத்தியை வளர வைப்பதனால் ஞானக் கொழுந்தன் என அழைக்கப் படுகிறான். கொழுந்து வளர்ந்து

கொண்டே போகும் தன்மையது. ஞானத்தை வளர்த்துக் கொண்டிருப்பவன் என்பது பொருள். நாம் படிக்கும் காலத்தில் பாடசாலைக்குப் பிந்திப் போனால், பாடங்களில் பிழை விட்டால் எம் கையாலே முன் தலையில் குட்டுதல், தோப்புக்கர்ணம் போடுதல் என்பன ஆசிரியர்களால் தண்டனையாக விதிக்கப்படும். அன்று ஆசிரியர் குழாத்தால் விதிக்கப்பட்ட இத்தண்டனையின் மேற்கூறிய நற்பலனை நாம் அறிந்திருப்பின் அதனைத் தண்டனையாகக் கருதி அழுதிருக்கமாட்டோம். மாறாக வாழ்த்தி வணங்கி இருப்போம். அவர்களும் எமக்கு ஞானத்தை அளிப்பவர்கள் அல்லவா?

### *சிதறு தேங்காய் அடித்தல்*

சிதறு தேங்காய் உடைத்தல் எம் ஆணவச் செருக்கை சிதறடித்துப் பேரறிவைப் பெறுவதைக் குறிப்பதாகும். எந்தவொரு நல்ல காரியத்தையும் தொடங்கு முன் பிள்ளையார் கோவிலுக்குச் சென்று தேங்காய் உடைத்த பின்பு செய்யும் வழக்கம் பண்டு தொட்டு இருந்து வருகிறது. ஆணவச் செருக்கை அகற்றி, மனச் சுத்தமாக மன ஒருமைப்பாட்டுடன் பிள்ளையாரை வேண்டி வழிபட்டு அக் கருமத்தைச் செய்யும் போது தடையின்றிப் பலன் கிடைக்கிறது. இவ்வழிபாடும் தத்துவ அடிப்படையிலானது. செம்பில் கழிம்பு போன்ற மூலமலமான ஆணவத்தை திருவருளினால் தான் நீக்க முடியும். தேங்காயின் தும்பு கன்மம். வலிமையான சிரட்டை ஆணவம். வெண்மையான பகுதி திருவருள் சக்தி. திருவருளை அடைய விடாது மறைத்து நிற்கும் தும்பும் சிரட்டையும் போன்ற கன்மத்தையும் ஆணவத்தையும் கோவில் வாசலிலேயே சிதறடிக்கிறோம் என்பதாகும். பொதுவாக, கோவில் வாசலிலே சிதறு தேங்காய் அடித்து விட்டு கோவிலுள் புகுதலைக் காண முடியும். இது கோவில் வாசலிலே தன்ஆணவத்தைப் பலியிட்டு தூயவராக ஆலயத்துள் புகுவதைக் குறிக்கும். தேங்காய் உடைத்தவர் அத்தேங்காயை எடுக்காமல் விட்டுச் செல்வதும் இதனாலேயாம்.

பொது நூலகம்
தெற்கு பிரதேச சபை
உப அலுவலகம்
உடுவில்.

### *அறுகம் புல் அர்ச்சனை*

விநாயகருக்கு அர்ச்சிக்கப்படும் பொருட்களில் அறுகம் புல் சிறந்ததாகும். உலகில் தாவரங்களில் புல் இனமே முதலில் தோன்றியது. அறுகம் புல்லை விசேஷமாக முதற் புல் என்று கூறுவர். இதற்கு ஆதிப்புல், கணபதி மாலை, பதவு, புண்ணியப் புல், சட்பம் என பல பெயர்கள் உண்டு. விநாயகருக்கு அர்ச்சிப்பதற்கு காம்புடன் கூடிய மூன்று இலைகளை உடையதாக இருத்தல் வேண்டும். விநாயக சதுர்த்தி அன்று 21 அறுகுகளால் அர்ச்சிப்பது நன்று. எமது வழிபாட்டு முறைகள் அனைத்தும் ஆரோக்கிய வாழ்வைத் தருவன. அறுகம் புல் குளிர்மையைத் தரும். நச்சுத் தன்மையைப் போக்கும். கண்களுக்கு ஒளி தரும். செஞ்சீவ அணுக்களைக் கட்டுப்படுத்தி வெண் சீவ அணுக்களை உண்டாக்கும் சர்வ ரோக நிவாரணி ஆகும். அர்ச்சித்த அறுகை நாம் பிரசாதமாகப் பெற்று கண்களில் ஒற்றி தலையிலோ காதிலோ சூடும் போது எம்மை அறியாமலே அப்பயன்கள் வந்தடைகின்றன.

விநாயகருக்கு அறுகர்ச்சனை புரிவதை ஒட்டிய ஒரு புராணக் கதை உண்டு. அனலாசுரன் எனும் கொடியவன் சகல உயிர்களையும் அழித்து தேவர்களையும் விழுங்கத் துரத்தினான். அவர்கள் பிள்ளையாரிடம் ஓடிச் சென்று முறையிட்டனர். பிள்ளையார் அவர்களைக் காப்பாற்ற வேண்டி அனலாசுரனைத் தன் வயிற்றுள் அடக்கினார். பிரபஞ்சம் அடங்கிய வயிறானமையால் அண்டம் எல்லாம் வெப்பத்தில் தகித்தது. அதைத் தணிக்க தேவர்கள் பிள்ளையாருக்கு அறுகினால் அர்ச்சனை செய்தனர். அப்போது வெம்மை தணிந்ததாக அறுகின் மகிமையைப் புகழ்ந்து புராண வரலாறுகள் கூறுகின்றன. நமது உடல் வெம்மையைத் தணிக்க விநாயகருக்குச் சார்த்திய அறுகம்புல்லை அணிந்துகொள்ளும் வழக்கத்தை நாம் இன்றும் பின்பற்றி வருகின்றோம். எமது மெய்ஞ்ஞானத்தின் வழியதே விஞ்ஞானம்.

### *விநாயகருக்கு உரிய சிறப்பான நிவேதனப் பொருட்கள்*

சர்க்கரைப் பொங்கல், கொழுக்கட்டை, மோதகம், அப்பம், எள்ளுருண்டை, அவல், கொண்டைக் கடலை, பொரி, கரும்பு,

தேங்காய், இளநீர் என்பனவாம். முக்கனிகளாகிய வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் என்பனவும் விளாம்பழம், நாவற்பழம், மாதுளம் பழம், வெள்ளரிப் பழம் ஆகிய ஏனைய பழங்களும் நிவேதிக்கலாம்.

விநாயகருக்கு உரிய சிறப்பான பூக்கள் எருக்கு, றோஜா, செம்பருத்தி, மந்தாரை என்பன. சிவனுக்குரிய பூக்களனைத்தும் விநாயகருக்கும் உகந்தவையாம். துளசியும் தாளம் பூவும் பிள்ளையாருக்குத் தவிர்க்கப்பட்ட மலர்களாகும். மலர் எமது மனம். உணர்வினால் மட்டும் அறியப்படும். அதன் மணம் புலன்களுக்கு அப்பாற் பட்ட இறைவன்.

விநாயக சதுர்த்தி அன்று விநாயகருக்கு அர்ச்சிக்கத் தகுந்த சிறப்பான பச்சிலைகளாவன :- அறுகு, வில்வம், வன்னி முல்லை, எருக்கு, அரளி, மருதம், விஷ்ணுகிராந்தி, மாதுளை, அகத்தி, தாளம் இலை, ஜாதி மல்லிகை, நாவல், தேவதாரு, கரிசாலை, இலந்தை, நாயுருவி எனும் 21 இலை வகையாகும். வன்னி இலை அறுகு போன்று வெப்பத்தை உருஞ்சிக் குளிர்ச்சியைத் தரும் மூலிகையாகும். பொதுவாக இப்பத்திரங்கள் யாவும் ஒவ்வொரு மூலிகைப் பயனுடைத்ததாகும். 21 வகைப் பூக்களும், நிவேதனமும் 21 வகை வைத்து அர்ச்சிப்பது நன்று.

இவைகள் பிள்ளையார் அருள் வேண்டிச் சிறப்பாகச்.செய்யும் வழிபாடுகளாம். கற்பூரம் எரித்தல், காவடிகள் எடுத்தல், அடி அழித்தல், அங்கப் பிரதட்சணம் செய்தல், வலம் வருதல் ஆகியன பொது வழிபாடுகளாகும். நேர்த்திக் கடன் வழிபாடுகளானஅலகு குத்துதல், செடில் காவடி எடுத்தல், முள் மிதியடியில் நடத்தல், என்பன சீன மருத்துவ முறை (acupuncture ) போன்ற நோய் நிவாரணியுமாம்.

விண்ணுக்கும் மண்ணுக்கும் விநாயகனேதுணை.

பொது நூ
வலி-தெற்கு
உப அலுவலகம்
உடுவில்.

# விநாயகர் காயத்திரி மந்திரம்

ஓம் தத்புருஷாய வித்மஹை
வக்ரதுண்டாய தீமஹி / /
தன்னோ தந்தீ ப்ரசோதயாத் /

ஒவ்வொரு மந்திரங்களுக்கும் தனித்தனி சக்தி உண்டு. காயத்திரி மந்திரம் ஓதுவோனைக் காப்பது எனும் பொருள் தரும். எல்லாக் கடவுளருக்கும் காயத்திரி மந்திரங்கள் உண்டு. இவை அதி சக்தி வாய்ந்தவை. ஓதுவோர் பலன் அடைவது நிச்சயம்.

*திருச்சிற்றம்பலம்*



## முற்றும்

பொது நூலகம் தெற்கு பிரதேச சபை உப அலுவலகம் உடுவில.

# அடிக்குறிப்பு

1 'மாவீரன் இலங்கை வேந்தன்' முகவுரை பக். 2 என். எம். எஸ். பூரணம் பிள்ளை

2 வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கோணேஸ்வரக் கோயில்–பாகம் 1, பக்.7– ஐலண்ட் ஞாயிறு பதிப்பு 02.02.97

3 வரலாற்றுப் புகழ் மிக்க திருக்கோணேஸ்வரக் கோயில் – பாகம், 1 பக்.51, மேற்கோள்

4 திருக்கேதீஸ்வரம் கும்பாபிஷேக மலர் – 1976, முத்து

5 இடப் பெயர் ஆய்வு காங்கேயன் கல்வி வட்டாரம் – யா.ப. க. பேராசிரியர் இ. பாலசுந்தரம்

6 இலங்கையில் இந்து சமயத்தின் சுருக்க வரலாறு என்.சி. எஸ். நவரத்தினம்

பக். 48, மேற்கோள் JCBRA's பக். 179 – 1961

7 யாழ்ப்பாண இராச்சியம் பக்கம் 139–140. (1978 )– எஸ். பத்மநாதன்.

8 காங்கேயன் கல்வி மலர் யா. ப.க. கலாநிதி பொ. இரகுபதி– பக்கம் 160

9 இடப் பெயர் ஆய்வ<, காங்கேயன் கல்வி வட்டாரம் – யா.ப. க. பேராசிரியர் இ. பாலசுந்தரம் பக். 38

10 ஆனை விழுந்தான் ஆலய வரலாறு –ஆ.நாடராசா பக். 18–19

11 நகுலகிரிப் புராணம், யாத்திரைப்படலம்– பக்6

12 புறநானூறு –140 –ஔவையார்

13 யாழ்ப்பாண வைபவமாலை, முதலியார் குல சபாநாதன், பதிப்பு 1953, பக். 13–1414.மாவிட்டபுரம் திருத்தல வரலாறு, பக். 11

14 மாவிட்டபுரம் திருத்தல வரலாறு– பக்.11

15 சைவ நெறி, தரம்– 10, கல்வி வெளியீட்டுத் திணைக்களம், பக். 58.

16 சக்தி விகடன், 31.07. 2004, பக்.71. என் சிறினிவாசன்

17 இலங்கை இந்திய வரலாறு, எல். எச். ஹெறெஸ் பெரோவும் எம் இரத்தின சபாபதியும், இணைப்பு–A

18 நகுலகிரிப் புராணம்

19 இலங்கை வரலாறு–பல்கலைக் கழகம் பாகம் 1 – பகுதி 3

வலி தெற்கு பிரதேச சபை

**பொதுசன நூலகம்**

இப்புத்தகம் கீழ் குறிக்கப்பட்டுள்ள திகதி அல்லது அதற்கு முன்னர் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். குறித்த தவணைக்குள் கொடுக்கப்படாத புத்தகம் ஒவ்வொன்றுக்கும் நாள் ஒன்றுக்கு குற்றப் பணமாக ரூபா 1.00 அறவிடப்படும்.

| | | |
|---|---|---|
| 8/5 (475) | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

| பகுப்பு எண் | சேர்வு இல |
|---|---|
| 200 | 692 |

பொது நூலகம்
வலி. ... நவில்

| வரவுப் பதிவு எண் | |
|---|---|
| வகுப்பு எண் | 142 |


தபதி
ர்
டுவில்
- 167,
. எச்.
மாதச்
.
, கே.

# நன்றி

மூன்று நான்கு வருடங்களுக்கு மேலான முயற்சியின் பயனாய் எழுந்த எனது முதல் நூலான, தெய்வீக சம்பந்தமான இந்நூலை எழுதுவதற்கு முன்னவனே – ஆனைவிழுந்தானே– முன் நின்று அருள்பாலித்தமைக்கு அவனுக்கு முதல் வணக்கமும் நன்றியும் செலுத்துகின்றேன்.

இப்பழம் பெரும் வரலாற்றைப் பார்வையிட்டு ஆசி உரைகள் வழங்கிய திருவாவடுதுறை, தமிழ் நாடு, தவத்திரு குருமஹா சந்நிதானம் அவர்களுக்கும், கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தான ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமான சிவஸ்ரீ நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கும், பணிவன்புடன் நன்றி தெரிவிக்கிறேன்.

தனது ஊரைச் சார்ந்த ஆலயம் பற்றிய நூலை ஆய்ந்து இரத்தினச் சுருக்கமாக அணிந்துரை வழங்கிச் சிறப்பித்த இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் அவர்களுக்கும், தன் உடல் நிலையையும் பொருட்படுத்தாது திருத்தமும் அணிந்துரையும் வழங்கிய, வாய்வழி வலம் வந்த ஆனைவிழுந்தான் வரலாற்றை நூல் வாயாக உலா வரப் பிள்ளையார் சுழியிட்ட திரு நடராசா ஆசிரியர் அவர்களுக்கும், தமிழ் மக்கள் யுத்த அரக்கனின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் சூழ்நிலையில் இருந்து கொண்டும் நூலை ஆய்ந்து அணிந்துரை எழுதித் தந்தமைக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்துக் கலாச்சார பேராசிரியர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் அவர்களுக்கும், கோயிலைச் சார்ந்த புகைப் படங்களை அழகுற எடுத்துத் தந்துதவிய படப்பிடிப்பாளர் ஹரனுக்கும், ஆர்வத்துடன் செயற்படுத்திய குமாரலிங்கம் ஜனகனுக்கும், பல படங்களைக் கணினியிற் பதிக்கத் தக்கவாறு சீர் செய்துதவிய பொறியியலாளர் மாணிக்கவாசகர் இராசகுமாரனுக்கும், படங்களை ஒழுங்குற நூலில் அமைத்துதவிய கணேசலிங்கம் ரமேஷிற்கும், இலங்கையில் இறுவட்டில் இருந்து கணனியில் பதித்தும் பல படங்களை எடுத்துச் சேர்த்தும் பெரு முயற்சியுடன் சிக்கல்களைத் தீர்த்தும் நூல் வடிவில் ஒழுங்காக்கி உதவிய செல்வன் நாகேந்திரன் சுகந்தனுக்கும், செல்வன் தவக்குமாரன் கிஷோபனுக்கும் ஆலயம் பற்றிய சில தகவல்களைத் தந்துதவிய அன்பர்களுக்கும் இந்நூலைத் தெய்வீகப் பொலிவுடன் அழகாக அச்சிட்டு உதவிய யுனி ஆர்ட்ஸ் அச்சக உரிமையாளருக்கும் மற்றும் பல்வேறு வகையில் உதவியவர்க்கும் சிரந் தாழ்த்தி எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவயோகமதி கந்தவனம்

# வரலாறு படைப்பவர்

வளமான வாழ்க்கையின் வலுவான வரலாற்றுச் சின்னமாக மிளிர்பவை ஆலயங்கள். அவ்விதமான ஆலயமொன்றின் வளமான வரலாற்றை வலுவான சின்னமாக்கி உள்ளார் தமிழ்த்திருச் செல்வி சிவயோகமதி கந்தவனம் அவர்கள். ஆனைவிழுந்தான் மாட்சிமை எனும் விளக்கை ஏற்றி உள்ளார், வழிபடும் பரம்பரை வெளிச்சத்தில் வாழ்வதற்காக.

இளவாலை ஆனைவிழுந்தான் விக்கின விநாயகர், தன் ஸ்தல புராணத்தை எழுதுமாறு குழந்தை முதல் பெரியவர் வரை சகலராலும் இளவாலையில் விரும்பப்படும் ஒருவரை ஆட்கொண்டு அருள் பாலித்தது ஆச்சரியமானதல்ல. வரலாற்று அறிவு, தொலைநோக்கு, நுணுக்கமாக ஆராயும் பக்குவம், கவனம் சிதறாத ஈடுபாடு, உழைப்பு, உற்சாகம், பக்தி எனப் பலவற்றை முதலாவது படைப்பில் இந்நூலாசிரியர் பரவவிட்டுள்ளதை அவதானிக்கலாம். ஆனைவிழுந்தான் ஸ்தல புராணத்துக்குரிய நூல் வடிவிலான சரியான பதிவுகள் இல்லாதிருந்த நிலையை மாற்றி, தான் அறிந்ததை வைத்தே உகந்த தகுந்த அச்சு ஆவணமாக்கியுள்ள அவர் மெய்ஞ்ஞானத்தை தமது சொல்ஞானத்தால் நிவேதித்துள்ளார்.

கிராமத்தின் வரலாற்றோடு வாழ்பவர்கள் தடயங்களைத் தடவிப்பார்க்கவும் புலம் பெயர்ந்து நகர நாகரிகத்தில் மூழ்கியோர் மூளைக்குள் சுவடுகளை சுரண்டிப் பார்க்கவும் வாகனமாக வழி கோலுகின்றது இந்நூல். விடியல் என்றும் தேவாரத்தின் எழுப்பலில்தான் அமைந்தது. அடித்தாலும் தேவாரம். அணைத்தாலும் தேவாரம் என்றே தன் வாழ்வு வளர்ந்தது என்பது அவரது பால்ய நினைவுகள். கோடலிச் சாமியார், தவத்திரு யோகர் சுவாமிகள், ஜகத்குரு சங்கராச்சாரியார் என்ற முனிவர்களின் சகவாசம் ஆன்மீகத்தில் லயித்து ஏகாந்த தத்துவத்தை இளமையில் வளர்த்தது. சைவமும் தமிழும் இளவாலை மெய்கண்டான் கல்விக்கூடத்தில் இதயத்திற்கு இணக்கமாகி இராமநாதன் கல்லூரியில் அறிவுக்கு அட்சதை தூவிற்று. திருவருட்பயன் உரைஆசிரியரின் பேர்த்தி திருமதி அமிர்தாம்பிகை சதாசிவமும் கொக்குவில் திரு.குமாரசுவாமிப் புலவரும் குருவடிவில் குவலயம் காட்டினர்.

எண்பதைத்தாண்டிவிட்ட இந்த இளம் வாலையின் சிவயோகமதி என்ற பெயர் மிகவும் ஆழ்ந்த அர்த்தம் உள்ளது. மேலெழுந்தவாரியாக கூறிவிட முடியாதது என்பார் சமஸ்கிருத மொழி ஆய்வாளரும் சமய அறிஞருமான பேராசிரியர் பிரமஸ்ரீ பத்மநாபன் ஐயர் ராமையர்.

கந்தவனம், சேதுப்பிள்ளை தம்பதிக்கு மூன்று மகள்மார். மலாயாவில் முதலிருவரும் இளையவரான இந்நூலாசிரியர் இலங்கையிற் பிறந்தனர். திருச்சி புனித சிலுவைக் கல்லூரியில் விஞ்ஞான பட்டப் படிப்பிற்காக இணைந்தவர், தமிழ் மீதிருந்த தணியாத மோகத்தால் சென்னை இராணி மேரி கல்லூரியில் தமிழ் மொழி கற்கை நெறிக்கு மாறி தமிழில் பாண்டித்தியம் பெற்றுச் செழித்து ஆசிரியத் தொழிலை மேற்கொண்டார்.

48-49ம் ஆண்டுகளில் இராமநாதன் கல்லூரியில் சைவ மங்கையர் சபை தலைவியாக இருந்துள்ளார். நியூஸிலாந்தின் தமிழ்த் தென்றல், பாலம், கனடாவின் அன்பு நெறி போன்ற சஞ்சிகைகளில் தன் எழுத்தால் சைவத்துக்கும் தமிழுக்கும் ஆராதனைசெய்து எழுத்துலகில் நறுமணத்துடன் கமழ்கின்றார். மென்மையானவர், உண்மையானவர், அன்பான பேச்சாலும் பண்பான நடவடிக்கையாலும் பழகுவதற்கு இனிமையானவர், சாந்த சொரூபி எனப் பல விசேட குணாதிசயங்கள் அவர்மீது அபரிமிதமான அன்பையும் மரியாதையையும் பக்தியையும் அடுத்தவரிடம் தோற்றுவிக்கும். அவரது அனுபவங்கள் அர்த்தமுள்ளவை..

**இளவாலை எஸ். ஜெகதீசன், கனடா.**

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: +94 11 2330195